
# 1990 அவ்யக்த முரளி



<u>பொருளடக்கம் - 15</u>

**02.01.1990** முழு ஞானத்தின் சாரம் -நினைவு!

**06.01.1990** புனித அன்னப்பறவை என்பதன் விளக்கம்!

**10.01.1990** புனித அன்னப்பறவையின் விசேஷங்கள்!

**14.01.1990** முயற்சியின் வேகம் குறைவதற்கு இரண்டு முக்கிய காரணங்கள்!

**18.01.1990** நினைவு தினத்தன்று அவ்யக்த பாப்தாதாவின் மகாவாக்கியம்!

**20.01.1990** பிரம்மாபாபாவின் சிறப்பான ஐந்து அடிகள்!

**22.02.1990** சிவ ஜெயந்தி அன்று மகா வாக்கியம்!

**01.03.1990** பிராமண வாழ்க்கையின் அஸ்திவாரம் -தெய்வீக புத்தி மற்றும் ஆன்மீகப் பார்வை!

**07.03.1990** ஆளும் மற்றும் கட்டுப்படுத்தும் சக்தி மூலம் சுய ராஜ்யத்தின் பிராப்தி!

**13.03.1990** சங்கமயுகத்தில் ஆத்மாக்களுடன் பரமாத்மாவின் விசித்திர சந்திப்பு!

**19.03.1990** பறக்கும் கலைக்கான ஆதாரம் ஊக்கம் உற்சாகத்தின் சிறகுகள்!

**25.03.1990** தூய்மையே அனைத்து அனுபவங்களையும் பெறுவதற்கான ஆதாரமாகும்!

**31.03.1990** இரக்க மனம் மற்றும் எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வு!

**13.12.1990** தபஸ்யாவின் அஸ்திவாரம் எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்யம்!

**31.12.1990** தபஸ்யா தான் மிகப்பெரிய விழா, தபஸ்யா என்றால் தந்தையுடன் சந்தோஷமாக இருப்பது!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

# 02.01.1990 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# முழு ஞானத்தின் சாரம் -நினைவு!

இன்று சக்திசாலியான தந்தை தனது நாலா புறமும் உள்ள எல்லா சக்திசாலியான குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு சக்திசாலி குழந்தையும் தனது சக்திக்கு ஏற்றவாறு முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். இந்த சக்திசாலியான வாழ்க்கை அதாவது சுகமயமான சிரேஷ்ட வெற்றி நிரம்பிய அலௌகீக வாழ்க்கையின் ஆதாரம் என்ன? ஒரு வார்த்தையில் கூறினால் அது நினைவு! இருப்பினும் முழு நாடகத்தின் விளையாட்டு நினைவு மற்றும் மறதியின் உடையது. தற்சமயம் நினைவின் விளையாட்டு நடந்து கொண்டிருக்கிறது. பாப்தாதா பிராமண ஆத்மாக்கள் உங்களை எந்த ஆதாரத்தில் மாற்றினார்? நீங்கள் ஆத்மாக்கள், இந்த சரீரம் அல்ல என்ற நினைவை மட்டும் அளித்தார். இந்த நினைவு எந்தளவு மாற்றத்தை ஏற்படுத்தியது. எல்லாமே மாறி விட்டதல்லவா. மாணவ வாழ்க்கையின் விசேஷமே நினைவுதான். நினைவுதான் விதை! இந்த விதையிலிருந்து உள்ளுணர்வு பார்வை செயல் எல்லாவற்றின் நிலையும் மாறி விடுகின்றது. ஆகவே பாடப்பட்டுள்ளது -எப்படி நினைவோ அப்படியே ஸ்திதி! என. அஸ்திவாரமான நினைவைத்தான் தந்தை மாற்றினார். அடித்தளம் சிரேஷ்டமானதால் தானாகவே முழு வாழ்க்கையும் சிரேஷ்டமாகி விட்டது. நீங்கள் ஒரு ஆத்மா, இந்த உடல் அல்ல என்று எவ்வளவு சிறிய மாற்றம் செய்வித்தார் -இந்த மாற்றம் நிகழ்ந்தவுடன், ஆத்மா மாஸ்டர் சர்வ சக்திவான் ஆனதால், நினைவு வந்தவுடன் சக்திசாலி ஆகி விட்டது. இப்போது இந்த சக்திசாலியான வாழ்க்கை எவ்வளவு அன்பானதாக இருக்கிறது! நீங்களும் நினைவு சொரூபமாகி விட்டீர்கள் மற்றும் மற்றவர்களுக்கும் இந்த நினைவூட்டி எதிலிருந்து என்னவாக ஆக்கி விடுகிறீர்கள். இந்த நினைவினால் உலகமே மாறி விட்டது. இந்த ஈஸ்வரிய உலகம் எவ்வளவு அன்பாக இருக்கிறது. சேவைக்காக இந்த உலக ஆத்மாக்களுடன் இருக்கிறீர்கள் ஆனால் மனம் சதா அலௌகீக உலகத்தில் இருக்கின்றது.

இதற்குத்தான் கூறப்படுகிறது நினைவு சொரூபம் என. எந்த ஒரு சூழ்நிலையையும் வரட்டும் ஆனால் நினைவு சொரூப ஆத்மா சக்திசாலியாக இருப்பதனால் சூழ்நிலையை என்னவென்று புரிந்து கொள்கிறது? இதுவோ விளையாட்டு என. ஒருபோதும் பயப்படுவதில்லை. எவ்வளவுதான் பெரிய சூழ்நிலை ஆயினும் ஆனால் குறிக்கோளை அடைவதற்காக இந்த எல்லா வழிகளும் சக்திசாலி ஆத்மாவிற்கு பக்க-காட்சிகளே (side scene). பக்க-காட்சிகள் நன்றாக இருக்கிறதல்லவா. செலவு செய்தாவது பக்க-காட்சிகளைப் பார்க்கச் செல்கின்றனர். இங்கும்கூட அபுதர்ஷன் செல்கிறீர்கள்தானே! ஒருவேளை போகும் வழியில் பக்க-காட்சிகளே இல்லை எனில் அந்த வழி நன்றாக இருக்குமா? அலுப்படைவீர்கள். அத்தகைய நினைவு சொரூப, சக்திசாலி சொரூப ஆத்மாவிற்கு சூழ்நிலையாயினும், பேப்பராயினும், தடைகளாயினும், பிரச்சினைகளாயினும், எல்லாமே பக்க-காட்சிகள் தான். இந்தக் குறிக்கோளை அடைய பக்க-காட்சிகளை எண்ணற்ற முறை கடந்து இருக்கிறோம் என்று நினைவில் இருக்கிறது. எதுவும் புதியதல்ல என்பதன் ஆதாரமும் எது? நினைவு! ஒருவேளை இந்த நினைவு மறந்தது அதாவது அஸ்திவாரம் ஆடியது எனில் வாழ்க்கை என்ற முழு கட்டிடமும் ஆடத் தொடங்கி விடும். நீங்களோ அசையாதவர்கள்தானே (அசல்!).

முழு படிப்பினுடைய நான்கு பாடங்களின் ஆதாரமும் நினைவுதான். மிக முக்கியமான பாடம் நினைவு. நினைவு என்றால் நான் யார்? தந்தை யார்? இரண்டாவது பாடம் ஞானம். படைப்பவர் மட்டும் படைப்பின் ஞானம் கிடைத்துள்ளது. அதற்கான ஆதாரமும் நினைவு. அனாதி எது, ஆதி எது மற்றும் தற்சமயத்தில் என்ன ஆகிறீர்கள் -பிராமணன்-to-தேவதை என்ற இதன் ஆதாரத்தையும் நினைவுபடுத்தினார். பரிஸ்தா-to-தேவதை மற்றும் எவ்வளவு நினைவுகளை கொடுத்துள்ளார் எனில் ஞானத்தின் நினைவுதானே? மூன்றாவது பாடம் தெய்வீக குணம். பிராமணர்கள் உங்களுடைய குணம் இது என்ற தெய்வீக குணங்களின் நினைவையும் அளித்துள்ளார். குணங்களின் பட்டியலிலும் நினைவில் வைக்கிறீர்கள், அப்போது நேரத்திற்கு ஏற்றவாறு அந்த குணத்தைக் காரியத்தில், செயலில் பயன்படுத்துகிறீர்கள். சிறிது நேரம் நினைவாற்றல் குறைவாக இருந்தால் என்ன விளைவு ஏற்படும்? உங்களால் சரியான நேரத்தில்

குணங்களைப் பயன்படுத்த முடியாது. இதைச் செய்ய விரும்பவில்லை ஆனால் முடிந்து விட்டது, இனி மேல் இவ்வாறு செய்யக் கூடாது என்று நேரம் கழிந்த பின் நினைவிற்கு வந்தது எனில்? எனவே, தெய்வீக குணங்களையும் செயல்படுத்துவதற்கு உங்களுக்கு சரியான நேரத்தில் நினைவு தேவை. உங்களை நினைத்தே சிரிக்கிறீர்கள். எப்படியிருந்தாலும், சில நேரத்தில் யாராவது எதையாவது மறந்து விட்டால், அந்த நேரத்தில் என்ன நிலைமை என்ன? பொருளும் இருக்கிறது ஆனால் சரியான நேரத்தில் நினைவிற்கு வரவில்லை எனில் பயந்து விடுகிறீர்களா. அதே போல் இதுவும் தக்க நேரத்தில் நினைவிற்கு வராததால் அவ்வப்போது பயந்து விடுகிறீர்கள். தெய்வீக குணங்களுக்கான ஆதாரம் என்ன? சதா நினைவு சொரூபம்! நிரந்தரமான மற்றும் இயற்கையான தெய்வீக குணங்களை ஒவ்வொரு செயலிலும், காரியத்திலும் பயன்படுத்திக் கொண்டேயிருப்பது. நான்காவது பாடம் சேவை. இதிலும் நான் விஷ்வ கல்யாணகாரி ஆத்மா, நிமித்தமானவன், என்ற நினைவு இல்லையேல் சேவையில் வெற்றி பெற முடியாது. சேவை மூலம் எந்த ஒரு ஆத்மாவையும் நினைவு சொரூபம் ஆக்க முடியாது ஆனால் சேவையில் கூடவே தனது மற்றும் தந்தையின் நினைவை அளிக்க வேண்டும்.

எனில் 4-பாடங்களுக்கான ஆதாரம் நினைவு! என ஆனதல்லவா. முழு ஞானத்தின் சாரமும் நினைவுதான்! ஆதலால் பாப்தாதா முன்பே கூறியிருந்தார் இறுதித்தாளினுடைய கேள்வி என்ன என்பதை? பெரிய பேப்பர் எதுவுமில்லை. ஒரு கேள்வியின் பேப்பர்தான் மற்றும் ஒரு நொடிக்கான பேப்பர்தான் வரும். கேள்வி என்ன தெரியுமா? நஷ்டோமோஹா ஸ்மிருதி சொரூபம்! கேள்வியும் தெரிந்து விட்டது ஆதலால் அனைவரும் தேர்ச்சிப் பெற வேண்டும். எல்லோரும் நமபர்-1'ல் தேர்ச்சி பெறுவீர்களா அல்லது நம்பர்வாரா?

இரட்டை வெளி நாட்டினர் எந்த நம்பரில் வருவீர்கள்? (நம்பர்-1) எனில் மாலையை முடித்து விடலாமா? அல்லது தனி மாலையை உருவாக்கலாமா? ஊக்கமோ மிக நன்றாக உள்ளது. இரட்டை வெளிநாட்டினருக்கு விசேஷமான வாய்ப்பு உள்ளது -'லாஸ்ட் ஸோ ஃபாஸ்ட்'ல் செல்வதற்காக. இந்த இடைவெளி உள்ளது. தனி மாலையை உருவாக்கினால் பொழுதுபோக்கும் இடத்திற்குச் (picnic) செல்ல

வேண்டியிருக்கும். இது விருப்பம் எனில் தனி மாலை உருவாக்கிடுவோம்; நீங்கள் மாலையில் வருவதற்காக இடைவெளி வைத்துள்ளோம், வந்து விடுவீர்கள். நல்லது!

டீச்சர்கள் அனைவரும் நினைவு சொரூபமானவர்களா! நான்கு பாடங்களிலும் நினைவு சொரூபம், கடின உழைப்பிற்கான வேலையே இல்லை அல்லவா. டீச்சர்கள் என்றால் தனது நினைவு சொரூப அம்சங்கள் மூலம் மற்றவர்களையும் நினைவு சொரூபமாக்குபவர்கள். நான் ஆத்மா, நெற்றியில் மின்னிக் கொண்டிருக்கும் ஆத்மா, என்ற இந்த நினைவை உங்களுடைய அம்சங்கள் மூலம் மற்றவர்களுக்கும் நினைவூட்டுங்கள். எப்படி பாம்பின் மணியைப் (மாணிக்கம்) பார்த்த பின்பு அனைவரின் கவனமும் மணி மீது தானே இருக்கும் பாம்பின் மீது அல்ல; அப்படி அழியாத மின்னிக் கொண்டிருக்கும் மணியைப் பார்த்து தேகஅபிமானத்தின் நினைவு வரக்கூடாது, கவனம் தானாகவே ஆத்மாவின் பக்கம் செல்ல வேண்டும். டீச்சர்கள் இந்த சேவைக்காக நிமித்தம் ஆனவர்கள். மறந்து போனவர்களுக்கு நினைவூட்டும் சேவை! சக்திசாலிகளா அல்லது அவ்வப்போது பயப்படுகிறீர்களா? ஒருவேளை டீச்சர்கள் பயப்பட்டால் மாணவர்கள் என்ன ஆவார்கள்? டீச்சர்கள் என்றால் சதா இயல்பான, நிரந்தரமான நினைவு சொரூபம், சக்திசாலி சொரூபம். எப்படி பிரம்மாதந்தை முன்னால் இருந்தாரோ, அவ்வாறு டீச்சர்களும் முன்னால் இருக்க வேண்டும். நிமித்தம் என்றால் முன்னால் இருப்பது! எப்படி சேவையில் சமர்ப்பணம் ஆவதில் தைரியம் வைத்தீர்கள், சக்திசாலி ஆனீர்கள் எனில் இந்த நினைவு என்பது என்ன, இதுவோ தியாகத்தின் பாக்கியம்! தியாகம் செய்தீர்கள் இப்போது பாக்கியத்தினுடையது என்ன பெரிய விஷயம். தியாகமோ செய்தீர்கள் ஆனால் தியாகம், தியாகம் இல்லை ஏனெனில் பாக்கியம் அதிகமாக உள்ளது. என்ன தியாகம் செய்தீர்கள்? வெள்ளைப் புடவை மட்டுமே அணிந்தீர்கள், அதனால் இன்னும் மிக அழகானவராகி விட்டீர்கள், பரிஷ்தாக்களாகி விட்டீர்கள் எனில் இன்னும் என்ன தேவை? மற்றபடி சாப்பிடுவது அருந்துவதை விட்டீர்களா! அதுவோ இன்றைய டீச்சர்களும்கூட கூறுகிறார்கள் அதிகம் சாப்பிடாதீர்கள், குறைவாக சாப்பிடுங்கள், சாதாரணமாக சாப்பிடுங்கள் என. இன்றைய மருத்துவர்களும்கூட சாப்பிடக் கொடுப்பதில்லை. வேறு எதை விட்டிருக்கிறீர்கள்? அணிவதை விட்டிருக்கிறீர்களா? இப்போதெல்லாம்

நகைகளுக்குப் பின்னால் திருடர்கள் இருக்கிறார்கள். எதை விட்டுவிட்டீர்களோ அது நல்லது, புத்திசாலித்தனமான வேலை செய்தீர்கள். ஆதலால் தியாகத்திற்கு கோடி மடங்கு பாக்கியம் கிடைத்து விட்டது. நல்லது!

இப்போது பாப்தாதாவிற்கு ஏதென்ஸ் வாசிகளின் (Athens, Greece) ஞாபகம் வருகிறது. (ஏதென்ஸ்'ல் சேவையின் பெரிய நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது!) அவர்களும் மிக்க நினைவு செய்கின்றனர். எப்போதாவது ஏதாவது பெரிய நிகழ்ச்சி நடக்கிறது, எல்லையற்ற காரியத்தில் எல்லையற்ற தந்தை மற்றும் எல்லையற்ற பரிவாரத்தின் நினைவு கண்டிப்பாக வருகிறது. யாரெல்லாம் சென்றுள்ளனரோ, அவர்கள் தைரியசாலி குழந்தைகள் ஆவர். நிமித்தமானவர்களின் தைரியம் காரியத்தை சிரேஷ்டமாகவும், அசையாததாக ஆக்கி விடுகிறது. தந்தையின் அன்பும், விசேஷ ஆத்மாக்களின் நல்லுணர்வுகளும், நல்வாழ்த்துக்களும் குழந்தைகளுடன் கூடவே இருக்கிறது. புத்திசாலிகளின் புத்தி, யார் மூலமாவது நிமித்தமாகியுள்ள, தனது காரியத்தை செய்விக்கிறது. ஆகையால், கவலையற்ற ராஜாவாகி, லைட்-ஹவுஸ், மைட்-ஹவுஸ் ஆகி நல்லுணர்வு, நல்விருப்பங்களின் அதிர்வலைகளைப் பரப்பிக் கொண்டே இருங்கள். ஒவ்வொரு சேவாதாரிக் குழந்தைக்கும் பாப்தாதா பெயர் மற்றும் சிறப்புகள் சகிதமாக அன்பு நினைவுகளை அளிக்கின்றார். நல்லது!

சதா நிரந்தர நினைவு சொரூப சக்திசாலி ஆத்மாக்களுக்கு, சதா நினைவு சொரூபமாகி எல்லா சூழ்நிலைகளையும் பக்க-காட்சிகளாக அனுபவம் செய்யக்கூடிய விசேஷ ஆத்மாக்களுக்கு, சதா தந்தைக்குச் சமமான நாலா புறமும் நினைவின் அலைகளை பரப்பக்கூடிய மகாவீர் ஆத்மாக்களுக்கு, சதா தீவிர வேகத்தின் மூலம் மதிப்புடன் தேர்ச்சி பெறக்கூடிய மகாரதி குழந்தைகளுக்குப் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

தனிப்பட்ட சந்திப்பு: டில்லி மண்டலம்: விலகியிருப்பதன் அடையாளம் -எந்தளவு விலகிய தன்மையோ அந்தளவு தந்தையின் அன்புக்குரியவர், தானாகவே தந்தையின் அன்பு அனுபவம் ஆகும் மற்றும் அந்த பரமாத்ம-அன்பு குடைநிழலாகி விடும்.

மிக நல்ல ரொட்டியும் பருப்பும் தருவதற்கு பாப்தாதா கடமைப்பட்டுள்ளார். தினமும் 36-வகை போஜனம் தர மாட்டார் ஆனால் அன்பினுடைய ரொட்டி-பருப்பு நிச்சயம் கிடைக்கும். எங்கு அன்பு உள்ளதோ அங்கு காய்ந்த ரொட்டியும் 36-வகை போஜனமாகத் தெரியும். பிராமண வாழ்க்கையே குஷிக்கானது! நல்லது.

காயத்ரி மோடி, மோடி-குடும்பத்தினருடன்: பாப்தாதா இந்தக் குடும்பத்தின் ஒரு விஷயத்தைப் பார்த்து மிகவும் குஷி அடைகிறார் -கட்டளைக்குக் கீழ்படிந்த குடும்பம்! ஹான் ஜீ என்பது அல்லது -கட்டளைக்குக் கீழ்படிவதால் குப்த ஆசீர்வாதங்கள் கிடைக்கிறது. நல்லது.

ரஷ்ய சகோதர சகோதரிகளுடைய நினைவை ச-ரி.சக்கரதாரி அளித்தார். நன்றாக இருக்கிறது கொஞ்ச நேரத்திலேயே வெற்றி நல்லதாக மற்றும் நல்ல நல்ல ஆர்வமான ஆத்மாக்கள் வெளிப்பட்டுள்ளனர். அவர்களுடைய அன்பு தந்தையை வந்து சேர்ந்தது. அனைவருக்கும் தந்தையுடைய அன்பு நினைவுகளைக் கூறவும் மற்றும் பாப்தாதாவுடைய சினேகம் எல்லா குழந்தைளுக்கும் உதவி அளித்து முன்னேற்றிக் கொண்டு இருக்கின்றது. சேவையும் நன்றாக உள்ளது, அதிகப்படுத்திக் கொண்டே செல்லுங்கள். நல்லது!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 06.01.1990 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# புனித அன்னப்பறவை என்பதன் விளக்கம்!

இன்று ஞானக்கடல் தந்தை புனித அன்னப்பறவைகளுடைய குழுவைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். புனித அன்னப்பறவை என்றால் தூய்மை மற்றும் விசேஷமான ஆத்மாக்கள். தூய்மை என்றால் எண்ணம், சொல், செயல், சம்பந்தம் அனைத்திலும் தூய்மையின் அடையாளமான வெள்ளை நிறம் சதா தெரிய வேண்டும். புனித அன்னப்பறவைகள் நீங்களும் வெள்ளை ஆடை தரித்தவர்கள், சுத்தமான இதயம் என்றால் தூய்மை சொரூபம்! உடல் மனம் இதயத்தில் சதா கறையின்மை அதாவது தூய்மையாயிருப்பது. ஒருவேளை ஏதாவது உடலால், அதாவது வெளிப்புறத் தூய்மை எவ்வளவு இருந்தாலும், சுத்தமாக இருந்தாலும் ஆனால் மனது சுத்தமாக இல்லையேல், தூய்மையாக இல்லையேல், முதலில் மனதை சுத்தமாக வையுங்கள் என கூறுவார்கள். தூய மனம் அல்லது தூய இதயத்தில் இறைவன் திருப்தியாக இருக்கிறார். கூடவே தூய இதயமுடையவருடைய எல்லா விருப்பங்களும் நிறைவேறுகிறது. அன்னப்பறவையின் விசேஷம் தூய்மை, அதாவது சுத்தம்; ஆகவே பிராமண ஆத்மாக்கள் நீங்கள் புனித அன்னப்பறவைகள் என்று அழைக்கப்படுகிறீர்கள். புனித அன்னப்பறவை ஆத்மாவான என்னிடம் நான்கு விஷயங்களிலும் அதாவது உடல், மனம், இதயம், சம்பந்தம் இவற்றில் தூய்மை இருக்கிறதா? என்று சோதிக்கவும். சம்பூர்ண தூய்மை அல்லது பவித்ரதா -இது தான் இந்த சங்கம யுகத்தில் அனைவரது லக்ஷியமாகும். ஆதலால் பிராமணன்-to-தேவதைகளான உங்களை சம்பூர்ண பவித்ரமானவர் என்று பாடப்படுகிறது. நிர்விகாரி என்று மட்டும் கூறுவதில்லை ஆனால் சம்பூர்ண நிர்விகாரி என்று கூறப்படுகின்றனர். 16-கலைகள் சம்பன்னமானவர் என கூறப்படுகிறது. 16-கலைகள் மட்டும் என்று கூறுவதில்லை ஆனால் அதிலும் 'சம்பன்னம்'! மகிமையோ உங்களுடைய தேவதை சொரூபத்திற்குத்தான் ஆனால் எப்போது ஆனீர்கள்? பிராமண

வாழ்க்கையிலா அல்லது தேவதை வாழ்க்கையிலா? ஆகக் கூடிய நேரம் இப்போது, சங்கம யுகத்தில். ஆதலால் எது வரை அதாவது எத்தனை சதவிகிதம் தூய்மையைத் தாரணை செய்துள்ளேன்? என சோதனை செய்யுங்கள்.

உடலின் தூய்மை அதாவது சதா இந்த உடலை ஆத்மாவின் கோவில் என நினைத்து அந்த நினைவின் மூலம் தூய்மையாக வையுங்கள். எவ்வளவு மூர்த்தி சிரேஷ்டமாக இருக்கிறதோ அந்தளவு கோவிலும் சிரேஷ்டமாக இருக்கும். எனில் நீங்கள் சிரேஷ்ட மூர்த்திகளா அல்லது சாதாரணமானவர்களா? பிராமண ஆத்மாக்கள் முழு கல்பத்திலும் நம்பர்-1 சிரேஷ்ட ஆத்மாக்கள். பிராமணர்கள் முன்பு தேவதைகளும்கூட தங்கத்திற்கு ஒப்பானவர்கள் மற்றும் பிராமணர்கள் வைரத்திற்கு ஒப்பானவர்கள். எனில் நீங்கள் அனைவரும் வைர-மூர்த்திகள் ஆவீர்கள், எவ்வளவு உயர்ந்தவர்கள்! இந்தளவு தனது சுவமானத்தைத் தெரிந்து கொண்டு, இந்த சரீர ரூப கோவிலை சதா தூய்மையாக வைத்திருங்கள். இந்த விதி மூலம் உடலின் தூய்மை சதா ஆன்மீக நறுமணத்தின் அனுபவம் செய்விக்கும். அத்தகைய தூய்மை, பவித்ரதா எது வரை தாரணை ஆகியுள்ளது? தேகஅபிமானத்தில் தூய்மையாவதில்லை ஆனால் ஆத்மாவின் கோவில் என புரிந்து கொள்வதால் தூய்மையாக இருக்கிறீர்கள். மற்றும் இந்த கோவிலும் தந்தை பராமரிக்கவும், நடத்துவதற்காகவும் உங்களுக்குக் கொடுத்துள்ளார். இந்தக் கோவிலின் 'டிரஸ்டி' (trustee) ஆகி விட்டீர்கள். நீங்களோ உடல், மனம், செல்வம் அனைத்தையும் தந்து விட்டதால் அது இப்போது உங்களுடையதில்லை. என்னுடையது என்பீர்களா அல்லது உன்னுடையது என்பீர்களா? எனில் டிரஸ்டித்தன்மை தானாகவே நஷ்டோமோகா அதாவது சுத்தம் மற்றும் பவித்ரதாவை தன்னுள் கொண்டு வருகிறது. மோகத்தின் மூலம் சுத்தமாக இல்லை, ஆனால் தந்தை சேவை தந்துள்ளார் -இப்படி நினைத்து செல்வத்தை சுத்தமாக, பவித்ரமாக வைக்கிறீர்களா அல்லது எப்படி வருகிறதோ அப்படி நடத்துகிறீர்களா? சுத்தமும் ஆன்மீகத்தன்மையின் அடையாளமாகும்.

அதே போல் மனதின் சுத்தம் அல்லது பவித்ரத்தின் சதவிகிதத்தைப் பாருங்கள். முழு நாளில் எவ்விதமான அசுத்த சங்கல்பமும் மனதில் ஓடினால் அதற்கு சம்பூர்ண தூய்மை எனக் கூற மாட்டோம். மனதைப்

பற்றி பாப்தாதாவின் கட்டளை -மனதை என்னுடையது என்பதில் ஈடுபடுத்துங்கள் அல்லது விஷ்வ சேவையில் ஈடுபடுத்துங்கள். மன்மனா பவ -இந்த மந்திரம் சதா நினைவில் இருக்கட்டும். இதற்குக் கூறப்படுகிறது -மனதின் தூய்மை என. மேலும் எந்தப் பக்கமாவது மனது அலைந்தால், அலைவது என்றால் அசுத்தத்தன்மை. இந்த விதி மூலம் சோதனை செய்யுங்கள், எத்தனை சதவிகிதம் தூய்மை தாரணை ஆகியுள்ளது? விஸ்தாரத்தையோ தெரிந்துள்ளீர்கள்.

மூன்றாவது விஷயம் -இதயத்தூய்மை, உண்மைதான் தூய்மை என இதுவும் தெரிந்திருக்கிறீர்கள். தனது சுய முன்னேற்றம், அதாவது எந்த முயற்சியாக இருந்தாலும் சரி, இந்த உண்மையை தந்தைக்கு முன்னால் வையுங்கள். ஒன்று, சுய முயற்சியில் தூய்மை. இரண்டாவது, சேவை உண்மையான மனதுடன் எது வரை செய்கிறீர்கள், என்பதன் தூய்மை. ஒருவேளை ஏதாவது சுய நலத்துடன் சேவை செய்தீர்கள் என்றால் அதை உண்மையான சேவை எனக் கூற மாட்டோம். எனவே சேவையிலும் உண்மை-சுத்தம் எந்தளவு உள்ளது; சிலர் நினைக்கின்றனர் சேவையோ செய்தே ஆக வேண்டும். எப்படி லௌகீக அரசாங்கத்தின் வேலை (duty) உள்ளதோ, உண்மையான மனதுடன் செய்தாலும் சரி, கட்டாயத்தின்பேரில் செய்தாலும் சரி, அலட்சியமாக செய்தாலும் சரி, செய்யத்தான் வேண்டுமல்லவா. எப்படியாவது 8-மணி நேரம் ஓட்டத்தான் வேண்டும். அதே போல இந்த சர்வசக்திவானின் அரசாங்கத்தின் மூலம் வேலை கிடைத்துள்ளது -இப்படி புரிந்து கொண்டு சேவை செய்வதை உண்மையான சேவை என கூற முடியாது. வேலை மட்டுமில்லை ஆனால் பிராமண ஆத்மாக்களுடைய உண்மையான சம்ஸ்காரமே சேவை தான், என்றால் சம்ஸ்காரம் தானாகவே உண்மையான சேவையின்றி இருக்க விடாது. எனவே சோதனை செய்யுங்கள் -உண்மையான மனதுடன் அதாவது பிராமண வாழ்க்கையின் தானாகவே உள்ள சம்ஸ்காரம் மூலம் எத்தனை சதவிகிதம் சேவை செய்தேன், இவ்வளவு மேளா செய்தேன், இவ்வளவு 'கோர்ஸ்' எடுத்தேன் ஆனால் சுத்தம் மற்றும் தூய்மையின் சதவிகிதம் எவ்வளவு இருந்தது? இது வேலை கிடையாது ஆனால் உண்மையான சம்ஸ்காரம், சுய தர்மம், சுய கர்மம் ஆகும்!

நான்காவது விஷயம் -சம்பந்தத்தில் தூய்மை! சார ரூபத்தில் விசேஷமாக இதை சோதனை செய்யுங்கள், திருப்தி ரூப தூய்மை எத்தனை சதவிகிதம் இருக்கிறது? முழு நாளும் விதவிதமான ஆத்மாக்களுடன் சம்பந்தம் வருகிறது. மூன்று வித சம்பந்தத்தில் வருகிறீர்கள். ஒன்று -பிராமண பரிவாரம், இரண்டு -வந்துள்ள புதிய ஆவலான ஆத்மாக்களுடன், மூன்று -லௌகீக குடும்பம்! மூன்று சம்பங்களிலும் முழு நாளும் தனது திருப்தி மற்றும் சம்பந்தத்தில் வருகின்ற மற்ற ஆத்மாக்களின் திருப்தியின் சதவீதம் எத்தனை? திருப்தியின் அடையாளம் -சுயம் மனதில் லேசாகவும் குஷியாகவும் இருப்பது மற்றும் மற்றவரும் குஷியாக இருப்பது! அதிருப்தியின் அடையாளம் -சுயம் மனதில் பாரமாக இருப்பது! ஒருவேளை உண்மையான முயற்சியாளர் எனில் அடிக்கடி விரும்பாவிடினும்கூட அவருக்கு சங்கல்பம் வந்து கொண்டே இருக்கும், இப்படி பேசக்கூடாது, இப்படிச் செய்யக்கூடாது என. இப்படிக் கூறினார்கள், இப்படி செய்தார்கள் -இந்த சங்கல்பம் வந்து கொண்டே இருக்கும். அலட்சியமான முயற்சியாளருக்கு இதுவும் கூட எழாது. எனவே இந்த சுமை குஷியாக இருக்க விடாது, லேசாக இருக்க விடாது. சம்பந்தத்தில் தூய்மை என்றால் திருப்தி! இதுதான் சம்பந்தத்தின் உண்மை மற்றும் தூய்மை! ஆதலால் நீங்கள் கூறுகிறீர்கள் -உண்மை சதா குஷியில் நடனமாடும்! என. கேட்டீர்களா, புனித அன்னப்பறவை என்பதன் விளக்கம்? ஒருவேளை சத்தியத்தின் தூய்மை இல்லையேல் அன்னமாக இருக்கலாம் ஆனால் புனித அன்னப்பறவையாக இல்லை. எனவே, சம்பன்னம் மற்றும் சம்பூர்ணத்திற்கு என்ன மகிமை உள்ளதோ, அதில் எது வரை ஆகியிருக்கிறோம்? என்பதை சோதியுங்கள். ஒருவேளை டிராமாபடி இன்று இந்த சரீரத்தின் கணக்கு முடிந்தது எனில் எத்தனை சதவிகிதம் நான் தேர்ச்சி பெற்றுள்ளேன்? அல்லது டிராமாவிற்கு கூறுவீர்களா, கொஞ்ச காலம் காத்திரு என! நாமோ சிறியவர்கள், இப்போது போக மாட்டோம் என்ற எண்ணத்துடன் நீங்கள் உட்காரவில்லையே? சதா தயார் (ever ready) என்பதன் அர்த்தம் என்ன? இப்போது இன்னும் 10-11 வருடங்கள் இருக்கிறது என நேரத்திற்காக நீங்கள் காத்திருக்கவில்லையே? நிறைய செய்து 2000'ன் கணக்கைப் பற்றி சிந்திக்கிறீர்கள் ஆனால் சிருஷ்டியின் விநாசம் என்பது வேறு விஷயம், உங்களை சதா தயாராக வைத்திருப்பது வேறு விஷயம். ஆதலால் இதை அதனுடன் கலக்காதீர்கள். விதவித ஆத்மாக்களுக்கு

விதவிதமான பாகம் உள்ளது. நானோ அட்வான்ஸ் பார்ட்டி'யில் இல்லை அல்லது என்னுடையதோ விநாசத்திற்குப் பின்பு தான் பாகம் உள்ளது என இப்படி நினைக்காதீர்கள். சில ஆத்மாக்களுடையது ஆனால் நான் எவர்ரெடியாக இருப்பேன்! இல்லையேல் அலட்சியத்தின் அம்சம் வெளிப்பட்டு விடும். எவர்ரெடியாக இருங்கள், பின்பு விரும்பினால் 20-வருஷங்கள் கூட உயிருடன் இருங்கள், எவ்வித நஷ்டமும் இல்லை ஆனால் இத்தகைய ஆதாரத்தை நம்பி இருக்கக்கூடாது. இவருக்குத்தான் கூறப்படுகிறது -புனித அன்னப்பறவை என! ஞானக்கடலிடம் வந்துள்ளீர்கள்தானே; எனவே புனித அன்னப்பறவையின் தூய்மையைப் பற்றிக் கூறினோம், பின்னர் அதன் விசேஷங்களைப் பற்றிக் கூறுவோம்.

டீச்சர்களுக்கு சோதிக்கத் தெரியுமா? டீச்சர்களுக்கு விசேஷமாக சமர்ப்பணம் ஆகும் பாக்கியம் கிடைத்துள்ளது. குடும்பத்திலிருப்பவர்களும் கூட மனதால் சமர்ப்பணம் ஆனவர்கள் இருப்பினும் டீச்சர்களுக்கு விசேஷ பாக்கியம் உள்ளது. வேலையோ நினைவு மற்றும் சேவைதான்! சமையல் செய்தாலும் சரி, துணி துவைத்தாலும் சரி, அதுவும் கூட இந்த சேவை தான். அவர்களும் அலௌகீக வாழ்க்கையின் சேவை செய்கிறார்கள். குடும்பத்திலிருப்பவர்களுக்கு இரண்டு பக்கமும் கவனிக்க வேண்டியுள்ளது. உங்களுக்கோ ஒரு வேலைதான், இரண்டு இல்லையே? யார் உண்மையாகவும், சுத்தமாகவும் தந்தை மற்றும் சேவையில் சதா ஈடுபட்டிருக்கிறார்களோ அவர்களுக்கு எவ்வித கடின உழைப்பும் செய்ய வேண்டிய அவசியமிருக்காது. கேட்டிருக்கிறீர்கள்தானே தகுதியான டீச்சர்களின் களஞ்சியமும் உண்டியலும் சதா நிரம்பியே இருக்கும்! கவலைப்படத் தேவையில்லை -அடுத்த மாதம் எப்படி நடத்துவது, விழா எப்படி நடக்கும், சேவையுடன் சேர்ந்து சாதனமும் தானாகவே கிடைத்து விடும். ஆன்மீக ஈர்ப்பானது சேவை மற்றும் சேவை நிலையத்தை தானாகவே வளர்ச்சியுறச் செய்யும். எப்போது அதிகம் சிந்திக்கிறீர்களோ ஆர்வமுள்ளவர்கள் ஏன் அதிகமாவதில்லை, நீடித்திருப்பதில்லை, ஏன் போய் விடுகிறார்கள்,... எனில் ஆர்வமுள்ளவர்கள் இருப்பதில்லை. யோகயுக்த் ஆகி ஆன்மீகத்தன்மையுடன் அழைத்தீர்கள் என்றால் ஆர்வமுள்ளவர்கள் தானாகவே அதிகமாவார்கள். இப்படி நடக்கிறதல்லவா? எனவே

எப்போதும் உங்கள் மனதை லேசாக வைத்திருங்கள், எவ்வித சுமையும் இருக்கக்கூடாது. எவ்வித சுமையும் -தனதோ, சேவையினுடைய, சேவையில் உடனிருப்பவர்களுடைய -இருந்தால் அது பறக்க விடாது, சேவையில் உயர விடாது. ஆதலால் சதா உள்ளம் சுத்தமாக மற்றும் விருப்பம் வைத்துக் கொண்டே இருங்கள். பிராப்திகள் உங்கள் முன் தானாகவே வரும். என்ன, கேட்டீர்களா? எல்லா ஆன்மீக பிராப்திகளும் பிராமணர்களுக்காகவே உள்ளன எனில் எங்கு போய் விடும்? உங்களுக்குத்தான் உரிமை உள்ளது. உரிமையை யாராலும் பறிக்க முடியாது! நல்லது!

எல்லா புனித அன்னப்பறவைகளுக்கும், நாலா புறமும் உள்ள உண்மையான தலைவனை திருப்திபடுத்தக்கூடிய உண்மையான உள்ளமுடைய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா தன்னை எவர்ரெடி ஆக வைத்திருக்கும் நம்பர்-1 குழந்தைகளுக்கு, தந்தையின் அருகிலிருக்கும் குழந்தைகளுக்கு, சதா தன்னை விலை மதிக்க முடியாத வைரத்திற்குச் சமமாக அனுபவம் செய்யக்கூடிய அனுபவி ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

குழுவினருடன் தனிப்பட்ட சந்திப்பு (சாரம்): மகாராஷ்டிரா -நிலைமை நலமாகவும், நடத்தை பரிஷ்தாவாக இருக்க வேண்டும்.

'எவர்-ஹெல்தி, 'எவர்-வெல்தி, 'எவர்-ஹேப்பி' -இது உங்களுடைய பிறப்புரிமை!

பரிவாரத்திலும் உறவில் சிலர் அருகிலும், சிலர் தூரத்திலும் இருப்பர், இருப்பினும் நம் குடும்பத்தவர் என்று தானே கூறுவோம்.

பிராமண ஆத்மா ஒருபோதும் எந்த ஒரு ஆத்மா மீதும் வெறுப்படைய முடியாது.

மாற்றத்தின் பாவனை வையுங்கள், நன்மையின் பாவனை வையுங்கள்.

எங்கு வெறுப்பு இல்லையோ, அங்கு கோபமும் வராது.

வள்ளலின் குழந்தைகள் ஆதலால் சாந்தி அளியுங்கள்.

பாண்டவர்களிடம் விசேஷமாக கோபம் உள்ளது மற்றும் மாதாக்களிடம் பற்று உள்ளது. அம்சம் கூட இருக்கக்கூடாது, அம்சம் வம்சத்தை உருவாக்கி விடும், ஆதலால் முழுமையாகக் காலி செய்து விடுங்கள்.

**மண்டல வாரியான குழுக்களுடன்:** அவர்களோ செல்வத்தை தானம் செய்வது மூலம் ராஜா ஆகிறார்கள், படிப்பின் மூலம் ராஜா ஆவதில்லை. உங்களுடைய படிப்பு ராஜ்யத்தை அடைவதற்கானது. இப்போது சுயராஜ்யம் கிடைத்துள்ளது, பின்பு உலகத்தின் ராஜ்யம் கிடைக்கும்.

சம்ஸ்காரத்திற்கு ஏற்றவாறுதான் செயலும் தானாகவே இருக்கும், ஆதலால் சம்ஸ்காரம் குளிர்ந்ததாக இருக்கட்டும்.

பிராமணன் என்றால் குளிர்ந்த சம்ஸ்காரம் உடையவர்.

சுயராஜ்ய அதிகாரி ஆத்மாக்கள்தானே -இந்த நிச்சயமும் போதையும் சதா இருக்கட்டும்.

பரமாத்மாவின் குழந்தைகள் ஒருபோதும் அழ முடியாது.

தடைகளை தடை என நினைக்காமல் விளையாட்டு என நினைத்தால் தேர்ச்சி பெற்று விடுவீர்கள். நல்லது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 10.01.1990 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# புனித அன்னப்பறவையின் விசேஷங்கள்!

இன்று எல்லாக் குழந்தைகளையும் விசேஷ ஆத்மாவாக ஆக்கக்கூடிய பாப்தாதா ஒவ்வொரு புனித அன்னப்பறவையின் விசேஷத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். எப்படி அன்னத்திற்கு நிர்ணய சக்தி மற்றும் பகுத்தறியும் சக்தியின் விசேஷம் உள்ளது, ஆதலால் ஏற்றுக் கொள்ளும் சக்தியும் விசேஷமாக உள்ளது; அதனால் முத்து மற்றும் கல் இரண்டையும் பகுத்தறிகிறது (சோதிக்கிறது) மற்றும் பின்பு நிர்ணயமும் (முடிவெடுக்கிறது) செய்கிறது, அதன் பிறகு முத்தைக் ஏற்றுக் கொண்டு, கல்லை விட்டு விடுகிறது. எனவே, பகுத்தறிவது, நிர்ணயம் செய்வது மற்றும் ஏற்றுக் கொள்வது அதாவது தாரணை செய்வது -மூன்று சக்திகளின் விசேஷத்தினால் சங்கம யுக சரஸ்வதி தாயை அன்னத்தின் மீது சவாரி செய்வதாக காண்பித்துள்ளனர். எனில் இது ஒரு சரஸ்வதி தாயின் ஞாபகார்த்தம் கிடையாது ஆனால் தாய்க்குச் சமமாக ஆகக்கூடிய ஞான-வீணை வாசிக்கின்ற உங்களுடையது ஆகும். இப்போது அனைவரும் பிராமண வாழ்க்கையை தாரணை செய்த உடனேயே, ஞானத்தின் மூலம் விவேகத்தின் மூலம் முதலில் பகுத்தறியும் சக்தியின் ஆதாரத்தை கண்டு கொண்டீர்கள், தன்னைத்தானே கண்டு கொண்டீர்கள், சமயத்தையும் கண்டு கொண்டீர்கள், தனது பிராமண பரிவாரத்தையும் கண்டு கொண்டீர்கள், தனது சிரேஷ்ட கடமையையும் கண்டு கொண்டீர்கள். இதன் பிறகு நிர்ணயம் செய்தீர்கள், அப்போதுதான் பிராமண வாழ்க்கையை தாரணை செய்தீர்கள். இவர் அதே கல்பத்திற்கு முந்திய எல்லையற்ற தந்தை ஆவார், பரம்-ஆத்மாதான், நானும் கூட அதே கல்பத்திற்கு முந்திய சிரேஷ்ட ஆத்மாவே ஆவேன், அதிகாரி ஆத்மா ஆவேன் -இந்த பகுத்தறிதலுக்குப் பின் நிர்ணயம் செய்தீர்கள். பகுத்தறிவதை தந்தையின்றி நிர்ணயம் செய்ய முடியாது. சம்பந்தம் தொடர்பில் இது வரை இருக்கின்ற பல ஆத்மாக்கள், நன்றாக இருக்கிறது, நன்றாக இருக்கிறது என கூறுகின்றனர், ஆனால் பரமாத்மாவை அடையாளம் கண்டு கொள்வது அல்லது பகுத்தறியும் சக்தி இல்லாததால் நிர்ணயம்

செய்ய முடியவில்லை, என்ன ஆக வேண்டும் அல்லது என்ன செய்ய வேண்டும் என்பதை. ஆதலால் பிராமண வாழ்க்கையை தாரணை செய்ய முடியவில்லை. சகஜ யோகி ஆகின்றனர் ஆனால் சகஜ யோகி வாழ்க்கையை உருவாக்க முடியவில்லை. ஏனெனில் இரண்டு சக்திகளுமே இல்லை, ஆதலால் புனித அன்னப்பறவை ஆக முடியவில்லை. பவித்திர ரூப முத்து மற்றும் அபவித்திர ரூப கல் -இரண்டும் வெவ்வேறு என புரிந்து கொள்ளாததால் தூய்மையை கடைப்பிடிக்கும் சக்தி வரவில்லை. எனவே புனித அன்னப்பறவையின் விசேஷம் -முதல் சக்தி பகுத்தறிதல், அடையாளம் கண்டு கொள்வது! புனித அன்னப்பறவை உங்களிடம் இந்த இரு சக்திகளும் உள்ளதா? ஏனெனில் தந்தையை அடையாளம் கண்டு கொள்வது, தன்னையும் அடையாளம் கண்டு கொள்வது, நிர்ணயமும் சரியாக செய்வது, அப்போதுதான் பிராமணன் ஆக முடியும், இருக்கவும் முடியும். இந்த விஷயத்தில், அனைவரும் உறுதியாக இருக்க வேண்டும் ஆனால் சேவை செய்பவர்கள் மற்றும் செயலில் வருபவர்கள், அன்றாடம் தினசரி வழக்கத்தில் எந்த செயல் செய்தாலும், சம்பந்தம் தொடர்பில் வந்தாலும், அதில் வெற்றி பூர்வமாக ஒவ்வொரு செயலும் இருக்க வேண்டும் அல்லது தொடர்பு கொள்ளும் ஒவ்வொரு ஆத்மாவின் சம்பந்தத்தில் வரும்போது சதா வெற்றி இருக்க வேண்டும். எப்போதும் மூன்று வகையான சேவையில் -எண்ணம், சொல், செயல் -வெற்றியின் அனுபவமாகட்டும், அதன் அடிப்படையே பகுத்தறியும் (சோதிக்கும்) சக்தி மற்றும் நிர்ணயம் (முடிவு) செய்யும் சக்தி. இதில் முழு தேர்ச்சியடைந்துள்ளீர்களா?

சேவையில் வெற்றி அல்லது தொடர்பில் வெற்றி சதா இல்லாததற்கு காரணம் என்னவென சோதித்தீர்கள் என்றால் செயலை, மனிதரை, ஆத்மாவை, பகுத்தறியும் சக்தியில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. எந்த ஆத்மாவிற்கு, எந்த நேரத்தில், எந்த விதிப்பூர்வமான உதவி தேவையோ, அறிவுரை தேவையோ, சினேகம் தேவையோ, அந்த நேரத்தில் ஒருவேளை பகுத்தறியும் சக்தி தீவிரமாக இருந்தது எனில் நிச்சயமாக சம்பந்தத்தில் வெற்றி கிடைக்கும்; ஆனால் ஆவதோ என்ன -எந்த ஆத்மாவிற்கு என்ன உதவி அல்லது விதி அந்த நேரத்தில் வேண்டுமோ அதைக் கொடுக்காமல் அல்லது பகுத்தறியாமல் தனது வழிமுறையின் மூலம் அவருக்கு உதவி புரிவதால் அல்லது வழிமுறை

கூறுவதால் திருப்தியினுடைய வெற்றி கிடைப்பதில்லை. எப்படி உடலில் உள்ள நோயை பகுத்தறியும் சக்தி டாக்டரிடம் இல்லை எனில் என்ன ஆகும்? சரியாவதற்குப் பதிலாக பல விதமான நோய்கள் உண்டாகி விடும். நோயாளிக்கு திருப்தியின் வெற்றி கிடைப்பதில்லை. இதையே சாதாரணமாக பாப்தாதா கூறுகிறார் ஒவ்வொருவருடைய நாடியையும் பிடித்துப் பார்க்க வேண்டும் என! நடக்கவும் வேண்டும், நடத்தவும் வேண்டும், எனில் என்ன செய்ய வேண்டும்? அடையாளம் காணுவது என்றால் பகுத்தறியும் சக்தியை அதிகப்படுத்த வேண்டும் இதில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது, இதை நீங்கள் சாதாரணமாகக் கூறுகிறீர்கள் -கையாளுவதில் (handling) வித்தியாசம் என! இவரது கையாளும் விதம் பழையது, இவரது புதியது,... என கூறுகிறீர்கள்தானே. இந்த வித்தியாசம் ஏன் வருகிறது? ஏனெனில் ஒவ்வொரு நேரமும், ஒவ்வொரு ஆத்மா மற்றும் ஒவ்வொரு காரியத்தையும் பகுத்தறியும் சக்தி தேவை. முழுமையாக பகுத்தறியும் சக்தி வந்துள்ளது ஆனால் விஸ்தாரத்தில் இன்னும் எல்லையற்ற பகுத்தறியும் சக்தியின் அவசியம் உள்ளது -அந்த நேரத்தில் ஆத்மாவில் கிரகிக்கும் சக்தி எவ்வளவு உள்ளது, வாயுமண்டலம் எப்படி உள்ளது மற்றும் அந்த ஆத்மாவுடைய கேட்கும் அல்லது அறிவுரையை ஏற்கும் மனநிலை எப்படி இருக்கிறது,... எப்படி பலவீனமான சரீரம் உடையவராக இருப்பவருக்கு, அதிகப்படியாக சக்தியளிக்கும் ஊசி போட்டால் அவருடைய நிலைமை என்ன ஆகும்? நோயாளிக்குப் (patient) பதியாக பொறுமையானவராகி (patience) விடுவார், இதயம் நின்று விடும், அமைதியில் சென்று விடுவார். அதுபோல ஒருவேளை சம்பந்தத்தில் வருகின்ற ஆத்மா பலவீனமாக இருந்தது ஆத்மாவில் தைரியம் இல்லை ஆனால் நீங்கள் அவருக்கு அறிவுரையின் 'டோஸ்' (dose) கொடுத்தீர்கள் என்றால் அவரது மனநிலை, நேரம், வாயுமண்டலம் இவற்றை பகுத்தறியாததால் விளைவு என்னவாகும்? ஒன்று மனம் உடைந்து போவார் மற்றும் சக்தி இல்லாததால் ஏற்றுக்கொள்ள முடியாமல், இன்னும் பிடிவாதமாக இருப்பார். நீங்களும் நல்ல பாவனையுடன்தான் செய்தீர்கள் ஆனால் வெற்றி கிடைக்காததற்கு காரணம் பகுத்தறியும் மற்றும் நிர்ணயம் செய்வதற்கான சக்தியின் குறை, ஆதலால் வெற்றி மூர்த்தி ஆவதில் சதவிகிதம் ஆகி விடுகிறது. எனவே முழு நாளின் காரியத்தில் மற்றும் நேரத்தில் பகுத்தறியும் சக்தியின் அவசியம் ஆகிறதல்லவா. அதனால்

அறிவுரை கூறுங்கள் ஆனால் எல்லா விஷயங்களையும் பகுத்தறிந்து பின்பு அடியெடுத்து வையுங்கள். இதே போல் சேவையிலும் ஒருவேளை ஆத்மாக்களின் அவசியத்தை நல்ல விதமாக பகுத்தறியாமல் எவ்வளவுதான் நன்றாக ஞானத்தை அளித்தாலும், எவ்வளவுதான் கடின உழைப்பு செய்தாலும் வெற்றி கிடைக்காது. நன்றாக இருக்கிறது நன்றாக இருக்கிறது கூறுவதோ வழக்கமாகி விட்டது ஏனெனில் நீங்களோ எவ்வித கெட்ட விஷயங்களும் கூறுவதில்லை. வெற்றியடைய விரும்புகிறவர்கள், அவர்களுடன் நெருக்கமாக இருப்பதை அனுபவம் செய்ய வேண்டும், அதற்காக பகுத்தறியும் சக்தி மிக அவசியம். யாராவது முக்தி அடைய விரும்புகிறார் மற்றும் நீங்கள் அவருக்கு ஜீவன்முக்தி, மற்றும் முக்தி இரண்டையும் கொடுக்கிறீர்கள், ஆனால் அவர் ஆர்வம் காட்டமாட்டார். தாகம் உள்ளவருக்கு 36-வகையான உணவைக் கொடுத்தாலும், அவர் ஒரு துளி நீரால் மட்டுமே திருப்தி அடைவார், உணவால் அல்ல. எனவே, நீங்கள் முக்தி அடைய விரும்புகிறவருக்கு அதைப் பற்றிய விளக்கத்தை அளித்தால், அவருடைய விருப்பமும் அதிகரிக்கும், மேலும் ஜீவன்முக்தியில் மாற்றம் அடைந்து விடுவார். தாரணையின் விஷயங்களைக் கேட்க விரும்புகிறவருக்கு, நீங்கள் கல்பம் 5000-ஆண்டுகள் அல்லது கீதையின் பகவான் யார் என்று சொல்லத் தொடங்கினால் அவரது விருப்பம் இன்னும் போய் விடும். ஆதலால் சேவையில் ஆத்மா அவருடைய ஸ்திதி அல்லது அவருடைய நம்பிக்கை என்ன என்பதை பகுத்தறிதல் அவசியம். எனவே சேவையில் வெற்றிக்கான ஆதாரம் எந்த சக்தி ஆனது? பகுத்தறியும் சக்தி தேவை! அஞ்ஞானிகளுக்கான சேவை ஆகட்டும், சேவையில் உடன் இருப்பவர்களுக்கான சேவை ஆகட்டும் -இரண்டிலுமே வெற்றி அடைவதற்கான ஆதாரம் ஒன்று தான். ஏனெனில் புனித அன்னப்பறவையின் விசேஷம் -முதலில் பகுத்தறியும் சக்தியை அதிகரிக்க வேண்டும். பகுத்தறியும் சக்தி சரியானது சிரேஷ்டமானது எனில் நிர்ணயமும் சரியாகத்தான் இருக்கும் மற்றும் நீங்கள் யாருக்கு எதை அளிக்க விரும்புகிறீர்களோ அவருள்ளும் ஏற்றுக்கொள்ளும் சக்தி தானாகவே இருக்கும். மற்றும் என்ன ஆகி விடுவீர்கள்? நம்பர்-1 வெற்றி மூர்த்தி! எனில் சேவை ஆனாலும் சரி, சம்பந்தமானாலும் சரி, லட்சியத்தின் பிராப்தியை அடைவதற்காக இந்த லட்சணத்தின் தாரணை செய்யுங்கள்.

எனவே முழு நாளும் இதை சோதியுங்கள் -முழு நாளின் நடவடிக்கைகளில் பகுத்தறியும் சக்தி எது வரை சரியாக இருந்தது மற்றும் எங்கு சரி செய்வது, சேர்ப்பதன் (correction-addition) அவசியம் ஏற்பட்டது? செய்த பிறகு திருத்தம் செய்வது என்பதை தனக்குத்தானே அவசியம் செய்கிறீர்கள் ஏனெனில் திவ்ய புத்தியின் வரதானம் அனைவருக்கும் கிடைத்துள்ளது. பிரச்சினை வசமானாலும் சரி, நேரத்திலும் சரி, சூழ்நிலைக்கு வசமானாலும் சரி, அல்லது ஏதாவது ஆத்மாவின் தொடர்பில் வசமானாலும் சரி, மாயா மூலம் மனவழிக்கு வசமானாலும் சரி, அந்த நேரத்தில் ஆகி விடுகிறது ஆனால் நேரம், சூழ்நிலை, தொடர்பின் பிரபாவம், மனவழியின் பிரபாவம், எப்போது லேசாகிறதோ அதன் பின்னர் திவ்ய புத்தி தனது வேலையைச் செய்யும், இதை நீங்கள் 'நினைவிழந்து நினைவுக்கு வருவது'! என கூறுகிறீர்கள். பின்னர் இந்த திருத்தம் அல்லது சேர்த்தல் செய்யப்பட்டிருக்க வேண்டும் அல்லது செய்யப்பட வேண்டும் என்பது உணரப்படுகிறது; ஆனால் பதிவேட்டில் அல்லது கர்மங்களின் கணக்கு புத்தகத்தில் கறை இல்லை, ஆனால் ஒரு புள்ளியோ விழுந்து விட்டது எனில் முற்றிலும் தூய்மையாக இல்லைதானே? அதனால்தான் சொல்லப்படுகிறது -கர்மங்களின் லீலை மிகவும் குப்தமானது! என.

டீச்சர்களுக்கோ கர்மங்களின் லீலை நன்றாகத் தெரியுமல்லவா? டீச்சர்கள் நாள் முழுவதும் என்ன பாடலைப் பாடுகிறீர்கள், ஆஹா, எனது உயர்ந்த செயல்களின் லீலையே! கர்மங்களின் ஆழமான விளைவுகளின் லீலையே என அல்ல, ஆனால் சிரேஷ்ட கர்மங்களின் லீலை. உலகினரோ ஒவ்வொரு செயலிலும், ஒவ்வொரு அடியிலும் கர்மாவை அடிக்கோடு இடுகிறார்கள், 'ஆஹா எனது கர்மமே' என. நீங்கள் சொல்வீர்கள் -ஆஹா சிரேஷ்ட கர்மமே! இப்போது இதை இன்னும் அதிகரியுங்கள், சதா -ஆஹா சிரேஷ்ட கர்மமே! என ஆகட்டும், சாதாரண கர்மம் கூடாது. கர்மத்தை அடிக்கோடிடுவது முடிந்தது, ஆனால் சிரேஷ்ட கர்மமாக இருக்க வேண்டும் என்பதை அடிக்கோடிடுங்கள். ஒருவேளை கலப்படமான செயல் என்றால் -அதில் சாதாரணமும் உள்ளது, சிரேஷ்டமும் உள்ளது எனில் வெற்றியும் கலந்து விடும். இப்போது கொடுக்கப்பட வேண்டிய விசேஷ கவனம் -சாதாரணத்தை விசேஷமாக மாற்றுவதாகும். இது பற்றியும்

எப்போதாவது கூறுவோம் -பாப்தாதா ஒவ்வொருவரின் அன்றாட வழக்கத்திலும் என்ன பார்க்கிறார் என்பதை. சாதாரணத்தன்மை எவ்வளவு, விசேஷத்தன்மை எவ்வளவு -இந்த முடிவை பார்த்துக் கொண்டே இருங்கள்.

ஒரே நேரத்தில் உள்நாட்டு வெளிநாட்டிலுள்ள அனைத்து குழந்தைகளையும் பார்க்கும் அளவிற்கு பாப்தாதாவிடம் அவ்வளவு சாதனங்கள் உள்ளன. தனித்தனியாக பார்க்க வேண்டிய அவசியமில்லை ஐந்து நிமிடத்தில் எல்லோருடைய கணக்கும் தெரிந்து விடும். குழந்தைகள் ஆஹா ஆஹா என்ற பாடல் பாடுகிறீர்கள், கூடவே சமம் ஆவதற்காக அத்தகைய குறிக்கோளுடன் சோதனையும் செய்கிறீர்கள். தந்தையின் உடைய அன்பு அல்லது தந்தையை அடையாளம் கண்டு கொள்வது பற்றி கேட்டீர்கள் தானே -இதில் அனைவருமே பாஸ் ஆகி விட்டீர்கள் மற்றும் அற்புதமான செயல்களையும் அவ்வப்போது செய்கிறீர்கள். இது ஒரு நல்ல விஷயம்தான் ஆனால் பெரிய விஷயம் அல்ல. சில குழந்தைகள் அற்புதமான விஷயங்களையும் செய்கிறார்கள்! நடப்பதே பெரிய விஷயம், ஆனால் இது எங்கள் அதிசயம் என்று கூறுகிறார்கள். அதனால்தான் பாப்தாதா கூறுகிறார் -பகுத்தறியும் சக்தியை அதிகரிக்கவும். நீங்கள் உங்கள் செயல்களையும் சோதிக்க முடியும் மற்றும் மற்றவர்களின் செயல்களையும் சரியாக சோதிக்க முடியும். தலைகீழாகக் கூறக்கூடாது; அது -பகுத்தறியும் சக்தியின் குறையாகும். எப்போதும் ஒரு விஷயத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள், எல்லோருக்காகவும் கூறுகிறோம் -எப்போதெல்லாம் அத்தகைய வீணான அல்லது சாதாரணமான செயலைச் செய்கிறீர்களோ மற்றும் அது சரியா தவறா என்று உங்களால் அடையாளம் காண முடியவில்லையானால், அப்படியான சூழ்நிலை வரும்போது நீங்கள் வசமாகி விடுகிறீர்கள் எனில், அந்த நேரத்தில் அத்தகைய சூழ்நிலையில் வெற்றி அடைவதற்கான சிறந்த வழி எது? ஏனெனில் அந்த நேரத்தில் உங்கள் புத்தியோ சூழ்நிலை வசமாகி உள்ளது. நீங்கள் சரி என்பதை தவறு என்று நினைப்பீர்கள், தவறை தவறு என்று நினைக்க மாட்டீர்கள், சரி என்று நினைப்பீர்கள்; பின்பு நீங்கள் அதை சரி என வலியுறுத்துவீர்கள் அல்லது நிரூபிப்பீர்கள். இது வசமான-புத்தியின் அடையாளம்! இது போன்ற சமயங்களில்

# 1990 அவ்யக்த முரளி

பாப்தாதாவின் உயர்ந்த அறிவுரையை (ஸ்ரீமத்) சதா நினைவில் கொள்ளுங்கள் -தந்தையால் நிமித்தமாக்கப்பட்ட ஆத்மாக்களின் வழிகாட்டுதலுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அந்த நேரத்தில், கருவிகளாக மாறியவர்கள் யாரோ ஒருவரின் அறிவுரையின் காரணமாக இதைச் சொல்கிறார்கள் என்று நினைக்காதீர்கள். நீங்கள் இதில் ஏமாறுகிறீர்கள். நிமித்தமாக இருக்கும் ஆத்மாக்களிடமிருந்து நீங்கள் பெறும் அறிவுரை அல்லது வழிகாட்டுதலுக்கு அந்த சமயத்தில் முக்கியத்துவம் கொடுப்பதால் ஏதாவது கெட்டது நடந்தால் அதற்கு நீங்கள் பொறுப்பல்ல. எப்படி பிரம்மாதந்தைக்காக சதா கூறுகிறார், ஒருவேளை பிரம்மாவால் ஏதேனும் தவறு நடந்தாலும், அந்த தவறும் மாற்றப்பட்டு, உங்களுக்கு சரியாக ஆகி விடும். எனவே, அத்தகைய நிமித்த ஆத்மாக்களைப் பற்றி ஒருபோதும் எந்த வீணான சிந்தனையும் எழக்கூடாது. நீங்கள் விரும்பாத ஒரு முடிவை யாராவது கொடுக்கிறார்கள் ஆனால் அதற்கு நீங்கள் பொறுப்பல்ல. உங்களுக்கு பாவம் ஏற்படாது. உங்களுடைய வேலை சரியாகி விடும் ஏனெனில் தந்தை அமர்ந்திருக்கிறார். தந்தை பாவத்தை மாற்றி விடுவார். இது குப்தமான ரகசியமாகும்! இது குப்தமான இயந்திரம். எனவே, நிமித்தமாகியுள்ள சிரேஷ்ட ஆத்மாக்களின் சிரேஷ்ட வழிகாட்டுதல்களுக்கு முக்கியத்துவம் அளித்து காரியத்தில் பயன்படுத்தவும். இதில் உங்களுக்கு நன்மை இருக்கிறது, இழப்பும் லாபமாக மாறும். இது தந்தையின் உத்தரவாதம்! புரிந்ததா? அதனால்தான் கர்மங்களின் லீலை மிகவும் விசித்திரமானது என்று கூறப்படுகிறது. தந்தைதான் பொறுப்பாளி! நிமித்தமாக்கப்பட்டவர்களுக்கும் தந்தை தான் பொறுப்பாளி! உங்கள் பாவத்தை மாற்றுவதற்கும் அவரே பொறுப்பாளி. அப்படியே நிமித்தமாக்கப்படவில்லை, சிந்தித்து, புரிந்து கொண்டு, டிராமாவின் சட்டத்திற்குட்பட்டே நிமித்தமாக்கப்பட்டுள்ளனர். புரிந்ததா?

டீச்சர்களுக்கு நன்றாக உள்ளதல்லவா. இதில் நன்மையுண்டு, சுமை லேசாகி விட்டது. எந்த ஒரு விஷயம் வந்தாலும் கூறுவீர்கள் -நிமித்தமான மூத்தவர்களுக்குத்தான் தெரியும் என. லேசாகி விடுகிறீர்கள்தானே, ஆனால் கூறுவது மட்டுமில்லை, நினைப்பதிலும், அன்பிலும், சுவமானத்திலும்கூட! இந்த குப்த விஷயங்களைத் தந்தை அறிவார் மற்றும் யார் புத்திசாலியான குழந்தையோ அவர் அறிவார்.

நிமித்தமான ஆத்மாவுக்காக ஏதாவது சொல்வது என்பது தந்தைக்காக கூறுவது போல. ஏனெனில் தந்தைதானே நிமித்தமாக ஆக்கினார். தத்தையை விட உங்களுக்கு பகுத்தறியும் சக்தி அதிகமாக இருக்கிறதா, என்ன?

பாப்தாதாவிற்கு எல்லாக் குழந்தைகள் மீதும் அதிக அன்பு உள்ளது. நிமித்தமானவர்கள் மீது மட்டுமே அன்பு உள்ளது, மற்றவர்களிடம் இல்லை என்பதில்லை. இதுவும் கூட அன்பினால்தான் வழிகாட்டுதல் தருகின்றார். அன்பு இல்லையேல் கூறுவார்கள் -உங்கள் இஷ்டம் போல் நடந்து கொள்ளுங்கள் என. எப்போது இவ்வளவு தைரியம் வைத்துள்ளீர்கள் மற்றும் பிராமண வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள், பறந்து கொண்டிருக்கிறீர்கள் என்றால் சிறிய பலவீனம் கூட ஏன் இருக்க வேண்டும்? இதுதான் அன்பு! அன்புள்ளவரின் குறை ஒருபோதும் கண்ணுக்குத் தெரியாது. இதுதான் அன்பின் அடையாளம்! யாரிடம் இதயபூர்வமாக உண்மையான அன்பு இருக்கிறதோ, அவருடைய குறையை எப்போதும் தன்னுடைய குறையாகத்தான் நினைப்பார்கள். நல்லது.

எந்த ஒரு காரியம் செய்தாலும் ஒருபோதும் குழப்பமான வாயுமண்டலத்தின் பிரபாவத்தில் வராதீர்கள். தனது பிரபாவத்தை உண்டாக்கினால் அது தானாக உங்களது பிரபாவத்தில் வந்து விடும் மற்றும் வெற்றி எங்களது பிறப்புரிமை என்பது உளமார வெளிப்படும். தைரியத்திற்கு மிக்க மகத்துவம் உண்டு. எப்போதும் எந்த விஷயத்தைப் பார்த்தும் பயப்படக்கூடாது. 1000-புஜங்களுடையவர் நீங்கள் தான். தந்தையின் 1000-புஜங்களும் உங்களுடையதும்தானே. நல்லது.

பம்பாய் சியோன் மையத்தின் ஆசிரியர்கள் மற்றும் சகோதரர்களைப் பார்த்து பாப்தாதா கூறினார்: எல்லாக் காரியங்களையும் முடித்து விட்டு வந்தடைந்துள்ளீர்கள். 'பாஸ்' ஆகி வந்துள்ளீர்களா அல்லது 'பாஸ் வித் ஹானர்' ஆகி வந்துள்ளீர்களா? நன்றாக பாகத்தை நடித்தீர்கள். இதுவும் கூட சிநேகத்தின் கைம்மாறு ஆத்மாவிற்குப் பிராப்தி ஆகிறது. யாருக்கு சிநேகம் கிடைத்துள்ளதோ, அவர் அந்த நேரத்தில் சிநேகத்தின் கைம்மாறு நிச்சயம் செய்கிறார். பல ஆத்மாக்களுக்கும் இச்சமயத்தின் பாகத்திலும் தேவை உள்ளது மற்றும்

புது உலக ஆரம்பத்திலும் தேவை உள்ளது எனில் என்ன செய்வது? டிராமாவும் நடக்க வேண்டியுள்ளது. ஆதலால் யாரெல்லாம் சென்றனரோ அல்லது சென்று கொண்டிருக்கின்றனரோ -விசேஷ ஆத்மாக்கள் ஆரம்பத்திலும் தேவை. இந்த புதிய அத்தியாயத்தை துவங்குவோம். யோக பலத்தின் மூலம் புதிய அத்தியாயம் துவங்குவதற்காக எத்தகைய ஆத்மா வேண்டும்? யோகி ஆத்மா வேண்டும்! நிமித்தமாக யாராவது ஆகிறார்கள் ஆனால் முடிக்கவும் வேண்டும் மற்றும் சேவையும் நடக்க வேண்டும். இப்போது கிருஷ்ணருக்கு யார் ஜென்மம் தருவார், ராதைக்கு யார் ஜென்மம் தருவார் என்பது பற்றி சிந்திக்கக் கூடாது. இந்த விஸ்தாரத்தில் செல்லக்கூடாது. இது ஒரு விஷயமே கிடையாது. எனவே கூறப்படுகிறது கர்மங்களின் லீலை ஆஹா ஆஹா என, தவிர ஜென்மம் யாராவது தரட்டும், இதில் செல்லக்கூடாது. நீங்கள் போக வேண்டுமா அல்லது சிந்திக்க வேண்டுமா! நல்லது.

நாலா புறமும் உள்ள சதா பகுத்தறியும் சக்தியுடைய விசேஷ ஆத்மாக்களுக்கு, சதா ஒவ்வொரு கர்மம், சம்பந்தத்திலும் சிரேஷ்ட வெற்றி அடையக்கூடிய வெற்றிமூர்த்தி ஆத்மாக்களுக்கு, சதா தைரியம் மற்றும் நல்லுணர்வு, நல்விருப்பம் மூலம் மாற்றம் செய்யக்கூடிய சக்திசாலி ஆத்மாக்களுக்கு, சதா 'ஆஹா எனது சிரேஷ்ட கர்மம்' என்ற குஷியின் பாடலை பாடக்கூடிய குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

பார்ட்டிகளுடன் (சாரம்): இந்த மனம் புத்தி சமஸ்காரம் ஆத்மாக்கள் உங்களுடைய சக்திகள். எந்த நேரம், எந்த விதி மூலம் மனம் புத்தியை ஈடுபடுத்த விரும்புகிறீர்களோ, அது போல் ஆக வேண்டும். இதற்குத்தான் கூறப்படுகிறது -கட்டுப்படுத்தும் சக்தி என!

பந்தன்முக்த் என்றால் ராஜா, சுய ராஜ்ய அதிகாரி. பந்தனம் பிராப்திகளை அனுபவிக்க விடாது.

மாதாக்களால் என்ன செய்ய முடியும் என உலகினர் நினைக்கின்றனர் ஆனால் மாதாக்களோ அசம்பவத்தை சம்பவமாக்கி விட்டனர். அத்தகைய சக்திகள்தானே! நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 14.01.1990 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# முயற்சியின் வேகம் குறைவதற்கு இரண்டு முக்கிய காரணங்கள்!

இன்று பிராமணர்களுடைய அனாதி படைப்பவர் பாப்தாதா விசேஷமாக தனது நேரடி அருகிலிருக்கும் படைப்பை, சிரேஷ்ட படைப்பை, பிராமணக் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். யார் அருகில் மற்றும் சமமாக ஆவதற்கான லக்ஷியத்தை சதா நினைவில் வைத்து முன்னேறிக் கொண்டிருக்கிறார்களே, அத்தகைய பிராமண ஆத்மாக்கள்தான் பாப்தாதாவிற்கு மிகவும் பிரியமான படைப்பு. எனில் அத்தகைய ஆதி படைப்பை இன்று குறிப்பாக பார்த்துக் கொண்டிருந்தார். எல்லா தீவிர முயற்சியாளர்கள் மற்றும் முயற்சியாளர்கள் இருவரின் செயல்பாடுகளையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். பாப்தாதா மூலம் கிடைத்துள்ள சர்வ சகஜ விதி மூலம் எப்போது தீவிர வேகம் அல்லது எப்போது தீவிரம், சில சமயம் குறைந்த வேகம் -இரண்டு வித பிராமணக் குழந்தைகளையும் பார்த்தார். படிப்பு, பாலனை மற்றும் பிராப்தி -ஒவ்வொருவருக்கும் ஒரே மாதிரியாகத்தான் கிடைக்கின்றது, பின்பு வேகத்தில் ஏன் வித்தியாசம்? தீவிர முயற்சியாளர் என்றால் முதல் பிரிவினர் மற்றும் முயற்சியாளர் என்றால் இரண்டாம் பிரிவில் தேர்ச்சி பெறக்கூடியவர்கள். இன்று விசேஷமாக அனைவரது சார்ட்'டையும் சோதித்தார். காரணம் அதிகமாக இருந்தது ஆனால் விசேஷமாக இரண்டு காரணங்கள் இருந்தன. முதல் பிரிவில் வர வேண்டும் என்பதோ அனைவரது விருப்பம், இரண்டாவது பிரிவில் வர யாருக்கும் விருப்பமில்லை ஆனால் லக்ஷியம் மற்றும் லக்ஷணம், இரண்டிலும்

வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. குறிப்பாக என்ன இரண்டு காரணங்களைப் பார்த்தார்?

ஒன்று -மிக உயர்ந்த சக்தியான சங்கல்ப சக்தியை, சரியான நேரத்தில், சரியான வழியில், சுயம் அல்லது சேவையில் சரியான நேரத்தில் பயன்படுத்துவதற்கான சரியான முறை இல்லை. இரண்டாவது காரணம், பேச்சின் சக்தியை துல்லியமான, திறமையான முறையில் பயன்படுத்தாதது. இவை இரண்டிலும் குறைக்கான காரணம் -பயன்படுத்துவதை (use) விட தளர்வாகிறது (loose)! வார்த்தைகளில் ஒரு சிறிய வித்தியாசம் இருக்கிறது ஆனால் அதன் விளைவு ஒரு பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது. பாப்தாதா 3-4 நாட்களுக்கான முடிவை மட்டுமே கண்டார், மொத்த முடிவை அல்ல. ஒவ்வொருவரின் 3-4 நாள் முடிவுகளில் என்ன பார்த்தார்? 50% அதாவது பாதி-பாதி. எண்ணம் மற்றும் வார்த்தையில், இரு சக்திகளின் சேமிப்பு கணக்கு 50-சதவிகித ஆத்மாக்களுடையது சரியாக இருந்தது ஆனால் முற்றிலும் சரி என சொல்லவில்லை மேலும் 50-சதவிகித ஆத்மாக்களுடையது சேமிப்பு கணக்கின் 40-சதிவிகிதம் மற்றும் பயனற்ற அல்லது சாதாரணமானவற்றின் கணக்கு 60-சதவிகிதம் என பார்த்தார். எனவே எவ்வளவு சேமிக்கப்பட்டுள்ளது என நினைத்துப் பாருங்கள்! அதிக எடை யாருடையது? இதிலும்கூட பேச்சு மனதில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மனதும், வார்த்தையை தன் பக்கம் ஈர்க்கின்றது. இன்று, பாப்தாதா வார்த்தைகளின் பக்கம் சிறப்பு கவனம் செலுத்துகிறார், ஏனெனில் வார்த்தைகளின் தொடர்பு தன்னுடனும் அனைவருடனும் உள்ளது. இன்னும் வேறு என்ன பார்த்தார்? மனதின் மூலம் நினைவில் இருப்பது -இதற்காக அவ்வப்போது நிகழ்ச்சிகளை வைத்திருக்கிறீர்கள் ஆனால் பேசுவதில் நிறைய அலட்சியத்தன்மை இருக்கிறது. எனவே பாப்தாதா இதன் மீது சிறப்பாக அடிக்கோடிட்டுக் காட்டுகிறார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, பாப்தாதா, சிறப்பு முயற்சியில், சேவையில் முன்னேறுகின்ற மகாரதி ஆத்மாக்களுக்கும், மற்றவர்களுக்கும் பேசுவது பற்றி மூன்று விஷயங்களைக் கூறியிருந்தார் -குறைவாகப் பேசுங்கள், மெதுவாகப் பேசுங்கள், இனிமையாகப் பேசுங்கள்! என்று. வீண்பேச்சின் அடையாளம் -அவர் அதிகம் பேசுவார், வேறு வழியின்றி நேரத்தின்படி, குழுவின்படி தன்னைக் கட்டுப்படுத்துவார், ஆனால் எப்படி யாராவது அமைதியாக

இருக்க கட்டுப்பட்டவர்போல் உணருவாரோ அது போல தனக்குள் உணர்வார். வீண் பேச்சு எத்தகைய பெரும் தீங்கு விளைவிக்கிறது? ஒன்று, உடல் ஆற்றல் தீர்ந்து விடுகிறது ஏனெனில் அது செலவிடப்படுகிறது, இரண்டாவதாக -நேரம் வீணாகிறது. வீணாகப் பேசுபவரின் பழக்கம் என்னவாக இருக்கும்? சிறிய விஷயத்தை மிக நீண்டதாக ஆக்குவார் மற்றும் பேசும் விதம் கதையைப் போலிருக்கும். ராமாயணம் மற்றும் மகாபாரதக் கதையைப் போல... ஆர்வமாகக் கூறுகிறார்கள், இல்லையா? தானும் ஆர்வத்துடன் பேசுவார், மற்றவர்களுக்கும் ஆர்வத்தையும் உருவாக்குவார் ஆனால் விளைவு என்னவாக இருக்கும்? ராமாயணம், மகாபாரதத்தின் முடிவு என்ன? ராமர் வனவாசம் சென்றார் மற்றும் கௌரவ-பாண்டவர்கள் சண்டையிட்டனர் -அப்படித்தானே காண்பிக்கிறார்கள்? சாரம் எதுவுமில்லை ஆனால் இசை (வார்த்தை ஜாலம்) மிகவும் நன்றாக இருக்கிறது. இதற்குக் கூறப்படுகிறது கதை என்று. வீண்பேச்சு பேசுபவர் மாயாவின் பிரபாவத்தினால் பலவீனமான ஆத்மா ஆவார், அவர் சொல்வதற்கும், கேட்பதற்குமான தோழர்களை மிக விரைவாக உருவாக்கி விடுகிறார். அத்தகைய ஆத்மா தனிமையில் இருக்க முடியாது. அதனால் அவர் துணைகளை உருவாக்குவதில் மிகவும் புத்திசாலியாக இருப்பார். இவருடைய குழு மிகவும் சக்திவாய்ந்ததாகவும் மேலும் அதிகமாகவும் இருப்பதாக வெளியிலிருந்து சில நேரங்களில் பார்க்கும்போது அப்படித் தோன்றும்; ஆனால் ஒரு விஷயத்தை எப்போதும் நினைவில் வையுங்கள் -மாயா புறப்பட வேண்டிய இறுதி கட்டம், அதனால் விடைபெற்றுக் கொண்டே தனது அம்பை எய்துகிறது. அதனால்தான் சில நேரங்களில், எங்காவது, மாயாவின் செல்வாக்கு அதன் வேலையைச் செய்கிறது. அது எளிதாக போகக்கூடியதில்லை. கடைசி தருணம் வரை, நேரடியாக இல்லாவிட்டாலும், மறைமுகமாக, கசப்பான ரூபத்தில் இல்லையெனினும், மிகவும் இனிமையான ரூபத்தில் மற்றும் புதிய புதிய ரூபத்தை எடுத்துக் கொண்டு, பிராமணர்களிடம் முயற்சி செய்து கொண்டே இருக்கிறது. பிறகு அப்பாவி பிராமணர்கள் என்ன சொல்வார்கள்? மாயா இந்த ரூபத்திலும்கூட வரும் பாப்தாதா சொல்லவில்லை என்பார்கள். அலட்சியத்தினால் தங்களை சோதிக்கவில்லை மற்றும் மாயா வரும் என்று பாப்தாதாவோ கூறுகிறார் என நினைக்கிறார்கள்...! பாதி வார்த்தையை நினைவில்

கொள்ள வேண்டும், மாயா வரும் ஆனால் மாயையை வென்றவர்களாக வேண்டும் -நீங்கள் இதை மறந்து விடுகிறீர்கள்.

இன்னும் ஒரு விஷயம் -பயனற்ற அல்லது சாதாரண விஷயங்களின் வெவ்வேறு ரூபங்களைப் பார்த்தார்.
ஒன்று -எல்லை மீறிய கேலிச்சிரிப்பு.
இரண்டாவது -கிண்டல் செய்வது (taunting).
மூன்றாவது -அங்கும் இங்குமிருந்து விஷயங்களைச் சேகரித்து கேட்பது, சொல்வது.
நான்காவது -சில சேவை செய்திகள் மற்றும் கூடவே சேவாதாரிகளின் பலவீனத்தைப் பற்றி சிந்தித்தல் -இந்த கலவைச் சட்னி மற்றும்
ஐந்தாவது -ஒழுங்கற்ற வார்த்தைகள், அவை பிராமணர்களின் அகராதியில் இல்லை!
இந்த ஐந்து ரூபங்களைக் கண்டார், வீணான வார்த்தைகள் என இந்த ஐந்தை மட்டுமே பாப்தாதா எண்ணினார். கேலிச்சிரிப்பு ஒரு நல்ல விஷயம் என அப்படி நினைக்காதீர்கள். ஆன்மீகமுள்ள சிரிப்பும் நகைச்சுவையும் நல்லது. மற்றும் யாரை நீங்கள் சிரித்து நகைச்சுவை செய்கிறீர்களோ அந்த ஆத்மாவும் பயனடைந்ததா, நேரம் கடந்ததா அல்லது நேரம் வீணானதா? நல்ல விதமாக பொழுதுபோக்கும் குணம் சிறந்தது என கருதப்படுகிறது, ஆனால் நபர், நேரம், குழு, இடம், வாயுமண்டலம், ஆகியவற்றுக்கு ஏற்றவாறு நன்றாக இருக்க வேண்டும். இந்த விஷயங்களில் ஒன்றுகூட சரியாக இல்லை என்றால், பொழுதுபோக்குதலும் வீணான வரிசையில் கணக்கிடப்படும் மேலும் நன்றாக சிரிக்கின்றனர் ஆனால் பேசுவதும் மிக அதிகமாக உள்ளது என்ற சான்றிதழ் கிடைக்கும். எனவே கலவைச் சட்னி ஆகி விட்டதல்லவா. ஆகவே நேர வரம்பை வைத்திருங்கள். இவருக்கு கூறப்படுகிறது -மரியாதா புருஷோத்தம்!' என் இயல்பே இப்படித்தான் என கூறகின்றனர். அந்த இயல்பு என்ன? பாப்தாதாவின் இயல்பா? எனவே இவரையும் 'மரியாதா புருஷோத்தம்' என்று கூற மாட்டோம், சாதாரண மனிதன் என்றே கூறுவோம். கேட்பவர்களும் முத்துச்சிப்பி போல உங்கள் பேச்சுக்காக காத்திருக்க வேண்டும், இவர் ஏதாவது கொஞ்சம் சொல்வார் நாமும் கேட்போம் என -இதற்கு கூறப்படுகிறது விலைமதிப்பற்ற மகாவாக்கியம்! என. மகாவாக்கியங்கள் அதிகமாக இருக்காது. பேச விரும்பும் போதெல்லாம் பேசிக் கொண்டே இருப்பதை

மகாவாக்கியம் என்று கூற மாட்டோம். எனவே சத்குருவின் குழந்தைகள், மாஸ்டர் சத்குருவினுடைய மகாவாக்கியம் ஆகின்றது, (சாதாரண) வாக்கியம் அல்ல. வீணாகப் பேசும் ஒருவர் நிச்சயமாக தனது புத்தியில் பயனற்ற விஷயங்கள், பயனற்ற செய்திகள், நாலா புறமும் உள்ள குப்பைக் கூளங்களை நிச்சயமாக சேகரிப்பார், ஏனென்றால் ஒரு சுவாரசியமான ரூபத்தில் அவர்கள் கதையைச் சொல்ல வேண்டுமே, சாஸ்திரவாதிகளின் புத்தியைப் போல. எனவே, எந்த நேரம் மற்றும் இடத்தில் அவசியமோ, யுக்தியுக்தாக, உங்களுக்கும் மற்ற ஆத்மாக்களுக்கும் நன்மை அளிக்கக்கூடியதைப் பேசுங்கள். பேச்சின் மீது கவனம் குறைவாக உள்ளது. எனவே இதன் மீது இரட்டை அடிக்கோடு இடுங்கள்!

விசேஷமாக இந்த வருஷம் வார்த்தைகள் மீது கவனம் வையுங்கள். பேச்சின் மூலம் ஆற்றல் மற்றும் நேரம் எவ்வளவு சேமித்தேன் மற்றும் எவ்வளவு வீணானது என சோதியுங்கள். எப்போது இதை சோதிப்பீர்களோ அப்போது தானாகவே உள்நோக்குமுகத்தின் ரசனையை அனுபவம் செய்வீர்கள். உள்நோக்குமுகத்தின் விதம் மற்றும் பேச்சுவழக்கின் விதம் -இதில் இரவுபகல் வித்தியாசம் இருக்கிறது. அந்தர்முகி சதா புருவ மத்தியில் தபஸ்விமூர்த்தியாக அனுபவம் செய்வார். புரிந்ததா!

புரிந்து கொள்வது என்றால் ஆவது! எப்போது ஏதாவது ஒரு விஷயம் புரிந்து விட்டது எனில் அவர் கண்டிப்பாக செய்வார், கண்டிப்பாக புரிந்தும் கொள்வார். டீச்சர்களோ புத்திசாலிகள்தானே! அப்போதுதானே பாக்கியம் கிடைத்தது. நிமித்தம் ஆவதற்கான பாக்கியம் -இதன் மகத்துவம் இப்போதும் அவ்வப்போது சாதாரணமாகத் தெரிகிறது ஆனால் இந்த பாக்கியம் தக்க சமயத்தில் மிக சிரேஷ்டமாக அனுபவம் செய்வீர்கள். யார் நிமித்தமாக்கியது, யார் ஆத்மா என்னை இந்த தகுதிக்குப் பொறுக்கி எடுத்தது -இந்த நினைவு தானாகவே சிரேஷ்டமாக்கி விடும். உருவாக்குபவர் யார்? ஒருவேளை இது நினைவில் இருந்தது எனில் மிக எளிதாக நிரந்தர யோகி ஆகி விடுவீர்கள். சதா உள்ளத்தில், உருவாக்குபவர் தந்தையுடைய குணங்களின் பாடலைப் பாடிக் கொண்டே இருந்தால் நிரந்தர யோகி ஆகி விடுவீர்கள். இது ஒன்றும் குறைந்த விஷயம் இல்லை. முழு

உலகிலும் கோடியிலும் கோடி ஆத்மாக்களில் எத்தனை பேர் நிமித்த டீச்சர்களாகி உள்ளனர்! பிராமண பரிவாரத்திலும் டீச்சர்கள் எத்தனை பேர் உள்ளனர். எனவே யாரோ ஒருவர் ஆகின்றனர். டீச்சர் என்றால் சதா பகவான் மற்றும் பாக்கியத்தின் பாடலைப் பாடுபவர்கள்.

குடும்பஸ்தர்கள் இன்பமாக இருக்கிறீர்களா! குழப்பமடைபவர்களா அல்லது குஷியாக இருப்பவர்களா? பிராமண வாழ்க்கையில் ஒவ்வொரு நொடியும் உடல், மனம், செல்வம், மக்கள் உடைய இன்பமே இன்பமாக உள்ளது. ஓய்வாகத் தூங்குகிறீர்கள், ஓய்வாக சாப்பிடுகிறீர்கள். ஓய்வாக இருப்பது, உண்பது, உறங்குவது மற்றும் படிப்பது. வேறு என்ன வேண்டும்? படிப்பதும் சரியாக உள்ளதா அல்லது அமிர்தவேளையில் தூங்கி விடுகிறீர்களா? இப்படி பல குழந்தைகள் செய்கின்றனர், முழு இரவும் விழித்திருந்தேன் அதனால் காலையில் தூக்கம் வந்து விட்டது என கூறுவீர்கள். அல்லது சேவை ஒன்று செய்தீர்கள் எனில் அமிர்தவேளையை விட்டுவிடுவீர்களா -என்றால் இதில் என்ன இன்பம் உள்ளது? கூடுதலான சேமிப்போ ஆகவில்லை. ஒரு பக்கம் சேவை, மறு பக்கம் அமிர்தவேளையை தவற விடுவது, என்றால் என்ன ஆனது? ஆனால் பெயருக்காக, விருப்பமின்றி, கஷ்டப்பட்டு அமர வேண்டாம். அந்த டி.வி. மிக நன்றாக உள்ளது. எப்படி அவர்கள் யோகாசனம் செய்யும்போது பல விதமாக நிலைகளை (pose) மாற்றிக் கொண்டே இருக்கின்றனர், எனில் இங்கும் கூட அப்படித்தான் இருக்கிறது. சகஜ யோகாதானே, எனவே ஓய்வாக அமர்வோம் என நினைக்கின்றனர். பலருடைய சுருதியும் (tune, அதாவது கொறட்டை சப்தம்) பாப்தாதாவும் கேட்கின்றார். பாப்தாதாவிடம் அந்த ஒலிநாடா (cassette) உள்ளது. எனவே, இப்போது இரட்டை அடிக்கோடு இடுவீர்கள்தானே. முடிவுகளில் (results) எவ்வளவு வித்தியாசம் இருந்தது என்பதை பின்பு பாப்தாதா கூறுவார். நல்லது!

நாலா புறமும் உள்ள சிரேஷ்ட லட்சியம் மற்றும் சிரேஷ்ட லக்ஷணத்தைத் தாரணை செய்யக்கூடிய தீவிர புருஷார்த்தி ஆத்மாக்களுக்கு, சதா தனது வார்த்தையை நேரம் மற்றும் கட்டுப்பாட்டில் வைக்கக்கூடிய புருஷோத்தம ஆத்மாக்களுக்கு, சதா மகாவீர் ஆகி மாயாவுடைய எல்லா ரூபங்களையும் தெரிந்து கொள்ளக்கூடிய ஞானம் நிறைந்த ஆத்மாக்களுக்கு, சதா ஒவ்வொரு

நொடியும் ஆனந்தத்தில் இருக்கக்கூடிய கவலையற்ற ராஜாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

**மண்டலங்கள்வாரியாக குழுக்களுடன் சந்திப்பு (சாரம்):** அமைதி சக்தி ஒரு நொடியில் உங்களது இனிமையான வீட்டை, சாந்திதாமத்தை அடையச் செய்கிறது.
உங்களுக்கு சுப சங்கல்பத்தின் இயந்திரம் கிடைத்துள்ளது, திவ்ய புத்தி கிடைத்துள்ளது. தூய மனம் மற்றும் திவ்ய புத்தி மூலம் சென்றடைந்து விடுகிறீர்கள்.
தந்தையுடைய ஆஸ்தி சர்வ சக்திகள், ஆதலால் தந்தை சர்வ சக்திவான், ஆல்மைட்டி அதாரிட்டி என்று மகிமை செய்யப்படுகிறார்.
இப்போது இல்லையேல் எப்போதும் இல்லை. பின்பு 'டூ லேட்' போர்டு (too late board) போடப்பட்டு விடும். இப்போதோ 'லேட்'ன் போர்டுதான் உள்ளது, 'டூ லேட்' இல்லை.

மாதாக்கள்: உலகில் எத்தனை படித்த மாதாக்கள் உள்ளனர் ஆனால் தந்தைக்கு கிராமத்தினர்தான் பிடிக்கும், ஏன்? உண்மையான உள்ளத்தில் இறைவன் உறைகிறார்! தந்தை உண்மையான உள்ளத்தைப் பார்க்கின்றார். உண்மையான உள்ளம் வேண்டும், ஆதலால் தந்தைக்கு 'தில்வாலா' என்ற பெயர் உள்ளது. நல்லது.

ஞானத்தினுடைய எல்லா ரகசியங்களும் புத்தியில் தெளிவாக நினைவுள்ளது -இதற்கு கூறப்படுகிறது ரகசியயுக்த் மற்றும் சதா படைப்பவர் தந்தையை நினைவில் வைப்பது -இதற்கு கூறப்படுகிறது யோகயுக்த்! யார் ஞானி மற்றும் யோகி ஆத்மாவோ, அவரது ஒவ்வொரு கர்மமும் தானாகவே யுக்தியுக்த் ஆக இருக்கும். யுக்தியுக்த் என்றால் சதா சரியான சிரேஷ்ட கர்மம்!
யார் ரகசியயுக்த், யோகயுக்த் ஆக இருக்கிறாரே அவரது அடையாளம் அவர் யுக்தியுக்த் ஆக இருப்பார்.
வள்ளலின் களஞ்சியம் நிரம்பியுள்ளது, அள்ள அள்ளக் குறையாதது, ஆதலால் குறைவில்லா கஜானாவின் எஜமானன் ஆகுங்கள். நல்லது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

## 18.01.1990 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## நினைவு தினத்தன்று அவ்யக்த பாப்தாதாவின் மகாவாக்கியம்!

இன்று அனைத்து குழந்தைகளுடைய சினேகியான தாய் தந்தை தங்களுடைய சினேகி குழந்தைகளுடைய அன்பு நிறைந்த உள்ளத்தின் சப்தம் மற்றும் அன்பில், விலை மதிப்பற்ற முத்துக்களின் மாலைகளைப் பார்த்து பார்த்து குழந்தைகளுக்கு அன்பின் கைம்மாறாக சதா சமீபமானவர் ஆகுக, சமமாக, சக்திசாலியாக ஆகுக, சதா நிறைவானவர் திருப்தியானவர் ஆகுக என்ற வரதானம் கொடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள். அனைவருடைய உள்ளத்தின் அன்பானது உங்களுடைய உள்ளத்தில் சங்கல்பம் எழுந்ததுமே பாப்தாதாவிடம் மிகவும் தீவிர வேகத்தில் வந்தடைந்து விடுகிறது. நாலாபுறங்களிலும் உள்ள உள்நாட்டு வெளிநாட்டு குழந்தைகள் இன்று அன்புக்கடலில் லவ்லீன் (அன்பில் மூழ்கிய நிலை) ஆக இருக்கின்றனர். பாப்தாதா, அதிலும் விசேஷமாக தாயான பிரம்மா, குழந்தைகள் அன்பில் லவ்லீன் ஆகியிருப்பதைப் பார்த்து சுயம் தானும் குழந்தைகளுடைய அன்பில், சினேகத்தில் மூழ்கியிருக்கின்றார். தாயான பிரம்மாவிற்கு குழந்தைகள் மீது விசேஷ அன்பு இருந்தது மற்றும் இப்பொழுதும் இருக்கின்றது

என்பதை குழந்தைகள் அறிந்துள்ளனர். பாலனை செய்யும் தாய்க்கு இயல்பாகவே விசேஷ அன்பு இருக்கத்தான் செய்யும். எனவே, குழந்தைகளுடைய மனதில், புத்தியில், உள்ளத்தில், கண்களில் தாய் தந்தையைத் தவிர வேறு எவரும் இல்லை என்பதை இன்று தாயான பிரம்மா ஒவ்வொரு குழந்தையிடமும் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டு இருக்கின்றார்கள். அனைத்து குழந்தைகளும் ஒரே பலம் ஒரே நம்பிக்கையோடு முன்னேறிக் கொண்டே இருக்கின்றனர். ஒருவேளை, எங்கேயாவது நின்று விட்டாலும் கூட தாய் தந்தையின் அன்புக் கரமானது மீண்டும் சக்திசாலியாக்கி முன்னேற்றி விடுகிறது. இன்று தாய் தந்தை குழந்தைகளுடைய சிரேஷ்டமான பாக்கியத்தின் பாடலை பாடிக் கொண்டு இருந்தார்கள். ஏனெனில், இன்றைய தினம் விசேஷமாக சூரியன், சந்தினுடைய முதுகெலும்பாகி நட்சத்திரங்களை விஷ்வம் என்ற ஆகாயத்தில் பிரத்யக்ஷம் செய்த தினம் ஆகும். எவ்வாறு யக்ஞத்தினுடைய ஸ்தாபனையின் துவக்கத்தில் தந்தை பிரம்மா குழந்தைகளுக்கு முன்பு தனது அனைத்தையும் சமர்ப்பணம் செய்தாரோ அதாவது வில் (will) செய்தாரோ, அவ்வாறு இன்றைய தினத்தில் தந்தை பிரம்மா குழந்தைகளுக்கு சர்வ சக்திகளையும் வில் (சமர்ப்பணம்) செய்தார், அதாவது வில் பவர்ஸ் (will powers மனோ சக்திகள்) கொடுத்தார். இன்றைய தினம் கண்கள் மூலம் மற்றும் சங்கல்பத்தின் மூலம் தந்தை குழந்தைகளுக்கு விசேஷமாக 'சன் ஷோஸ் ஃபாதர்' (மகன் தந்தையை வெளிப்படுத்துவார்) என்ற விசேஷ பரிசு கொடுத்தார். இன்றைய தினம் தந்தை பிரத்யக்ஷமாக சாகார ரூபத்தில் செய்விப்பவர் என்ற பாகத்தை நடிக்கின்றார் என்பதை பிரத்யக்ஷ ரூபத்தில் காண்பித்தார். தந்தை பிரம்மா கூட இன்றைய தினம் பிரத்யக்ஷ ரூபத்தில் செய்விப்பவரான தந்தையின் துணைவன் ஆனார். செய்பவராக, நிமித்தமாக குழந்தைகளை ஆக்கினார் மற்றும் செய்விப்பவர்களாக தாய் தந்தை ஒருசேர இணைந்து விட்டார்கள். இன்றைய தினம் தந்தை பிரம்மா தன்னுடைய சேவையின் முறை மற்றும் நிலையை மாற்றினார். இன்றைய தினம் விசேஷமாக தந்தை பிரம்மா தேகத்தில் இருந்து சூட்சும ஃபரிஷ்தா சொரூபத்தை தாரணை செய்து உயர்ந்த வதனம், சூட்சும வதன நிவாசியாக ஆனார். எதற்காக? குழந்தைகளை தீவிர வேகத்தில் உயர்ந்தவர்களாக ஆக்குவதற்காக குழந்தைகளை ஃபரிஷ்தா ரூபத்தில் பறக்க வைப்பதற்காக. இவ்வளவு சிரேஷ்ட மகத்துவம் வாய்ந்த தினம் இன்றைய தினம் ஆகும்.

அன்பிற்கான தினம் மட்டுமல்ல ஆனால் விஷ்வத்தின் ஆத்மாக்களுடைய, பிராமண ஆத்மாக்களுடைய மற்றும் சேவையினுடைய நிலையின் மாற்றமானது நாடகத்தில் பதிவாகி இருந்தது, அதை குழந்தைகளும் பார்த்துக் கொண்டு இருக்கின்றீர்கள். விஷ்வத்தின் ஆத்மாக்களுக்காக புத்திவானுக்கெல்லாம் புத்திவான் ஆனார். புத்தியினுடைய மாற்றம் ஏற்பட்டது, தொடர்பில் வந்தார்கள், சகயோகி ஆனார்கள். பிராமண ஆத்மாக்களில் சிரேஷ்ட சங்கல்பத்தின் மூலம் தீவிர வேகத்தில் விருத்தி ஏற்பட்டது. சேவைக்காக ஸன் ஷோஸ் ஃபாதர் (son shows father) என்ற பரிசு மூலம் பல்வேறு துறையின் சேவை ஆரம்பம் ஆனது. இந்தப் பரிசு சேவைக்கான லிஃப்ட் ஆகி விட்டது. மாற்றம் ஏற்பட்டது அல்லவா! இப்பொழுது போகப்போக சேவையில் மேலும் பரிவர்த்தனையைக் காண்பீர்கள்.

இப்பொழுது வரை பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் தன்னுடைய உடல், மனதினுடைய உழைப்பினால் நிகழ்ச்சிகளை உருவாக்குகின்றீர்கள், மேடையை தயார் செய்கின்றீர்கள், அழைப்பிதழ் அச்சடிக்கின்றீர்கள், வி.ஐ.பி. யாரையாவது அழைக்கின்றீர்கள், வானொலி, தொலைக்காட்சி நிலையத்தினரை சகயோகி ஆக்குகின்றீர்கள், பணத்தையும் செலவு செய்கின்றீர்கள் ஆனால் பிற்காலத்தில் சுயம் நீங்கள் வி.ஐ.பி. ஆகி விடுவீர்கள். உங்களை விட உயந்தவர்களாக எவரும் தென்பட மாட்டார்கள். தயாராக இருக்கும் மேடையில் பிறர் உங்களுக்கு அழைப்பு கொடுப்பார்கள். தன்னுடைய உடல், மனம், பணத்தினுடைய சேவைகளை தானாகவே 'ஆஃபர்' (offer கொடுத்தல்) செய்வார்கள். உங்களை வேண்டுவார்கள். நீங்கள் உழைக்க மாட்டீர்கள், நீங்கள் எங்களிடம் வாருங்கள் என்று அவர்கள் வேண்டுவார்கள். அப்பொழுதே பிரத்யக்ஷதாவின் ஒலி உரக்க ஒலிக்கும் மற்றும் அனைவருடைய கவனமும் குழந்தைகளாகிய உங்கள் மூலம் தந்தையின் பக்கம் செல்லும். அதிக காலம் இது இருக்காது. அனைவருடைய பார்வையும் தந்தையின் பக்கம் செல்வது என்றால் பிரத்யக்ஷம் ஆவது என்பதாகும் மற்றும் வெற்றி முழக்கம் நாலா புறங்களிலும் ஒலிக்கும். இந்த சூட்சம ரகசியம் நாடகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. பிரத்யக்ஷத்திற்குப் பிறகு அனேக ஆத்மாக்கள் பச்சாதாபப்படுவார்கள் மேலும் குழந்தைகளுடைய பச்சாதாபத்தை தந்தையால் பார்க்க முடியாது. ஆகையால், பரிவர்த்தனை ஆகி விடும்.

## 1990 அவ்யக்த முரளி

இப்பொழுது பிராமண ஆத்மாக்களாகிய உங்களுடைய உயர்ந்த நிலை சதா காலத்திற்காக உருவாகிக் கொண்டு இருக்கிறது. உங்களுடைய உயர்ந்த நிலை சேவையின் மேடைக்கு அழைப்பு கொடுக்க வைக்கும் மேலும் எல்லையற்ற விஷ்வத்தின் மேடையில் வெற்றியின் நடிப்பு நடிப்பீர்கள். கேட்டீர்களா, சேவையின் பரிவர்த்தனையைப் பற்றி?

தந்தை அவ்யக்தம் ஆவது நாடகத்தில் மறைமுகமான ரகசியமாக பதிவாகி இருந்தது. குறைந்ததிலும் குறைந்தது தந்தை பிரம்மா விடைபெற்று சென்றிருக்கலாம் என்று சில குழந்தைகள் நினைக்கின்றனர். நீங்கள் விடை கொடுப்பீர்களா என்ன? கொடுக்க மாட்டீர்கள் அல்லவா! எனில், பலவானாக ஆனது யார்? ஒருவேளை, அனுமதி பெற்றால் கர்மாதீத் ஆகமுடியாது. ஏனெனில், இரத்த சம்பந்தத்தை விட பல மடங்கு அதிகமானது ஆன்மிக சம்பந்தம் ஆகும். பிரம்மா கர்மாதீத் ஆக வேண்டி இருந்ததா அல்லது அன்பின் பந்தனத்தில் போக வேண்டி இருந்ததா? நாடகம் கர்மாதீத் ஆக்குவதற்கான பந்தனத்தில் கட்டிப் போட்டு விட்டது என்று தந்தை பிரம்மாவும் கூறுகின்றார் மேலும் எவ்வளவு நேரத்தில் கட்டிப் போட்டது! சமயம் இருக்கிறது என்றால் இன்னும் நடிப்பு இருந்திருக்கும். ஆகையினால், காலத்தின் விளையாட்டாகி விட்டது. குழந்தைகளையும் கூட அறியாதவர்களாக ஆக்கி விட்டது. தந்தையையும் அறியாதவராக ஆக்கி விட்டது. இதையே ஆஹா, நாடகம் ஆஹா! என்று கூறுகின்றார்கள், அப்படித்தானே. எப்பொழுது ஆஹா நாடகம் ஆஹா! என்பது உள்ளதோ, அப்பொழுது எந்த சங்கல்பமும் எழ முடியாது. முற்றுப்புள்ளி வைத்து விட்டீர்கள் அல்லவா! இல்லையெனில், குறைந்ததிலும் குறைந்தது என்ன நடந்து கொண்டிருக்கிறது? என்றாவது குழந்தைகள் கேட்க முடிந்திருக்கும் ஆனால், தந்தையும் அமைதியாக இருந்தார், குழந்தைகளும் அமைதியாக இருந்தார்கள். இதையே நாடகத்தின் முற்றுப்புள்ளி என்று கூறப்படுகிறது. அந்த நேரம் முற்றுப்புள்ளி தான் வைக்கப்பட்டது அல்லவா. பின்னால் எத்தனை கேள்விகள் எழுந்தது ஆனாலும் அந்த நேரம் எழவில்லை, எனில் ஆஹா நாடகம் ஆஹா! என்று சொல்லலாம் அல்லவா. பாபா பாபா என்று கூறி பின்னால் அழைத்தீர்கள், முதலில் அழைக்கவில்லை. நாடகத்தில் இந்த விசித்திரமான பதிவினை

நடந்தேற வேண்டி இருந்தது மற்றும் நடந்துதான் ஆக வேண்டும். மாறக்கூடிய நாடகம் நடிப்பையும் கூட மாற்றி விடுகிறது.

இந்த அனைத்து டீச்சர்களிலும் பெரும்பான்மையானோர் அவ்யக்த படைப்பு ஆவீர்கள். சாகார பாலனையைப் பெற்ற டீச்சர்கள் மிகவும் குறைவானவர்களே உள்ளனர். அதிவேகத்தில் பிறந்திருக்கின்றீர்கள். ஏனெனில், சங்கல்பத்தின் நிலையானது அனைத்தையும் விட வேகமானது ஆகும். ஆதி ரத்தினங்கள் வாய்வழி வம்சத்தினர் ஆவார்கள் மேலும் நீங்களோ சங்கல்பத்தினால் உருவான வம்சத்தினர் ஆவீர்கள். ஆகையினால், பிரம்மாவின் இரண்டு படைப்புகள் என்று பாடப்பட்டுள்ளது. ஒன்று வாய்வழி வம்சத்தினர், மற்றொன்று சங்கல்பத்தின் மூலம் சிருஷ்டியைப் படைத்தார். நீங்களும் பிரம்மாவின் படைப்பு தான், ஆகையினாலேயே பிரம்மாகுமார் பிரம்மாகுமாரி என்று அழைக்கப்படுகின்றீர்கள். சிவகுமாரி என்று அழைக்கப்படுவதில்லை அல்லவா. இரட்டை அயல்நாட்டினர் அனைவரும் கூட சங்கல்பத்தின் படைப்பு ஆவார்கள். இவ்வாறு தீவிர வேகத்தில் அனைத்து டீச்சர்களும் முன்னேறிக் கொண்டு இருக்கின்றீர்களா? நீங்கள் தீவிர வேகத்தில் உருவான படைப்பு என்பதால் முயற்சியும் கூட தீவிர வேகத்தில் இருக்க வேண்டும். சதா தீவிர முயற்சியாளராக இருக்கின்றேனா அல்லது அவ்வப்பொழுது இருக்கின்றேனா? என்ற இந்த சோதனை சதா செய்யுங்கள். புரிந்ததா? இப்பொழுது என்ன? ஏன்? என்ற பாடலை முடித்து விடுங்கள். ஆஹா! ஆஹா! என்ற பாடல் பாடுங்கள். நல்லது.

நாலாபுறங்களினுடைய அனைத்து அன்பு மற்றும் சக்தி நிறைந்த சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா தந்தையின் கூடவே தீவிர வேகத்துடன் பரிவர்த்தனைக்குத் துணையாக இருக்கும் நெருக்கமான ஆத்மாக்களுக்கு, சதா தன்னுடைய பறக்கும் கலை மூலம் பிற ஆத்மாக்களையும் கூட பறக்க வைக்கக்கூடிய பந்தனமற்ற பறக்கும் பறவைகளான ஆத்மாக்களுக்கு, சதா ஸன் ஷோஸ் ஃபாதர் என்ற பரிசு மூலம் தனக்குள்ளும் சேவையிலும் தீவிர வேகத்தில் மாற்றத்தைக் கொண்டு வரக்கூடிய, அத்தகைய அனைத்து லவ்லீன் குழந்தைகளுக்கு இந்த மகத்துவமான தினத்தினுடைய மகத்துவத்தின் கூடவே தாய் தந்தையினுடைய விசேஷமான அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

# 1990 அவ்யக்த முரளி

ஹூப்ளி ஜோனிடம் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு: சதா தன்னை ஒவ்வொரு அடியிலும் பல கோடி மடங்கு வருமானம் செய்யக்கூடிய பத்மாபதம் பாக்கியவான் எனப் புரிந்திருக்கின்றீர்களா? ஒவ்வொரு அடியிலும் (கதம்) கோடி (பதம்) என்ற இந்த மகிமை யாருக்கான மகிமை? முழு நாளில் எத்தனை கோடியை சேர்க்கின்றீர்கள்? சங்கம யுகம் பெரியதிலும் பெரிய வருமானத்தின் சீசனுக்கான (உற்ற காலம்) யுகம் ஆகும். எனவே, சீசனில் என்ன செய்யப்படுகிறது? அந்தளவு கவனம் வைக்கின்றீர்களா? இப்பொழுது இல்லையேல் எப்பொழுதும் இல்லை என்ற இந்த நினைவு ஒவ்வொரு நேரமும் இருக்க வேண்டும். எந்த விநாடி கடந்து விட்டதோ, அது மீண்டும் வராது. ஒரு விநாடி வீணாகிறது என்றால் எத்தனை அடிகள் வீணாகி விட்டன? கோடி வீணாகி விட்டது. ஆகையினால், யார் சமயத்தின் மகத்துவத்தை அறிந்திருக்கின்றார்களோ, அவர்கள் தானாகவே மகான் ஆகின்றார்கள் என்ற இந்த சுலோகன் ஒவ்வொரு விநாடியும் நினைவிருக்க வேண்டும். தன்னையும் அறிந்து கொள்ள வேண்டும் மற்றும் சமயத்தையும் அறிந்து கொள்ள வேண்டும். இரண்டுமே விசேஷமானதாகும். இந்த நினைவு தினத்தன்று விசேஷமாக சதா சக்திசாலி ஆவதற்கான சிரேஷ்ட சங்கல்பம் செய்தீர்களா? வீணான சங்கல்பம், பேச்சு, அனைத்து ரூபத்திலும் வீணானதை முடிவடையச் செய்வதற்கான தினமாகும். எப்பொழுது வீணானது எது, சக்திசாலியானது எது என்ற ஞானம் கிடைத்து விட்டதோ, அப்பொழுது ஞானம் நிறைந்த ஆத்மா ஒருபொழுதும் சக்திசாலியானதை விட்டுவிட்டு வீணானதின் பக்கம் செல்ல முடியாது மேலும் எந்தளவு சுயம் சக்திசாலியாக ஆவீர்களோ, அந்தளவு பிறரையும் சக்திசாலியாக ஆக்க முடியம். 63-ஜென்மங்களாக இழந்து விட்டீர்கள் மேலும் இந்த ஒரு ஜென்மம் மட்டுமே சக்திசாலி ஆகுவதற்கான ஜென்மம் ஆகும். எனவே, இந்த சமயத்தை வீணாக்கக்கூடாது அல்லவா? அமிர்த வேளையில் இருந்து இரவு வரை தன்னுடைய தினச்சரியத்தை (கால அட்டவணை) சோதனை செய்யுங்கள். இரவு மட்டும் சார்ட்டை சோதனை செய்கின்றேன் என்பதல்ல ஆனால் இடையிடையில் சோதனை செய்யுங்கள், அடிக்கடி சோதனை செய்தாலே மாற்றம் ஏற்பட முடியும். ஒருவேளை, இரவு சோதனை செய்தீர்கள் என்றால் எது வீணாகி விட்டதோ, அது வீணான கணக்கில் சென்றுவிடும். ஆகையினால், பாப்தாதா இடை இடையில்

டிரா∴பிக் கண்ட்ரோல் நேரத்தை உருவாக்கி இருக்கின்றார்கள். டிரா∴பிக் கண்ட்ரோல் செய்கின்றீர்களா அல்லது பகலில் பிஸியாக இருக்கின்றீர்களா? தன்னுடைய நியமத்தை உருவாக்கி இருக்க வேண்டும். நேரம் கொஞ்சம் தவறி விட்டாலும், ஒருவேளை கவனம் இருக்குமானால் வருமானம் சேமிப்பாகும். அந்த நேரத்தில் ஒருவேளை ஏதாவது வேலை இருக்கிறது என்றாலும் அரை மணி நேரத்திற்குப் பிறகு செய்யுங்கள் ஆனால் செய்ய முடியும் தானே. (கடிகார) மணியின் ஆதாரத்தில் கூட ஏன் செயல்பட வேண்டும்? தன்னுடைய புத்தி தான் கடிகாரம், திவ்ய புத்தியினுடைய கடிகாரத்தை நினைவு செய்யுங்கள். ஒரு விசயத்தின் பழக்கம் ஏற்பட்டு விடுகிறது எனில் பழக்கம் என்பது அப்படிப்பட்ட ஒன்று விரும்பாமலேயே தன் பக்கம் ஈர்க்கும். தீய பழக்கம் இருக்க விடாமல் தன் பக்கம் கவர்ச்சிக்கிறது எனில், நல்ல சமஸ்காரத்தை ஏன் தன்னுடையதாக ஆக்க முடியாது? எனவே, சோதனை செய்யுங்கள் மற்றும் மாற்றம் அடையுங்கள். அப்பொழுது சதா காலத்திற்கும் வருமானம் சேமிப்பாகிக் கொண்டே இருக்கும். நல்லது.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 20.01.1990 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிரம்மாபாபாவின் சிறப்பான ஐந்து அடிகள்!

இன்று உலகிற்கே அன்பான தந்தை தன்னுடைய விசேஷமான மிக அன்பான மற்றும் நெருக்கமான குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைத்துக் குழந்தைகளும் அன்பிற்குரியவர்கள் தான் ஆனால் யார் ஒவ்வொரு அடியிலும் பின்பற்றி நடக்கிறார்களோ அவர்கள் தான் மிகவும் அன்பான மற்றும் நெருக்கமான குழந்தைகள் உடலற்ற தந்தை உடலில் உள்ள குழந்தைகளுக்கு உடல் மூலமாக பின்பற்றி நடப்பதற்காக சாகார பிரம்மாபாபாவை குழந்தைகள் முன்பு பொறுப்பில் வைத்தார். அவர் தான் நாடகத்தின் ஆரம்பத்திலிருந்து கடைசி வரை 84-ஜென்மங்களை அனுபவம் செய்தவர் மற்றும் குழந்தைகள் முன்பு சுலபமாக்குவதற்காக சாகார ரூபத்தில் இடை சாதனமாகி உதாரணமானார். சக்திசாலியான உதாரணத்தைப் பார்த்து பின்பற்றி நடப்பது சுலபமாகி விடுகிறது. எனவே அன்பான குழந்தைகளுக்காக அன்பின் அடையாளமாகத் தந்தை பிரம்மாவை வைத்தார் மற்றும் அனைத்துக் குழந்தைகளுக்கும் ஒவ்வொரு அடியிலும் பின் பற்றி நடக்கவும் என்ற உயர்ந்த ஸ்ரீமத் கொடுத்தார். அனைவரும் தன்னை தந்தையை பின்பற்றி நடக்கும் நெருக்கத்தில் இருக்கும் ஆத்மாவாகப் புரிந்து கொள்கிறீர்களா? பின்பற்றி நடப்பது சுலபமாக இருக்கிறதா? இல்லை கடினமாக இருக்கிறதா? பிரம்மாபாபாவின் விசேஷ அடிகளாக என்ன பார்த்தோம்?

முதன் முதல் அடி: அனைத்தையும் முற்றிலும் தியாகம் செய்தவர். உடலிலிருந்தும் மற்றும் குடும்ப உறவிலிருந்து மட்டுமல்ல ஆனால் மிகப் பெரிய தியாகம், மனம், புத்தியால் சமர்ப்பணம் அதாவது மனம் புத்தியில் ஒவ்வொரு நேரமும் தந்தை மற்றும் ஒவ்வொரு காரியத்திலும் ஸ்ரீமத்தின் நினைவு இருந்தது. எப்பொழுதும் தன்னை பொறுப்பில் இருப்பவர் என்று உணர்ந்து ஒவ்வொரு காரியத்திலும் விலகியவராகவும் அன்பானவராகவும் இருந்தார். உடல் சம்பந்தப்பட்ட

உறவுகளில் என்னுடையது என்பதில் தியாகம். எப்பொழுது மனம் புத்தி தந்தை முன்பு சமர்ப்பணம் ஆகி விடுகிறதோ அப்பொழுது உடல் சம்பந்தப்பட்ட உறவுகள் தானாகவே தியாகம் ஆகி விடுகிறது. அப்படி முதன் முதல் அடி அனைத்தையும் முற்றிலும் தியாகம் செய்தவர்.

இரண்டாவது அடி: எப்பொழுதும் கட்டளைக்கு கீழ்படிந்து நடப்பவராக இருந்தார். ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு சுயமுயற்சியிலும், யக்ஞத்தை பராமரிப்பதிலும் பொறுப்பாக ஆனார். ஏனென்றால் ஒரே ஒரு பிரம்மா தான் விசேஷ ஆத்மா, அவருக்குத் தான் நாடகத்தில் விசித்திரமான பங்கு அடங்கியிருக்கிறது. ஒரே ஒரு ஆத்மா தான் தாயாகவும் இருக்கிறார், தந்தையாகவும் இருக்கிறார். யக்ஞ பராமரிப்பின் பொறுப்புக்கள் இருந்த போதிலும், எப்பொழுதும் கட்டளைப்படி நடப்பவராக இருந்தார். ஸ்தாபனைக் காரியம் மிகவும் விரிவடைந்த போதிலும் எந்தக் கட்டளையையும் மீறி நடக்கவில்லை. ஒவ்வொரு நேரத்திலும் “சரி ஐயா” என்பதின் பிரத்யக்ஷ சொரூபத்தை, சகஜமாக பார்க்க முடிந்தது.

மூன்றாவது அடி: ஒவ்வொரு எண்ணத்திலும் நம்பிக்கைக்கு உரியவராக இருந்தார். எப்படி பதிவிரதைப் பெண் ஒரு கணவனைத் தவிர வேறு யாரையும் கனவில் கூட நினைவு செய்ய முடியாதோ அதே போல் ஒவ்வொரு நேரமும் ஒரு தந்தையைத் தவிர வேறு யாருமில்லை என்ற இந்த நம்பிக்கைக்குரிய தன்மையை பிரத்யக்ஷமாகப் பார்த்தீர்கள். புது உலக ஸ்தாபனையின் விசால காரியத்தின் பொறுப்புகள் இருந்த போதிலும் நம்பிக்கையின் பலம் மூலமாக, ஒரு பலம் ஒரு நம்பிக்கையின் பிரத்யக்ஷமாக ஒவ்வொரு காரியத்திலும் சூழ்நிலைகளை எளிதாகக் கடந்து சென்றார் மற்றும் கடந்து செல்ல வைத்தார்.

நான்காவது அடி: உலக சேவாதாரி ஒரு பக்கம் மிகவும் பணிவாக, உலகிற்கு பணிபுரிபவர் இன்னொரு பக்கம் ஞானத்தின் அதிகாரம் நிறைந்தவர். எவ்வளவிற்கு பணிவாக இருந்தாரோ அவ்வளவிற்கு கவலையற்ற மகாராஜா. சத்தியமாக இருந்து பயமில்லாமல் இருப்பது -இதுதான் அவருடைய சேவையின் விசேஷமாக இருந்தது. எவ்வளவு தான் உறவினர்களும், அரசியல் தலைவர்களும் தர்மத் தலைவர்களும்

புது ஞானத்தின் காரணமாக எதிர்ப்பு தெரிவித்தாலும் சத்தியம் மற்றும் பயமற்ற நிலையிலிருந்து கொஞ்சம் கூட அசைக்க முடியவில்லை. இதைத்தான் பணிவு மற்றும் அதிகாரத்தின் சமநிலை என்று கூறுவது. உடன் விளைவுகளை நீங்கள் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். தீய வார்த்தைகளால் திட்டுபவர்கள் கூட மனதால் முன்னால் தலை வணங்குகிறார்கள். சேவையின் வெற்றிக்கு விசேஷ ஆதாரம் பணிவுத்தன்மை, பொறுப்புணர்வு எல்லைக்கப்பாற்பட்ட உள்நோக்கம். இந்த விதி மூலமாகத்தான் சித்தி சொரூபம் ஆனார்.

ஐந்தாவது அடி: கர்ம பந்தத்திலிருந்து விடுபட்ட பரிஷ்தா அதாவது கர்மாதீத் நிலை. ஒரு நொடியில் பற்றுதலை வென்ற நினைவு சொரூபத்தில் அருகில் இருக்கும் சமமான நிலை.

அப்படி இன்று சுருக்கமாக விசேஷ ஐந்து அடிகளைக் கூறினோம். இப்பொழுது உங்களை நீங்களே எத்தனை அடிகளைப் பின்பற்றுகிறேன் என்று கேளுங்கள். சமர்ப்பணமாகியிருக்கிறீர்களா இல்லை, அனைத்திலிருந்தும் முற்றிலும் சமர்ப்பணம் ஆகியிருக்கிறீர்களா? அனைத்திலும் முற்றிலும் என்றால் எண்ணம், சுபாவம், சம்ஸ்காரம், இயல்பிலும் தந்தைக்கு சமமாக இருக்கட்டும். ஒருவேளை இப்பொழுது கூட என்னுடைய சுபாவம் அப்படிப்பட்டது, என்னுடைய இயல்பு அப்படிப்பட்டது மற்றும் விரும்பாவிட்டாலும் எண்ணம் வருகிறது. வார்த்தைகள் வெளி வந்து விடுகின்றன என்று நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள் மற்றும் கூறுகின்றீர்கள் என்றால் அனைத்தையும் முற்றிலும் தியாகம் செய்தவர் என்று கூற முடியாது. உங்களை சமர்ப்பணம் ஆனவர் என்று கூறுகிறீர்கள் ஆனால் முற்றிலும் சமர்ப்பணம் என்பதில் எனது உனது என்றாகி விடுகிறது. சுபாவம் தந்தையினுடையதாக இருக்கட்டும் சுயத்தின் பாவம் (உள் உணர்வு) என்றால் ஆத்ம பாவம், சம்ஸ்காரம் எப்பொழுதும் தந்தைக்கு சமமாக அன்பு, இரக்கம், நன்மை செய்யும் மனமுடையதாக, இதைத் தான் பெரிய மனது என்று கூறுகிறீர்கள். சிறிய மனது என்றால் எல்லைக்குட்பட்ட தன்னுடையது என்பதைப் பார்ப்பது. தன்னைப் பற்றியதாக இருக்கலாம், தன்னுடைய சேவா ஸ்தானங்களைப் பற்றியதாக இருக்கலாம். மேலும் பெரிய மனது என்றால் எல்லாம்

தன்னுடையது என்று அனுபவம் ஆகும். பெரிய மனமிருந்தால் ஒவ்வொரு விதமான காரியத்திலும் உடல், மனம், பொருள் மூலமாக எதுவாக இருந்தாலும் மற்றும் உறவிலும் வெற்றி அதிகமாக இருக்கும் மற்றும் சிறிய மனமுயைவர்களுக்கு உழைப்பு அதிகம் வெற்றி குறைவாக இருக்கும். சிறிய மனமுடையவர்களின் உண்டியலும், சமையலறையும் நிரம்பி இருக்காது என்று ஏற்கனவே கூறி இருக்கிறோம். சேவையில் உடனிருப்பவர்கள் மிகுந்த தைரியம் கொடுப்பார்கள், நீங்கள் இதைச் செய்யுங்கள் நாங்கள் செய்வோம் என்று ஆனால் அந்த நேரத்தில் சூழ்நிலைகளைப் பற்றி கூற ஆரம்பித்து விடுவார்கள். இதைத்தான் பெரிய மனம் இருந்தால் பெரிய ஐயா திருப்தியாக இருப்பார் என்று கூறுவது. இரகசியம் தெரிந்து சரியாக நடப்பவர் மேல் ஐயா (பாபா) எப்பொழுதும் திருப்தியாக இருக்கிறார். (ஸச்சி தில்பர் சாஹப் ராசி) டீச்சர்கள் அனைவரும் பெரிய மனமுடையவர்கள் தானே. எல்லைக்கு அப்பாற்பட்ட பெரியதிலும் பெரிய காரியத்தின் பொறுப்பில் இருக்கிறீர்கள். நாங்கள் இந்த பகுதிக்கு நன்மை செய்பவர்கள், இந்த நாட்டிற்கு நன்மை செய்பவர்கள் என்று கூறுவது இல்லையே? உலகிற்கு நன்மை செய்பவர்கள் அல்லவா. இவ்வளவு பெரிய காரியத்திற்கு மனமும் பெரியதாக வேண்டும் இல்லையா? பெரியது என்றால் எல்லைக்கு அப்பாற்பட்ட அல்லது எங்களுக்கு எல்லை போட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று டீச்சர்கள் கூறுவார்களா? எல்லைகளும் ஏன் உருவாக்கப்பட்டது. காரணம்? சிறிய மனது எவ்வளவு தான் ஏரியா தயார் செய்து கொடுத்தாலும் நீங்கள் எல்லைக்கப்பாற்பட்ட உள்நோக்கத்தை வையுங்கள், மனதில் எல்லையை வைக்காதீர்கள். இடங்களின் எல்லையின் பிரபாவம் மனதில் இருக்கக் கூடாது. ஒருவேளை மனதில் எல்லையின் பிரபாவம் இருக்கிறது என்றால் எல்லைக்கப்பாற்பட்ட தந்தை எல்லைக்குட்பட்ட மனதில் இருக்க முடியாது. பெரிய (உயர்ந்த) பாபா என்றால் மனமும் பெரியதாக வேண்டும். எப்போது பிரம்மாபாபா மதுபன்னில் இருந்து கொண்டு என்னுடையது மதுபன் மட்டும் தான் மற்றபடி பஞ்சாப், உபி, கர்நாடகம் ஆகியவை குழந்தைகளுடையது என்று நினைத்தாரா? பிரம்மாபாபா மேல் அனைவருக்கும் அன்பு இருக்கிறது இல்லையா? அன்பு என்றாலே பின்பற்றி நடக்க வேண்டும். அனைத்து டீச்சர்களும் பின்பற்றி நடப்பவர்களா? அல்லது என்னுடைய சென்டர், என்னுடைய மாணவர்கள் மற்றும் என்னுடைய உதவியாளர்களும் மாணவர்களும்

என்னுடைய டீச்சர் இவர் தான் என்று அப்படி இருக்கிறதா? தந்தையைப் பின்பற்றுவது என்றால் என்னுடையதை உன்னுடையதில் உள்ளடக்குவது, எல்லைக்குட்பட்டதை எல்லைக்கப்பாற்பட்டதில் உள்ளடக்குவது இப்பொழுது இந்த அடி மேல் அடி எடுத்து வைப்பதின் அவசியமாக இருக்கிறது. அனைவரின் எண்ணம், சொல், சேவையின் விதி ஆகியவற்றில் எல்லைக்கப்பாற்பட்ட அனுபவம் ஆகட்டும். இப்பொழுது இந்த வருடம் என்ன செய்ய வேண்டும் என்று கூறுகிறீர்கள் இல்லையா? எனவே சுயமாற்றத்திற்காக எல்லைக்குட்பட்டதை அனைத்திலிருந்தும் முற்றிலும் இல்லாமல் செய்து விடுங்கள். நீங்கள் யாரைப் பார்த்தாலும் அல்லது யார் உங்களைப் பார்த்தாலும் எல்லைக்கப்பாற்பட்ட மகாராஜாவின் போதை அனுபவம் ஆகட்டும். எல்லைக்குட்பட்ட மனமுடையவர்கள் எல்லைக்கப்பாற்பட்ட மகாராஜா ஆக முடியாது. எவ்வளவு சேவை நிலையங்கள் திறக்கிறீர்களோ அல்லது எவ்வளவு அதிகமாக சேவை செய்கிறீர்களோ அவ்வளவு பெரிய இராஜா ஆகலாம் என்று நினைக்காதீர்கள். இதன் ஆதாரத்தில் சொர்க்கத்தின் பரிசு கிடைக்காது. சேவையும் இருக்கட்டும், சேவை நிலையங்களும் இருக்கட்டும் ஆனால் எல்லை என்ற பெயர், அடையாளமே இருக்க வேண்டாம். அவருக்கு வரிசைக் கிரமமாக உலக இராஜ்ய சிம்மாசனம் கிடைக்கும். எனவே இப்பொழுது கொஞ்ச காலத்திற்கு மனதை குஷிப்படுத்திக் கொண்டு உட்கார்ந்து விடாதீர்கள். எல்லைக்கப்பால் நறுமணம் பரப்பும் தந்தைக்கு சமமாக இப்பொழுதும் இருக்கட்டும் மற்றும் எதிர்காலத்தில் 21-ஜென்மங்களும் பிரம்மாபாபாவின் நெருக்கத்தில் இருப்பீர்கள். என்ன அப்படிப்பட்ட பரிசு வேண்டுமா? அல்லது இப்போதையதா? நிறைய சேவை நிலையங்கள் இருக்கிறது. நிறைய மாணவர்கள் இருக்கிறார்கள் என்று இந்த நிறைய, நிறைய என்று சொல்லாதீர்கள். பெரிய மனமுள்ளவாராக ஆகுங்கள். இந்த வருடம் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டீர்களா? இந்த வருடம் எல்லைக்குட்பட்ட சம்ஸ்காரம் கனவில் கூட யாருக்கும் எழ வேண்டாம். தைரியம் இருக்கிறது இல்லையா? ஒருவர் இன்னொருவரை பின்பற்றி நடக்காதீர்கள், தந்தையை பின்பற்றி நடங்கள்.

இன்னொரு விஷயம் பாப்தாதா விசேஷமாக வார்த்தைகள் மேல் உள்ள கவனத்தையும் ஈர்த்தார். இந்த வருடம் தன்னுடைய வார்த்தைகள்

மேல் விசேஷமாக இரட்டைக் கவனம் கொடுக்க வேண்டும். அனைவரும் எப்படி பேச வேண்டும் என்று வழிகாட்டுதல் அனுப்பப்பட்டிருக்கிறது. இதில் பரிசு கிடைக்கும். உண்மையானதாகவும் தெளிவாகவும் தன்னுடைய சார்ட்டை தானே வையுங்கள். உண்மையான தந்தையின் குழந்தைகள் அல்லவா. எங்கு சேவையில் ஸ்திதி (மனநிலை) மேலே, கீழே போகிறது என்று பார்க்கிறீர்களோ அந்த சேவையில் வெற்றி கிடைக்க முடியாது என்று அனைவருக்கும் பாப்தாதா கூறுகிறார். சேவை குறைவாகச் செய்தாலும் பரவாயில்லை ஆனால் ஸ்திதியைக் குறைத்துக் கொள்ளாதீர்கள். எந்த சேவை ஸ்திதியைக் கீழே கொண்டு வருகிறதோ அதை எப்படி சேவை என்று கூற முடியும். எனவே எப்பொழுதும் சுய ஸ்திதி மற்றும் சேவை அதாவது சுயசேவை மற்றும் மற்றவர்களின் சேவையை சேர்த்தே செய்யுங்கள் என்று பாப்தாதா கூறுகிறார். சுய சேவையை விட்டுவிட்டு சேவை செய்வதால் வெற்றி கிடைக்காது. சுய சேவைக்கும் மற்றவர்களின் சேவைக்கும் தைரியம் வையுங்கள். சர்வ சக்திகள் நிறைந்து தந்தை உதவி செய்பவராக இருக்கிறார். எனவே தைரியத்துடன் இரண்டின் சமநிலை வைத்து முன்னேறிச் செல்லுங்கள், பலகீனமாக ஆகாதீர்கள். நீங்கள் அனேக தடவைகள் பொறுப்பிலிருந்து வெற்றியடைந்த ஆத்மாக்கள் அந்த மாதிரி வெற்றி ஆத்மாக்களுக்காக எதுவும் முடியாதது என்பதல்ல மற்றும் கடினமாக உழைக்க வேண்டும் என்பதும் அல்ல. கவனம் மற்றும் பயிற்சி இதுகூட சுலபமாக மற்றும் தானாக அனுபவம் செய்வீர்கள். அட்டென்ஷன் வைப்பதற்கான டென்ஷனும் வைக்காதீர்கள். சிலர் அட்டென்ஷனை டென்ஷனில் மாற்றி விடுகிறார்கள். பிராமண ஆத்மாக்களின் இயற்கையான சம்ஸ்காரமே 'கவனம் மற்றும் பயிற்சி' தான் நல்லது.

மற்றும் உள்ள விஷயம் என்னவென்றால் உலக சேவையைப் பற்றியது. இவ்வருடம் ஒவ்வொரு சேவை நிலையங்களும் அத்தனை செய்தி கிடைத்தவர்களையும் நெருக்கத்தில் இருப்பவர்களையும் அழைத்து எவ்வளவிற்கு முடியுமோ அந்த அளவில் அன்பு சந்திப்பு நிகழ்ச்சிகளை செய்யுங்கள். அந்த அந்த துறைகள் (wings) நிகழ்ச்சிகளாக இருந்தாலும் சரி அல்லது கலந்து இருந்தாலும் சரி ஆனால் அந்த ஆத்மாக்களின் பக்கம் விசேஷ கவனம் கொடுங்கள். நேரில் சந்தியுங்கள் தபாலில் மட்டும் அனுப்பி விடுகிறீர்கள், இதில் கூட குறைந்த பலன் தான்

கிடைக்கிறது. தன்னுடைய (வரும்) மாணவர்களில் குழுக்கள் அமையுங்கள் மற்றும் அவர்களிலிருந்து சிலரை தனிப்பட்டு நெருக்கத்தில் வருவதற்கு பொறுப்பாக ஆக்குங்கள். அப்படி அனைத்து மாணவர்களும் பிஸியாகி விடுவார்கள். மற்றும் சேவையின் நிவாரணமும் (வெற்றி) ஆகி விடும், இதைத்தான் நீங்கள் தொடருவதில்லை என்று கூறுகிறீர்கள். அந்த மாதிரி ஆத்மாக்களுக்கு ஏதாவது புது விஷயம் சொல்ல வேண்டும். இதுவரை நல்ல உலகம் எப்படியிருக்கும், அதனுடைய காட்சிகளை ஒன்றாகச் சேர்த்திருக்கிறீர்கள். இப்பொழுது அவர்களுடைய கவனத்தை உங்கள் பக்கம் திருப்புங்கள். அதற்காக விசேஷமாக "சுயமுன்னேற்றம் மற்றும் சுயமுன்னேற்றத்திற்கான ஆதாரம்" என்ற தலைப்பு வையுங்கள். இந்தப் புது விஷயத்தை வையுங்கள். இந்த சுய முன்னேற்றத்திற்காக ஆன்மீக பட்ஜெட் போடுங்கள். பட்ஜெட்டில் எப்பொழுதும் சேமிப்புத் திட்டங்கள் போடப்படும். அப்படி ஆன்மீக சேமிப்புக் கணக்கு என்பது என்ன? நேரம், பேச்சு, எண்ணம் மற்றும் சக்தியை வீணானவைகளிலிருந்து சிறப்பானதாக மாற்ற வேண்டியதாக இருக்கும். அனைவருக்கும் இப்பொழுது சுயத்தின் மேல் கவனத்தைக் கொண்டு வாருங்கள். சுய மாற்றத்திற்காக என்ற தலைப்பைக் குழந்தைகள் வைத்திருந்தார்கள் ஆனால் இவ்வருடம் ஒவ்வொரு சேவை நிலையங்களுக்கும் சுதந்திரம் இருக்கிறது, யார் எவ்வளவு செய்ய முடியுமோ, தன்னுடைய சுய முன்னேற்றத்தின் கூடவே முதலில் தன்னுடைய சேமிப்பிற்கான பட்ஜெட் தயார் செய்யுங்கள் மற்றும் சேவையில் மற்றவர்களுக்கும் இந்த விஷயத்தை அனுபவம் செய்வியுங்கள். ஒருவேளை ஏதாவது பெரிய நிகழ்ச்சிகள் செய்ய முடியும் என்றால் செய்யுங்கள், ஒருவேளை செய்ய முடியவில்லையென்றால் சிறிய நிகழ்ச்சிகள் கூட தாராளமாகச் செய்யுங்கள் ஆனால் விசேஷ கவனம் -சுய சேவை மற்றும் மற்றவர்களின் சேவையின் சமநிலை அல்லது உலக சேவையின் சமநிலை பற்றியதாக இருக்கட்டும். சுய முன்னேற்றத்திற்கு நேரமே இல்லாத அளவு பிஸியாகி விடாதீர்கள். அப்படி இவ்வருடம் சேவைக்காக எவ்வளவு விரும்புகிறீர்களோ அவ்வளவு செய்யுங்கள். இரண்டு திட்டங்களையும் நினைவில் வைத்து இன்னும் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளலாம் மற்றும் திட்டங்களில் இரத்தினங்கள் பதிக்கலாம். தந்தை எப்பொழுதும் குழந்தைகளை முன்னுக்கு வைக்கிறார். நல்லது.

நாலாபுறமுமுள்ள அனைத்து தந்தையை பின்பற்றி நடக்கும் உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் இரட்டை சேவையின் சமநிலை வைக்கும் தந்தையின் ஆசீர்வாதத்திற்கு அதிகாரி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் எல்லைக்கப்பாற்பட்ட மகாராஜா அந்த மாதிரியான இராஜயோகி, சகஜயோகி, இயல்பான யோகி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் அனேக தடவை வெற்றியடைந்த நிச்சயம் மற்றும் போதையில் இருக்கும் மிகவும் சகயோகி அன்பாக இருக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

தனிப்பட்ட சந்திப்பு: எப்பொழுதும் அமிர்தவேளையிலிருந்து இரவு வரை, லௌகீக காரியமாக இருந்தாலும் அலௌகீக காரியமாக இருந்தாலும், அனைத்துக் காரியங்களும் சுலபமானதாகவும் வெற்றியானதாகவும் ஆவதற்கான எளிதான விதி என்ன? எந்த ஒரு காரியம் செய்தாலும் முதலில் திரிகாலதரிசியாகி காரியம் செய்யுங்கள். ஏனென்றால் திரிகாலதரிசியாகி காரியம் செய்வதால், மூன்று காலத்தின் ஞானம் புத்தியில் இருப்பதினால் எந்த ஒரு காரியமும் மேலே கீழே போகாது அப்படியே பார்த்தாலும் முன்னே பின்னே யோசித்து புரிந்து காரியம் செய்வது காரியத்திற்கு முன்பே அதன் முடிவை தெரிவதுதான் ஞானியின் அர்த்தமே. வேக வேகமாக என்ன வருகிறதோ அதை செய்து விடுவது அப்படி இருக்க வேண்டாம், அதில் வெற்றி கிடைப்பதில்லை. முதலில் விளைவுகளை யோசியுங்கள். பின்பு காரியம் செய்தீர்கள் என்றால் எப்பொழுதும் உயர்ந்த விளைவுகள் தான் ஏற்படும். உயர்ந்த விளைவுகளைத் தான் வெற்றி என்று கூறுவது. மிகவும் பிஸியாக இருந்தேன், எந்தக் காரியம் முன்னுக்கு வந்ததோ அதை செய்ய ஆரம்பித்து விட்டேன் என்று அப்படி இருக்கக் கூடாது. எப்படி சாப்பிடுவதற்கு முன்பு பாபாவுக்கு 'போக்' ஸ்வீகாரம் செய்யுங்கள் பின்பு சாப்பிடுங்கள் என்று பாப்தாதா ஸ்ரீமத் கொடுத்திருக்கிறார். ஸ்வீகாரம் செய்விக்கும் காரியத்தை செய்வதில்லை, அவசர அவசரமாகச் சாப்பிட்டு விட்டீர்கள் என்றால் விளைவு என்ன ஆகும்? ஒன்று மறந்த காரணத்தினால் பிரம்மா போஜனத்தின் உணவின் மனதில் ஏற்பட வேண்டிய பிரபாவம் இருக்காது மற்றும் தந்தையின் ஸ்ரீமத்தை ஏற்றுக் கொள்ளாததால் நஷ்டம் ஏற்படும். ஏனென்றால் கட்டளை மீறல் நிகழ்ந்து விட்டது அல்லவா. அதற்கும் தலைகீழான

பலன் கிடைக்கிறது. ஒருவேளை காரியம் செய்வதற்கு முன்பு மூன்று காலத்தையும் யோசிக்க வேண்டிய பழக்கம் ஏற்பட்டு விட்டால், மூன்று காலத்தையும் தெரிந்த நிலையில் நிலைத்திருந்து காரியம் செய்தீர்கள் என்றால் காரியம் வீணானதாக ஆகாது. சாதாரணமாக இருக்காது. குடும்பத்திலும் வெற்றியை அடைவீர்கள். ஆன்மீக வாழ்க்கையிலும் வெற்றியே வெற்றி தான். எனவே திரிகாலதரிசி நிலை என்ற ஆசனத்தில் அமருங்கள். பின்பு என்ன செய்ய வேண்டும், என்ன செய்ய வேண்டாம், எப்படி செய்ய வேண்டும் என்று முடிவு எடுங்கள். பின்பு எந்த ஒரு காரியத்திலும் பலன் இல்லை என்று அப்படி இருக்கவே முடியாது. ஒருவேளை விதை சக்திசாலியாக இருந்தால் பழம் (பலன்) கண்டிப்பாகக் கிடைக்கும் ஆனால் அவசர அவசரமாக பலகீனமான காரியம் செய்தீர்கள் என்றால் பலனும் கொஞ்சம் கிடைத்து விடுகிறது. எவ்வளவு கிடைக்க வேண்டுமோ அவ்வளவு கிடைப்பது இல்லை. எவ்வளவு விரும்புகிறீர்களோ அவ்வளவு கிடைப்பது இல்லை. அப்படி ஒவ்வொரு காரியத்தின் வெற்றிக்கு ஆதாரம் திரிகாலதரிசி நிலை. நான் மாஸ்டர் திரிகாலதரிசி என்று நினைவு மட்டும் வைக்கிறீர்கள் மற்றும் காரியம் செய்யும்போது மறந்து விடுகிறீர்கள் அப்படி இருக்க வேண்டாம். இதை உபயோகிக்க வேண்டும். இந்தப் பயிற்சியில் ஒரு போதும் அலட்சியமாக ஆகாதீர்கள். இந்தப் பயிற்சியை செய்யுங்கள் ஏனென்றால் 21-ஜென்மங்களுக்கு சேமிக்க வேண்டும். ஒரு ஜென்மத்தில் 21-ஜென்மங்களுக்கு சேமிக்க வேண்டும் என்றால் எவ்வளவு கவனம் கொடுக்க வேண்டும். டென்ஷன் வேண்டாம் ஆனால் எப்பொழுதும் அட்டென்ஷன் வையுங்கள். அலட்சியத்தை இப்பொழுது மாற்றம் செய்யுங்கள். வள்ளல் கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்றால் முழுமையாக எடுத்துக் கொள்ளுங்கள். கொடுப்பவர் கொடுத்துக் கொண்டிருக்கிறார், ஆனால் எடுப்பவர் கொஞ்சம் எடுத்து குஷி அடைந்து விட்டால் முடிவு என்னவாகும்? பின்பு கிடைக்காது எனவே முழுமையான கவனம் கொடுங்கள். நல்லது.

**வரதானம்: எப்பொழுதும் புண்ணிய கணக்கைச் சேமிக்கும் மற்றும் சேமிக்க வைக்கும் மாஸ்டர் ஆசிரியர் ஆகுக!**

நான் மாஸ்டர் ஆசிரியர் மாஸ்டர் என்று கூறுவதால் தந்தை தானாக நினைவில் வருகிறார். உருவாக்குபவரின் நினைவு வருவதினால், தான்

பொறுப்பில் இருப்பவன் என்பது தானாக நினைவில் வந்து விடுகிறது. நான் புண்ணிய ஆத்மா என்பது நினைவு இருக்கட்டும், புண்ணியக் கணக்கை சேமிப்பது மற்றும் சேமிக்க வைப்பது இது தான் என்னுடைய விசேஷ சேவை. புண்ணிய ஆத்மா ஒரு சதவீதம் பாவம் எண்ண மாத்திரம் கூட செய்ய முடியாது. மாஸ்டர் ஆசிரியர் என்றால் எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக புண்ணிய கணக்கைச் சேமிப்பவர் மற்றும் சேமிக்க வைப்பவர்.

<u>சுலோகன்: குழுவின் மகத்துவத்தை தெரிந்திருப்பவர்கள், குழுவிலேயே தன்னுடைய பாதுகாப்பை அனுபவம் செய்கிறார்கள்!</u>

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 22.02.1990 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சிவ ஜெயந்தி அன்று மகா வாக்கியம்!

இன்று திரிமூர்த்தி சிவதந்தை ஒவ்வொரு குழந்தையுடைய நெற்றியில் மூன்று திலகங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். எல்லாக் குழந்தைகளும் உள்ளத்தில் ஊக்கம் உற்சாகத்துடன் சிவஜெயந்தியைக் கொண்டாட வந்துள்ளனர். எனில் திரிமூர்த்தி சிவதந்தை, அதாவது ஜோதிபிந்து தந்தை குழந்தையுடைய நெற்றியில் மூன்று புள்ளிகளின் திலகத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். இந்த திலகம் முழு ஞானத்தின் சாரம் ஆகும்! இந்த மூன்று புள்ளிகளில் முழு ஞானக்கடலின் சாரம் நிரம்பியுள்ளது. முழு ஞானத்தின் சாரமும் மூன்று விஷயங்களில் உள்ளது -படிப்பு, ஆத்மா மற்றும் டிராமா, அதாவது படைப்பு. இன்றைய ஞாபகார்த்த நாளிலும் சிவன் என்றால் பிந்து. தந்தையும் புள்ளியாக இருக்கிறார், நீங்களும் ஒரு புள்ளி மற்றும் படைப்பு, அதாவது நாடகம் என்பதும் ஒரு புள்ளி. எனவே நீங்கள் அனைவரும் பிந்து, பிந்துவின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறீர்கள். புள்ளியாகி கொண்டாடுகிறீர்கள், இல்லையா? முழு இயற்கையின் விளையாட்டும் கூட இரண்டு விஷயங்களைப் பற்றியது -ஒன்று புள்ளி மற்றும் ஒளி, ஜோதி. தந்தையை ஒரு புள்ளி என்று மட்டுமல்ல ஆனால் ஜோதிர்பிந்து என்றும் அழைக்கின்றனர். படைப்பும் ஒரு ஜோதிர்பிந்து, நீங்களும் ஹீரோ பார்ட்தாரிகள் ஜோதிர்பிந்துதான். மேலும் முழு விளையாட்டையும் பாருங்கள் -நீங்கள் எந்த வேலையைச் செய்தாலும், அதன் அடிப்படை ஒளி! இன்று உலகில் ஒளி துண்டிக்கப்பட்டால் (fail), ஒரு நொடியில் உலகம் உலகமாக இருக்காது. சுகத்திற்கான சாதனங்கள் அனைத்திற்கும் ஆதாரம் என்ன? ஒளி! படைப்பவரும் ஒளி. ஆத்மா மற்றும் பரமாத்மாவின் ஒளி அழியாதது. ஒளிதான் இயற்கையின் ஆதாரம் ஆனால் இயற்கையின் ஒளி அழியாதததல்ல. எனவே முழு விளையாட்டும் புள்ளி மற்றும் ஒளிக்கானது! இன்றைய ஞாபகார்த்த தினத்தை விசேஷமாக நிராகார ரூபத்தில் கொண்டாடுகின்றனர் ஆனால் நீங்கள் எப்படி கொண்டாடுவீர்கள்?

விசேஷ ஆத்மாக்கள் நீங்கள் கொண்டாடுவதும் விசேஷமாக இருக்கும்தானே. திரிமூர்த்தி சிவதந்தையுடன் கூடவே நேரடியாக சாகார ரூபத்தில் பிறந்த நாளைக் கொண்டாடுவோம் மற்றும் ஆத்மாக்கள் நாம் கோடானுகோடி மடங்கு பாக்கியவான்கள் ஆவோம் என எப்போதாவது நினைத்துப் பார்த்திருப்பீர்களா! கனவிலும்கூட இந்த எண்ணம் இருந்ததில்லை. இதன் நினைவாக உலகினர் கண்விழித்துக் கொண்டாடுகிறார்கள் மற்றும் நீங்கள் சைதன்யத்தில் தந்தையை அவதரிக்கச் செய்து பிறந்த நாளைக் கொண்டாடுகிறீர்கள். எனவே யார் சக்திவாய்ந்தவர் -தந்தையா அல்லது நீங்களா? தந்தை கூறுகிறார், முதலில் நீங்கள் என. குழந்தைகள் இல்லையென்றால், தந்தை மட்டும் வந்து என்ன செய்வார்? அதனால்தான் தந்தை முதலில் குழந்தைகளை வாழ்த்துகின்றார், மனதின் அன்புக்கு வாழ்த்துக்கள்! நீங்கள் உங்கள் இதயத்தில் தந்தையை வெளிப்படுத்தியுள்ளீர்கள், எனவே உங்கள் இதயத்தில் தந்தையை வெளிப்படுத்தியதற்கு வாழ்த்துக்கள்! அதே நேரத்தில், உலகிலுள்ள அனைத்து ஆத்மாக்களுக்கும் கருணை உள்ளத்துடன் உலக நன்மை செய்யும் நல்லுணர்வு, நல்விருப்பத்துடன், உலகின் முன் தந்தையை பிரத்யக்ஷம் செய்யும் சேவையினுடைய ஊக்கம் உற்சாகத்திற்கும் வாழ்த்துக்கள்!

பாப்தாதா எல்லாக் குழந்தைகளின் உற்சாகத்தின் கொண்டாட்டத்தை பார்த்துக் கொண்டிருந்தார். சேவை செய்வது என்றால் உற்சாகத்துடன் கொண்டாடுவது. எந்தளவு பெரிய எல்லையற்ற சேவை செய்கிறீர்களோ, அந்தளவு எல்லையற்ற உற்சவத்தைக் கொண்டாடுகிறீர்கள். சேவை என்றால் என்ன? ஏன் சேவை செய்கிறீர்கள்? தந்தையின் அறிமுகத்தின் மூலம் ஆத்மாக்களில் உற்சாகத்தை அதிகரிக்க! வஞ்சிக்கப்பட்ட ஆத்மாக்களுக்கு தந்தையிடமிருந்து ஆஸ்தியைத் தர வேண்டும் மற்றும் ஆத்மாக்களுக்கு மகிழ்ச்சியினுடைய ஜொலிப்பின் அனுபவம் செய்விக்க வேண்டும் என்ற உற்சாகம் சேவைக்கான திட்டங்களை வகுக்கும்போது இருக்க வேண்டும். இப்போது நீங்கள் எந்த ஆத்மாவையும் பார்த்தாலும் -இன்றைய உலகில் எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும், ஆனால் ஒவ்வொரு ஆத்மாவையும் பார்க்கும்போது, முதலில் எழும் எண்ணம் என்ன? இவர் பிரதமர், இவர் ராஜா -இது தெரிகிறதா அல்லது ஆத்மாவைச் சந்திக்கிறீர்களா,

பார்க்கிறீர்களா? இந்த ஆத்மாவும் தந்தையிடம் இருந்து ஆஸ்தி அடைவதற்கான ஆசி பெறட்டும் என்ற நல்லுணர்வுகள் எழுகிறதுதானே. இந்த சங்கல்பத்துடன் சந்திக்கிறீர்களா? உங்களிடம் இப்போது இந்த நல்லுணர்வு எழுவதால், உங்கள் நல்லுணர்வின் பலன் அந்த ஆத்மாவிற்கு அனுபவம் செய்வதற்கான பலத்தை அளிக்கிறது. நல்லுணர்வு உங்களுடையது ஆனால் உங்கள் உணர்வின் பலனை அவர்கள் பெறுகிறார்கள். ஏனென்றால், சிரேஷ்ட ஆத்மாக்கள் உங்களுடைய நல்லுணர்வுகளின் சங்கல்பத்தில் நிறைய சக்தி இருக்கிறது. ஒவ்வொரு சிரேஷ்ட ஆத்மாக்கள் உங்களது ஒவ்வொரு நல்ல எண்ணமும் வாயுமண்டலத்தினுடைய படைப்பை செய்யக்கூடியது. சங்கல்பத்தின் மூலம் படைப்பு என்று கூறுகிறீர்கள்தானே. இந்த நல்லுணர்வின் நல்லெண்ணங்கள் நாலா புறமும் உள்ள சூழலை அதாவது படைப்பை மாற்றுகிறது. எனவே, வரப்போகிற ஆத்மாவிற்கு எல்லாவற்றிலும் மிகச் சிறந்த அனுபவம் ஆகிறது, புதுமையான உலகத்தை அனுபவிக்கிறது. குறுகிய காலத்திற்கு உங்கள் நல்லெண்ணத்தின் உணர்வின் விளைவாக, அது ஒரு தனியான, பிரியமான இடம் மேலும் அன்பாக மற்றும் விலகியிருக்கும் தேவதை ஆத்மாக்கள் என்பதை அவர்கள் புரிந்து கொள்கிறார்கள். எப்படிப்பட்ட ஆத்மாவாகட்டும் ஆனால் ஒரு குறுகிய நேரத்திற்காக படிப்பின் உற்சாகத்தில் வருகிறது. சேவை என்றால் என்ன அர்த்தம்? விழா கொண்டாடுவது அதாவது உற்சாகத்தில் வருவது. யாராவது ஸ்தூலத்தில் ஒரு காரியம் செய்யட்டும் -வார்த்தை மூலமோ, எண்ணத்தின் மூலமோ -ஆனால் பிராமண ஆத்மாக்களுடைய ஒவ்வொரு நொடி, ஒவ்வொரு செயல், ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு வார்த்தையும் உற்சவம்தான் ஏனெனில் உற்சாகத்துடன் செய்கிறீர்கள் மற்றும் உற்சாகம் அளிக்கிறீர்கள். இந்த நினைவின் மூலம் ஒருபோதும் எவ்வித சோர்வும், சுமையும் இருக்காது. தலை பாரமாகாது, மனம் உடைந்து போக மாட்டீர்கள். எப்போது யாராவது சோர்வாகவோ, அல்லது உடைந்த மனதுடன் இருக்கும்போது உலகினர் என்ன செய்கிறார்கள்? ஏதாவது ஒரு பொழுதுபோக்கு இடத்திற்குச் செல்கின்றனர். இன்று தலை மிகவும் பாரமாக இருந்தது, ஆதலால் கொஞ்சம் பொழுதுபோக்கு தேவைப்பட்டது என கூறுவார்கள். உற்சவத்தின் அர்த்தமே வேடிக்கையாய் மகிழ்வது. சாப்பிடுவது, குடிப்பது, மகிழ்வது -இது தான்

கொண்டாட்டம். பிராமணர்களுக்கு ஒவ்வொரு கணமும் உற்சவம்தான், ஒவ்வொரு செயலும் உற்சவம்தான். கொண்டாடுவதில் களைப்பு உண்டாகிறதா? இங்கே மதுபனில் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளைச் செய்யும்போது, 11-மணியாக இருந்தாலும், நீங்கள் இன்னும் உட்கார்ந்திருப்பீர்கள். வகுப்பு 11-மணியை எட்டினால் பாதி வகுப்பு காலியாகி விடுகிறது. பொழுதுபோக்கு நன்றாக இருக்கிறதல்லவா. எனவே சேவையும் ஒரு உற்சவம்தான் -இந்த முறையுடன் சேவை செய்யுங்கள். தானும் உற்சாகத்தில் இருங்கள், உற்சாகத்துடன் சேவையைச் செய்யுங்கள் மற்றும் ஆத்மாக்களிலும் உற்சாகத்தைக் கொண்டு வந்தால், என்ன நடக்கும்? சேவை செய்பவர் மூலம் மற்ற ஆத்மாக்களின் உற்சாகமும் தொடர்ந்து அதிகரிக்கும். அத்தகைய உற்சாகம் உள்ளதா? அல்லது மதுபன் வரை மட்டும்தானா? அங்கு சென்ற பின்? உற்சாகம் அத்தகைய ஒன்று அதற்கு முன்பாக எதுவுமே ஈடுயிணை ஆகாது. உற்சாகம் குறையும்போது, பரஸ்திதி போரிடுகிறது. உற்சாகம் இருந்தால், பரஸ்திதி உங்களைத் தாக்காது, உங்கள் மீது பலியாகி விடும்.

உற்சவம் கொண்டாட நீங்கள் இன்று வந்துள்ளீர்கள்தானே. சிவ ஜெயந்தியை விழா என்று அழைக்கப்படுகிறது. நீங்கள் உற்சவம் கொண்டாட வரவில்லை, ஆனால் ஒவ்வொரு நொடியும் திருவிழாதான் என்பதை அடிக்கோடிட வந்துள்ளீர்கள். உடலில் வலிமை இல்லாவிட்டாலும் அல்லது பண பலம் இல்லாவிட்டாலும், அது நடக்காது என்று மனதில் தோன்றினாலும், ஆனால் உற்சாகம் என்பது அப்படிப்பட்ட ஒரு விஷயம், ஒருவேளை நீங்கள் உற்சாகமாக இருந்தால், மற்றவர்களும் உங்கள் உற்சாகத்துடன் மூலம் முன்னேறி சகயோகி ஆகி விடுவார்கள். பணப் பற்றாக்குறை இருந்தாலும்கூட, எங்கிருந்தாவது பணத்தை கூட உற்சாகத்துடன் கொண்டு வந்து விடுவார். உற்சாகம் என்பது ஒரு காந்தம், அது பணத்தைக்கூட இழுத்துக் கொண்டு வந்து விடும். நண்பர்களையும் இழுத்துக் கொண்டு வந்து விடும், வெற்றியையும் இழுத்துக் கொண்டு வந்து விடும். எப்படி பக்தியில் சொல்வது போல், தைரியமும் உற்சாகமும், தூசியைக்கூட செல்வமாக மாற்றி விடும் என. இவ்வளவு நடக்கும்! உற்சாகம் என்ற ஒரு உணர்வு எந்த ஒரு ஆத்மாவின் பலவீன சமஸ்காரத்தால் பாதிக்காதது. உங்கள் பிரபாவம் விளைவு அவர் மீது விழுமே தவிர,

அவருடைய பிரபாவம் உங்கள் மீது விழாது மேலும் கனவிலும்கூட இது நடக்காது. எல்லா சேவாதாரிகளுக்கும் இந்த உத்தரவாதத்தின் வரதானத்தை பாப்தாதா அளிக்கின்றார்! புரிந்ததா? நீங்கள் ஒரு நல்ல அர்ப்பணிப்புடன் சேவை செய்வதற்கான திட்டங்களை உருவாக்கியதில் பாப்தாதா மகிழ்ச்சியடைகிறார். சமஸ்காரங்களை இணைப்பது என்பது முழுமையை அருகில் கொண்டு வருவது மற்றும் நேரத்தையும் அருகில் கொண்டு வருவது. சமஸ்கார சந்திப்பில் மிக நன்றாக இருந்ததை, நல்ல நறுமணம் வந்து கொண்டிருந்ததைப் பாப்தாதா பார்த்தார். எனவே சதா எப்படி இருக்க வேண்டும்? உற்சவம் கொண்டாட வேண்டும், உற்சாகமாக இருக்க வேண்டும்! உங்களால் அதைச் செய்ய முடியாவிட்டாலும், மற்றவர்களுக்கு உற்சாகத்தைக் கொடுங்கள், மற்றவர்களின் உற்சாகம் உங்களுக்கும் உற்சாகத்தைத் தரும். நிமித்தமான மூத்தவர்கள் இதைத்தான் செய்கிறார்கள், இல்லையா? மற்றவர்களை ஊக்குவித்தல் என்றால் தன்னை ஊக்குவித்தல் ஆகும். தற்செயலாக 14'ல் வருவதற்கான உற்சாகம் இருந்தால், மற்றவர்களுக்கு 16'ல் வர உற்சாகம் கொடுங்கள், உங்களுக்கும் 2'ல் வர உற்சாகம் அதிகரிக்கும். பிரம்மாதந்தையின் சிறப்பு என்ன? நிலக்கரியைத் தூக்க வேண்டியிருந்தாலும், அதை உற்சாகத்துடன் தூக்குவார், மகிழ்விப்பார். (35-வேகன் நிலக்கரி வர வேண்டியிருந்தது, பாப்தாதா முரளியில் நிலக்கரி பற்றி பேசிக் கொண்டிருந்தார், சிறிது நேரம் கழித்து நிலக்கரி வேகன்கள் அபு சாலையை அடைந்ததாக செய்தி வந்தது). நல்லது!

பாண்டவர்கள் அனைவரும் என்ன செய்வீர்கள்? நீங்கள் எப்போதும் உற்சாகத்தில் இருப்பீர்கள், இல்லையா? உற்சாகத்தை ஒருபோதும் கைவிடாதீர்கள். இச்சமயத்து உங்கள் உற்சாகத்தை, ஜட சித்திரங்களுக்கு முன்னால் சென்று, முதலில் உற்சாகம், தைரியத்தை எடுத்துக் கொண்டு, பின்னர் வேலையைத் தொடங்குகிறார்கள். நீங்கள் இந்தளவு மிகவும் உற்சாகமான ஆத்மாக்கள், இதனால் உங்கள் ஜட சித்திரங்கள் கூட மற்றவர்களுக்கு உற்சாகத்தையும் தைரியத்தையும் தந்து கொண்டிருக்கின்றன! பாண்டவர்களின் மகாவீரரின் படம் எவ்வளவு பிரபலமானது! பலவீனமானவர்கள் சக்தி பெற மகாவீரரிடம் செல்கிறார்கள்! நல்லது!

நாலாபுறமும் உள்ள சர்வ ஆதி சிரேஷ்ட பாக்கியவான் குழந்தைகளுக்கு, சதா ஜோதி பிந்துவாகி ஜோதி பிந்து தந்தையை பிரத்யக்ஷம் செய்யும் ஊக்கம் உற்சாகத்தில் இருக்கக்கூடிய, சதா உலகில் தந்தையுடைய பிரத்யக்ஷத்தின் கொடியை ஏற்றக்கூடிய, அத்தகைய வைரத்திற்குச் சமமான தந்தையின் பிறந்த நாள் மற்றும் குழந்தைகளின் பிறந்த நாள் வாழ்த்துக்கள். சதா வாழ்த்துக்கள் மூலம் பறக்கக்கூடிய அத்தகைய உற்சாகத்தில் இருக்கக்கூடிய, ஒவ்வொரு நேரமும் உற்சவம் கொண்டாடக்கூடிய மற்றும் எல்லோருக்கும் உற்சாகம் தரக்கூடிய, மகான் சக்திசாலி ஆத்மாக்களுக்கு திரிமூர்த்தி சிவ தந்தையின் அன்பு நினைவுகள் வாழ்த்துக்கள் மற்றும் நமஸ்காரம்!

தனிப்பட்ட சந்திப்பு: இரு இரட்டை வெளிநாட்டினர் குழுக்கள் -சாரம்:

தந்தை மற்றும் குழந்தைகளின் இந்த இதயபூர்வ சூட்சும தொடர்பை தகர்த்து, தனிமைப்படுத்த யாருக்கும் தைரியம் கிடையாது.

டிராமாபடி நிச்சயபுத்தி உள்ளது, உள்ளத்தில் தந்தை என்னுடையவர், நான் தந்தையுடையவன் என்ற சங்கல்பம் செய்து விட்ட ஆத்மாக்களுக்குத் தானாகவே உதவி கிடைக்கிறது.

தந்தை மற்றும் சேவையை ஒருபோதும் ஒதுக்கி விடக்கூடாது.

தந்தை மீது அன்பு இருப்பதைப்போல முரளி மீதும் அன்பு இருக்கிறதா?

தந்தை ரூபத்தில் நினைவு, ஆசிரியர் ரூபத்தில் படிப்பு, சத்குரு ரூபத்தில் பிராப்தியான வரதானங்களை காரியத்தில் ஈடுபடுத்துவது -இதற்குத்தான் கூறப்படுகிறது வரதானத்தின் மூலம் லாபம் அடைவது என.

மேலிருந்து கீழே வருவதால் நீங்களும் தந்தையைப் போல அவதாரம் செய்த ஆத்மாக்களே. அவதாரம் கீழே வருவது செய்தி அளிப்பதற்காக ஆனால் ஸ்திதி உயர்ந்ததாக (மேலே) இருக்கும்.

சதா நினைவிருக்கட்டும் -ஃபரிஷ்தா நான் அவதரித்த ஆத்மா ஆவேன், பிராமண ஆத்மா ஆவேன் என்பது.

சிவஜெயந்தி தந்தையுடைது மட்டுமில்லை உங்களுடையதும்தான். தந்தை -பிரம்மா, பிராமணர்கள் அனைவருடன் அவதரிக்கின்றார்.

ஃபரிஷ்தா என்றால் டபுள் லைட்.. டபுள் லைட் ஆக இருந்து சதா பறந்து கொண்டே இருங்கள். நல்லது.

# 1990 அவ்யக்த முரளி

பாப்தாதா எழுந்து நின்று கொடி அசைத்தார், பின்பு அனைத்து குழந்தைகளுக்கும் பிறந்த நாள் வாழ்த்துக்களையும் அளித்தார்! பாப்தாதாவுடன் சேர்ந்தே அன்பான மற்றும் அதிர்ஷ்ட குழந்தைகளுக்கும் தெய்வீக பிறந்த நாளாகும். ஆதலால் இந்த அன்பான மற்றும் அதிர்ஷ்ட குழந்தைகளுக்கு வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! 'லாஸ்ட் ஸோ ஃபாஸ்ட்' ஆக செல்பவர்களுக்கு எல்லோரையும் விட அதிக வாழ்த்துக்கள்! சிறு குழந்தைகள் சதா விசேஷமான அன்புக்கும் செல்லத்திற்கும் உரியவர்கள்.

விடைபெறும் சமயம்: இன்று பாப்தாதா மற்றும் அனேக குழந்தைகளுக்கு பிறந்த நாளுக்கான கோடி மடங்கு வாழ்த்துக்கள். நாலாபுறமும் உள்ள குழந்தைகளுக்கு கோடி மடங்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள். நாலா புறமும் உள்ள குழந்தைகளின் இதயபூர்வ அன்பு நினைவுகள் மற்றும் கூடவே ஸ்தூலத்தில் நினைவாகிய அன்பு நிறைந்த கடிதங்கள் மற்றும் வாழ்த்து அட்டைகளுக்கும் வாழ்த்துக்கள். எல்லோருடைய இதய ஒலிகளும் தந்தையை வந்தடைந்தது. திலாராம் தந்தை எல்லா பெரிய உள்ளமுடைய குழந்தைகளுக்கும் பெரிய உள்ளத்துடன் மிக மிக மிக அன்பு நினைவுகளை அளிக்கின்றார். கோடி மடங்கு எனக் கூறுவதும் கூட குழந்தைகளின் சுவமானத்திற்கு முன்பு ஒன்றுமே கிடையாது, ஆதலால் வைர இரவின், வைர ஆஸ்திற்கான வாழ்த்துக்கள்! எல்லோருக்கும் அன்பு நினைவுகள் மற்றும் சதா பரிஷ்தா ஆகி பறந்து கொண்டே இருப்பதற்கான வாழ்த்துக்கள்! நல்லது. டைமண்ட் மார்னிங்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 01.03.1990 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிராமண வாழ்க்கையின் அஸ்திவாரம் -தெய்வீக புத்தி மற்றும் ஆன்மீகப் பார்வை!

இன்று தெய்வீக புத்தியை உருவாக்கியவர், ஆன்மீகப் பார்வையின் வள்ளல் பாப்தாதா நாலா புறமும் உள்ள தெய்வீக புத்தியைப் பெறக்கூடிய குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு பிராமணக் குழந்தையும் இந்த இரண்டு வரங்களையும் பிராமணனாக பிறந்ததிலிருந்தே பெற்றுள்ளனர். தெய்வீக புத்தி மற்றும் ஆன்மீகப் பார்வை -இது பிறப்புரிமையாகக் கிடைத்துள்ளது. இந்த வரதானம் பிராமண வாழ்க்கையின் அடித்தளம்! வாழ்க்கை மாற்றம் அல்லது மர்ஜீவா பிறப்பு, இந்த இரண்டு பிராப்திகளையும்தான் பிராமண வாழ்க்கை என்று அழைக்கப்படுகின்றது. வாழ்க்கை மற்றும் தற்போதைய பிராமண வாழ்க்கைக்கும் உள்ள வித்தியாசம் இந்த இரண்டு விஷயங்களுடைய விசேஷத்தில் உள்ளது. இந்த இரண்டு விஷயங்களின் மேல் சங்கம யுக முயற்சியினுடைய நம்பர் அமைந்துள்ளது. ஒவ்வொரு எண்ணத்தில், சொல்லில், செயலில் இந்த இரண்டு விஷயங்களையும் நீங்கள் எவ்வளவு அதிகமாகப் பயன்படுத்துகிறீர்களோ, அந்தளவே நம்பர் முன்னே செல்லும். ஆன்மீகப் பார்வை மூலம் உள்ளுணர்வும் செயலும் தானாகவே மாறும். தெய்வீக புத்தி மூலம் தன்னைப் பற்றியும், சேவை பற்றியும், பிராமண பரிவாரத்தின் சம்பந்தம் தொடர்பு பற்றியும், சதா மற்றும் தானாகவே ஒவ்வொரு விஷயத்திலும் துல்லியமான முடிவு எடுக்க முடியும் மற்றும் தெய்வீக புத்தி மூலம் சரியான முடிவு எடுக்கப்படும்போது, அந்த முடிவின் ஆதாரத்தினால் மட்டுமே சதா சுயம், சேவை, சம்பந்தம், தொடர்பும் சரியாக சக்திசாலி ஆக வேண்டும். அடிப்படை விஷயமே தெய்வீக பார்வை மற்றும் தெய்வீக புத்தி!

இன்று, பாப்தாதா அனைத்து குழந்தைகளின் தெய்வீக புத்தியை சோதித்துக் கொண்டிருந்தார். முதலில், தெய்வீக புத்தியின் சோதனை

என்னவென்றால், அவர் சதா தந்தையை, தன்னை மற்றும் ஒவ்வொரு பிராமண ஆத்மாவையும் உள்ளது உள்ளவாரே அறிந்து கொண்டு, அந்த ரூபத்தில் தந்தையிடமிருந்து எவ்வளவு எடுக்க வேண்டுமோ அந்த உரிமையை அவர் எடுத்துக் கொண்டே இருப்பார். தந்தை எதை உருவாக்கினாரோ, சேவைக்காக நிமித்தமாக வைத்திருந்தாலும், தந்தை பிராமண வாழ்க்கையின் குணாதிசயங்களை அல்லது தெய்வீகக் குணங்களை கொடுத்தாரோ, எப்படி நிமித்தம் ஆக்கினாரோ, அதே போல தன்னை அந்த வழியில் முன்னேற்றுவார். கூடவே ஒவ்வொரு பிராமண ஆத்மாவுடனும், ஒரு ஆத்மா என்ன விசேஷங்களை உடையதோ, எந்த சேவைக்குத் தகுதியானதோ, எப்படி முயற்சியின் வேகத்தில் செல்பவரோ -ஒவ்வொருவரையும், யாராக இருந்தாலும், எப்படி இருந்தாலும், அப்படியேத் தெரிந்து கொண்டு, அந்த ஆத்மாவுடன், அதே வழியில் தொடர்பு கொள்வது அல்லது முன்னேறுவது -இதைத்தான் தந்தைக்கு, தனக்கு மற்றும் பிராமண ஆத்மாக்களுக்கு யாராக இருந்தாலும், எப்படி இருந்தாலும், அப்படியே முன்னேறுவது என்பது! இதுதான் தெய்வீக புத்தியின் முதல் சோதனை.

தெய்வீக புத்தி என்றால் புனித அன்னப்பறவையின் புத்தி. அன்னம் என்றால் தூய்மை; பாலையும் நீரையும் அல்லது முத்தையும் கல்லையும் அடையாளம் கண்டு சரியானதை ஏற்றுக் கொள்ளுதல்! அது ஒரு கல், அது ஒரு முத்து என்பதை அறிந்திருப்பது, ஆனால் கல்லை ஏற்றுக் கொள்வதில்லை. அதனால்தான் புனித அன்னப்பறவை சங்கம யுகத்தில் ஞான சொரூப கல்வியின் தெய்வமான சரஸ்வதியின் வாகனமாக உள்ளது. நீங்கள் அனைவரும் ஞான சொரூபமானவர்கள், எனவே வித்யாபதி அல்லது வித்யாதேவி ஆகிறீர்கள். இந்த வாகனம் தெய்வீக புத்தியின் அடையாளம். பிராமணர்கள் நீங்கள் அனைவரும் உங்கள் புத்தியோகத்தின் மூலம் மூன்று உலகங்களைச் சுற்றி வருகிறீர்கள். புத்தியையும் ஒரு வாகனம் என்று கூறப்படுகிறது. தெய்வீக புத்தியின் அந்த வாகனம் அனைத்து வாகனங்களையும் விட வேகமானது. தெய்வீக புத்தியை புத்தி பலம் என்றும் கூறப்படுகிறது. ஏனென்றால் புத்தியின் சக்தியால் மட்டுமே நீங்கள் தந்தையிடமிருந்து அனைத்து சக்திகளையும் பிடிக்க முடியும். அதனால்தான் புத்தி பலம் என்று அழைக்கப்படுகிறது, அறிவியல் சக்தியைப் போல. அறிவியலின் சக்தி எவ்வளவு அற்புதத்தைக் காட்டுகிறது! இன்று மனிதர்களுக்கு

சாத்தியமற்றதாகத் தோன்றும் பல விஷயங்களை சாத்தியமானதாகக் காட்டப்படுகின்றன  ஆனால் இது ஒரு அழிவு சக்தி. அறிவியலும் புத்தி பலம்தான் ஆனால் தெய்வீக புத்தி பலம் அல்ல; அது உலக-புத்தி, எனவே இந்த உலகத்தைப் பற்றி, இயற்கையைப் பற்றி மட்டுமே சிந்திக்க முடியும், செய்ய முடியும். தெய்வீக புத்தியின் பலம் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆக்குகிறது, பரமாத்மாவை தெரிந்து கொள்வது, பரமாத்மா-சந்திப்பு, பரமாத்ம-பிராப்திகள் ஆகியவற்றின் அனுபவத்தை அளிக்கிறது. தெய்வீக புத்தி என்பது நீங்கள் என்ன விரும்புகிறீர்களோ, எப்படி விரும்புகிறீர்களோ, சாத்தியமற்றதை சாத்தியம் ஆக்கக்கூடியது. தெய்வீக புத்தி மூலம் ஒவ்வொரு செயலிலும் பரமாத்ம-அன்பு (தூய்மை) தொடுவதை அனுபவம் செய்வதன் மூலம் ஒவ்வொரு செயலிலும் வெற்றியை அனுபவிக்க முடியும். தெய்வீக புத்தி மாயாவின் எவ்வித போரையும் தோற்கடிக்க முடியும்.  எங்கு பரமாத்ம-தொடுதல் (touching), அன்பின்-தொடுதல் கலப்படமாவதில்லையோ, அங்கு மாயாவின் தொடுதல் அல்லது போர் என்பது அசம்பவமாகும். மாயாவோ வர முடியாது ஆனால் அதனால் உங்களைத் தொடக்கூட முடியாது.  தெய்வீக புத்திக்கு முன்னால் மாயா வெற்றி மாலை ஆகி விடும், மாயா இருக்காது. துவாபர யுகத்தில் ரஜோகுண ரிஷி-முனி ஆத்மாக்கள் சிங்கத்தையும்கூட தங்கள் சக்தியால் அமைதியடையச் செய்ததுபோல! சிங்கமும் நண்பானாகி விடுகிறது, வாகனமாகி விடுகிறது, பொம்மையாகி விடுகிறது -மாற்றம் நிகழ்கிறது இல்லையா?  எனவே நீங்கள் சதோபிரதான, மாஸ்டர் சர்வ சக்திவான், தெய்வீக புத்தி, வரதானி -அவர்களுக்கு முன் நீங்கள் யார் என நம்புகிறீர்கள், எதிரியிடம் மாற்றம் இருக்க முடியாது என்று நம்புகிறீர்களா? தெய்வீக புத்தி பலம் என்பது மிக உயர்ந்த சக்தி,  அதை பயன்படுத்தவும். நேரத்திற்கு ஏற்றவாறு நீங்கள் அதை பயன்படுத்தும்போது, சர்வ சக்திகளும் உங்கள் உள்ளங்கையில் இருக்கும். ஸித்தி என்பது பெரிய விஷயம் அல்ல, தெய்வீக புத்தியினுடைய சுத்திகரிப்புதான். எப்படி இன்றைய மந்திரவாதிகள் தங்கள் கைகளைத் தூய்மையைக் காட்டுவதுபோல!  அந்த தெய்வீக புத்தியின் சுத்தம் எல்லா சாதனைகளையும் உங்கள் உள்ளங்கையில் கொண்டு வந்து விடும். பிராமண ஆத்மாக்கள் நீங்கள் அனைவரும் அனைத்து ஸித்திகளையும் அடைந்துள்ளீர்கள், ஆனால் தெய்வீக ஸித்திகள் சாதாரணமானவை அல்ல.  இன்றும் கூட பக்தர்கள் ஸித்தி

அடைய உங்கள் சிலைகள் மூலம் பெறச் செல்கிறார்கள். எப்போது ஸித்தி சொரூபம் ஆகிறீர்களோ அப்போதுதான் பக்தர்கள் உங்களிடம் கேட்க வருவார்கள். எனவே தெய்வீக புத்தியின் அதிசயங்கள் என்ன என்பதைப் புரிந்து கொண்டீர்களா! தெய்வீக புத்தியின் அற்புதம் என்ன என்பது தெளிவாகி விட்டதல்லவா! ஆனால் இன்று என்ன பார்த்தார்? என்ன பார்த்திருப்பார்? டீச்சர்கள் கூறுங்கள்.

டீச்சர்களோ தந்தைக்குச் சமமான மாஸ்டர் முதன்மை டீச்சர்கள். டீச்சர் என்றால் ஒவ்வொரு எண்ணம், சொல் மற்றும் ஒவ்வொரு நொடியிலும் சேவையில் இருப்பவர்கள் -அத்தகைய சேவாதாரியைத்தான் பாப்தாதா டீச்சர் என்று கூறுகிறார். எல்லா நேரங்களிலும் வார்த்தைகளால் சேவை செய்ய முடியாது, களைப்படைந்து விடுவீர்கள் ஆனால் உங்கள் அம்சங்களின் மூலம் எல்லா நேரங்களிலும் நீங்கள் சேவையைச் செய்யலாம். இதில் சோர்வடைவதற்கான விஷயம் எதுவும் இல்லை. உங்களால் இதைச் செய்ய முடியும்தானே, டீச்சர்கள் முடிந்தவரை வார்த்தை மூலம் நேரத்திற்கேற்ப சேவை செய்வார்கள், ஆனால் எதிர்கால பரிஷ்தாவின் அம்சங்கள் இருக்கட்டும். சங்கம யுகத்தின் எதிர்கால பரிஷ்தாக்கள், அது அம்சங்களில் காணப்பட்டால் எவ்வளவு நன்றாக சேவை நடக்கும்? எப்போது ஜட சித்திரத்தின் அம்சங்கள் மூலம் இறுதி ஜென்மம் வரையிலும் சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள் என்றால் சைதன்ய சிரேஷ்ட ஆத்மாக்கள் உங்கள் அம்சங்களின் மூலம் எளிதாக சேவையைச் செய்யலாமே. உங்கள் அம்சங்களில் சதா சுகத்தின், அமைதியின், குஷியின் ஜொலிப்பு இருக்கட்டும். எந்த துக்கமான, அசாந்தியான, துன்புறுத்தப்பட்ட ஆத்மாவும், உங்கள் அம்சங்கள் மூலம் அவர்களின் சிறந்த எதிர்காலத்தை உருவாக்க முடியும். அத்தகைய அனுபவம் இருக்கிறதா. அமிர்தவேளையில் உங்கள் அம்சங்களைச் சரி பார்க்கவும். உடலின் அம்சங்களை நீங்கள் சோதிப்பது போலவே பரிஷ்தா அம்சங்களில் குஷி, அமைதி, சுகத்தின் அலங்காரம் சரியாக இருக்கிறதா என இதைச் சரி பார்த்தால் தானாகவே, சிரமமின்றி சேவை நடந்து கொண்டிருக்கும். டீச்சர்களுக்கு எளிதாக உள்ளதல்லவா? இந்த சேவையை நீங்கள் 12-மணி நேரம்கூட செய்ய முடியும். வார்த்தையின் சேவையையோ 2-4 மணி நேரம் மட்டுமே செய்வீர்கள். நீங்கள் திட்டமிடல் மற்றும் சொற்பொழிவு நிகழ்த்துதல் இவற்றைச் செய்தால் சோர்வடைவீர்கள். இதிலோ

சோர்வடைவதற்கான விஷயமே இல்லை. இயற்கையானதல்லவா? எல்லோரும் இத்தகைய அனுபவம் வாய்ந்தவர்கள் என்றாலும்... வெளிநாடுகளில் நாய்கள் மற்றும் பூனைகள் அதிகம் வளர்க்கப்படுவதைப் பாப்தாதா கண்டார். அத்தகைய பொம்மைகளை இங்கும் கொண்டு வருகின்றனர். எனவே நீங்கள் நன்றாக அனுபவம் செய்கிறீர்கள், ஆனால் சில நேரங்களில் நாய் வந்து விடுகிறது, சில நேரங்களில் ஒரு பூனை வந்து விடுகிறது. நீங்கள் அதை வெளியே எடுப்பதிலேயே நேரம் கழிந்து விடுகிறது ஆனால் இன்று கேட்டீர்கள்தானே, மாயா உங்கள் வெற்றியின் மாலை ஆகி விடும் என்பதை. எல்லா நிமித்த சேவாதாரிகளின் கழுத்திலும் மாலை உள்ளது. வெற்றியின் மாலையா அல்லது சில நேரங்களில் கழுத்தில் மாலை இருப்பதுகூட தெரியவில்லையா? வெற்றி பெற வெளியில் தேடிக் கொண்டே இருக்கிறீர்கள். கழுத்தில் மாலை இருந்தாலும் வெளியே தேடிக் கொண்டிருந்த ராணியின் கதையைப் போல! இப்படிச் செய்வதில்லைதானே. வெற்றி ஒவ்வொரு பிராமண ஆத்மாவின் உரிமையாகும். அனைத்து டீச்சர்களும் வெற்றிமூர்த்திகள்தானே அல்லது முயற்சிமூர்த்திகளா, கடின உழைப்புமூர்த்திகளா? முயற்சியும் எளிதான முயற்சியே, கடின உழைப்பு அல்ல. உண்மையான முயற்சியின் வரையறை இயற்கையான கவனம்! பலர் சொல்கிறார்கள்: நீங்கள் கவனமாயிருக்க வேண்டும்தானே? என, ஆனால் கவனம் (attention) பதற்றமாக (tension) மாறி விடுகிறது, இது தெரிவதில்லை. இயற்கையான கவனம் என்றால் யதார்த்த முயற்சியாளர்கள்!

பாப்தாதாவுக்கு டீச்சர்கள் மீது அன்பு இருக்கிறது, அதனால்தான் அவர் உங்களை கடினமாக உழைக்க அனுமதிக்கவில்லை. இது இதயத்தின் அன்பு, இல்லையா? நல்லது, பின்பு இன்னொரு முறை வேறு என்ன பார்த்தோம் என்பதைச் சொல்கிறோம்! கொஞ்சம் கொஞ்சமாக சொல்கிறோம். ஒவ்வொருவருக்கும் அவரவர் சித்திரம் உள்ளே வருகிறது.

உள்நாடு வெளிநாடுகளில் சேவை மிக நன்றாக நடந்தது. பாரதத்திலும் மாநாடு மிக நன்றாக வெற்றியடைந்தது. வெற்றியின் அடையாளம் -வெற்றியின் நறுமணத்தில் வரும் ஆத்மாக்கள் தங்கள் ஊக்கம்

உற்சாகத்துடன் எண்ணிக்கையில் அதிகரிப்பர். நல்லதற்கான அடையாளம் -எல்லோரிடமும் பார்க்கவும் கேட்கவும் பெறுவதற்குமான ஆசை அதிகரித்து வருகிறது. இதுவே நன்மையின் அடையாளம். எனவே இப்படி நினைக்க வேண்டாம் -எண்ணிக்கை குறைவாக உள்ளது என. நீங்கள் நன்றாகச் செய்தால், ஆசை அதிகரிக்கும், எண்ணிக்கையும் அதிகரிக்கும். ஒரு வெளிநாட்டு வைபவத்திலோ அல்லது ஒரு மாநாட்டிலோ -இரண்டின் முடிவுகளும் நாளுக்கு நாள் நன்றாக காட்டப்படுகின்றன. எல்லாவற்றையும் விட சிறந்த விளைவு என்னவெனில் பிரம்மா குமாரிகளின் பெயரில் யாரும் வர மாட்டார்கள் என்று முன்பு வெளிநாட்டில் சொன்னவர்கள், இப்போது நேரடியாக பிரம்மா குமாரிகளின் ஆசிரமங்களுக்கு ராஜயோகத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் புரிந்து கொள்கிறார்கள். எனில் இதுவே அவர்கள் முகத்திரைக்கு வெளியே வந்து விட்டனர், முகத்திரையை திறந்து விட்டனர். மதுபனில் வாசிகள அல்லது சேவாதாரிகள் அனைவரும், பாரதத்தின் பல இடங்களிலிருந்து வந்து சேவை செய்பவராயினும், மதுபன் வாசியாயினும், நாலா புறமும் உள்ள சேவாதாரிகளாயினும், அன்புடன், விஷயங்களைப் பார்க்காமல், ஓய்வையும் பார்க்காமல் நன்றாக களைப்பற்ற சேவை செய்துள்ளனர். அதனால்தான் பாப்தாதா நாலா புறமும் உள்ள அயராத சேவையின் வெற்றியைப் பெறும் விசேஷ குழந்தைகளுக்கு சேவையின் வாழ்த்துக்களை, மனமார்ந்த வாழ்த்துக்களை அளிக்கின்றார். ஒலி எதிரொலித்து நாலா புறமும் பரவி வருகிறது. நல்லது.

சர்வ திவ்ய புத்தி ஆன்மீக வரதானி ஆத்மாக்களுக்கு, சதா புத்தி பலத்தை தக்க நேரத்தில், தக்க காரியத்தில் உபயோகிக்கின்ற ஞான சொரூப ஆத்மாக்களுக்கு, சதா தனது பரிஷ்தா அம்சங்கள் மூலம் அகண்ட சேவை செய்யக்கூடிய, தானாகவே சகஜ முயற்சி செய்யும் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

**இரட்டை வெளிநாட்டினர் தனித்தனி குழுக்களுடன் (சாரம்):**

21-ஜென்மத்திற்கு உத்தரவாதம் -பல பெயர் ரூபங்களில் பிரம்மாவின் ஆத்மாவுடன் சம்பந்தத்தில் இருப்பீர்கள்.

## 1990 அவ்யக்த முரளி

நிரந்தர மற்றும் இயல்பான முயற்சி இருக்கட்டும்! என்ற இந்த வரதானத்தை சதா நினைவில் வையுங்கள். இந்த வருஷத்தை இதே வரதானத்தை நினைவில் வைத்து நினைவு சொரூபம் ஆகுங்கள்.

உலகினர் எந்த விஷயத்தை 'ஐயோ ஐயோ' என்கிறார்களோ, அது உங்களுக்கு 'ஆஹா ஆஹா' என்றாகி விடுகிறது.

பிராமணன் என்றாலே திருப்தி! பிராமண வாழ்க்கையில் அதிருப்தி என்பதே கிடையாது.

எதிர்கால பலன் தற்சமயம் நீங்கள் விதைக்கின்ற சக்திசாலி கர்ம ரூப விதையைப் பொறுத்தது. இதை விட நல்ல பலன் உங்களைத் தவிர யாருக்கும் கிடைக்காது.

கேள்விக்குறி என்றாலே குழப்பம். முற்றுப்புள்ளி வைப்பவர் முழு தேர்ச்சி அடைகிறார். யாருக்கு முற்றுப்புள்ளி வைக்க முடிகிறதோ அவரிடம் சக்திகளின் முழு இருப்பு (full stock) இருக்கும். நல்லது!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 07.03.1990 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆளும் மற்றும் கட்டுப்படுத்தும் சக்தி மூலம் சுய ராஜ்யத்தின் பிராப்தி!

இன்று குழந்தைகளின் அன்பான பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் இரண்டு சிறப்பான விஷயங்களைச் சோதித்துக் கொண்டிருந்தார். அன்பின் நேரடி சொரூபமான குழந்தைகளை சம்பன்னமாகவும் சம்பூர்ணமாகவும் ஆக்க வேண்டும். ஒவ்வொரு குழந்தையிடமும் ஆளும்சக்தியும் கட்டுப்படுத்தும்சக்தியும் எந்தளவு வந்துள்ளது என்பதை இன்று நாம் பார்த்துக் கொண்டிருந்தோம். எப்படி ஆத்மாவின் ஸ்தூல கர்ம இந்திரியங்கள் ஆத்மாவின் கட்டுப்பாட்டில் இயங்குகிறதோ, எப்போது தேவையோ, எப்படித் தேவையோ, எங்கு தேவையோ அப்படி நடத்த முடியும் மற்றும் நடத்திக் கொண்டே இருக்கிறது. கட்டுப்படுத்தும் சக்தியும் உள்ளது. எப்படி கைகால்கள் ஸ்தூல சக்திகளோ, அதுபோல் மனம் புத்தி சம்ஸ்காரம் ஆத்மாவின் சூட்சும சக்திகளாகும். சூட்சும சக்திகளின் மீது கட்டுப்படுத்தும் ஆற்றல், அதாவது மனம் புத்தி, சம்ஸ்காரங்களை எப்போது வேண்டுமோ, எங்கு வேண்டுமோ, எப்படி வேண்டுமோ, எவ்வளவு நேரம் வேண்டுமோ -அத்தகைய கட்டுப்படுத்தும் சக்தி, ஆளும் சக்தி வந்திருக்கிறதா? ஏனென்றால் இந்த பிராமண வாழ்க்கையில் நீங்கள் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகிறீர்கள். இந்த நேரத்தின் பிராப்தி கல்பம் முழுவதும் ராஜ்ய ரூபத்திலும் பூஜாரியின் ரூபத்திலும் நடந்து கொண்டே இருக்கிறது. எந்தளவு அரை கல்பம் உலக ராஜ்ய பதவியைப் பெறுகிறீர்களோ, அதன்படியே எந்தளவு சக்திசாலியான ராஜ்ய பதவி அல்லது பூஜைக்குரிய பதவி கிடைக்கிறதோ, அந்தளவே பக்தி மார்க்கத்திலும் உயர்ந்த பூஜாரிகளாக ஆகிறீர்கள். பக்தியில் கூட சிரேஷ்ட ஆத்மாவின் மனம், புத்தி, சம்ஸ்காரத்தின் மீது கட்டுப்படுத்தும் சக்தி உள்ளது. பக்தர்களில்கூட நம்பர்வார் சக்திசாலிகளாக ஆகின்றனர். அதாவது, எவ்விதம் பக்தி செய்ய விரும்புகின்றனரோ, எவ்வளவு நேரம், எந்த வழிமுறையில் -அப்படி பக்தியின் பலன், பக்தியின் வழிமுறைக்கு

ஏற்றவாறு திருப்தி, ஒருமைப்படுத்தும் சக்தி மற்றும் குஷியைப் பெறுகின்றனர் ஆனால் ராஜ்ய பதவி மற்றும் பக்தியினுடைய சக்தியின் பிராப்திக்கான ஆதாரம் இந்த பிராமண ஜென்மம்தான். எனவே, சங்கம யுகத்தின் மிகச் சிறிய இந்த ஜென்மம் முழு கல்பத்தினுடைய எல்லா பிறப்புகளுக்கும் அடிப்படையாகும். எப்படி ராஜ்யத்தை ஆள்வதில் சிறப்பானவர்களாகிறீர்களோ, அதே போல பக்தர்களும் சிறப்புடையவர்களாகிறார்கள், சாதாரணமாக அல்ல. பக்த மாலையின் பக்தர்கள் வேறு ஆனால் பூஜைக்குரியவர்களான, பூஜாரிகள் ஆகின்ற ஆத்மாக்கள் உங்களது பக்தியும் விசேஷமானது. எனவே, குழந்தைகளின் மூல ஆதார ஜென்மத்தைப் பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். ஆரம்பம் முதல் இப்போது வரை பிராமண வாழ்வில் ஆளும்சக்தியும் கட்டுப்படுத்தும் சக்தியும் எப்பொழுதும் எந்த சதவீதத்தில் உள்ளன. இதிலும், முதலில் உங்கள் சூட்சும சக்திகளின் முடிவைச் (result) சரி பார்க்கவும். முடிவில் என்ன தெரிகிறது? இந்த விசேஷ மூன்று சக்திகளின், மனம் புத்தி சமஸ்காரம் மீது கட்டுப்பாடு இருந்தால் அவரைத்தான் சுய ராஜ்ய அதிகாரி என்று கூறுவோம். எனவே இந்த சூட்சும சக்திகளால் மட்டுமே ஸ்தூல கர்ம இந்திரியங்களை கட்டுப்பாட்டுடன் நியமப்படி நடத்த முடியும். என்ன முடிவைப் பார்த்தார்? எப்போது, எங்கு, எப்படி -இந்த மூன்று விஷயங்களில் இப்போது அவரவர் சக்திக்கேற்றவாறு உள்ளது. எல்லா சக்திகளும் இல்லை ஆனால் அவரவர் சக்திக்கேற்றவாறுதான். இதை இரட்டை வெளிநாட்டவர்கள் அவர்களது மொழியில் ஏதாவது (something) என்கிறார்கள், எனில் இதை சர்வ சக்திவான் எனக் கூறுவோமா? சக்தியோ உள்ளது ஆனால் அனைத்துமா? உண்மையில், இதைத்தான் பிராமண வாழ்க்கையின் அஸ்திவாரம் என்று கூறப்படுகிறது. சுயத்தின் மீது எந்தளவு யார் ராஜ்யம் செய்கிறார்களோ, அதாவது, தன்னை நடத்தவும் மற்றும் அனைவரையும் நடத்துவதற்கு வருகிறதோ, அவரே நம்பரை முன்னால் எடுக்கின்றார். இந்த அஸ்திவாரத்தில் ஒருவேளை அவரவர் சக்திக்கேற்ப என்பது இருந்தால் தானாகவே நம்பர் பின்னால் சென்று விடும். யாருக்கு தன்னை நடத்தவும் மற்றும் மற்றவர்களையும் எளிதாக நடத்துவதற்கு வருகிறதோ, அதாவது கையாளும் திறன் (handling power) வந்து விடுகிறது. மற்றவர்களை கையாள்வதற்கு கையாளும் சக்தி தேவையில்லை. யார் தனது சூட்சும சக்திகளைக்

கையாளக்கூடியவரோ, அவரால் மற்றவர்களையும் கையாள முடியும். எனவே தன் மீதான கட்டுப்பாட்டுசக்தி, ஆளும்சக்தி, அனைவருக்காகவும் உண்மையான கையாளும் சக்தியாக ஆகி விடுகிறது. அஞ்ஞானி ஆத்மாக்களை சேவை மூலம் கையாண்டாலும், பிராமண பரிவாரத்தில் அன்புடனும் மனநிறைவுடனும் நடந்து கொண்டாலும், இரண்டிலும் வெற்றி பெறுவீர்கள். ஏனென்றால், பல குழந்தைகள் இப்படி உள்ளனர் -தந்தையை அறிந்து கொள்வது, தந்தையுடையவராது மற்றும் தந்தையுடன் அன்புடன் இருப்பது -இதை மிக எளிதாக அனுபவம் செய்கின்றனர் ஆனால் பிராமண ஆத்மாக்களுடன் ஒத்துப்போவதில் ஏதாவது (something) கூறுகின்றனர். இதற்கு காரணம் என்ன? தந்தையுடன் ஒத்துப்போவது மட்டும் ஏன் எளிதாக உள்ளது? ஏனென்றால் இதயத்தின் அன்பு முறிக்க முடியாதது. அன்பில் ஒத்துப்போவது மிக எளிது. யார் மீது அன்பு உள்ளதோ அவருக்கு சில அறிவுரையின் சமிக்ஞை கிடைப்பதும் கூட அன்பாகத் தெரியும் மேலும் அவர் என்ன சொன்னாலும் அது என் நலனுக்காகத்தான் என்ற அனுபவம் சதா உளமார அனுபவம் செய்வார். ஏனென்றால் அவரைப் பற்றி உள்ளத்தில் சிரேஷ்ட உணர்வு இருக்கிறது, அது போல உங்களுடைய நல்லுணர்விற்கான கைம்மாறு மற்றவர் மூலம் கிடைக்கின்றது. நீங்கள் ஒரு குவிமாடத்தில் (dome) ஒலி எழுப்பினால் அது உங்களிடமே திரும்பி வரும். எனவே, தந்தையின் மீது முறியாத, முறிக்க முடியாத, அசைக்க முடியாத அன்பு, உயர்ந்த உணர்வுகள் மற்றும் நம்பிக்கை உள்ளதோ, அது போல அத்தகைய பிராமண ஆத்மாக்களில் நம்பர்வார் இருந்தாலும், ஆத்மீக அன்பு முறியாத, முறிக்க முடியாததாக இருக்கிறதா? பல விதமான நடத்தைகள், பல்வேறு சமஸ்காரங்களைப் பார்த்து அன்பு செய்கின்றனர், அவை முறியாமல், முறிக்க முடியாததாக இருப்பதில்லை. எந்த ஒரு ஆத்மாவிற்கும், தன்னைப் பற்றிய அல்லது மற்றவர்களைப் பற்றிய மனப்பான்மை, அதாவது பண்பு அல்லது சம்ஸ்காரம் இதயத்திற்குப் பிடிக்கவில்லை என்றால் அன்பின் சதவீதம் குறையும். இருப்பினும், ஆத்மாவுடைய சிரேஷ்ட ஆத்மாவின் உணர்வு மூலம், ஆத்மீக அன்பு சதவிகிதம் ஆவதில்லை. சமஸ்காரமும், நடத்தையும் எதுவாக இருந்தாலும், ஆனால் பிராமண ஆத்மாக்கள் முழு கல்பத்திலும் முறிக்க முடியாத சம்பந்தம் கொண்டுள்ளன, ஈஸ்வரிய பரிவாரம் உள்ளது. தந்தை ஒவ்வொரு ஆத்மாவையும்

சிறப்பான முறையில் தேர்ந்தெடுத்து ஈஸ்வரிய பரிவாரத்திற்குள் கொண்டு வந்துள்ளார். நீங்களாகவே வரவில்லை, தந்தை உங்களை அழைத்து வந்தார். எனவே, தந்தையை முன்னால் வைத்திருப்பதன் மூலம், ஒவ்வொரு ஆத்மாவிடமிருந்தும் ஆத்மீக முறிக்க முடியாத அன்பைப் பெறுவீர்கள். எந்த ஆத்மாவைப் பற்றியும் ஏதாவது ஒரு விஷயம் உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால், அப்போதுதான் அன்பில் வேறுபாடு வருகிறது. அந்த நேரத்தில், இந்த ஆத்மா தந்தையால் விரும்பப்பட்டது என்பதை உங்கள் புத்தியில் வைத்துக் கொள்ளுங்கள், கண்டிப்பாக ஏதாவது ஒரு விசேஷம் இருக்கும் அதனால்தான் தந்தையும் விரும்பியுள்ளார். ஆரம்பத்திலிருந்தே, பாப்தாதா தொடர்ந்து குழந்தைகளுக்கு இதைத்தான் கூறிக் கொண்டே இருக்கின்றார் -ஒருவரிடம் 36-குணங்களில், 35-குணங்கள் இல்லை, ஆனால் ஒரு விசேஷ குணம் உள்ளது அதனால்தான் தந்தையும் அவரை விரும்பியுள்ளார். தந்தை அவர்களின் 35-அவகுணங்களைப் பார்த்தாரா அல்லது ஒரே ஒரு குணத்தை மட்டும் பார்த்தாரா? என்ன பார்த்தார்? அனைத்தையும் விட மிகப் பெரிய குணம் அல்லது விசேஷம் தந்தையை அடையாளம் கண்டுகொள்ளும் புத்தி, தந்தையுடையவராக ஆவதற்கான தைரியம், தந்தையை நேசிக்கும் முறை, இது முழு கல்பத்திலும் மதத்தந்தையர்களிடம்கூட இல்லை, ராஜ்யத்தலைவர்களிடமும்கூட, செல்வந்தர்களிடமும்கூட இல்லை ஆனால் அந்த ஆத்மாவில் உள்ளது. தந்தை உங்கள் அனைவரிடமும் கேட்கிறார் -நீங்கள் தந்தையிடம் வந்தபோது குணங்கள் நிறைந்தவர்களாக வந்தீர்களா? உங்கள் பலவீனங்களைத் தந்தை பார்த்தாரா? நீங்கள் என்னுடையவராக இருந்தீர்கள், இப்போதும் இருக்கிறீர்கள் மற்றும் சதா இருப்பீர்கள் என்ற உங்கள் தைரியத்தை அதிகரித்தார், எனவே தந்தையைப் பின்பற்ற வேண்டும் தானே! எப்போது விசேஷ ஆத்மா என நினைத்து, யாரைப் பார்த்தாலும், சம்பந்தம் தொடர்பில் வந்தாலும், தந்தையை உங்களுக்கு முன்னால் வைப்பது மூலம், ஆத்மாவில் தானாகவே ஆத்மீக அன்பு வெளிப்படும். உங்கள் அன்பால், எல்லோருக்கும் அன்பானவராகி விடுவீர்கள் மற்றும் ஆத்மீக அன்பின் மூலம், சதா அனைவர் மூலமும் நல்லெண்ணம் மற்றும் ஒத்துழைப்பின் உணர்வு தானாகவே உங்களுக்காக ஆசீர்வாதத்தின் ரூபத்தில் பிராப்தி ஆகும். இதற்கு கூறப்படுகிறது உண்மையான ஆன்மீக சிரேஷ்ட கையாளுதல்! என.

பாப்தாதா இன்று சிரித்துக் கொண்டிருந்தார். குழந்தைகளிடம் ஆளும் மற்றும் கட்டுப்படுத்தும் சக்தி மூன்று வார்த்தைகளினால் குறைகிறது. அந்த மூன்று சொற்கள் -1. ஏன் (why), 2. என்ன (what), 3. வேண்டும் (want). இந்த மூன்று வார்த்தைகளை முடித்து ஒரு வார்த்தை சொல்லுங்கள். ஏன் (why) என்று வரும்போது, ஒரு வார்த்தை சொல்லுங்கள் -ஆஹா (wah), என்ன (what) என்று வரும்போதும், சொல்லுங்கள் -ஆஹா (wah). ஆஹா என்ற வார்த்தை சொல்ல வரும்தானே! ஆஹா பாபா, ஆஹா நான் மற்றும் ஆஹா நாடகம். நீங்கள் ஆஹா என்று மட்டும் சொன்னால் போதும், இந்த மூன்று வார்த்தைகளும் முடிவடைந்து விடும். அன்றும்கூட பாப்தாதா என்ன விளையாட்டு பார்த்தார் என்பதைக் கூறினார். உங்களுடைய ஒரு படம் முதலிலேயே உருவாக்கப்பட்டுள்ளது, அதில் காட்டப்பட்டுள்ளது -யோகி யோகா செய்கிறார், புத்தியை ஒருமுகப்படுத்துகிறார், சமநிலையில் வைத்திருக்கிறார், சமநிலையின் தராசு காட்டப்பட்டுள்ளது, எந்தளவு புத்தியை சமநிலைப்படுத்துகிறாரோ, அந்தளவு ஏதாவது குரங்கு வந்து தராசில் உட்காருகிறது. இந்த மூன்று விஷயங்களுடைய குரங்கு வந்து விடுகிறது என்றால் சமநிலை எப்படி இருக்கும்! குழப்பமாகி விடும், சமநிலை இருக்காது. எனவே இந்த மூன்று வார்த்தைகள் சமநிலையை அழிக்கின்றன, புத்தியை ஆடச் செய்கின்றன. குரங்கால் அமைதியாக உட்கார முடியுமா? வேறு எதுவுமே செய்யவில்லை என்றாலும்கூட வாலை ஆடிக் கொண்டே இருக்கும். எனவே, இதிலும் சமநிலை இல்லாததால், ஒவ்வொரு அடியிலும் தந்தை மூலம் கிடைக்கின்ற ஆசீர்வாதம் அல்லது ஆத்மீக அன்பின் காரணமாக பரிவாரத்தின் மூலம் கிடைக்கின்ற ஆசீர்வாதங்களை இழக்க நேரிடுகிறது. எப்படி தந்தையுடன் சம்பந்தம் வைப்பது அவசியமானதோ அதுபோல, ஈஸ்வரிய பரிவாரத்துடன் சம்பந்தம் வைப்பதும் மிகவும் அவசியம். முழு கல்பத்திலும் நம்பர்-1 ஆத்மா பிரம்மாதந்தை மற்றும் ஈஸ்வரிய பரிவாரத்தின் தொடர்பில் வர வேண்டியிருக்கிறது. நாமோ தந்தையுடையவர், தந்தையோ நம்முடையவர் என இப்படி நினைக்கக்கூடாது. இதுவும் மதிப்புடன் தேர்ச்சி பெறுவதற்கான அடையாளம் அல்ல, ஏனென்றால் நீங்கள் சந்யாசி ஆத்மாக்கள் அல்ல, ரிஷி-முனிவர்களின் ஆத்மாக்களும் அல்ல; ஒதுக்குபவர்களும் அல்ல, ஆனால் உலகிற்கு உதவக்கூடிய ஆத்மாக்கள் ஆவீர்கள். உலகம் ஒரு

ஓரத்தில் இல்லை, உலகிற்கு நன்மை செய்பவர்கள். பிராமண ஆத்மாக்களின் விஷயத்தை விடுங்கள் ஆனால் இயற்கையையும் மாற்றம் செய்யக்கூடிய உதவியாளர்கள் நீங்கள். பரிவாரத்தின் அழியாத அன்பின் இழையிலிருந்து இடையே நீங்கள் வெளியேற முடியாது. வெற்றி ரத்தினங்கள் அன்பின் இழையிலிருந்து இடையே வெளியேற முடியாது. எனவே, எந்த நேரத்திலும், எந்த விஷயத்திலும், எந்த இடத்திலும், எந்தவொரு சேவையிலும், கூடஇருப்பவரிடமிருந்தும் விலகி, எனது நிலையை மேம்படுத்திக் காட்ட வேண்டும் என்று இந்த சங்கல்பம் செய்யக் கூடாது. கூறுகிறீர்கள்தானே, இவரோடு என்னால் ஒத்துப்போக முடியாது, அவருடன் போகிறேன், இந்த இடத்தில் எந்த முன்னேற்றமும் இருக்காது, அந்த இடத்தில் இருக்கும், இந்த சேவையில் தடை உள்ளது, அந்த சேவையில் நன்றாக இருக்கும் என்று -இவை அனைத்தும் ஒதுக்கப்பட வேண்டிய விஷயங்கள். இந்த பழக்கம் ஒருமுறை உங்களுக்குள் புகுத்தப்பட்டால், இந்த பழக்கம் உங்களை எங்கும் தங்க அனுமதிக்காது, அது புத்தியை ஒருமுகப்படுத்த அனுமதிக்காது. ஏனெனில் புத்தி மாறப் பழகி விட்டது. இதுவும் பலவீனமாக எண்ணப்படும், முன்னேற்றமாக கணக்கிடப்படாது. எப்பொழுதும் உங்களுக்குள் நல்ல நம்பிக்கையை வைத்திருங்கள், நம்பிக்கையற்றவராக இருக்காதீர்கள். தந்தை ஒவ்வொரு குழந்தை மீதும் நல்ல நம்பிக்கை வைத்தார். எப்படி இருந்தாலும், கடைசியில் இருப்பவர் மீது கூட தந்தை ஒருபோதும் மனமுடையவில்லை. சதா நம்பிக்கை வைத்தார். எனவே, நீங்களும் தன்னிடமோ, மற்றவர்களிடமோ, சேவையிலோ நம்பிக்கையற்றவராக, மனமுடைபவராக இருக்கக் கூடாது. பெரிய மனம் உடையவராக இருங்கள், குறுகிய மனம் இல்லை, பரந்த உள்ளம்! எந்த பலவீனமான சம்ஸ்காரங்களையும் தாரணை செய்யாதீர்கள். மாயா உங்களை வெவ்வேறு வழிகளில் பலவீனப்படுத்த முயற்சிக்கிறது ஆனால் மாயாவைப் பற்றி முழு ஞானம் உள்ளதா அல்லது அரைகுறையா? மாயா பழைய ரூபத்தில் அல்ல, புதிய புதிய ரூபங்களில் வருகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள், ஏனென்றால் நீங்கள் அதை கண்டுபிடித்து விடுவீர்கள் என்பது அதற்கும் தெரியும். விஷயம் அதேதான் இருக்கும் ஆனால் புதிய உருவத்தை எடுத்து விடும். புரிந்ததா? நல்லது!

டீச்சர்களுக்கு மாயாவைப் பற்றி முழுமையாகத் தெரியுமா? வெறும் அறிவு அல்ல, முழு அறிவு இருக்கிறதா? தந்தையைத் தெரிந்து கொண்டு விட்டோம் என்று மட்டும் நினைக்காதீர்கள் ஆனால் மாயாவையும் அடையாளம் காண வேண்டும். நீங்கள் இப்போது பத்தனத்தில் கட்டுண்டு இருக்கிறீர்களா அல்லது கடினமாக உள்ளதா? இனிமையான பந்தனமாக இருக்கிறதா அல்லது கொஞ்சம் கடினமானத தோன்றுகிறதா? இப்படி நினைக்கிறீர்களா -இங்கோ சாக வேண்டியுள்ளது, தந்தையுடையவராகி விட்டோம், இருப்பினும் இதைச் செய்ய வேண்டும், இதைச் செய்ய வேண்டும், எவ்வளவு காலத்திற்குத்தான் இப்படியே செய்து கொண்டேயிருப்பது? முதலிலேயே தெரிந்திருந்தால், இங்கு வராமலேயே இருந்திருக்கலாம்! அன்பு இருக்கும் இடத்தில் சிரமம் இருக்காது! விட்டில்பூச்சிகூட விளக்கொளி மீது பலியாகி விடுகிறது. எனவே, சிரேஷ்ட ஆத்மாக்கள் நீங்கள் பரமாத்ம அன்பின் பின்னால் கஷ்டமாக உணர முடியுமா? விட்டில்பூச்சியே பலி ஆகும்போது உங்களால் செய்ய முடியாதது என்ன? எப்போது கஷ்டமாக அனுபவம் ஆகிறதோ அப்போது அன்பின் சதவிகிதத்தில் நிச்சயம் வித்தியாசம் இருக்கும், அதனால் சில நேரம் கஷ்டமாகத் தோன்றுகிறது. ஒருவேளை அது கஷ்டமாக இருந்தால் அது எப்போதும் கஷ்டமாகத்தானே இருக்க வேண்டும், ஏன் சில நேரங்களில் மட்டும் கஷ்டமாகத் தோன்றுகிறது? பரமாத்மாவிற்கும் உங்களுக்கும் இடையில் ஏதோ விஷயம் வந்து விடுவதால் கஷ்டமாகத் தெரிகிறது மற்றும் வித்தியாசமோ சதவீதத்தில் ஆகிறது. அதை நடுவில் இருந்து நீக்கி விட்டால் பின்னர் எளிதாகி விடும். பாப்தாதா சதா சொல்கிறார் -டீச்சர்கள் அதாவது, சதா தைரியமாக இருப்பவர்கள் மற்றும் மற்றவர்களுக்கு தைரியம் கொடுப்பதற்கு நிமித்தமானவர்கள் என. இல்லையென்றால் ஏன் டீச்சர் ஆனீர்கள்? டீச்சர் என்றால் மாணவர்களுக்கு நிமித்தமானவர். பலவீனமானவர்களுக்கு தைரியத்தைக் கொடுத்து, அவர்களை முன்னேறச் செய்வது. ஒரு வெற்றிகரமான டீச்சரின் ஆசிரியரின் முதல் அடையாளம் இதுதான் -அவர் ஒருபோதும் பலகீனமாக இருக்க மாட்டார். தைரியமாக இருப்பவர் நிச்சயமாக மற்றவர்களுக்கு தைரியத்தைக் கொடுப்பார். தனக்கே தைரியம் குறைவாக இருந்தால், மற்றவர்களுக்கும் கொடுக்க முடியாது. நல்லது!

நாலா புறமும் உள்ள தைரியசாலி குழந்தைகளுக்கு தந்தை உதவுவார் என்ற உரிமையை அனுபவம் செய்யக்கூடிய, சதா சுயராஜ்யத்தின் சக்திகளை ஒவ்வொரு நேரத்திற்கு ஏற்றவாறு உபயோகிக்கக்கூடிய, சதி தந்தை மற்றும் சர்வ ஆத்மாக்களுடைய குறைவில்லா அன்பு, சதா ஒவ்வொரு காரியத்திலும், சம்பந்தம் தொடர்பிலும் ஆஹா ஆஹா என்ற பாடலைப் பாடக்கூடிய, அத்தகைய சர்வ சக்திசாலி குழந்தைகளுக்குப் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

**இரட்டை வெளிநாட்டு குழுவினருடன் (சாரம்):**

சிரேஷ்ட ஆத்மாக்கள் உங்களுக்கு பாக்கியத்தைத் தரக்கூடியவர் சுயம் பாக்கிய விதாதா தந்தை ஆவார்.

இப்போது கேட்கின்ற சங்கல்பம் கூட முடிந்து விட்டது. ஞானி-ஆத்மா ஆகி விட்டீர்கள், பக்த-ஆத்மா இல்லை.

பாண்டவர்கள் என்றாலே வெற்றி!

குஷியின் ஊஞ்சலில் களைப்பு ஏற்படாது.

ஆன்மீக திருஷ்டி கிடைத்ததுமே சிருஷ்டியும் மாறியது. ஆன்மீக திருஷ்டி மூலம் தன்னையே பார்த்தீர்கள் -நான் யார் மற்றும் தந்தையைப் பார்த்தீர்கள், அவர் அதே தந்தைதான் என. இதில் சிருஷ்டி மாறியதுதானே. கனவும்கூட மாறியது, ஏனெனில் பிராமண வாழ்க்கை என்றாலே படைப்பே மாறியது, அதாவது தந்தைதான் என் உலகம் என்றாகியது.

பிராமண ஜென்மம் ஆனவுடனேயே பாப்தாதா எல்லோருக்கும் மிகப் பெரிய பொக்கிஷமான குஷியை அளித்துள்ளார். இது பிராமண ஜென்மத்தின் பரிசு! நல்லது.

**விடைபெறும் சமயம்:** பாப்தாதா எல்லா குழந்தைகளுக்கும் ஹோலி வாழ்த்துக்களை அளித்தார்! ஹோலியான குழந்தைகளுக்கு சதா ஹோலிதான். நீங்கள் எப்போதுமே ஞானத்தின் நிறத்தில் வர்ணம் பூசப்பட்டிருக்கிறீர்கள், எனவே எந்த சிறப்பு வர்ணங்களையும் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை. இதையோ அந்த மனிதர்கள் பூசிக் கொள்வதில்லைதானே. வெளிநாட்டில் பூசிக் கொள்வதில்லை. அது ஒரு பொழுதுபோக்கு. மற்றபடி எல்லா வர்ணத்தையும் பூசிக் கொண்ட 'மிக்கி மவுஸ்' (Micky Mouse) ஆக வேண்டாம். சதா

## 1990 அவ்யக்த முரளி

புனிஅன்னமாக இருங்கள், ஹோலியாக வாழ்பவர்கள் மற்றும் ஹோலியைக் கொண்டாடுபவர்கள். மற்றவர்களையும் ஹோலி ஆக்குவதற்கான வர்ணம் பூசுகிறீர்கள். அனைத்து குழந்தைகளுக்கும் ஹோலி வாழ்த்துக்களுடன் கூடவே ஊக்கம் உற்சாகம் நிறைந்த வாழ்க்கையில் பறப்பதற்கான வாழ்த்துக்கள்! நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋❋❋❋

# 13.03.1990 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கமயுகத்தில் ஆத்மாக்களுடன் பரமாத்மாவின் விசித்திர சந்திப்பு!

இன்று அனேக தடவைகள் சந்திக்கும், காணாமல் போய்க் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகள் மீண்டும் வந்து சந்தித்திருக்கிறார்கள். தந்தையும் அந்த அறிமுகத்தோடு குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் மேலும் குழந்தைகளும் அனேக தடவை சந்திக்கும் நினைவோடு சந்திக்கிறார்கள். இது ஆத்மா மற்றும் பரமாத்மா தந்தையின் விசித்திர சந்திப்பு முழு கல்பத்திலும் எந்த ஒரு ஆத்மாவும் அனேக தடவைகள் சந்தித்த பின்பு மீண்டும் சந்திக்கிறோம் என்ற நினைவோடு சந்திப்பது இல்லை. அந்த அந்த நேரங்களில் தர்மத்தந்தையினர் வந்திருந்தாலும் மற்றும் தன்னைப் பின்பற்றி நடப்பவர்களை மேலேயிருந்து கீழே கொண்டு வந்திருந்தார்கள் ஆனால் தர்மத்தந்தைகள் கூட. அனேக கல்பம் சந்தித்திருந்தவர்கள் மீண்டும் சந்திக்கிறார்கள் என்ற இந்த நினைவோடு சந்திப்பது இல்லை. இந்தத் தெளிவான நினைவோடு பரமாத்மாவைத் தவிர வேறு யாரும் ஆத்மாக்களுடன் சந்திக்க முடியாது. இந்தக் கல்பத்தில் முதல் தடவை சந்தித்தாலும் கூட, சந்தித்ததுமே பழைய நினைவு, பழைய அறிமுகம், ஆத்மாவில் சம்ஸ்கார ரூபத்தில் நிரப்பப்பட்டிருக்கிறது அல்லவா! அது வெளிப்பட்டு விடுகிறது. மேலும் மனதிலிருந்து இவர் அதே என்னுடைய தந்தை என்ற நினைவின் ஒலி தான் வருகிறது. நீங்கள் என்னுடையவர் என்று குழந்தைகள் கூறுகிறார்கள் மற்றும் நீங்கள் என்னுடையவர்கள் என்று தந்தை கூறுகிறார். என்னுடையவர் என்ற எண்ணம் உருவாகியது. அந்த விநாடியே அந்த சக்திசாலி நினைவின் மூலமாக எண்ணத்தின் மூலமாக புது வாழ்க்கை மற்றும் புது உலகம் கிடைத்து விட்டது? மேலும் என்னுடைய பாபா என்ற நினைவு சொரூபத்தில் நிரந்தரமாக நிலைத்து விட்டீர்கள். எப்படி நினைவு சொரூபமாக ஆனீர்களோ அந்த நினைவின் பிரதிபலனாக சக்தி நிறைந்தவர்களாக ஆகி விட்டீர்கள். சக்தி நிறைந்த சொரூபம் ஆகி

விட்டீர்கள் இல்லையா? பலகீனமாக சொரூபம் இல்லை அல்லவா? மேலும் யார் எவ்வளவு நினைவில் இருக்கிறார்களோ அவ்வளவு சக்திகளின் அதிகாரம் தானாகவே பிராப்தி ஆகிறது எங்கு நினைவு இருக்கிறதோ அங்கு சக்தி இருக்கவே இருக்கிறது. கொஞ்சம் நினைவை மறந்தால் கூட அது வீணானது தான் வீணானது எண்ணமாக இருக்கலாம், வார்த்தைகளாக இருக்கலாம் மற்றும் செயல்களாகவும் இருக்கலாம். எனவே ஒவ்வொரு குழந்தையும் நினைவு சொரூபத்திலிருந்து சக்தி நிறைந்தவர்கள் ஆகட்டும் என்ற கண்ணோட்டத்தோடுதான் பாப்தாதா அனைத்துக் குழந்தைகளையும் பார்க்கிறார். இன்று வரை உங்களின் நினைவு துதிப் பாடலை பக்தர்கள் மூலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்னுடைய தந்தை என்று உங்களுடைய நினைவில் நீங்கள் கொண்டு வந்தீர்கள் என்றால் பக்த ஆத்மாக்கள் கூட என்னுடைய இஷ்ட தேவதை மற்றும் தேவி என்று உங்களை நினைவு செய்கிறார்கள். எவ்வளவு நீங்கள் மிகவும் அன்போடு மனதால் தந்தையை நினைவு செய்கிறீர்களோ அவ்வளவே பக்த ஆத்மாக்கள், இஷ்ட ஆத்மாக்களாகிய உங்களை மனதால் மிகவும் அன்போடு நினைவு செய்கிறார்கள். பிராமண ஆத்மாக்களாகிய உங்களில் கூட சிலர் மனதின் அன்பு மற்றும் சம்பந்தத்தோடு நினைவு செய்கிறார்கள் மற்றும் வேறு சிலர் புத்தி மூலமாக ஞானத்தின் ஆதாரத்தில் சம்பந்தத்தை அனுபவம் செய்வதற்கு அடிக்கடி முயற்சி செய்கிறார்கள். எங்கு மனதின் அன்பு மற்றும் சம்பந்தம் மிகவும் அன்பானதாக அதாவது மிகவும் நெருக்கமாக இருக்கிறதோ அங்கு நினைவை மறப்பது கடினமாகும். எங்கு ஞானத்தின் ஆதாரத்தில் மட்டும் சம்பந்தம் இருக்கிறதோ. அங்கு மனதின் அன்பைப் பிரிக்க முடியாது, எங்கு அன்பு இல்லையோ அங்கு நினைவு சில நேரம் சுலபமாகவும், சிலநேரம் கடினமாகவும் இருக்கிறது. எப்படி உடலில் ஒவ்வொரு நரம்பிலும் இரத்தம் நிரம்பி யிருக்கிறது. அதே போல் ஆத்மாவில் ஒவ்வொரு நேரமும் நினைவு நிரம்பியிருக்கிறது. இதைத்தான் மனதின் அன்பு நிறைந்த நிரந்தர நினைவு என்று கூறுவது எப்படி பக்த ஆத்மாக்கள் தந்தைக்காகக் கூறுகிறார்கள் இல்லையா எங்கு பார்த்தாலும் நீயே நீதான் என்று. அதே போல் தந்தையின் அன்பிற்குரிய சமமான ஆத்மாக்களை யார் பார்த்தாலும் இவர்களுடைய பார்வையில், பேச்சில், காரியத்தில் பரமாத்மா தந்தை தான் அனுபவம் ஆகிறார் என்று கூறட்டும். இதைத் தான் அன்பாக

இருப்பவர்களிலிருந்து தந்தைக்குச் சமமாக ஆகுபவர்கள் என்று கூறுவது அப்படி அனைவரும் நினைவு சொரூடமாகத்தான் இருக்கிறீர்கள், அனைவருக்கும் சம்பந்தமும் இருக்கிறது. அதிகாரமும் அனைவருக்கும் இருக்கிறது. ஏனென்றால் அனைவரின் முழு அதிகாரத்தின் சம்பந்தம் தந்தை மற்றும் குழந்தையினுடையது. அனைவரும் என்னுடைய தந்தை என்று கூறுகிறார்கள். என்னுடைய சித்தப்பா, என்னுடைய மாமா என்று யாரும் கூறுவதில்லை. அதிகாரத்தின் சம்பந்தத்தின் காரணமாக அனைத்துப் பிராப்திகளின் ஆஸ்திக்கு அதிகாரி ஆவீர்கள். 50-வருடங்களாக இருப்பவர்களானாலும், 6-மாதங்கள் ஆனவர்களானாலும் என்னுடையவர் என்று கூறியதால் அதிகாரியாக ஆகியே விட்டார்கள் ஆனால் என்ன வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. தந்தை அனைவருக்கும் ஒரே மாதிரியாகத் தான் கொடுக்கிறார். ஏனென்றால் அளவில்லா ஆஸ்தி கொடுக்கும் வள்ளலாவார். இரண்டரை இலட்சம் பேர்கள் என்ன, ஆனால் அனைத்து ஆத்மாக்களும் அதிகாரி ஆனாலும் அதை விட அதிகமாகத் தந்தையிடம் இருக்கிறது. எனவே குறைவாக ஏன் கொடுக்க வேண்டும்? அப்படி வள்ளல் அனைவருக்கும் ஒரே மாதிரியாகத் தான் கொடுக்கிறார் ஆனால் எடுப்பவர்களிடம் வித்தியாசம் இருக்கிறது. சிலர் பிராப்திகளின் ஆஸ்தியை மற்றும் பொக்கிஷங்களைத் தேவையான நேரத்தில் தனக்காகவும் மற்றும் சேவைக்காகவும் காரியத்தில் ஈடுபடுத்தி அதனுடைய லாபத்தை அனுபவம் செய்கிறார்கள். எனவே தந்தையின் பொக்கிஷத்தையும் தன்னுடைய பொக்கிஷமாக்கி விடுகிறார்கள். அதாவது தன்னுள் நிரப்பி விடுகிறார்கள். எனவே ஒவ்வொரு பொக்கிஷத்தை உபயோகிப்பதின் அனுபவத்தின் மூலம் குஷி மற்றும் போதையில் இருக்கிறார்கள். சுத்தமான போதை, தலைகீழானது இல்லை மற்றும் வேறு சிலர், பொக்கிஷம் கிடைத்திருக்கிறது என்ற குஷியில் இருக்கிறார்கள், என்னுடையது என்ற உணர்வும் இருக்கிறது ஆனால் என்னுடையது என்பது மட்டும் தான் அதைக் காரியத்தில் ஈடுபடுத்துவது இல்லை. ஏதோ ஒரு விலை மதிக்க முடியாத பொருளை தன்னிடம் இருப்பில் சேர்த்து வைத்திருக்கிறார், ஆனால் சேர்த்து மட்டும் வைப்பது மற்றும் உபயோகிப்பதில் வித்தியாசம் இருக்கிறது. எவ்வளவு காரியத்தில் ஈடுபடுத்துவீர்களோ அவ்வளவு சக்தி இன்னும் அதிகரிக்கிறது. அதை எப்பொழுதும் செய்வதில்லை. எப்போதாவது செய்கிறார்கள். எனவே

எப்பொழுதும் செய்பவர் களுக்கும் எப்போதாவது செய்பவர்களுக்கும் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. காரியத்தில் ஈடுபடுத்துவதற்கான விதியை உபயோகிப்பது இல்லை. கொடுப்பவர் வேறுபாடு செய்வதில்லை ஆனால் எடுப்பவரில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. நீங்கள் அனைவரும் யார்? காரியத்தில் ஈடுபடுத்துபவர்களா அல்லது சேமிப்பைப் பார்த்து குஷி அடை பவர்களா? முதல் எண்ணில் இருப்பவர்களா? அல்லது இரண்டாவது எண்ணைச் சேர்ந்தவர்களா?

அனைவரும் நம்பர் ஒன்னில் இருக்கிறார்கள் என்று பாப்தாதாவிற்கு குஷியிருக்கிறது, ஆனால் இந்த நேரம் மட்டும் தான் நம்பர் ஒன்னா? குழந்தைகள் வாயில் குலாப் ஜாமூன் இருக்கட்டும் என்று பாப்தாதா எப்பொழுதும் கூறுகிறார். என்ன சொன்னீர்களோ அதைச் செய்தீர்கள் என்றால் எப்பொழுதும் வாயில் குலாப் ஜாமூன் இருக்கிறது. உலகத்தினர் வாயில் குலாப் (ரோஜா) என்று கூறுவார்கள் ஆனால் ரோஜாவினால் வாய் இனிக்காது. எனவே குலாப் ஜாமூன் வாயிலிருந்தால் இந்த மாதிரி எப்பொழுதும் சிரித்துக் கொண்டே இருப்பீர்கள். நல்லது.

அனேகப் புதுப்புது குழந்தைகள் மீண்டும் சந்திப்பதற்கு வந்து சேர்ந்து விட்டார்கள். யார் யார் இந்தக் கல்பத்தில் மீண்டும் சந்திப்பைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கு விசேஷமாக பாப்தாதா, எப்பொழுதும் தன் தலைமேல் தந்தையின் கையை அனுபவம் செய்துகொண்டே இருங்கள் என்ற அன்பின் வரதானம் கொடுக்கிறார். யாருடைய தலையில் தந்தையின் கை இருக்கிறதோ அவர்கள் எப்பொழுதும் இந்த வரதானத்தின் அனுபவம் மூலமாக அனைத்து விஷயங்களிலும் பாதுகாப்பாக இருக்கிறார். இந்த வரதானத்தின் கை ஒவ்வொரு விஷயத்திலும் உங்களுடைய பாதுகாப்பிற்கான சாதனம் அனைத்தையும் விட மிகப்பெரிய பாதுகாப்பு பொறுப்பில் இருப்பவர்களாக ஆவதில் அனைத்து டீச்சர்களின் தைரியத்தைப் பார்த்து பாப்தாதா குஷியடைகிறார். தைரியம் வைத்து பொறுப்பில் இருப்பவர்களாக ஆகியே விடுகிறீர்கள் இல்லையா! டீச்சர்கள் பொறுப்பில் இருப்பவர்கள் ஆவது என்றால் எல்லைக்கு அப்பாற்பட்ட மேடையில் ஹீரோவாக நடிப்பது என்பதாகும் எப்படி எல்லைக்குட்பட்ட மேடையில் ஹீரோ நடிகர் ஆத்மாவின் பக்கம்

அனைவரின் விசேஷ கவனம் செல்கிறதோ அதே போல் எந்த ஆத்மாக்கள் பொறுப்பில் இருப்பவர் ஆகிறீர்களோ விசேஷமாக அவர்களும் மற்றும் பொதுவாக அனைத்து ஆத்மாக்களும் பொறுப்பில் இருக்கும் டீச்சர்களாகிய உங்களை அதே கண்ணோட்டத்தோடு பார்க்கிறார்கள். அனைவரின் விசேஷ கவனம் இருக்கிறது இல்லையா? எனவே டீச்சர்களுக்கு தன் மேலேயும் விசேஷ கவனம் வைக்க வேண்டியதாக இருக்கிறது. ஏனென்றால் சேவையில் ஹீரோ கதாபாத்திரம் ஆவது என்றால் ஹீரோ ஆவது. ஆசிர்வாதங்களும் டீச்சர்களுக்கு அதிகமாகக் கிடைக்கிறது. எவ்வளவு ஆசீர்வாதம் கிடைக்கிறதோ அவ்வளவு தன் மேல் கவனம் வைப்பது மிகவும் அவசியம் இது கூட டிராமாப்படி விசேஷ பாக்கியம் தான். எனவே கிடைத்த இந்த பாக்கியத்தை அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள். நூறிலிருந்து ஆயிரம், ஆயிரத்திலிருந்து இலட்சம், இலட்சத்திலிருந்து கோடி, கோடியிலிருந்து பல கோடி, அதிலிருந்து பல மடங்குகள், அப்படி எப்பொழுதும் இந்த பாக்கியத்தை அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள். இதைத்தான் தகுதியான மரியாதைக்குரிய ஆசிரியர் என்று கூறுவது பொறுப்பில் இருக்கும் குழந்தைகளைப் பாப்தாதா கண்டிப்பாக நினைவு செய்கிறார் மற்றும் எப்பொழுதும் அமிர்தவேளையில் ஆஹா குழந்தை! ஆஹா என்ற இந்த ஆசீர்வாதங்கள் கொடுக்கிறார். சேவாதாரிகள் கேட்டீர்கள்? டீச்சர்கள் என்றாலே நம்பர் ஒன் சேவாதாரி நல்லது.

நாலா புறமுமுள்ள அனேக கல்பங்கள் வித்தியாசமான மற்றும் மனதிற்குப் பிடித்த சந்திப்பை ஏற்படுத்தும், எப்பொழுதும் கிடைத்திருக்கும் ஆஸ்தியின் பொக்கிஷங்களை ஒவ்வொரு நேரத்திற்கு ஏற்றது போல் காரியத்தில் ஈடுபடுத்தும், எப்பொழுதும் மனதால் மிகவும் அன்பானவராகவும் தந்தைக்குச் சமமாகி சுயம் மூலமாக தந்தையை அனுபவம் செய்விக்கும், எப்பொழுதும் நினைவு சொரூபத்திலிருந்து பக்தர்கள் மூலமாக சக்தி சொரூபம் ஆகும். எப்பொழுதும் கிடைத்த பாக்கியத்தை விநியோகிக்கும் அதாவது அதிகரிக்கும் அந்த மாதிரி மாஸ்டர் வள்ளல் சக்தி நிறைந்த குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

**வெளிநாட்டுச் சகோதர சகோதரிகளை குழுக் குழுவாகச் சந்திப்பு:**

அனைவரும் தன்னை மிக மிகப் பாக்கியம் நிறைந்தவர்களாக நினைக்கிறீர்களா? ஏனென்றால் இந்த மாதிரி உயர்ந்த ஆத்மாவாக ஆவேன் என்று கனவில் கூட நினைக்கவில்லை ஆனால் இப்பொழுது கண்ணெதிரிலேயே ஆகி விட்டேன். பாருங்கள் பாப்தாதா எங்கெங்கிருந்தெல்லாம் இரத்தினங்களைத் தேர்ந்தெடுத்து, இரத்தினங்களின் மாலை செய்திருக்கிறார். பிராமணக் குடும்பத்தின் மாலையில் உருட்ட ஆரம்பித்து விட்டீர்கள். எப்போதாவது மாலையிலிருந்து வெளியே சென்று விடுவது இல்லையே? எந்த ஒரு மாலையின் சிறப்பும் அழகும் என்னவாக இருக்கிறது? மணி மணிகளோடு சேர்ந்து இருக்கும். ஒரு வேளை இடையில் நூல் தென்பட்டால், மணி மணியோடு சேர்ந்திருக்காவிட்டால் அழகாக இருக்காது. அப்படி நீங்கள் பிராமணக் குடும்பத்தின் மாலையில் இருக்கிறீர்கள். அதாவது அனைத்து பிராமண ஆத்மாக்களின் நெருக்கத்தில் வந்து விட்டீர்கள். எப்படி தந்தையின் அருகில் இருக்கிறீர்களோ அதே போல் தந்தையுடன் கூடவே குடும்பத்தின் அருகிலும் இருக்கிறீர்கள். ஏனென்றால் இந்தக் குடும்பம் கூட இந்த அறிமுகத்தினால் இப்பொழுது கிடைக்கிறது. குடும்பத்தில் மகிழ்ச்சி வருகிறது இல்லையா? தந்தையின் நினைவில் மட்டும் தான் மகிழ்ச்சி, சந்தோஷம் வருகிறது என்று அப்படி இல்லை. யோகா குடும்பத்தினரோடு இருக்கக்கூடாது ஆனால் ஒருவர் இன்னொருவரின் நெருக்கத்தில் இருக்க வேண்டும். இவ்வளவு பெரிய இரண்டரை இலட்சம் உள்ள குடும்பம் ஏதாவது இருக்குமா? (இப்பொழுதோ எட்டு இலட்சத்தை விட அதிகமான பெரிய குடும்பம்) என்ன குடும்பம் பிடித்திருக்கிறதா? இல்லை தந்தை மட்டும் தான் பிடித்திருக்கிறதா? யாருக்கு பாபா மட்டும் பிடித்திருக்கிறதோ அவர் குடும்பத்தில் வர முடியாது. பாப்தாதா குடும்பத்தைப் பார்த்து எப்பொழுதும் மகிழ்ச்சி அடைகிறார் மற்றும் எப்பொழுதும் ஒருவர் இன்னொருவரின் விசேஷத்தைப் பார்த்து மகிழ்ச்சியோடு இருக்கிறார். ஒவ்வொரு பிராமண ஆத்மாவிற்காகவும் ஆஹா! பிராமண ஆத்மா ஆஹா! என்ற எண்ணம் தான் இருக்கிறது பாருங்கள் தந்தைக்கு குழந்தைகள் மேல் அவ்வளவு அன்பு இருக்கிறது அதனால் தான் வருகிறார் இல்லையா? இல்லையென்றால் மேலே உட்கார்ந்து கொண்டே சந்தித்து விடலாமே மேலே உட்கார்ந்து கொண்டே சந்திப்பது இல்லை. நீங்கள் வெளிநாட்டிலிருந்து வருகிறீர்கள் என்றால் தந்தையும்

# 1990 அவ்யக்த முரளி

வெளிநாட்டிலிருந்து தான் வருகிறார். மிகவும் தொலைவான தேசத்திலிருந்து வருகிறார், ஆனால் வருகிறார் ஒரு விநாடியில் நீங்கள் அனைவரும் கூட ஒரு செகண்டில் பறக்கும் கலையை அனுபவம் செய்கிறீர்களா? விநாடியில் மேலே செல்ல முடியுமா? நினைத்தவுடன் மேலே செல்ல முடியுமா? நினைத்தவுடன் மேலே சென்று விடுகிறீர்கள் அந்த மாதிரி டபுள்லைட்டாக இருக்கிறீர்களா? பரந்தாமம் என்று சொன்னவுடன் அங்கு சென்றடைந்து விடுகிறீர்கள், அந்த மாதிரி பயிற்சி இருக்கிறதா? எங்காவது மாட்டிக் கொள்வது இல்லையே? எப்போதாவது ஏதாவது மேகம் தொந்தரவு செய்வது இல்லையே கவனமாகவும் இருக்கிறீர்கள் மற்றும் தெளிவாகவும் இருக்கிறீர்கள் அப்படித்தானே?

வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு வந்த உடனேயே சென்டர் கிடைத்து விடுகிறது. வெகு விரைவில் டீச்சர் ஆகி விடுகிறார்கள், எனவே சேவைக்கும் ஆசீர்வாதம் கிடைத்து விடுகிறது. ஆசீர்வாதங்கள் கிடைப்பதின் விசேஷ லிப்ட் கிடைக்கிறது. கூடவே வந்தவுடன் அவ்வளவு பிஸியாக விடுகிறார்கள். மற்ற விஷயங்களுக்கு நேரமே கிடைப்பதில்லை. எனவே பிஸியாக இருப்பதினால் பயப்பட வேண்டாம். இது நல்ல அடையாளம். சிலர் கூறுகிறார்கள் இல்லையா? லௌகீக காரியங்களும் செய்ய வேண்டும், பின்பு அலௌகீக சேவையும் செய்ய வேண்டும் மற்றும் தன்னுடைய சேவையும் செய்ய வேண்டும். இப்படி மிகவும் பிஸியாக இருக்க வேண்டியதிருக்கிறது ஆனால் இப்படி பிஸியாக இருப்பது என்றால் மாயாஜீத் ஆவது ஆகும். இது சரியாக இருக்கிறதா? இல்லை லௌகீக வேலை செய்வது கடினமாக இருக்கிறதா? லௌகீக வேலையில் வரும் சம்பளத்தை எதற்கு செலவு செய்கிறீர்கள்? எப்படி நேரத்தைக் கொடுக்கிறீர்களோ அதே போல் பணத்தையும் ஈடுபடுத்துகிறீர்கள். அப்படி உடல், பொருள் மூன்றும் ஈடுபட்டு விடுகிறது. வெற்றிகரமாக உபயோகமாகி விடுகிறது. எனவே களைப்படையக் கூடாது. சென்டர் திறக்கிறீர்கள் என்றால் செய்தி கேட்டவுடன் எத்தனை ஆத்மாக்களுக்கு நன்மை ஏற்பட்டு விடுகிறது. எனவே மனம் மற்றும் செல்வத்திற்கு தொடர்பு இருக்கிறது. எங்கு செல்வம் இருக்கிறதோ அங்கு மனம் இருக்கும். எங்கு மனம் இருக்கிறதோ அங்கு செல்வம் இருக்கும். வெளிநாட்டவர்கள் அனைத்து விதங்களிலும் பயனுள்ளதாக ஆக்குவதில் பிஸியாக இருப்பதைப்

பார்த்து பாப்தாதா குஷியடைகிறார். அனைவரும் கோல்டன் சான்ஸ்லர்கள் எப்பொழுதும் வெற்றிமூர்த்தி ஆவேன் மற்றும் வெற்றி என்னுடைய கழுத்தின் மாலையாகும் என்பதை நினைவு வைத்துக் கொள்ளுங்கள். எந்த ஒரு காரியம் செய்தாலும் வெற்றி என்னுடைய கழுத்தின் மாலை என்று முதலில் நினையுங்கள். எப்படி நிச்சயம் இருக்கிறதோ அப்படி பிரத்யக்ஷமாகப் பலன் கிடைக்கும். நல்லது.

2) இந்த இனிமையான அமைதி மிகவும் பிடித்ததாக இருக்கிறது இல்லையா? ஏனென்றால் ஆத்மாவின் ஒரிஜினல் சொரூபமே சுவீட் சைலன்ஸ் தான். அப்படி எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது இந்த இனிமையான அமைதி நிலையை அனுபவம் செய்ய முடியுமா? ஏனென்றால் ஆத்மா இப்பொழுது இந்த பந்தனங்களிலிருந்து விடுபட்டு விட்டது. எனவே எப்பொழுது விரும்பினாலும் அப்பொழுது தன்னுடைய ஒரிஜினல் நிலையில் நிலைத்து விடட்டும். என்ன பந்தனங்களிலிருந்து விடுபட்டு விட்டீர்களா? இல்லை ஆக வேண்டுமா? இந்ததடவை மதுபன்னிலிருந்து செல்லும் பொழுது இரண்டு வார்த்தைகளை விட்டுவிட்டுச் செல்லுங்கள் -சம்திங் சம் டைம். இது விருப்பம் தானே? அனைவரும் விட்டு விடுவீர்களா? தைரியம் வைப்பதினால் உதவி கிடைத்து விடும் ஏனென்றால் 63-ஜென்மங்கள் அனேக பந்தனங்களில் இருந்தோம் மற்றும் சுதந்திரம் ஆவதற்காக இந்த ஒரு ஜென்மம் தான், இதன் பலனாகத் தான் அனேக ஜென்மங்கள் ஜீவன் முக்தியை அடைகிறோம். எனவே அடித்தளம் இங்கே போட வேண்டும். எப்பொழுது அடித்தளம் உறுதியாக இருக்கிறதோ அப்பொழுது தான் 21-ஜென்மங்கள் வரை வரும். எவ்வளவு தன் மேல் நிச்சயம் செய்வீர்களோ அவ்வளவே போதை இருக்கும். தந்தை மேலும் நிச்சயம், தன் மேலும் நிச்சயம் மற்றும் டிராமா மேலும் நிச்சயம். மூன்று நிச்சயத்திலும் தேர்ச்சி பெற வேண்டும். நல்லது.

ஒவ்வொரு இரத்தினத்திற்கும் அதன் அதன் விசேஷம் இருக்கிறது. பாப்தாதா அனைவரின் விசேஷத்தையும் தெரிந்திருக்கிறார். இப்பொழுது வரும் நாட்களில் உங்களுடைய விசேஷத்தை இன்னும் காரியத்தில் ஈடுபடுத்தினீர்கள் என்றால் விசேஷம் அதிகரிக்கும் உலகில் செலவழித்தால் பணம் குறையும் ஆனால் இங்கு எவ்வளவு உபயோகிப் பீர்களோ, செலவழிப்பீர்களோ அவ்வளவு அதிகரிக்கும்

அனைவரும் அனுபவிகள் தானே. நான் விசேஷ ஆத்மா மற்றும் விசேஷத்தைக் காரியத்தில் ஈடுபடுத்தி இன்னும் அதிகரிப்பேன் என்ற இந்த வருடத்திற்கான இதே வரதானத்தை நினைவு வைத்துக் கொள்ளுங்கள் இங்கு எப்படி பக்கத்தில் அமருவது நன்றாக இருக்கிறது அப்படி அங்கும் எப்பொழுதும் பக்கத்தில் இருங்கள். பாப்தாதா தன்னுடைய ஒவ்வொரு குழந்தையையும் யோகியாகவும் இருக்கிறார் யோக்யமாகவும் (தகுதியானவர்) இருக்கிறார் என்ற உயர்ந்த பார்வையில் பார்க்கிறார். நல்லது.

வரதானம்: சகித்துக் கொள்ளும் சக்தியின் மூலமாக மற்றவர்களின் சம்ஸ்காரங்களை மாற்றம் செய்யக்கூடிய உறுதியான எண்ணம் உடையவர் ஆகுக!

எப்படி பிரம்மாபாபா ஞானி மற்றும் அஞ்ஞானி ஆத்மாக்கள் மூலமாகக் கிடைத்த அவமானங்களை சகித்துக் கொண்டார், அவர்களை மாற்றினார். அதே போல் தந்தையைப் பின்பற்றி நடங்கள். இதற்காகத் தன்னுடைய எண்ணங்களில் உறுதித்தன்மையை மட்டும் கொண்டு வாருங்கள். எதுவரை இப்படி நடந்து கொண்டே இருக்கும் என்று மட்டும் நினைக்காதீர்கள். முதலில் எப்படி நடக்கும் எதுவரை சகித்துக் கொள்வது என்ற உணர்வுகள் வரும் ஆனால் ஒருவேளை உங்களைப் பற்றி யாராவது ஏதாவது சொன்னாலும் கூட அமைதியாக இருங்கள். சகித்துக் கொண்டீர்கள் என்றால் அவரும் மாறி விடுவார். மனமுடைந்தவராக மட்டும் ஆகாதீர்கள்.

சுலோகன்: சங்கமயுகத்தில் சகித்துக் கொள்வது, பணிந்து போவது இது தான் மிகப் பெரிய மகான் தன்மை!

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## 19.03.1990 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பறக்கும் கலைக்கான ஆதாரம் ஊக்கம் உற்சாகத்தின் சிறகுகள்!

இன்று எல்லா குழந்தைகளுடைய சினேக சம்பன்ன, மிலன் பாவனை மற்றும் சம்பூர்ணம் ஆவதற்கான சிரேஷ்ட விருப்பங்களின் சுப ஊக்கம் உற்சாகத்தினுடைய அதிர்வலைகளைப் பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு குழந்தைக்குள்ளும், அதிலும் இந்த கல்பத்தில் முதல் முறையாக சந்திக்கும் குழந்தைகளின் உற்சாகம் மற்றும் இந்த கல்பத்தில் பல முறை சந்திக்கும் குழந்தைகளின் உற்சாகமும் அவரவர்களுடையது. நீங்கள் உங்கள் மொழியில் கூறுகிறீர்கள் புதிய குழந்தைகள் மற்றும் பழைய குழந்தைகள் என ஆனால் அனைவருமே மிகப் பழமையானவர்களே. ஏனென்றால், தந்தையின் பக்கம், பிராமண பரிவாரத்தின் பக்கம், பழைய அடையாளம்தான் உங்களை இங்கு கொண்டு வந்துள்ளது. இது புதியது மற்றும் பழையது என்பது அடையாளத்திற்காக மட்டுமே கூறப்படுகிறது. எனவே, புதிய குழந்தைகளின் ஊக்கம் உற்சாகம்தான் குறுகிய காலத்தில், முன்னால் பறந்து, தந்தையைப் போல ஆக்கிக் காட்டும். பழைய குழந்தைகளின் சிரேஷ்ட எண்ணம் என்னவென்றால் பாப்தாதாவிடம் இருந்து பெற்ற பாலனைக்கும் பொக்கிஷத்திற்கும் கைம்மாறாக அதை தந்தைக்கு முன்பாக சதா வைத்துக் கொண்டே இருப்போம் என்பதே.

இருவருடைய ஊக்கம் உற்சாகமும் சிரேஷ்டமானது மற்றும் இதே ஊக்கம் உற்சாகம் சிறகுகளாகி பறக்கும் கலையின் பக்கம் எடுத்துச் சென்று கொண்டுள்ளது. பறக்கும் கலையின் சிறகுகள் ஞானமும் யோகமும் உள்ளது ஆனால் எல்லா தினசரி நடவடிக்கைகளில் எல்லா நேரமும், ஒவ்வொரு செயலிலும், பிரத்யக்ஷ ரூபத்தில் இருப்பதுதான் பறக்கும் கலைக்கான ஆதாரம். வேலை எதுவாக இருந்தாலும் -சுத்தம் செய்வது, பாத்திரங்களைக் கழுவுதல், சாதாரண வேலை -ஆனால்

அதில் ஊக்கமும் உற்சாகமும் இயற்கையாகவும் நிரந்தரமானதாகவும் இருக்க வேண்டும். நீங்கள் படிக்கும்போதோ, படிப்பிக்கும்போதோ அல்லது நினைவில் அமரும்போதோ, அமர வைக்கும்போதோ அல்லது ஆன்மீக சேவையில் பிஸியாக இருக்கிறீர்கள் எனும்போது மட்டுமே ஊக்கம் உற்சாகத்தில் இருப்பது மற்றும் சாதாரண வேலையில் ஸ்திதியும் சாதாரணமாக இருப்பது, ஊக்கம் உற்சாகமும் சாதாரணமாக இருப்பது எனக் கூறாதீர்கள் -இது பறக்கும் கலையின் அடையாளம் அல்ல. பறக்கும் கலையிலிருக்கும் சிரேஷ்ட ஆத்மாவின் ஊக்கம் உற்சாகத்தின் சிறகுகள் சதா பறந்து கொண்டே இருக்கும். எனவே பாப்தாதா அனைத்து குழந்தைகளின் ஊக்கம் உற்சாகத்தையும் பார்க்கின்றார். ஒவ்வொருவருக்கும் சிறகுகள் உள்ளன ஆனால் சில நேரங்களில் அவர்கள் ஊக்கம் உற்சாகத்தில் பறந்து பறந்தே சோர்வடைகிறார்கள். ஏதாவது காரணங்கள் வருகின்றன, அதாவது தடைகள் வருகின்றன, சில சமயங்களில் அன்பால் கடந்து விடுகின்றனர் ஆனால் சில நேரங்களில் பயந்து விடுகின்றனர். அவரை நீங்கள் குழப்பமடைகிறார் என்கிறீர்கள். அதனால் அவர்கள் எளிதில் கடக்காததற்கான காரணம் சோர்வடைகிறார்கள், ஆனால் கொஞ்சம்கொஞ்சம் சோர்வடைகிறார்கள், இருப்பினும் உயர்ந்த லக்ஷியம் உள்ளது, குறிக்கோளும் இனிமையாகத் தெரிகிறது, அதனால் பறக்கத் தொடங்குகிறார்கள். உயர்ந்த லக்ஷியம், பிடித்தமான இலக்கு மற்றும் தந்தையின் அன்பின் அனுபவம் உங்களை சோர்வடைவதிலிருந்து கீழான நிலையில் இருக்க விடுவதில்லை. எனவே மீண்டும் பறக்கத் தொடங்குகிறீர்கள். எனவே, பாப்தாதா குழந்தைகளுடைய இந்த விளையாட்டை காட்டிக் கொண்டிருக்கின்றார். ஆனாலும், தந்தையின் அன்பு நிற்க விடுவதில்லை. மேலும் அன்பில் பெரும்பான்மையோர் 'பாஸ்' ஆகி விட்டனர், எனவே தடை எவ்வளவுதான் தடுக்க முயற்சித்தாலும், தடுத்துக் கொண்டிருந்தாலும் கூட! சில நேரங்களில் இது மிகவும் கடினம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள், இதை விட எப்படி இருந்தோமோ அப்படியே ஆகி விடலாமே ஆனால் விரும்பினாலும் கூட துரித வாழ்க்கையில் செல்வது மகிழ்ச்சி தருவதாக இருக்காது. ஏனென்றால் முதலில் இந்த பரமாத்ம அன்பு மற்றும் தேகதாரிகளின் அன்பு இரண்டிற்குமுள்ள வேறுபாடு முன்னால் இருந்தது என்றால் பறக்கும்போது எப்போது நிற்கும் கலைக்கு வருகிறீர்களோ, அப்போது

இரண்டு பாதைகளின் நடுவில் இருந்தபடியே யோசிக்கிறீர்கள் -இங்கே செல்வதா அல்லது அங்கே செல்வதா என. எங்கு போவது? ஆனால் பரமாத்ம அன்பினால் குழப்பமடைவது தடுக்கப்பட்டு, ஊக்கம் உற்சாகத்தின் சிறகுகள் கிடைக்கின்றது. எனவே அதைப் பற்றி நினைத்தவுடனே நிற்கும் கலையிலிருந்து பறக்கும் கலையில் பறந்து செல்கின்றனர். விஷயங்கள் மிகவும் சிறியவைதான் ஆனால் அந்த நேரத்தில் பலவீனமாக இருப்பதால், அவை பெரியதாகத் தெரிகிறது. உடலில் பலவீனம் உள்ள ஒருவரால் ஒரு டம்ளர் தண்ணீரை எடுத்துக் கொள்வது கூட கடினமாக இருப்பதைப் போல மற்றும் தைரியமாக இருப்பவருக்கு இரண்டு வாளிகள் தூக்குவதும் விளையாட்டாகத் தெரியும். சிறிய விஷயங்களைப் பெரிதாக அனுபவம் செய்கிறீர்கள் எனவே, ஊக்கம் உற்சாகத்தின் சிறகுகள் தொடர்ந்து பறந்து கொண்டே இருக்கிறதா. தினமும் அமிர்தவேளையில் உங்கள் முன் முழு நாளும் எந்த நினைவின் மூலம் ஊக்கம் உற்சாகத்துடன் இருப்பது என்ற விதவிதமான ஊக்கம் உற்சாகத்தின் கருத்துகளை வெளிக் கொணருங்கள். ஒரே கருத்து, நான் ஜோதிபிந்து, தந்தையும் ஜோதிபிந்து, புள்ளியாக இருக்கிறார், நான் வீட்டிற்கு செல்ல வேண்டும், பின்னர் ராஜ்யத்திற்கு திரும்ப வேண்டும் -இந்த ஒரே விஷயம் சில நேரங்களில் குழந்தைகளை சலிப்படையச் செய்கிறது. பின்னர் புதிதாக ஏதாவது தேவை என்று நினைக்கிறீர்கள் ஆனால் ஒவ்வொரு நாள் முரளியிலும் ஊக்கம் உற்சாகத்திற்கான வெவ்வேறு கருத்துகள் உள்ளன. அந்த ஊக்கம் உற்சாகத்திற்கான கருத்துகளை குறிப்பெடுங்கள். பல்வேறானதை விரும்புவது என்பது மனித ஆத்மாவின் இயல்பு; ஆதலால் ஞானக் கருத்துகளை மனப்பாடம் செய்யுங்கள் அல்லது ஆன்மீக உரையாடல் செய்யுங்கள். முழு நாளும் புள்ளியை நினைவு செய்தால் சலிப்படைந்து விடுவீர்கள்; ஆனால் தந்தையும்கூட புள்ளி, நீங்களும்கூட புள்ளி, சங்கம யுகத்தில் ஹீரோ (hero) பார்ட்தாரிகள், பூஜ்யத்துடன் (zero) கூடவே நீங்கள் ஒரு ஹீரோவாகவும் இருக்கிறீர்கள். பூஜ்யமாக மட்டுமில்லை. சங்கம யுகத்தில் ஹீரோவாக இருப்பதால், நீங்கள் நாள் முழுவதும் பல விதமான பாகங்களை நடிக்கிறீர்கள். பூஜ்யம் நான், முழு கல்பத்திலும் என்ன என்ன பங்கு வகிக்கிறேன் மற்றும் இந்த நேரத்தில் எந்த ஹீரோ பாகம், யாருடன், எவ்வளவு நேரம் மற்றும் எந்தப் பங்கைச் செய்ய வேண்டும், இந்த வகைவகையான ரூபங்களில் பூஜ்யமாகி தனது ஹீரோ பாகத்தை நினைவில்

வையுங்கள். நினைவிலும் பல்வேறு ரூபங்களில் -சில சமயம் விதை ரூபம், சில சமயம் பரிஷ்தா ரூபம், சில சமயம் ஆன்மீக உரையாடல் ரூபத்திலும் இருங்கள், சில சமயம் தந்தையிடமிருந்து பெற்ற பொக்கிஷங்களின் ஒவ்வொரு ரத்தினத்தையும் உங்கள் முன் கொண்டு வாருங்கள். எந்த நேரத்தில் என்ன விருப்பமோ அதை அப்படியே நினைவு செய்யுங்கள். எந்த நேரம், எந்த சம்பந்தம் மூலம் தந்தையை சந்திக்க, தந்தையுடைய அன்பை நேசிக்க விரும்புகிறீர்களோ, அந்த சம்பந்தத்தில் சந்திப்பைக் கொண்டாடுங்கள். அதனால்தான் தந்தை உங்களை எல்லா சம்பந்தங்களாலும் தன்னுடையவராக ஆக்கினார் மேலும் நீங்களும் தந்தையை எல்லா சம்பந்தங்களாலும் உங்களுடையவராக ஆக்கினீர்கள். ஒரே ஒரு சம்பந்தத்தில் இல்லை, பல்வேறு சம்பந்தத்தில்தானே? ஆனால் ஒரு விஷயத்தை மனதில் கொள்ள வேண்டும், தந்தையைத் தவிர, தந்தையின் பிராப்திகள், அல்லது தந்தையின் பொக்கிஷங்களைத் தவிர வேறு எதுவும் நினைவுக்கு வரக்கூடாது. பல்வேறு பிராப்திகள், பல்வேறு பொக்கிஷங்கள், பல்வேறு சம்பந்தங்கள், ஊக்கம் உற்சாகத்தின் விஷயங்களை அதே விதிப்படி பயன்படுத்துங்கள். தந்தை மற்றும் நீங்கள் -இதுவே பாதுகாப்பின் கோடு! இந்த நினைவின் கோட்டிலிருந்து வெளியே வர வேண்டாம். அவ்வளவுதான், இந்த கோடு பரமாத்மாவின் குடைநிழல் ஆகும், நீங்கள் இந்த குடைநிழிலின் கோட்டிற்குள் இருக்கும் வரை, மாயாவிற்கு வர தைரியம் கிடையாது. பின்னர் கடின உழைப்பு என்ன இருக்கும், இடைஞ்சல் என்ன இருக்கும், தடை என்ன இருக்கும் -இந்த வார்த்தைகள் என்னவென்றே தெரியாதவராகி விடுவீர்கள். உதாரணமாக, ஆதி ஸ்தாபனையின் போது சத்யுகத்தில் ஆத்மாக்கள் வரும்போது அவர்களுக்குள் விகாரம் என்ன இருக்கும், துக்கம் என்ன இருக்கும், மாயா என்ன இருக்கும் -இந்த வார்த்தைகள் என்னவென்றே தெரியாது இருக்கும். குழந்தைகளுக்கு இந்த அனுபவம் இருக்கிறதில்லையா? பழையவர்களுக்கு இந்த விஷயங்கள் தெரியும். அப்படி தந்தை மற்றும் நான் என்ற நினைவின் கோட்டின் குடைநிழலில் இருப்பவர்களுக்கு இந்த விஷயங்கள் என்னவென்றே தெரியாது. அதனால்தான் நீங்கள் எப்போதும் பாதுகாப்பாக இருக்கிறீர்கள், எப்போதும் தந்தையின் இதயத்தில் இருக்கிறீர்கள். உங்கள் இதயங்களில் அதிகம் விரும்புகிறீர்கள், இல்லையா? பரிசுகளையும் கூட இதய வடிவத்தில் செய்து கொண்டு வருகிறீர்கள். 'கேக்'களையும்

(cakes) இதய வடிவத்தில் செய்கிறீர்கள், பெட்டியையும் இதய வடிவத்தில் செய்கிறீர்கள், எனில் இருப்பதும் இதயத்தில்தானே? தந்தையின் இதயத்தின் பக்கம் மாயா வர முடியாது. எப்படி காட்டில் ஒளி பரவச் செய்வதால், காட்டின் ராஜாவான சிங்கம் கூட வருவதில்லை, ஓடி விடுகிறது. தந்தையின் இதயம் எவ்வளவு லைட்-மைட் ஆக உள்ளது. மாயாவின் எந்த ரூபமும் அவருக்கு முன் வர முடியாது. எனவே கடின உழைப்பிலிருந்து பாதுகாப்பாகி விட்டீர்கள்தானே? பிறப்பும் எளிதாக ஆனது, பிறப்பதற்கு கடின உழைப்பு ஆயிற்றா? தந்தையின் அறிமுகம் கிடைத்தது, அடையாளம் கண்டு கொண்டு ஒரு நொடியில் அனுபவம் கிடைத்தது. தந்தை என்னுடையவர், நான் தந்தையுடையவன்! பிறப்போ எளிதாக ஆனது, அலையவோ இல்லை. உங்களுடைய தேச-ரூப வீட்டிற்கு உங்களை நிமித்தமாக்கி தந்தை அனுப்பினார். தேடவோ அலையவோ இல்லை. வீட்டிலிருந்தபடியே தந்தை கிடைத்தாரல்லவா. இதுவோ நீங்கள் இப்போது அன்புடன் சந்திப்பதற்காக பாரதத்திற்கு வருகிறீர்கள்; ஆனால் அறிமுகம் அங்கு கிடைத்தது, பிறப்பும் அங்கேதானே ஆனது? ஜென்மம் எளிதாக ஆனதென்றால், அதை பராமரிப்பதும் மிகவும் எளிது. அனுபவம் மட்டும் செய்யுங்கள் மற்றும் எளிதாகவே செல்வீர்கள். தந்தையுடன் செல்ல வேண்டுமா அல்லது நடுவில் தர்மராஜபுரியில் தங்க வேண்டுமா? எல்லோரும் ஒன்றாகச் செல்பவர்கள்தானே? எல்லோருக்கும் ஒன்றாக இருப்போம், ஒன்றாக செல்வோம் என்ற திட சங்கப்பம் உள்ளதுதானே! மேலும் எதிர்காலத்திலும் பிரம்மாதந்தையுடன் நீங்கள் ராஜ்யத்தில் அல்லது பாகத்தை நடிப்பதற்காக வருவீர்கள் -உறுதியான சங்கல்பம் இருக்கிறதா? போகும்போது சோர்வடைந்தால் நின்று விடுவீர்கள், பிறகு என்ன செய்வீர்கள்? ஏனெனில் அந்த நேரத்தில் தந்தையோ காத்திருக்க மாட்டார், இப்போது காத்துக் கொண்டிருக்கிறார். இப்போது நேரம் கொடுக்கப்பட்டுள்ளது, அந்த நேரத்தில் நிற்க மாட்டார். அந்த நேரத்தில், ஒரு நொடியில் பறப்பீர்கள். இப்போது புதிய புதிய குழந்தைகளுக்கு தாமதமாகி (late) விட்டது, ஆனால் மிகவும் தாமதம் (too late) என்ற பலகை போடவில்லை. இப்போது, புதிய உலகம் வருவதற்காக, புதிய புதிய குழந்தைகளுக்காக, காத்துக் கொண்டிருக்கிறார், இதுவும் 'லாஸ்ட் ஸோ ஃபாஸ்ட்' மற்றும் முதல் எண் வரை செல்ல வேண்டும். எல்லோரும் ஒன்றாகச் செல்லத் தயாரா? யார் இந்த கல்பத்தில் முதல்

முறையாக வந்தவர்களுக்கு பாப்தாதா வாழ்த்துகளை அளிக்கிறார். சின்னச் சின்ன குழந்தைகள் மீது பெரியவர்கள் அன்பு செலுத்துவர். எனவே தந்தை மற்றும் மூத்த சகோதர சகோதரிகளுக்கு உங்கள் மீது சிறப்பான அன்பு உள்ளது. செல்லமானவர்கள்! புதியவர்களோ, பழையவர்களோ, எல்லோருக்கும் வேகமாக முதலில் வர வேண்டும், குடைநிழலில் இருக்க வேண்டும், சதா இதயத்தில் இருக்க வேண்டும் என்ற இதுதான் எல்லாவற்றையும் விட சகஜமான வேகமாகும்.

ஒருபோதும் சலிப்படையாதீர்கள். சதா தனக்குத்தானே பல்வேறு ரூபங்களில் ஊக்கம் உற்சாகத்தை வெளிக் கொண்ருங்கள். நமது கலாச்சாரத்திற்கும் இந்திய கலாச்சாரத்திற்கும் நிறைய வித்தியாசம் இருப்பதாக இரட்டை வெளிநாட்டினர் சில நேரங்களில் நினைக்கிறார்கள். இந்திய கலாச்சாரம் சில நேரம் விரும்புகின்றனர், சில நேரம் விரும்புவதில்லை ஆனால் இது இந்திய கலாச்சாரமோ, வெளிநாட்டு கலாச்சாரமோ அல்ல. இது பிராமண கலாச்சாரம்! பிரம்மா குமார், பிரம்மா குமாரி இந்த பெயரை அனைவரும் விரும்புகிறீர்கள்தானே? பிரம்மாதந்தை மற்றும் பி.கே. வாழ்க்கை மீதும் அதிக அன்பும் இருக்கிறது. சில நேரம் வெள்ளை ஆடைகளுக்குப் பதிலாக வண்ண ஆடைகளும் நினைவிற்கு வருகின்றன ஏனென்றால் வெள்ளை உடை விரைவாக அழுக்காகி விடும் என்பதால். அலுவலகத்திற்குச் செல்லும்போது அல்லது அத்தகைய இடங்களுக்கு செல்லும்போது எந்த ஆடை அணிகிறீர்களோ அதற்காக பாப்தாதா தடை ஏதும் செய்யவில்லை, ஆனால் நம்முடையது வெளிநாட்டு கலாச்சாரம், இது தான் எனது தனித்தன்மை என்ற அந்த உள்ளுணர்வுடன் அணிந்து கொள்ளாதீர்கள். சேவை உணர்வுடன் அணியுங்கள், தனித்தன்மையின் லக்ஷியத்துடன் அல்ல! பிராமண வாழ்க்கையின் குறிக்கோள் இருக்கட்டும், சேவைக்காக! நீங்கள் அவசியத்தின் பேரில் அணிவதற்கு எந்த மறுப்பும் இல்லை; ஆனால் அதுவும் நிமித்தமாகியுள்ள ஆத்மாவிடம் கேட்ட பின்பு. பாப்தாதாவோ இதற்கு விதிவிலக்கு அளித்து விட்டார், பின்பு நீங்கள் ஏன் மறுக்கிறீர்கள்? என்பது கூடாது. சில நேரங்களில் நிறைய சிரிப்பூட்டும் விஷயங்களைச் செய்கிறீர்கள். காரியம் ஆக வேண்டும் என்ற விஷயங்களை நினைவில் வைத்திருக்கிறீர்கள், ஆனால் அதன் பின்னால் உள்ள விதிகளை மறந்து விடுகிறீர்கள். பாப்தாதா

புத்திசாலியாக இருப்பதை விரும்புகிறார், ஆனால் உங்கள் புத்திசாலித்தனம் வரம்புக்குள் இருக்க வேண்டும், எல்லை மீறக் கூடாது. சாப்பிடுங்கள், குடியுங்கள், அணியுங்கள், விளையாடுங்கள் ஆனால் வரம்புக்குள்! எனவே நீங்கள் எந்த கலாச்சாரத்தை விரும்புகிறீர்கள்? பிரம்மாதந்தையின் கலாச்சாரம் எதுவோ அதுதான் பிரம்மா குமார்-குமாரிகளின் கலாச்சாரம், அதை விரும்புகிறீர்களா? இவர்களிடம் ஒரு விஷயம் நன்றாக இருக்கிறது, தெளிவாகப் பேசுகிறார்கள், எல்லோரும் ஒரே மாதிரியாக இல்லை -சிலர் தங்களது பலவீனத்தை விவரிப்பவர்களாக இருக்கிறார்கள் ஆனால் நிலை மாறுகிறார்கள் (whimsical). அடிக்கடி அதே நினைவை கொண்டு வருகிறீர்கள் -நான் பலவீனமாக இருக்கிறேன்.... இப்படி மிகவும் மென்மையானவராக இருக்க வேண்டாம். உங்கள் சிறப்புகளை நீங்கள் மறந்து விடுவீர்கள், பலவீனத்தை மட்டுமே நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள், இவ்வாறு செய்யக் கூடாது. பலவீனத்தைப் பற்றிக் கூறுங்கள் ஆனால் நீங்கள் அதை தந்தையிடம் கொடுத்த விட்ட பின் அது யாரிடம் உள்ளது? பிறகு நான் ஏன் இப்படி இருக்கிறேன்... என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அதை தந்தையிடமோ கொடுத்து விட்டீர்கள்தானே? பாப்தாதாவுக்கு ஒரு கடிதம் எழுதி உங்கள் பலவீனங்களைக் கொடுத்து விடுங்கள் அல்லது ஒரு கடிதம் எழுதி அதை பாப்தாதாவின் அறையில் வைத்து விடுங்கள், பின்பு பதிலே கிடைக்கவில்லை என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். பாப்தாதா இப்படி பதில் அளிப்பதில்லை. எந்த குறைகளை கொடுத்து விட்டீர்களோ, எனில் பாப்தாதா கொடுப்பதை நீங்கள் எடுப்பதில்லை ஆதலால் பதிலே கிடைக்கவில்லை என்று நினைக்கிறீர்கள். தந்தை கொடுப்பதை எடுத்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள். பதிலுக்காக காத்திருக்க வேண்டாம் -சக்தியும், குஷியும் எடுத்துக் கொள்ளுங்கள். பின்பு பாருங்கள் ஊக்கம் உற்சாகம் எந்தளவு நன்றாக இருக்கிறது என்பதை. எப்போது உங்கள் பலவீனத்தை எழுதுகிறீர்களோ அல்லது நிமித்த ஆத்மாக்களிடம் கூறுகிறீர்களோ என்றால் அதை அவரிடம் கொடுத்து விட்டதாகவே ஆகும், என்றால் அது முடிந்து விட்டது. இப்போது என்ன கிடைத்துள்ளதோ அதை சிந்தியுங்கள். பாப்தாதாவிடம் ஒவ்வொருவருடைய எத்தனை கடிதங்கள் வருகின்றன, பாப்தாதா பதிலளிப்பதில்லை ஆனால் அவசியமெனில், குறையை நிரப்புவதற்காக திருப்பிக் கொடுக்கிறார். தவிர நினைவையும்

அன்பையும் தினமும் தருகிறார். நினைவும் அன்பும் கிடைக்காத ஒரு நாளாவது இருக்கிறதா? பாப்தாதா தினமும் இரண்டு மூன்று பக்கங்களுக்குக் கடிதம் எழுதுகிறார். (முரளி!) யாரும் இவ்வளவு பெரிய கடிதத்தை தினமும் எவருக்கும் எழுதுவதில்லை! நீங்கள் எவ்வளவு அன்பானவராக இருந்தாலும், யாராவது இவ்வளவு பெரிய கடிதத்தை எழுதியிருக்கிறார்களா? முரளியும் கடிதம்தானே? உங்கள் விஷயங்களுக்கான பதில் கிடைக்கிறதுதானே? எனவே, இவ்வளவு பெரிய கடிதத்தை எழுதும்போது கூட, கூறும்போதும்கூட -நீங்கள் எழுதும் சிறப்புக் கடிதத்திற்கு சிறப்பான பதிலையும் தருகிறார் ஏனென்றால் நீங்கள் செல்லமானவர்கள், காணாமல் கண்டெடுக்கப்பட்டவர்கள்! பாப்தாதா பதிலுக்கு கூடுதல் சக்தியையும் மகிழ்ச்சியையும் தருகிறார். சதா உங்கள் புத்தியை கவனமாகவும் தெளிவாகவும் வைத்திருங்கள். முன்பு கூறியது போல் உங்கள் புத்தியில் இருந்து அந்த விஷயத்தை நீக்கி விடுங்கள். அந்த விஷயங்களை வைத்திருந்தால், உங்கள் புத்தி தெளிவாக இருக்காது. அதனால்தான் தந்தை கொடுப்பது கலப்படமாகி விடுகிறது. சில நேரம் தவற விட்டு விடுகிறீர்கள், சில நேரம் கலந்து விடுகிறீர்கள்?

சில நேரங்களில் சில குழந்தைகள் என்ன செய்கிறார்கள் -இன்று செய்தி கூறுகிறார்கள். பலர் அவர்கள் சேவை செய்கிறார்கள் என்று நினைக்கிறார்கள், ஆனால் தந்தையோ உறுதியளித்துள்ளார் -நான் எப்போதும் உதவி செய்பவன் என -ஆனால் இந்த சேவையிலோ அவர் உதவவில்லையே. வெற்றி குறைவாக இருந்தது, பாப்தாதா ஏன் உதவவில்லை? ஒருவேளை நான் தகுதியற்றவன் என்று நினைக்கிறார்கள். என்னால் சேவை செய்ய முடியாது, நான் பலவீனமானவன். வீணானதை நினைக்கிறார்கள் ஆனால் ஒருவேளை ஒரு குழந்தை சேவைக்கு உதவிக்காக தந்தையின் முன் சங்கல்பம் செய்தாலும், அதை திறந்த இதயத்துடன் செய்யுங்கள்; ஆனால் சேவையின்போது, இதற்காக பாப்தாதா பிரதிபலனாக சிறப்பு உதவி அளிக்கிறார், ஒரே ஒரு விதியைப் பின்பற்றுங்கள் -சேவை எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும், ஆனால் தந்தைக்கு சேவையையும் புத்தி மூலம் அர்ப்பணித்து விடுங்கள். நான் செய்தேன், வெற்றி பெறவில்லை, நான் என்பது எங்கிருந்து வந்தது? செய்பவர் செய்விப்பவரான தந்தையின் பொறுப்பு என்பதை மறந்து தன் மீது ஏன் போட்டுக்

கொள்கிறீர்கள். இது தவறாகி விடுகிறது. இது தந்தையின் சேவை, தந்தை நிச்சயம் செய்வார். தந்தையை முன்னால் வையுங்கள், உங்களை முன்னால் வைக்காதீர்கள். நான் இதைச் செய்தேன், இந்த நான் என்ற வார்த்தை வெற்றியைத் தூரமாக்கி விடுகிறது. புரிந்ததா?

இரண்டு வகையான கடிதங்கள் மற்றும் ஆன்மீக உரையாடல் நடக்கிறது. ஒன்று பலவீனத்தைப் பற்றியது அல்லது ஆன்மீக உரையாடல் பற்றியது மற்றும் சில சேவையில் வெற்றியைப் பற்றியது அல்லது ஆன்மீக உரையாடல் செய்கின்றனர். நீங்கள் தான் செய்வதற்கு நிமித்தமானவர்கள். நான் தகுதியற்றவன் -இந்த சங்கல்பத்தை எப்படி செய்கிறீர்கள்? இது பலவீனமான எண்ணம், இந்த பலவீனமான விதையை விதைக்கிறீர்கள், பிறகு பழம் ஏன் நல்லதாக கிடைக்கவில்லை என யோசிக்கிறீர்கள். பலவீனமான விதை மூலம் நல்ல பழம் கிடைக்க முடியுமா? அடித்தளத்தை பலவீனமாகப் போடுகிறீர்கள். மற்றபடி பாப்தாதா, பிராமண பரிவாரம், நாடகம், சங்கம யுகத்தின் காலம் எல்லாமே உங்கள் வெற்றிக்கு உதவியாக இருக்கின்றன. உங்கள் நாலா புறமும் சக்திசாலிகள் இருக்கிறார்கள். பாப்தாதா, பிராமண பரிவாரம், நேரம் மற்றும் நீங்கள். நாலா புறமும் வலுவாக இருந்தால், ஏன் ஆடுகிறது, தெரியுமா? நீங்கள் எழுதும் கடிதங்கள் பயனற்றதாக எழுதுவதில்லை. பாப்தாதாவுக்கு பிரியமாக உள்ளது. பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் பொறுப்பையும் என்றென்றுக்கும் ஏற்றுக் கொண்டுள்ளார். தவறுதலாக உங்கள் மீது பொறுப்பை மட்டும் எடுத்துக் கொள்ளாதீர்கள். பின்பு பாருங்கள், வெற்றி உங்கள் காலடியில் இருக்கும், வெற்றியே உங்கள் கழுத்து மாலையாகி விடும், கால்களைத் தொடும். பிராமணர்களைத் தவிர வெற்றி எங்கும் செல்ல முடியாது. இது சங்கம யுகத்தின் வரதானம்! தந்தையின் பொறுப்பை உங்கள் மீது மட்டும் எடுத்துக் கொள்ளாதீர்கள். புரிந்ததா? சதா ஊக்கம் உற்சாகத்தின் சிறகுகளுடன், பறக்கும் கலையின் பக்கம் செல்லுங்கள். நிற்கும் கலையில் செல்லாதீர்கள். வீழும் கலையும் இல்லை, நிற்கும் கலையும் இல்லை, ஆனால் சதா பறக்கும் கலை. டீச்சர்கள் அனைவரும் சதா எந்தக் கலையைச் சேர்ந்தவர்கள்? டீச்சர் சேவைக்கு நிமித்தமானவர்கள். அது சுய சேவையாக இருந்தாலும் சரி, உலக சேவையாக இருந்தாலும் சரி, ஆனால் எப்போதும் சேவை செய்யத் தயாராக இருப்பது டீச்சர்களின் சிறப்பு. தனது மனம், புத்தி,

உடலுடன் சதா பிஸியாக இருப்பவர்கள், சில சமயங்களில் உடல் மூலம் வேலை செய்கிறீர்கள் எனில் மனம் புத்தியை சுதந்திரமாக வைத்திருக்கிறீர்கள். மனம் புத்தியை சுதந்திரமாக வைத்திருப்பது என்றால் மாயாவை வரவேற்பது ஆகும்! நீங்கள் யாரை வரவேற்கிறீர்களோ அவர்கள் நிச்சயமாக உட்கார்ந்து கொள்வார்கள், இல்லையா? பிறகு சொல்கிறீர்கள், பாப்தாதா மாயாவை விரட்டுங்கள் என. அழைப்பது நீங்கள் மற்றும் விரட்டுவது பாப்தாதாவா! எனவே, டீச்சர் அல்லது நம்பர்-1 இறை மாணவரின் சிறப்பு -மனம் புத்தி உடல் மூலம் தன்னை பிஸியாக வைத்திருப்பது. விசேஷமாக நிமித்தமாகியுள்ள சேவாதாரிகள் இதை அடிக்கோடிட்டுக் கொள்ள வேண்டும், எனில் அவர்கள் எளிதில் சோர்வடைய மாட்டார்கள். நல்லது, இன்று முழு கும்பமேளா! பாரதவாசிகளுக்கு 3-அடி நிலம் தேவை மற்றும் இரட்டை வெளிநாட்டவர்களுக்கு இரண்டு மடங்கு தேவை. 3-அடி சாமான்களுக்கு எனில் 3-அடி நிலமும் தேவை. பாரதவாசிகள் இந்த எல்லா கட்டிடங்களிலும் 1600-பேர் உள்ளனர் மற்றும் இப்போது வெளி நாட்டினர் 1125-பேர் உள்ளனர், இவர்களுக்கு 6-அடி நிலம் தேவை. நல்லது!

நாலா புறமும் உள்ள சதா ஊக்கம் உற்சாகத்தில் பறக்கக்கூடிய தீவிர புருஷார்த்தி ஆத்மாக்களுக்கு, சதா தந்தையின் இதயத்தில் இருக்கக்கூடிய விசேஷ மணிகளுக்கு, சதா தந்தை மற்றும் நான் என்ற நினைவின் குடைநிழலில் இருக்கக்கூடிய சதா நிற்கும்கலை, விழச் செய்யும் கலையைக் கடந்து பறக்கும் கலையில் முன்னேறக்கூடிய, சதா தன்னை பல்வேறு கருத்துகள் மூலம் குஷி மற்றும் போதையில் முன்னேற்றக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

**குழுக்களுடன் சந்திப்பு (சாரம்):**

எல்லோரும் குஷியாக, பெருமிதத்துடன் 'மேரா பாபா' என்று சொல்கிறீர்கள்தானே. என்னுடையது என்றால் உரிமை! எங்கு உரிமை உள்ளதோ அங்கு என்னுடையது என்று கூறப்படுகிறது.

யாரிடம் முழு ஞானம் உள்ளதோ, அதாவது முழு 'லைட்-மைட்' ஆக இருக்கிறாரோ அவரிடம் மாயா வர முடியாது.

குழந்தைத்தன்மை மற்றும் எஜமானத்தன்மையின் இரட்டை போதையில் இருங்கள். ஏதாவது விஷயம் வரும்போது தன்னை பலவீனமாக நினைத்தால், பெரிய விஷயமாகத் தோன்றினால், அப்போது குழந்தையாகி பொறுப்பை தந்தையிடம் கொடுத்து விடுங்கள்.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 25.03.1990 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தூய்மையே அனைத்து அனுபவங்களையும் பெறுவதற்கான ஆதாரமாகும்!

இன்று அன்புக்கடல் பாப்தாதா தனது நாலாபுறமும் உள்ள ஆன்மீக குழந்தைகளுடைய ஆன்மீக அம்சங்களை பார்த்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு பிராமணக் குழந்தையுடைய அம்சத்திலும் ஆன்மீகத்தன்மை இருந்தது ஆனால் நம்பர்வார். ஏனென்றால் ஆன்மீகத்தன்மைக்கான ஆதாரமே தூய்மையாகும். எண்ணம், சொல், செயலில் எந்தளவு தூய்மை தாரணையாகி இருந்ததோ, அந்தளவு ஆன்மீகத்தன்மையின் பிரகாசம் முகத்திலும் தெரிகின்றது. பிராமண வாழ்க்கையின் ஜொலிப்பு தூய்மைதான்! நிரந்தர அதீந்திரிய சுகம் மற்றும் இனிமையான அமைதிக்கான விசேஷ ஆதாரம் -தூய்மை! எனவே, தூய்மை நம்பர்வாராக இருந்தது என்றால் இந்த அனுபவங்களை அடைவதும் நம்பர்வாராகும். தூய்மைக்கு முதலிடம் இருந்தால், தந்தையிடமிருந்து அனுபவங்களை அடைவதும் முதலிடத்தில் இருக்கும். தூய்மையின் பிரகாசம் தானாகவே நிரந்தரமாக முகத்தில் தெரியும். தூய்மையின் ஆன்மீகக்கண்கள் எப்போதும் தெளிவாக காணப்படும். சதா கண்களில் ஆன்மீக ஆத்மா மற்றும் ஆன்மீகத் தந்தையின் பிரகாசத்தை அனுபவிப்பீர்கள். இன்று பாப்தாதா அனைத்து குழந்தைகளின் இந்த விசேஷ ஜொலிப்பையும் பிரகாசத்தையும் பார்த்துக் கொண்டிருந்தார். ஞானக்கண்ணாடியில் உங்கள் ஆன்மீகத் தூய்மையின் அம்சங்களை நீங்களும் பார்க்கலாம் ஏனென்றால் தூய்மைதான் விசேஷ ஆதாரமாகும். வெறும் பிரம்மச்சரியம் தூய்மை என்று அழைக்கப்படுவதில்லை ஆனால் சதா பிரம்மச்சாரிகள் மற்றும் சதா பிரம்மாச்சாரிகள் என்றால் ஒவ்வொரு அடியிலும் பிரம்மாதந்தையின் நடத்தையைப் பின்பற்றுவோர். அவரது எண்ணம், சொல், செயல் ரூப அடிகள் இயல்பாக பிரம்மாதந்தையுடைய

அடி மேல் அடி வைப்பதாக இருக்கும். நீங்கள் அதை காலடிச்சுவடு (footprint) என்று அழைக்கிறீர்கள். பிரம்மாதந்தையின் நடத்தை அவரது ஒவ்வொரு அடியிலும் தெரியும். எனவே பிரம்மச்சாரியாக மாறுவது கடினம் அல்ல ஆனால் எண்ணம், சொல், செயலின் அடி பிரம்மாச்சாரியாக இருக்க வேண்டும் -இதை சோதிப்பது அவசியம். மேலும் பிரம்மாச்சாரியாக இருப்பவர்களின் முகமும் நடத்தையும் சதா உள்முகமாக மற்றும் அதீந்திரிய சுகத்தின் அனுபவம் ஆகும். ஒன்று அறிவியல் சாதனங்கள் மற்றும் பிராமணர்களின் வாழ்க்கையில் ஞானத்தின் சாதனம். எனவே பிரம்மாச்சாரி ஆத்மா அறிவியல் சாதனங்கள் அல்லது ஞானத்தின் சாதனங்களின் ஆதாரத்தில் சதா மகிழ்ச்சியாக இருப்பதில்லை ஆனால் அவர் சாதனங்களையும் தனது சாதனையின் ரூபத்தில் காரியத்தில் பயன்படுத்துவார். சாதனங்களை ஆதாரமாக்க மாட்டார் ஆனால் தனது சாதனையின் ஆதாரத்தினால் சாதனங்களை காரியத்தில் பயன்படுத்ததுவார். எப்படி சில பிராமண ஆத்மாக்கள் சில நேரங்களில் சொல்வது போல -எங்களுக்கு இந்த வாய்ப்பு கிடைக்கவில்லை, இந்த விஷயத்தில் உதவில்லை, அவர் ஒத்துப் போகவில்லை, அதனால் மகிழ்ச்சி குறைந்தது அல்லது சேவையினுடைய எனது ஊக்கம் உற்சாகம் குறைந்தது. ஆரம்பத்திலோ அதீந்திரிய சுகம் அதிகமாக இருந்தது, ஊக்கம் உற்சாகம் குறைந்து விட்டது. ஆரம்பத்திலோ அதீந்திரிய சுகம் அதிகமாக இருந்தது, ஊக்கம் உற்சாகமும் இருந்தது. நானும் பாபாவும் தவிர வேறு எதுவுமேத் தெரியவில்லை; ஆனால் பெரும்பான்மையானவர்கள் 5-முதல் 10-வருடங்களுக்குள் தங்களுக்குள் எப்போதாவது எப்படி, எப்போதாவது எப்படி என்பதை அனுபவிக்க ஆரம்பிக்கிறார்கள். இதற்கு காரணம் என்ன? முதல் வருடத்திலிருந்து 10-ஆண்டுகளில் ஊக்கம் உற்சாகமும் 10-மடங்கு அதிகரிக்க வேண்டுமல்லவா, ஆனால் அது ஏன் குறைந்தது? இதற்குக் காரணம், சாதனையின் நிலையில் இருக்கும்போது, சாதனங்களை காரியத்தில் பயன்படுத்துவதில்லை. ஏதாவது ஆதாரத்தை தனது முன்னேற்றத்தின் ஆதாரமாக ஆக்குகிறீர்கள், அந்த ஆதாரம் ஆடும்போது ஊக்கம் உற்சாகமும் கூட ஆடுகின்றது. ஒரு ஆதாரத்தை எடுத்துக் கொள்வதில் தவறில்லை ஆனால் அதையே ஆதாரமாக ஆக்குகிறீர்கள். தந்தை பாதியிலேயே வெளியேறி விடுகிறார் மற்றும் ஆதாரத்தை அடித்தளமாக்குகிறீர்கள். எனவே, என்ன குழப்பம் ஆகிறது, இது நடந்திருந்தால் இப்படி

நடந்திருக்காது, அது நடந்திருந்தால் இப்படி நடந்திருக்கும். இதுவோ மிகவும் அவசியம் -இது போன்ற அனுபவங்கள் நடக்கத் தொடங்குகின்றன. சாதனை மற்றும் சாதனங்களின் சமநிலை வைப்பதில்லை! சாதனங்களின் பக்கம் புத்தி அதிகம் செல்கிறது. சாதனையின் பக்கம் புத்தி குறைந்து விடுகிறது. எனவே, நீங்கள் எந்தவொரு வேலையிலும், சேவையிலும் தந்தையின் ஆசீர்வாதத்தை அனுபவம் செய்வதில்லை. மற்றும் ஆசீர்வாதம் அனுபவம் ஆகாததால், சாதனம் மூலம் வெற்றி கிடைத்தது என்றால் ஊக்கம் உற்சாகம் மிகவும் நன்றாக உள்ளது மற்றும் வெற்றி குறைவாக இருந்தது என்றால் ஊக்கம் உற்சாகமும் குறைந்து விடுகிறது. சாதனம் (ஆன்மீக பயிற்சி) என்றால் சக்திசாலி நினைவு! நிரந்தரமாக தந்தையுடன் இதய சம்பந்தம்! சாதனம் என்று இதற்குச் சொல்வதில்லை, யோகத்தில் மட்டும் அமர்வது ஆனால் நீங்கள் எப்படி உடலுடன் அமர்கிறீர்களோ அப்படி உங்கள் இதயம், மனம், புத்தி ஆகியவை ஒரே தந்தையின் பக்கம் தந்தையுடன் அமர வேண்டும். உடல் இங்கே உட்கார்ந்திருந்தாலும், மனம் ஒருபக்கமும், புத்தி மறுபக்கமும் இதயத்தில் வேறு ஏதாவது ஓடிக் கொண்டிருந்தால், இதை சாதனை என்று சொல்ல மாட்டோம். மனம், புத்தி, இதயம் மற்றும் உடல் நான்குமே ஒரே நேரத்தில் தந்தையுடன் கூடவே சமமான நிலையில் இருக்கட்டும் -இதுதான் உண்மையான ஆன்மீக பயிற்சி (சாதனை). புரிந்ததா? ஒருவேளை உண்மையான சாதனை இருக்கவில்லை என்றால் பின்பு வழிபாடு நடக்கிறது.

முன்பும் கூறியிருந்தோம் -சில நேரங்களில் நினைக்கிறீர்கள் ஆனால் சில சமயம் முறையீடு செய்கிறீர்கள். நினைவில் முறையீடு செய்ய வேண்டிய அவசியமில்லை. சாதனை செய்பவரின் ஆதாரமாக சதா தந்தைதான் இருப்பார். தந்தை இருக்குமிடத்தில் குழந்தைகளுக்கு சதா பறக்கும் கலை இருக்கும். குறையாது ஆனால் பன்மடங்கு அதிகரிக்கும். சில சமயம் மேலே, சில சமயம் கீழே இதனால் சோர்வு ஏற்படுகிறது. நீங்கள் எந்தவொரு குழப்பமான இடத்தில் அமர்ந்தால் என்ன ஆகும்? ரயிலில் நிறைய அசைவதால் உங்களை சோர்வடையச் செய்கிறதுதானே? சில சமயம் நீங்கள் அதிக ஊக்கம் உற்சாகத்துடனும் பறக்கிறீர்கள், சில சமயம் நடுவில் இருக்கிறீர்கள், சில சமயம் கீழே வருகிறீர்கள் எனில் பரபரப்பு ஆனதுதானே. அதனால்தான் நீங்கள் சோர்வடைகிறீர்கள் அல்லது சலிப்படைகிறீர்கள். பிறகு இப்படியும்

நடக்குமா என நினைக்கிறீர்கள் ஆனால் சாதனை மூலம் தந்தையுடன் இருப்பவர்களுக்கு, சங்கம யுகத்தில் எல்லாமே புதியதாகவே அனுபவம் ஆகும். ஒவ்வொரு கணமும், ஒவ்வொரு சங்கல்பத்திலும் புதுமை. ஏனென்றால் ஒவ்வொரு அடியிலும், பறக்கும் நிலை, அதாவது, பிராப்தி ஆகிக் கொண்டே இருக்கும். சாதனை எப்போதும் உண்டு. சங்கம யுகத்தில் எல்லா நேரங்களிலும், தந்தை உங்களுக்கு ஆஸ்தி மற்றும் வரதானங்களின் ரூபத்தில் பிராப்தி செய்கிறார். அதனால் பிராப்தியினால் குஷி கிடைக்கிறது மற்றும் ஊக்கம் உற்சாகமும் தொடர்ந்து அதிகரிக்கும். குறைவாக முடியாது. மாயா வந்தாலும், நீங்கள் வெற்றி பெறுவதில் மகிழ்ச்சி அடைவீர்கள். ஏனென்றால் நீங்கள் மாயாவை வெல்வதற்கான ஞானம் நிறைந்தவராகி விட்டீர்கள். எனவே 10-வருஷத்தினர் 10-மடங்கும் 20-வருஷத்தினர் 20-மடங்கும் பெறுகிறீர்களா? எனவே சொல்லும்போது இப்படிச் சொல்கிறோம் ஆனால் பெறுவதோ பன்மடங்கு.

இப்போது இந்த ஆண்டில் நீங்கள் என்ன செய்வீர்கள்? தந்தையிடமிருந்து நீங்கள் பெற்ற ஊக்கமும் உற்சாகமும் உங்கள் சொத்து. நீங்கள் தந்தையின் சொத்தை உங்களுக்குச் சொந்தமாக்கி இருக்கிறீர்கள் எனில் சொத்தை அதிகரிப்பீர்களா அல்லது குறைப்பீர்களா? இந்த ஆண்டு விசேஷமாக 4-வகையான சேவைகளின் மீது கவனத்தை அடிக்கோடிடுங்கள். முதலாவது, சுய சேவை. இரண்டாவது, உலக சேவை. மூன்றாவது, மனஸா சேவை. ஒன்று பேச்சு மூலம் சேவை, மற்றொன்று மனஸா சேவையும் சிறப்பானது. நான்காவது, யக்ஞ சேவை. எங்கிருந்தாலும், எந்த சேவை இடத்தில் இருந்தாலும், அந்த எல்லா சேவை இடங்களும் யக்ஞ-குண்டங்கள் ஆகும். மதுபன் மட்டுமே யக்ஞம் மற்றும் உங்கள் இடம் யக்ஞம் இல்லை என்பது கிடையாது. எனவே, யக்ஞ சேவை என்றால் செயல் மூலம் நிச்சயமாக ஏதாவது சேவை செய்ய வேண்டும். சேவையினுடைய மூன்று வகையான அனைவரது கணக்குகளும் பாப்தாதாவிடம் சேமிக்கப்பாகிறது. எண்ணம், சொல், செயல் மற்றும் உடல், மனம், செல்வம்! பல பிராமணர்கள் நினைக்கின்றனர் நம்மால் செல்வம் மூலம் சகயோகி ஆக முடியாது, சேவை செய்ய முடியாது ஏனெனில் நாமோ சமர்ப்பணமானவர்கள். நீங்கள் பணம் சம்பாதிக்கவில்லை என்றால், பணத்துடன் எப்படி சேவை செய்வீர்கள்?

ஆனால் சமர்ப்பணமான ஆத்மா ஒருவேளை யக்ஞ காரியத்தில் கவனத்துடன் சிக்கனம் செய்தால், அந்தப் பணம் சிக்கனம் செய்தவரின் பெயரில் சேமிப்பாகிறது, இது சூட்சும சேமிப்பாகும். யாராவது இழப்படையச் செய்தால் சுமையின் கணக்கு சேமிப்பாகி விடும் மற்றும் சிக்கனம் செய்தால் அவரது செல்வத்தின் கணக்கில் சேமிப்பாகி விடும். யக்ஞத்தின் ஒவ்வொரு குருணையும் ஒரு தங்க நாணயத்திற்குச் சமமானது. ஒருவேளை இதயபூர்வமாக (வெளிப்பகட்டுக்காக அல்ல) யக்ஞத்தில் சிக்கனம் செய்தார் என்றால் அவரது சேமிப்பு சேகரித்துக் கொண்டே இருக்கும். இரண்டாவதாக, ஒருவேளை சமர்ப்பணமான ஆத்மா சேவையின் மூலம் மற்றவர்களின் செல்வத்தை பயனுள்ளதாக்கினால், அதிலிருந்து அவருடைய பங்கும் சேமிப்பாகிறது. எனவே அனைவருக்கும் 3-வகையான கணக்கு உள்ளது. மூன்று கணக்குகளின் சதவீதம் நன்றாக இருக்க வேண்டும். நாமோ வார்த்தையின் சேவையில் மிகவும் பிஸியாக இருக்கிறோம் என சிலர் நினைக்கிறார்கள். நமது கடமையோ வார்த்தையின் சேவை ஆகும்; மனஸா, செயல் மூலம் சேவைகளில் சதவீதம் குறைவாகிறது ஆனால் இந்த சாக்குபோக்கு செல்லாது. பேசும் நேரத்தில் மனதையும் சொல்லையும் சேர்த்தே சேவை செய்தால், விளைவு என்னவாக இருக்கும்? மனதையும் சொல்லையும் சேர்த்து சேவை செய்ய முடியுமா? ஆனால் வார்த்தை சேவை எளிதானது, மனஸா சேவையோ கவனம் செலுத்த வேண்டிய விஷயம். எனவே வார்த்தையினுடையதோ சேமிப்பாகி விடுகிறது ஆனால் மனதின் கணக்கு காலியாக இருக்கும். வார்த்தையிலோ அனைவரும் தந்தையை விட புத்திசாலிகள். பாருங்கள், இப்போதெல்லாம், பெரிய தாதிக்களை விட சிறியவர்கள் நன்றாக பேசுகிறார்கள், ஏனெனில் புதிய ரத்தம் இல்லையா?

நல்லது, இன்னும் மேலே செல்லுங்கள், பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார் ஆனால் மனஸா சேவையின் கணக்கு காலியாகவே இருக்கும். ஏனென்றால் ஒவ்வொரு கணக்கிலும் 100-மதிப்பெண்கள் உள்ளன. வெறும் ஸ்தூல சேவையை, கர்மத்தின் சேவை என்று கூற முடியாது. கர்மத்தின் சேவை என்றால் குழுவில் சம்பந்தம் தொடர்பில் வருவது. இது செயலின் கணக்கில் சேமிப்பாகிறது. எனவே பலரது மூன்று கணக்குகளுக்குள் நிறைய வித்தியாசம் இருக்கிறது மற்றும் நாம்

நிறைய சேவை செய்கிறோம், மிகவும் நல்லது என்று கூறி அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம், ஆனால் உங்கள் கணக்கு காலியாக இருக்கக்கூடாது, ஏனென்றால் பாப்தாதா குழந்தைகளின் பிரியமானவர் இல்லையா? எங்களுக்கு இப்படியும் நடக்கும் என எவ்வித ஜாடையும் செய்யவில்லை என பின்னர் புகார் கூறக் கூடாது. அந்த நேரத்தில், பாப்தாதா இந்த விஷயத்தை உங்களுக்கு நினைவூட்டுவார். டி.வி.யில் படம் தோன்றும். எனவே, இந்த ஆண்டு நீங்கள் நிறைய சேவைகளைச் செய்யுங்கள் ஆனால் இந்த மூன்று வகையான கணக்குகளையும் நான்கு வகையான சேவைகளையும் ஒன்றாகச் செய்யுங்கள். வார்த்தையின் பக்கம் கனமாகவும், மனது, செயலின் பக்கம் கனமின்றி இருந்தால் என்ன ஆகும்? சமநிலை இருக்காது. சமநிலை இல்லாததால், ஊக்கம் உற்சாகமும் ஏறியிறங்குகிறது. ஒன்று கவனம் (attention) செலுத்த வேண்டும், ஆனால் கவனத்தை பதற்றமாக (tension) மாற்ற வேண்டாம் என்று பாப்தாதா அடிக்கடி கூறுகிறார். பல முறை கவனத்தை பதற்றமாக ஆக்கி விடுகிறீர்கள் -இதை செய்யாதீர்கள். எளிதான மற்றும் இயற்கையான கவனத்துடன் இருங்கள். டபுள் லைட் ஸ்திதியில் இயல்பான கவனம் உண்டாகிறது. நல்லது!

அடுத்தது, சேவையின் வழிமுறை என்னவாக இருக்கும்? இதுவோ வெற்றிக்கான விஷயமாகி விட்டது. இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? ஒன்று, இரண்டு வருடங்களாக அனைவரின் ஒத்துழைப்புடன் நடந்து வரும் உங்கள் காரியத்தை முழுமையாக முடிக்க வேண்டும். முடிப்பதில்லை ஆனால் முழுமை என்று கூறவோம். எனவே, நீங்கள் ஒரு விழா நடத்த விரும்பினால், ஒரு புத்தகம் தயார் செய்து மக்களுக்கு செய்தியளிக்க விரும்பினால், அதை நன்றாகச் செய்யுங்கள் ஆனால் குறைந்த செலவில் நிறைய பலன் என்ற ஒரு விஷயத்தில் கவனம் வையுங்கள். பாப்தாதா ஆரம்பத்திலிருந்து இப்போது வரை ஒவ்வொரு காரியத்திற்கு வழிமுறையைக் கூறிக் கொண்டே வருகிறார் -அது ஒரேடியாக மிக உயர்ந்ததாகவோ, மிக சாதாரணமாகவோ இல்லாமல், நடுத்தரமாக இருக்க வேண்டும், ஏனெனில் ஆத்மாக்களில் இரண்டு வகையினர் உள்ளனர். ஒருவேளை நீங்கள் விலை உயர்ந்ததாகச் செய்தால், மக்கள் சொல்வார்கள், இவர்களிடம் நிறைய பணம் இருக்கிறது மற்றும் நீங்கள்

சாதாரணமாகச் செய்தால், அதை மதிக்க மாட்டார்கள். எனவே சதா நடுத்தரமாக இருக்க வேண்டும். இது வரை உருவாக்கிய புத்தகம் நன்றாக உள்ளது. நீங்கள் அதை முழுமையாக முடிக்க வேண்டும் ஆனால் அதிகமாக விரிவாக்க வேண்டாம், அதை பெரிதாக்க வேண்டாம். அது குறுகியதாகவும் இனிமையாகவும், சாரத்துடன் இருக்கட்டும். விஸ்தாரத்தில் சாரம் மறைந்து விடுகிறது. மேலும் சாரமாக இருந்தால், புத்தியைத் தொடும். காரியத்தைச் சரியாகச் செய்கிறீர்கள், ஆனால் தனது புத்தியின் ஆற்றலிலும் குறைந்த செலவில் அதிக லாபம் எடுங்கள். மற்றபடி கடின உழைப்பு செய்பவர்களுக்கு வாழ்த்துக்கள். நிகழ்ச்சிகளை அடுத்த ஆண்டு வைத்தாலும் ஆனால் அதை முடிக்க வேண்டும். பல குழந்தைகள் இது மிக நீண்ட காலம் நடப்பதாக நினைக்கிறார்கள். மிகவும் பிஸியாக இருக்கிறீர்கள், மிக அதிக செலவும் ஆகியுள்ளது... ஆனால் எது நடந்ததோ அது நன்றாக நடந்தது மற்றும் எது நடக்குமோ அது இன்னும் நன்றாகவே நடக்கும். சோர்வடைய வேண்டாம். ஊக்கம் உற்சாகத்தை இன்னும் அதிகரியுங்கள். எந்த ஆர்வத்துடன் இந்த வேலையை நீங்கள் தொடங்கினீர்களோ, அதை விட பல மடங்கு குறைவான செலவில் அதிக லாபம் என்ற விதி மூலம் முழுமையாக முடியுங்கள். புரிந்ததா? வேலை செய்வதற்கான நேரமும் நிர்ணயிக்கப்பட வேண்டும். இரவில் விழித்திருந்து வேலை செய்தால் நன்றாக செய்யலாம் என்று பலர் நினைக்கிறார்கள் ஆனால் புத்தி சோர்வடைந்து விடும் மற்றும் அமிர்தவேளை சக்திசாலியானதாக இல்லாததால், இரண்டு மடங்கு ஆக வேண்டிய வேலை ஒரு மடங்குதான் ஆகும். எனவே காலக்கெடுவும் இருக்க வேண்டும். பின்னர் காலையில் எழுந்து, புத்துணர்வுடன் உங்கள் புத்தி மூலம் படிக்க வேண்டும். வேலை செய்ய ஒரு வரம்பு இருக்க வேண்டும். பாப்தாதாவோ குழந்தைகளின் உற்சாகத்தைக் கண்டு மகிழ்ச்சியடைகிறார், ஆனால் அப்போதும்கூட, ஒரு வரம்பு இருக்க வேண்டும், இல்லையா? சதா புத்தியை புத்துணர்வுடன் வைத்திருங்கள் மற்றும் புத்துணர்வான புத்தியுடன் ஒரு மணி நேரத்தில், இரண்டு மணி நேரத்திற்குரிய வேலையையும் செய்ய முடியும். ஒன்று, இந்த சேவையின் காரியம்.

இரண்டாவது விஷயம்: தற்போது, உள்நாடு வெளிநாடுகளில் பணம் மற்றும் நேரத்தை இந்த பிஸியான நிகழ்ச்சியில் நிறைய

செலவிடப்பட்டுள்ளது. அதனால்தான், இப்போது நீங்கள் சம்பந்தம் தொடர்பில் நம்மவரோ அல்லது புதிய ஆத்மாக்களுக்கு செய்தி அளித்து சிநேக-சந்திப்பு செய்யுங்கள். சின்னச்சின்ன சென்டர்களில் 5-பேருக்கு கூட சிநேக-சந்திப்பு செய்வதற்கு எவ்வித தடையுமில்லை. அவர்கள் இன்னும் அதிக புத்துணர்வு அடைவார்கள், நெருக்கத்தில் வருவார்கள். சின்னச்சின்ன சிநேக-சந்திப்பு செய்யுங்கள். 5-முதல் 50-வரை, 100-வரை ஒரு மாநாட்டையும் நடத்தலாம். பெரிய நிகழ்ச்சி அல்ல, இடத்திற்கேற்றவாறு மற்றும் குறைந்த செலவில் அதிக லாபத்தில் உங்களுக்கு இடம் கிடைக்கலாம். அதிகமாக ஓடியாட வேண்டியதில்லை. ஒருவேளை 100-ஆத்மாக்கள் உங்களிடம் வர வேண்டும் என்றால், நாடகப்படி இடமும் உங்களுக்கு எளிதாக கிடைக்கும் ஆனால் நாமும் 100'ன் திட்டமிட வேண்டும் என சிறிய சென்டர்கள் காரர்கள் இப்படிப் புரிந்து கொள்ளக்கூடாது. சக்திக்கேற்றவாறு, சகயோகிக்கேற்றவாறு, சிநேகத்திற்கேற்றவாறு மற்றும் பணத்திற்கேற்றவாறு -5'ன் உடையதோ, 50'ன் உடையதோ 25'ன் உடையதோ செய்யுங்கள் ஆனால் அது நிச்சயம் செய்ய வேண்டும். நிச்சயமாக பிஸியாக இருக்க வேண்டும் மற்றும் ஒவ்வொரு 3-மாதங்களுக்குப் பின் அல்லது உங்களால் முடிந்தவரை, 3,4-செய்யுங்கள் ஆனால் கண்டிப்பாகச் செய்ய வேண்டும் மற்றும் முதலில் 5-ஆத்மாக்களின் சிநேக-சந்திப்பைச் செய்தால், அந்த 5-ஆத்மாக்களும் இரண்டு, மூன்று பேரைக் கூட்டி வந்தால் இரண்டாவது முறை அது 10-ஆகும், பின்னர் அது 15-ஆகும். ஏனெனில் டபுள் லைட் ஆகி செய்கிறீர்கள், சுமையுடன் அல்ல. சேவையோ நிறைய செய்து விட்டோம் என்ற அலட்சியமும் கூடாது. இல்லை, சேவை என்பது பிஸியாக இருப்பதற்கான ஒரு வழிமுறையாகும்; ஆனால் நீங்கள் சுமையுடன் சேவை செய்வதால் சோர்வடைகிறீர்கள். சேவை மகிழ்ச்சியை அதிகரிக்கிறது. சேவை பல ஆத்மாக்களின் ஆசீர்வாதங்களைப் பெறச் செய்கிறது. நீங்கள் சேவை செய்யவில்லை என்றால், நீங்கள் எப்படி 9-லட்சம் அடைவீர்கள்? சேவை செய்யுங்கள் ஆனால் அது சுமையானதாக இருக்கக் கூடாது என்பதை அடிக்கோடிடுங்கள். புத்தியின் சுமையாகட்டும், பணத்தின் சுமையாகட்டும் ஆனால் நீங்கள் எளிதாகி சேவை செய்தீர்கள் என்றால் சேவையும் அதிகரிக்கும். எனவே, எந்த வழிமுறைகளைப் பின்பற்றினாலும், நீங்கள் நிச்சயமாக அதைச் செய்ய வேண்டும்.

ஒருவேளை யாராவது உங்கள் சகயோகி ஆகிறார் மற்றும் ஒரு ஆயத்தமான மேடையை பெரிய நிகழ்ச்சிக்காக உங்களுக்குக் கொடுத்தால், பெரிய நிகழ்ச்சியும் செய்யலாம் மேலும் புத்தியின், பணத்தின் சுமை இருக்காது. இது போன்ற பல அமைப்புகளும் உள்ளன, அவற்றை உங்கள் சகயோகி ஆக்குங்கள், இதை முயற்சிக்கவும். உங்களுக்கு தைரியம் இருந்தால், நிச்சயமாக ஒரு பெரிய நிகழ்ச்சி நடத்துங்கள். தைரியம் இல்லையேல் செய்ய வேண்டாம். பெரிய நிகழ்ச்சிகள் அமைப்பை வெளிச்சத்திற்குக் கொண்டு வரும் ஆனால் டபுள் லைட் ஆகிச் செய்யுங்கள். தனது ஆற்றலைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, மற்றவர்களின் ஆற்றலை இந்த ஈஸ்வரிய காரியத்தில் பயன்படுத்த வேண்டும் என்ற லக்ஷியம் வையுங்கள். லக்ஷியம் வைத்தால் பல அழைப்புகள் வரும். ஒவ்வொரு சிறிய பெரிய தேசத்திலும் ஏதாவது துறையைச் சேர்ந்த சகயோகிகளின் இடம் கிடைக்கலாம். தற்போது, இது போன்ற ஆற்றல் மிக்க பல நிறுவனங்கள் உள்ளன ஆனால் அவர்களுக்கு அதைப் பயன்படுத்தும் முறை தெரியவில்லை. அத்தகைய சகயோகி தேவை. அப்படி யாரும் அவர்கள் கண்ணுக்குப் படவில்லை. மிகுந்த அன்புடன் உங்களுக்கு சகயோகம் அளிப்பார், அருகில் வருவார் மேலும் உங்களுடைய 9-லட்சம், பிரஜையிலும் கூட அதிகமாகும். சில வாரிசுகளும் வெளிப்படுவார்கள், சில பிரஜைகளும் வெளிப்படுவார்கள். பாருங்கள், இங்கேயும் முதலில் சகயோகிகள் வந்தார்கள், இப்போது உலக நன்மையின் காரியத்தில் நிறைய பேர் வாரிசுகளாக மாறி விட்டனர். விருந்தினராக வந்தனர், மகான் ஆனார்கள், இது போன்ற பல நல்ல நல்ல நெருங்கிய ஆத்மாக்களும் வெளிப்பட்டனர், இனி மேலும் வெளிப்படுவார்கள். எதையாவது செய்து கொண்டே இருங்கள் ஆனால் டபுள் லைட் ஆகி இருங்கள் என அடிக்கடி பாப்தாதா நினைவூட்டுகிறார். பாரதத்திலும் இந்த வழிப்படி சிநேக சந்திப்பு செய்து செய்தே இறுதியில் பெரிய நிகழ்ச்சி நிச்சயம் செய்ய வேண்டும். பாரதத்தில் பட விளக்க சேவைகளும் நல்ல முடிவுகளைத் தருகின்றன. சின்னச்சின்ன சிநேக சந்திப்புகள் மூலம் அவர்களை நெருக்கமாக்கி, பின்னர் பெரிய நிகழ்ச்சிகளில் அவர்களை மேடைக்கு அழைத்து வாருங்கள். அவர்கள் அனுபவத்தைச் சொல்லட்டும். நீங்கள் சொல்லத் தேவையிருக்காது. பெரிய நிகழ்ச்சிகள் அதன் விளைவைக் கொண்டுள்ளன. சிநேக-சந்திப்பின் பிரபாவம், வெற்றி உங்களுடையதாகிறது.

சிநேக-சந்திப்பு ஆத்மாக்களின் நிலத்தை தயார் செய்வதற்கும், பெரிய நிகழ்ச்சிகள் குரல் எழுப்புவதற்கும் ஆகும் ஆனால் உங்களால் முடிந்த வரை செய்யுங்கள். இது உங்களுக்குக் கிடைத்த கட்டளை என்பதல்ல, செய்ய முடியவில்லை எனில் நிர்பந்தத்துடன் செய்யாதீர்கள். புரிந்ததா?

மூன்றாவது விஷயம்: சுய முன்னேற்றத்திற்காக, முன்பும் கூறியிருந்தோம் -மூன்று கணக்குகளையும் சேமியுங்கள் ஆனால் கூடவே பாப்தாதா ரிஸல்ட்'ல் பார்த்தார், சேவையின் வளர்ச்சியுடன் கூடவே நிமித்த ஆத்மாக்கள், நீங்கள் யாரை நிமித்த சேவாதாரி என்று கூறுகிறீர்களோ, பாப்தாதா டீச்சர் என்ற வார்த்தையை அதிகம் பயன்படுத்துவதில்லை. ஏனென்றால் டீச்சர் என நினைக்கும்போது போதை ஏறி விடுகிறது. அதனால் நிமித்த சேவாதாரி எனக் கூறுகிறோம். எனவே, சேவையுடன் சேர்ந்தே நிமித்த சேவாதாரிகளுடைய முயற்சியின் விதியில் மிக நல்ல நிகழ்ச்சி அதாவது முன்னேற்றம் இருக்க வேண்டும், சேவையின் வேகம், அதிலும் நேரத்திற்கேற்றபடி என்ன நடந்து கொண்டிருக்கிறதோ அவற்றையோ பாப்தாதா சதா மிக நன்றாகக் கூறுகிறார் ஆனால் நேரத்தின் வேகம் மற்றும் சேவையின் சம்பூர்ண முடிவின் நிலையைப் பார்த்து பாப்தாதா நினைக்கிறார், சேவாதாரிகளுடைய முயற்சியின் விதியில் ஒருவேளை முன்னேற்றம் ஆனது என்றால் சேவையும் நான்கு மடங்கு அதிகமாகக் கூடும் என. எனவே முதலில் அந்த சேவையும் மிகவும் தேவைப்படுகிறது. சேவையின் நேரத்தைத் தனியாகவும், தனது முயற்சியின் வளர்ச்சிக்கான நேரத்தை தனியாகவும் ஒதுக்குங்கள். சேவையின் நிமித்த ஆத்மாக்களுக்கு இப்போது மனோபலம் (will power) தேவை. மனோபலத்தை அதிகரிப்பதன் மூலம் மற்றவர்களையும் தந்தையின் முன் சகயோகி ஆவதற்கான விருப்பத்தை உண்டாக்க முடியும். பல ஆத்மாக்கள் உங்களுக்கு சகயோகம் அளிப்பதற்காக காத்திருக்கிறார்கள் ஆனால் உங்களுக்கு சக்தி இல்லை. நீங்கள் உங்களுடைய சக்திகளின் உதவியை விசேஷமாகத் தர வேண்டும். எனவே, நிமித்தமாகியுள்ள சேவாதாரிகளிடம் சர்வ சக்திகளின் ஆற்றல் இருக்க வேண்டும் ஆனால் அவை இருக்க வேண்டிய அளவுக்கு இல்லை. அதை நீங்களே பயன்படுத்துவதால் மற்றவர்களுக்கு முழு சக்தியையும் தர முடியவில்லை. பிரம்மாதந்தை இறுதியில் எவ்வாறு குழந்தைகளுக்கு

சக்திகளின் அதிகாரம் கொடுத்தது போல. அந்த விருப்பம் மூலம்தான் இந்த காரியம் நடந்து கொண்டிருக்கிறது. ஆரம்பத்தில் செல்வத்தின் உயிலளித்தார், அதன் மூலம் யக்ஞம் ஸ்தாபனை ஆனது மற்றும் இறுதியில் அதிகாரங்களின் உயிலளித்தார் அதனால் இந்த சேவை அதிகரித்து வருகிறது. பிரம்மாவோ அதைச் செய்தார் ஆனால் பின்பற்றுபவர்கள் குழந்தைகள்தானே? ஒரு பிரம்மாவின் விருப்பத்தின் மூலம் எவ்வளவு ஆத்மாக்கள் வந்துள்ளனர் மற்றும் வந்து கொண்டே இருக்கின்றனர். ஒருவேளை இந்த எல்லா நிமித்த சேவாதாரிகளும் இப்படி சக்திகளின் உயிலை ஆத்மாக்களுக்கு அளித்தனர் என்றால் என்ன நடக்கும், எனவே இது இப்போது தேவை. தனது சொந்த முயற்சியிலேயே தனது ஆற்றலை வீணாக்குவது என்பதல்ல, நீங்கள் தன்னை முன்னேற்ற வேண்டியிருந்தாலும் ஆனால் வீணாகவும் செல்கிறது, எனவே நேரத்தின் வேகத்திற்கு ஏற்றவாறு, சேவையின் முடிவின் வேகத்திற்கு ஏற்றவாறு, சேவாதாரிகளின் வேகம் அதிகம் தேவைப்படுகிறது. இப்போது உங்களை நிமித்தமாக்குங்கள். மற்றவர்களை இதில் முதலில் வைக்காதீர்கள். முதலில் நீங்கள், நீங்களே செய்யுங்கள். நான் 'ஹே அர்ஜுன்' ஆக வேண்டும் என்பதை இதயபூர்வ உற்சாகத்துடன் புரிந்து கொள்ளுங்கள். அர்ஜுன் என்றால் மாஸ்டர் பிரம்மா! நம்பர்-1 என்றால் அர்ஜுன்! நிகழ்ச்சி நிரல்படி சுயமுன்னேற்றத்திற்கான நிகழ்ச்சியை வைத்துக் கொண்டே இருந்திருக்கிறீர்கள், ஆனால் இந்த ஆண்டு பாப்தாதா ஒவ்வொரு சிநேகி ஆத்மா மூலம் சிநேகத்தின் பிரத்யக்ஷ ரூப இதயத்தின் முன்னேற்றத்தை விரும்புகிறார். அன்பு இருக்கும் இடத்தில் பலியாவது அன்பாகுமே தவிர கடினம் அல்ல. ஒவ்வொருவரின் இதயத்திலும் இந்த ஊக்கம் இருந்தால் வெற்றி கிடைக்கும். ஒருவேளை தந்தையின் மீது அன்பு இருந்தால், தந்தை இந்த முறை இதயத்தின் அன்பைப் பார்ப்பார். நீங்கள் எதையாவது தியாகம் செய்ய வேண்டியிருந்தாலும், அது என்ன பெரிய விஷயம். சேவையில் வெற்றி பெற என்ன தியாகம் செய்ய வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியுமா? இதற்கும்கூட நேரம் வேண்டுமல்லவா. சேவையும் நிச்சயமாக செய்ய வேண்டும் மேலும் கண்டிப்பாக சுய முன்னேற்றமும் அடைய வேண்டும். இந்த முறை பாப்தாதா அவரை சந்திக்க நேரம் கொடுக்கிறார். முடிவுகளைப் பார்த்து, பாப்தாதா நிகழ்ச்சிகளைச் முடிவு செய்வார், வர மாட்டார் என்பதுமல்ல. இந்த ஆண்டு பாப்தாதாவை சந்திக்க முடியாமல்

போனவர்கள், உள்நாடு- வெளிநாட்டினருக்காக வருவோம். அதற்கான முறை என்ன என்பதையும் கூறுகிறோம். பாரதவாசிகளுக்காக, ஒவ்வொரு குழுவும் 5-நாட்களுக்கு புத்துணர்வு பெறட்டும், மீதம் ஒரு நாள் வருவதற்கு, ஒரு நாள் போவதற்கு. இந்த முறையின் மூலம் பாரதவாசிகளுக்கு 4-குழுக்களும், வெளிநாட்டவர்களுக்கு 3-குழுக்களும் இருக்கும். வெளிநாட்டவர்களுக்கு 15-நாட்கள் மட்டுமே நிகழ்ச்சி இருக்கும். பாப்தாதா ஒவ்வொரு குழுவிலும் ஒரு முறை சந்திப்பார். முரளி மூலமும் மற்றும் குழுக்கள் மூலமும். மீதமுள்ள நேரம் சிறப்பு சேவாதாரிகளுக்காக இருக்கும். வெளிநாட்டினருக்கு என ஒரு குழு அதுவும் மதுபனில் நடக்கும். மீதமுள்ள 4-குழுக்களை, எந்த நேரத்தில் மதுபனின் தேவைப்படி நீங்களே உருவாக்குங்கள். வெளிநாட்டவர்கள் டிசம்பர் மாதத்திலும், பின்னர் மார்ச் மாதத்திலும் வருவது போல, நீங்கள் ஒரு மாதத்தில் இரண்டு குழுக்களையும், மற்றொரு மாதத்தில் இன்னொரு குழுவையும் வைக்கலாம். பாரதவாசிகளுக்கு ஜனவரி-18'ம், வெளிநாட்டினருக்கு சிவ ஜெயந்தியும்! செப்டம்பர் முதல் நவம்பர் வரை இந்த சேவைக்காக மிகச் சிறந்தவை. முழு பலத்துடன் சேவை செய்யுங்கள். மீதமுள்ள நேரத்தில், சேவாதாரிகளின் குழுக்களை உருவாக்குங்கள்; ஆனால் பாப்தாதா சொன்னதை மறந்து விடாதீர்கள் -நிகழ்ச்சி நிரல்படி முன்னேறாதீர்கள் ஆனால் உங்கள் இதயம் முன்னேறட்டும். உங்கள் இதயத்தின் ஊக்கத்துடன் முன்னேற்றத்தின் பட்டி நடக்கட்டும். சுயம் திட சங்கல்பம் செய்யுங்கள். நான் மாற வேண்டும் என்பதில் உறுதியாக இருங்கள். நான் 'ஹே அர்ஜுன்' ஆக வேண்டும், மாஸ்டர் பிரம்மா ஆக வேண்டும்.

நான்காவது விஷயம்: அனைத்து சேவை நிலையங்களிலும் குறைந்தது 8-நாட்கள், உங்களால் அதிகமாகச் செய்ய முடிந்தால், 15-நாட்கள் சுய முன்னேற்றத்திற்கான பட்டி அல்லது சிநேக சந்திப்பு, ஒவ்வொரு சேவை மையமும் தனித்தனியாகச் செய்யலாம், அது பல சிறிய மையங்கள் ஒன்று சேர்ந்து செய்யலாம்; ஆனால் ஒவ்வொரு இறை மாணவருக்கும், ஒவ்வொரு பிராமண ஆத்மாவுக்கும் நிச்சயமாக இந்த சுய முன்னேற்றத்தின் பட்டி, சிநேக சந்திப்பு அல்லது இதய பூர்வ முயற்சியின் பிராப்திக்கான நிகழ்ச்சியை நிச்சயம் செய்விக்க வேண்டும். நாலா புறமும் உள்ள பிராமண ஆத்மாக்களுக்கு இந்த வாய்ப்பைத் தர வேண்டும் மற்றும் பெறவும் வேண்டும். பாப்தாதா இந்த

ரகசியத்தையும் கூறுகிறார் -யார் விசேஷமாக இதய பூர்வமாக பிராப்தியின் பட்டி செய்கிறாரோ, அவருக்கு பாப்தாதாவின் கூடுதலான ஆசீர்வாதங்கள் கிடைக்கும். ஸ்தூல பரிசு ஒரு பெரிய விஷயம் அல்ல ஆனால் குறிப்பாக அந்த ஆத்மாவுக்கு, பாப்தாதாவிடமோ ஒவ்வொரு விநாடியும் டி.வி. உள்ளதுதானே மேலும் ஒரே நேரத்தில் அனைத்தையும் பார்க்க முடியும். எனவே, யார் இதய பூர்வமாக பிராப்தியின் சங்கல்பம் செய்கிறாரோ, முன்னேறுகிறாரோ, அவருக்கு விசேஷமாக ஆசீர்வாதங்கள் கிடைக்கும். அனுபவம் செய்வார், அந்த நாள் விசேஷ ஆசீர்வாதங்களுக்கானது என்பதை உணர்வார். மீட்டிங்கிலும் இந்த புதுமையை முதலில் செய்யுங்கள். நிகழ்ச்சிகள் சில மூளைக்காக, சில சேவைக்காக ஆனால் இதய பூர்வமாக செய்யுங்கள். மூளைக்கு மட்டும் அதிகமாக இருந்தால், முடிவுக்குப் பிறகு, அடுத்த ஆண்டின் புதிய திட்டத்தை கூறுவோம். பழையவர்களுக்காக ஏதாவது புதிய திட்டத்தைப் பின்னர் உருவாக்குவோம். நல்லது!

சதா தனது முகம் மற்றும் நடத்தை மூலம் தூய்மையின் ஆன்மீகத்தன்மை ஜொலிக்கக்கூடிய, சதா ஒவ்வொரு அடியில் பிரம்மாச்சாரி சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா தன்னை சேவையில் எல்லா சேமிப்புகளும் நிரப்பக்கூடிய ஆத்மாக்களுக்கு, சதா மனதார தனது முன்னேற்றத்திற்காக திட சங்கல்பம் செய்பவர்களுக்கு, சதா சுய முன்னேற்றம் பற்றி தன்னை நம்பர்-1 ஆத்மா நிமித்தமாக்கக்கூடியவன் -அப்படி தந்தையின் அன்பு மற்றும் விசேஷமாக பிரம்மாத்தாயின் அன்பிற்கு, இன்று அன்னையர் தினத்தைக் கொண்டாடினீர்கள்தானே, எனில் பிரம்மாத்தாயின் ராஜகுழந்தைகளுக்கு பிரம்மாத்தாயின் சார்பாக விசேஷமாக இதய பூர்வ அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

**தனிப்பட்ட சந்திப்பு -மதுபன் மற்றும் பாரத வாசிகளுடன் (சாரம்):**

நம்பர்-1'ன் அடையாளம் எல்லா விஷயங்களிலும் வெற்றி அடைவது. ஒருவேளை வெற்றி என்றால் நம்பர்-1 நிச்சயம்.

இப்போது மூன்று சான்றிதழ்கள் ஒவ்வொருவரும் பெற வேண்டும். ஒன்று -புருஷார்த்தத்தில் தனது மனதுக்குப் பிடித்தமானவர், இரண்டாவது -பிரபுவுக்குப் பிடித்தமானவர், மூன்று -பரிவாரத்திற்குப் பிடித்தமானவர்! இந்த சான்றிதழ்கள் கூட இருப்பவர்கள் மூலம் சரி பார்க்கப்படும் (verify).

சுகவள்ளலின் குழந்தைகளிடம் துக்கம் வர முடியாது, ஏனெனில் சுகவள்ளல் தந்தையுடைய கஜானா உங்களுடைய கஜானா ஆகி விட்டது.

5000-வருடங்கள் கழித்து மீண்டும் சந்திப்பதில் எவ்வளவு குஷியாக உள்ளது. சங்கம யுகம் குஷிக்கான யுகமாகும். தனவான் பவ!, சர்வ கஜானா பவ! என்ற வரதானம் கிடைத்துள்ளது.

இந்தப் பாடலை பாடிக் கொண்டே இருங்கள் -எல்லாம் கிடைத்து விட்டது! 21-ஜென்மத்திற்கு உத்தரவாதம் (guarantee), இந்த கஜானாக்கள் கூடவே இருக்கும். இத்தனை பெரிய உத்தரவாதம் யாராலும் தர முடியாது. நல்லது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 31.03.1990 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இரக்க மனம் மற்றும் எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வு!

இன்று அன்பு நிறைந்த மற்றும் கருணை நிறைந்த பாப்தாதா தனக்குச் சமமான குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இன்று பாப்தாதா தந்தையைத் தெரியாத உலகின் பிற குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். தெரிந்திராதவர்களாக (பாபாவை) இருந்தாலும் கூட குழந்தைகள் தான். பாப்தாதாவின் சம்பந்தத்தில் அனைத்துக் குழந்தைகளையும் பார்த்துக் கொண்டே என்ன அனுபவம் செய்தோம் என்றால், பெரும்பான்மையான ஆத்மாக்களுக்கு அவ்வப்பொழுது ஏதாவது காரணத்தினால் தெரிந்தும், தெரியாமலும், தற்போது கருணை, இரக்கம் தேவைப்படுகிறது. மேலும் தேவையின் காரணமாகத்தான் கருணை நிறைந்த தந்தையை நினைவு செய்து கொண்டே இருக்கிறார்கள். எனவே நாலாபுறத்தின் அவசியத்திற்கேற்ப இந்த நேரம் கருணைப்பார்வைக்கான அழைப்பு இருக்கிறது ஏனென்றால் ஒன்று பல்வேறு பிரச்சனைகளின் காரணமாக தங்களின் மனம், புத்தியின் சமநிலை இல்லாத காரணத்தினால் கருணை நிறைந்த தந்தையை மற்றும் அவர்களது நம்பிக்கைக்குரியவர்களை கருணைக்காக மிகவும் துக்கமாக, மனவேதனையுடன் அழைத்துக் கொண்டே இருக்கிறார்கள். தெரியாத ஆத்மாக்கள் தந்தையைத் தெரியாத காரணத்தினால் தன்னுடைய தர்ம தந்தைகளையும், குருக்களையும், இஷ்ட தேவதைகளையும் கருணை நிறைந்தவர்கள் என்று நினைத்து அழைக்கிறார்கள் ஆனால் இந்த நேரம் ஒரு தந்தை பரமாத்மாவைத் தவிர வேறு யாரிடமிருந்தும் கருணை கிடைக்க முடியாது என்று நீங்கள் அனைவரும் தெரிந்து இருக்கிறீர்கள். தந்தை அவர்களின் ஆசையைப் பூர்த்தி செய்யும் காரணத்தினால், அவர்களது பாவனைக்கு பலன் கொடுக்கும் காரணத்தினால் ஏதாவது இஷ்ட தேவதையை அல்லது மகான் ஆத்மாவை அதற்குப் பொறுப்பாக கருவியாக ஆக்குகிறார் ஆனால் கொடுப்பவர் (பாபா) ஒருவர் தான்.

எனவே இந்த நேரத்திற்கேற்றபடி கருணை நிறைந்த தந்தையின் உடனிருந்து உதவி செய்யும் கரங்களாக இருப்பவர்கள் நீங்கள் பிராமண குழந்தைகள் தான் என்று தந்தை குழந்தைகளுக்குக் கூறுகிறார். எனவே எதன் அவசியமோ அதைக் கொடுத்தால் மகிழ்ச்சி அடைந்து விடுவார்கள். அப்படியானால் மாஸ்டர் கருணை நிறைந்தவர்களாக ஆகியிருக்கிறீர்களா? உங்களுடைய சகோதர-சகோதரிகள் தானே? உடன் பிறந்தவர்களானாலும் ஒன்றுவிட்டவர்களானாலும் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தானே. தன்னுடைய குடும்பத்தைச் சேர்ந்த தெரியாத, வேதனையோடு இருக்கும் ஆத்மாக்கள் மேல் இரக்கமனமுடையவராகுங்கள். இதயத்திலிருந்து இரக்கம் வரட்டும். உலகிலுள்ள அறியாத ஆத்மாக்களுக்காகவும் இரக்கம் வேண்டும் மேலும் கூடவே பிராமணக் குடும்பத்தின் முயற்சியின் அதிவேகத்திற்காகவும் மற்றும் சுய முன்னேற்றத்திற்காகவும் இரக்க மனதின் அவசியம் இருக்கிறது. சுய முன்னேற்றத்திற்காக தன் மேல் எப்பொழுது இரக்க மனமுடையவர்களாக ஆகிறார்கள் என்றால் இரக்கமனமுடைய ஆத்மாவிற்கு எப்பொழுதும் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள் உணர்வு தானாக வருகிறது. நான் எவ்வளவு உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் அதே ஆத்மா ஆவேன் மேலும் அதே தந்தைக்குச் சமமாகும் இலட்சியம் உடையவன் என்று தன் பொருட்டும் இரக்கம் இருக்கட்டும். அந்த மாதிரி இயற்கையான உயர்ந்த சுபாவம் மற்றும் சம்ஸ்காரத்தில் ஒருவேளை ஏதாவது குறை இருந்தால் தன்மேல் இருக்கும் இதயப்பூர்வமான இரக்கம் குறைகளிலிருந்து வைராக்கியத்தைக் கொண்டு வந்து விடும்.

இன்று, அனைத்து குழந்தைகளும் ஞானத்தில் மிகவும் திறமைசாலிகள் தான் என்று பாப்தாதா அவர்களுக்குள் ஆன்மீக உரையாடல் செய்து கொண்டிருந்தனர். புள்ளி சொரூபமாக ஆகி விட்டீர்கள், ஆனால் ஒவ்வொரு பலகீனத்தை தெரிந்து கொள்ளும் கருத்துக்கள் (ஞானத்துளிகள்) இருக்கிறதல்லவா? அதாவது இது நடக்க வேண்டும், இதைச் செய்யக் கூடாது என்று தெரிந்தும் இருக்கிறீர்கள் ஆனால் தெரிந்திருந்தும் கூட புள்ளி சொரூபமாக வேண்டும் மற்றும் என்னென்ன வீணானதைப் பார்த்தீர்களோ, கேட்டீர்களோ, அல்லது அதன் மூலமாக நடந்ததோ அவைகளுக்கு முற்றுப்புள்ளி என்கிற புள்ளி வைக்கத் தெரியவில்லை. கருத்துக்கள் இருக்கவே இருக்கிறது ஆனால்

கருத்தின் சொரூபமாக ஆவதற்கு விசேஷமாக என்ன தேவையாக இருக்கிறது? தன்மேல் இரக்கம் மற்றும் மற்றவர்கள் மேல் இரக்கம். பக்தி மார்க்கத்தில் கூட உண்மையான பக்தர்கள் இருக்கிறார்கள், நீங்கள் கூட உண்மையான பக்தர்களாக ஆகியிருந்தீர்கள், அவையனைத்தும் ஆத்மாவில் நிரப்பப்பட்டிருக்கிறது அல்லவா! அப்படி உண்மையான பக்தர்கள் எப்பொழுதும் இரக்க மனமுடையவர்களாக இருப்பார்கள். எனவே அவர்கள் பாவச் செயல்களுக்கு பயப்படுவார்கள். தந்தைக்கு பயப்படுவதில்லை, ஆனால் பாவங்களுக்குப் பயப்படுவார்கள். எனவே அனேகர் பாவ காரியங்கள் செய்யாதவர்களாக இருப்பார்கள். அப்படி ஞான மார்க்கத்திலும் யார் சரியான இரக்க மனமுடையவர்களாக இருப்பார்களோ அவர்களுக்கு மூன்று விஷயங்களிலிருந்து விலகுவதற்கான சக்தி இருக்கிறது. யாரிடம் இரக்கம் இல்லையோ அவர்கள் தெரிந்திருந்தும், புரிந்திருந்தும் மூன்று விஷயங்களின் அடிமைகள் ஆகி விடுகிறார்கள். அந்த மூன்று விஷயங்கள் -அலட்சியம், பொறாமை மற்றும் வெறுப்பு! எந்த ஒரு பலகீனம் மற்றும் குறைவிற்கான காரணம் 90-சதவிகிதம் இந்த மூன்று விஷயங்களினால் தான் ஏற்படுகின்றன. மேலும் யார் இரக்க மனமுடையவராக இருப்பாரோ அவர் தந்தைக்குத் துணையாக, தர்மராஜின் தண்டனைகளிலிருந்து விடுபடுவதற்கான நல்ல விருப்பங்கள் வைப்பார்கள். எப்படி பக்தர்கள் பயத்தின் காரணமாக. அலட்சியமாக இருப்பதில்லையோ அதேபோல் பிராமண ஆத்மாக்கள் தந்தையின் அன்பின் காரணமாக, தர்மராஜாவைக் கடந்து செல்லாமல் இருக்க வேண்டும் என்கிற இந்த இனிய பயத்தினால் அலட்சியமானவர்களாக இருப்பதில்லை. தந்தையின் அன்பு அவைகளிலிருந்து விலக்கி விடுகிறது. தன்னுடைய இதயம் நிறைந்த இரக்கம் அலட்சியத்தை இல்லாமல் செய்து விடுகிறது. மேலும் தனக்காக இரக்க உணர்வு வருகிறது என்றால், அச்சமயத்தில் எப்படி உள் உணர்வு, எப்படி நினைவோ அப்படி அனைத்து பிராமண படைப்பிற்காகவும் இயல்பாகவே இரக்க மனமுடையவர்கள் ஆகிறார்கள். இது தான் சரியான ஞானம் நிறைந்த இரக்கமாகும். ஞானம் இல்லாத இரக்கம் சில சமயம் நஷ்டத்தையும் ஏற்படுத்துகிறது ஆனால் ஞானம் நிறைந்த இரக்கம் ஒருபோதும் எந்த ஆத்மாவிற்காகவும் மனதில் பொறாமை மற்றும் வெறுப்புணர்வை உற்பத்தி ஆக விடுவதில்லை. ஞானம் நிறைந்த இரக்கத்தின் கூடவே தன்னுடைய ஆன்மீகம் கலந்த அன்பும்

அவசியம் இருக்கிறது. இரக்கம் மட்டும் தனியாக இருப்பதில்லை ஆனால் இரக்கம் மற்றும் ஆன்மீக அன்பு இரண்டிற்கும் சமநிலை இருக்கிறது. ஒருவேளை ஞானம் நிறைந்த இரக்கம் இல்லை, சாதாரண இரக்கமாக இருந்தால் எந்த ஒரு ஆத்மாவின் மீதும் அது பற்றுதலின் ரூபத்திலோ அல்லது ஏதாவது ஒரு பலகீனத்தினால் அவருடைய பிரபாவத்திலோ வந்து விடக்கூடும். பிரபாவமும் ஆகக்கூடாது. வெறுப்பும் வேண்டாம் பிராபவமும் வேண்டாம். ஏனென்றால் நீங்கள் உடல், மனம், புத்தியால் தந்தை மேல் பிரபாவம் ஆகி விட்டீர்கள். எப்பொழுது மனம், புத்தி ஒருவரின் பக்கம், மேலும் உயர்ந்ததிலும் உயர்ந்தவரின் பக்கம் பிரபாவம் ஆகி விட்டது என்றால் பின்பு மற்றவர்கள் மேல் எப்படி பிரபாவம் ஆக முடியும்? ஒருவேளை மற்றவர்கள் மேல் பிரபாவம் ஆனீர்கள் என்றால் அதை என்னவென்று சொல்வது? கொடுத்து விட்ட பொருளை மீண்டும் அவரே உபயோகிப்பது என்பது என்றால் வைப்பாக கொடுக்கப்பட்ட பொருளைத் துஷ்பிரயோகம் செய்வது போலாகும். எப்பொழுது மனம், புத்தியைக் கொடுத்து விட்டீர்களோ அப்பொழுது அது உங்களுடையதாகவே இல்லை. பின்பு எப்படி பிரபாவம் ஆக முடியும்? தந்தையிடம் ஒப்படைத்து விட்டாகி விட்டதா? அல்லது பாதி வைத்திருக்கிறீர்கள், பாதி கொடுத்து விட்டீர்களா? யார் முழுமையாகக் கொடுத்து விட்டார்களோ அவர்கள் கையைத் தூக்குங்கள். பாருங்கள், பிராமண வாழ்க்கையின் அஸ்திவாரம், மகா மந்திரம் என்ன? மன்மனாபவ. அப்படியானால் மன்மனாபவவாக ஆகவில்லையா? எனவே ஞானம் நிறைந்த இரக்க மனமுடைய ஆத்மா ஒருபோதும் யார் மேலேயும், அது குணங்கள் மேலானாலும் சரி, சேவை மேலானாலும் சரி, அல்லது எந்த விதமான உதவி பிராப்தி ஆகும் காரணத்திலானாலும் சரி, பிற ஆத்மா மேல் பிரபாவம் ஆக முடியாது. ஏனென்றால் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உணர்வு இருக்கும் காரணத்தினால் தந்தையின் அன்பு, உதவி, துணை இவற்றைத் தவிர வேறு எதுவும் தென்படாது. புத்தியில் வரவே வராது. உன்னுடனே அமருவேன், உன்னுடனே தூங்குவேன், உன்னிடமிருந்து தான் உணவு அருந்துவேன், உன்னுடன் தான் சேவை செய்வேன், உன்னுடைய துணையுடன் தான் கர்மயோகி ஆவேன் இந்த நினைவு தான் எப்பொழுதும் அந்த ஆத்மாவிற்கு இருக்கும். ஏதாவது ஒரு உயர்ந்த ஆத்மாவின் உதவி கிடைத்தாலும் கூட, அவருக்கும் கொடுத்தவர் யார்? அப்படியென்றால் ஒரு தந்தையின் பக்கம் மட்டும்

தான் புத்தி போகும் இல்லையா? உதவியை எடுத்துக் கொள்ளுங்கள் ஆனால் கொடுப்பவர் யார், இதை மறந்து விடக்கூடாது ஸ்ரீமத் ஒரு தந்தையினுடையது யாராவது பொறுப்பில் இருக்கும் ஆத்மா உங்களுக்கு தந்தையின் ஸ்ரீமத்தை நினைவூட்டுகிறார் என்றால், அது அவருடைய ஸ்ரீமத் என்று சொல்ல முடியாது ஆனால் தந்தையின் ஸ்ரீமத்தைப் பின்பற்றி மற்றவர்களையும் பின்பற வைப்பதற்காக நினைவூட்டுகிறார் அவ்வளவே. பொறுப்பில் இருக்கும் ஆத்மாக்கள், உயர்ந்த ஆத்மாக்கள் ஒருபோதும் என்னுடைய வழிப்படி நடக்கவும் என்று கூற மாட்டார்கள். நான் கூறும் வழி தான் ஸ்ரீமத் என்றும் கூற மாட்டார்கள். ஸ்ரீமத்தை மண்டும் நினைவூட்டுகிறார், இதைத்தான் சரியாக உதவி எடுத்துக் கொள்வது மற்றும் உதவி கொடுப்பது என்று கூறுவது. தீதியின், தாதியின் ஸ்ரீமத் என்று கூறுவதில்லை. பொறுப்பில் இருப்பவர்களாக ஆகிறார்கள் மற்றும் ஸ்ரீமத்தின் சக்தியை நினைவூட்டுகிறார்கள். எனவே எந்த ஒரு ஆத்மா மீதும் பிரபாவம் ஆகாதீர்கள். ஒருவேளை ஏதாவது ஒரு விஷயத்தில் யார் மேலேயாவது பிராவம் ஆகிறீர்கள் என்றால் அவருடைய பெயரின் மகிமையின் காரணமாக/ உருவத்தின் மேல் அல்லது ஏதாவது விசேஷத்தின் மேல் என்றால் ஈடுபாட்டின் காரணமாக, பிரபாவம் ஆன காரணத்தினால் புத்தி அங்கே மாட்டிக் கொள்ளும். ஒருவேளை புத்தி மாட்டிக் கொண்டால் பறக்கும் கலை இருக்க முடியாது. தன் மேலேயே பிரபாவம் ஆகிறார்கள் -எனக்கு மிகவும் நன்றாகத் திட்டமிடும் புத்தி இருக்கிறது என்னுடைய ஞானம் மிகவும் தெளிவாக இருக்கிறது, என்னைப் போல் யாரும் சேவை செய்ய முடியாது, எனக்குக் கண்டுபிடிக்கும் புத்தி இருக்கிறது குணம் நிறைந்தவன் என்று இந்த மாதிரி தன் மேலேயேயும் பிராபவம் ஆகக்கூடாது. விசேஷம் இருக்கிறது, திட்டமிடும் புத்தி இருக்கிறது ஆனால் பொறுப்பில் இருப்பவராக யார், ஆக்கினார்? சேவை என்றால் என்ன என்று முன்பு தெரிந்திருந்தீர்களா என்ன? எனவே சுய முன்னேற்றத்திற்காக சரியாக ஞானம் நிறைந்தவர்களாக ஆவது மிகவும் அவசியம். பின்பு இந்தப் பொறாமை, வெறுப்பு எல்லாமே முடிவடைந்து விடும். சுய முன்னேற்றத்தில் அதிக வேகத்தின் குறைவிற்கான முக்கிய காரணமே -பொறாமை மற்றும் வெறுப்பு அல்லது பிராபவம் ஆவது தன் மேலேயோ அல்லது மற்றவர்கள் மேலேயோ பிரபாவம் ஆவது. மேலும் நாலாவது விஷயமாக அலட்சியத்தைக் கூறியிருந்தோம்.

இவையெல்லாம் நடக்கத்தான் செய்யும், நேரம் வரும்பொழுது தயாராகி விடுவோம், இது தான் அலட்சியம் பாப்தாதா சிரிப்பாக ஏற்கனவே ஒரு விஷயம் கூறியிருந்தார். பிராமண ஆத்மாக்களுக்கு தூரத்துப் பார்வை மிகவும் தெளிவாக இருக்கிறது ஆனால் கிட்டப்பார்வை கொஞ்சம் பலகீனமாக இருக்கிறது. எனவே மற்றவர்களின் குறை விரைவில் தென்படுகிறது மேலும் தன்னுடைய குறை தாமதமாகத் தென்படுகிறது. எனவே இரக்க பாவனை அன்பு நிறைந்ததாகவும், இருக்கட்டும். கருணை நிறைந்ததாகவும் இருக்கட்டும். இதன் மூலம் இதயத்திலிருந்து வைராக்கியம் வரும் எந்த நேரம் கேட்கிறார்களோ அல்லது பட்டி நடக்கிறதோ, அல்லது ஆன்மீக உரையாடல் நடக்கும் பொழுதோ அந்த நேரத்தில் மட்டும் இப்படித்தான் செய்ய அல்லது நடக்க வேண்டும் என்று அனைவரும் புரிந்து கொள்கிறார்கள். அது அற்ப கால வைராக்கியம், இதயத்திலிருந்து வருவதில்லை. எது தந்தைக்கு விருப்பமில்லையோ அதன் மேல் இதயத்திலிருந்து வைராக்கியம் வர வேண்டும். தனக்கே பிடித்தமானதாக இருப்பதில்லை, ஆனால் எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கிய உணர்வு என்ற ஏரை ஓட்டுங்கள், இரக்க மனமுடையவர் ஆகுங்கள். அனேகக் குழந்தைகள் அதிகமான நல்ல நல்ல விஷயங்கள் கூறுகிறார்கள். என்ன குறுகிறார்கள் என்றால் யாராவது எப்பொழுது பொய் சொல்கிறார்களோ அப்பொழுது மிகவும் கோபம் வருகிறது பொய் சொல்வதால் கோபம் வருகிறது அல்லது தவறு செய்தால் கோபம் வருகிறது. தானாக வருவதில்லை. அவர் பொய் சொன்னார் அதைத் தவறு என்று நினைக்கிறீர்கள் அது சரி தான் ஆனால் நீங்கள் கோபப்படுகிறீர்களே அது மட்டும் சரியா? தவறு செய்பவர் எப்படி இன்னொரு தவறு செய்யவருக்கு புரிய வைக்க முடியும்? அதனுடைய பாதிப்பு எப்படி ஏற்படும்? அந்த நேரம் தன்னுடைய தவறைப் பார்ப்பதில்லை ஆனால் மற்றவர்களின் பொய்யின் சின்ன விஷயத்தைக் கூட பெரிதாக்கி விடுகிறார்கள். அந்த மாதிரி நேரத்தில் இரக்க மனமுடையவராகுங்கள். எனக்கு கிடைத்துள்ள தந்தையின் சக்தி மூலமாக இரக்க மனமுடையவராகுங்கள், சகயோகம் கொடுங்கள். இலட்சியம் நல்லதாக வைக்கிறார்கள், அவரைப் பொய் சொல்வதிலிருந்து காப்பாற்றுகிறார்கள். இலட்சியம் நல்லது தான் அதற்காகப் பாராட்டுகள் ஆனால் முடிவு என்ன வந்தது? அவருக்கும் தோல்வி உங்களுக்கும் தோல்வி. அப்படி தோல்வியானவர் இன்னொரு

தோல்வியானவரை வெற்றி அடைய வைக்க முடியுமா? அவரை நல்லவராக்க வேண்டும், முன்னேற்ற வேண்டும், இது என்னுடைய பொறுப்பு என்று சிலர் நினைக்கிறார்கள் ஆனால் பொறுப்பை நிறைவேற்றுபவர்கள் அந்த நேரம் தன்னுடைய பொறுப்பை நிறைவேற்றுகிறீர்களா அல்லது மற்றவர்களுடையதை நிறைவேற்றுகிறீர்களா? அனேக பொறுப்பிலுள்ள டீச்சர்ஸ் சிறியவர்களுக்கு நாங்கள் தான் பொறுப்பு அறிவுரை கூற வேண்டும், கற்றுக் கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள் ஆனால் சரியான ஞானம் தான் வருமானத்திற்கான ஆதாரம் என்று எப்பொழுதும் நினையுங்கள். ஒருவேளை ஆசிரியர் என்ற பொறுப்பிலிருந்து அறிவுரை கூறினீர்கள் அந்த அறிவுரையினால் மற்றவர்களுக்கு வருமானம் சேர்ந்திருக்கிறதா என்ற முதலில் பாருங்கள். வருமானத்திற்கான ஆதாரம் ஆனதா? அல்ல, இறங்குவதற்கான ஆதாரம் ஆனதா? எனவே தான் எந்த ஒரு காரிய செய்தாலும் மூன்று காலத்தையும் தெரிந்த நிலையில் நிலைத்திருந்து காரியங்கள் செய்யுங்கள் என்று பாப்தாதா எப்பொழுதும் கூறுகிறார். இவர் இப்படிச் செய்தார், அதனால் தான் சொன்னேன் என்று நிகழ் காலத்தை மட்டும் பார்க்காதீர்கள் ஆனால் எதிர்காலத்தில் அதன் விளைவுகள் என்னவாகும், அதையும் பாருங்கள். பழைய ஆதி, அனாதி நிலை பிராமணர்களுக்கு இருந்தது இல்லையா? இப்பொழுதும் இருக்கிறது இனி மேலும் இருக்கும், அதன்படி இருக்கிறதா? மூன்று காலத்தையும் சோதனை செய்யுங்கள், பின்பு பாப்தாதா என்ன விரும்புகிறார் என்று புரிந்து கொள்வீர்கள்.

சுய முன்னேற்றம் செய்வீர்கள் தான், ஆனால் மாற்றம் என்ன கொண்டு வருவீர்கள்? மகாரதியாக இருந்தாலும் சரி, புதியவர்களாக இருந்தாலும் சரி, பாப்தாதா ஒரே ஒரு சுப ஆசை தான் வைத்திருக்கிறார். எவ்வளவு விரும்புகிறாரோ அந்த அளவு இன்னும் ஆகவில்லை முடிவைக் கூறுவோம் இல்லையா? பாப்தாதா அற்ப கால வைராக்கியத்தை விரும்பவில்லை. தனக்கே வைராக்கியம் வர வேண்டும். தந்தைக்குப் பிடிக்காததைச் செய்யாதீர்கள், நினைக்காதீர்கள், பேசாதீர்கள். இதைத்தான் இதயப்பூர்வமான அன்பு என்று பாப்தாதா கூறுகிறார். இப்பொழுது கலந்திருக்கிறது. சில சமயம் இதயத்தின் அன்பு, சில சமயம் புத்தியின் அன்பு மாலையின் ஒவ்வொரு மணியும் ஒவ்வொரு மணியுடன் அருகில் இருக்கட்டும், அன்பாக இருக்கட்டும்,

முன்னேற்றத்திற்காக, சகயோகியாக இருக்கட்டும். எனவே தான் மாலை உருவாவது நின்று விட்டிருக்கிறது. ஏனென்றால் மாலை தயார் ஆவது என்றால் ஜோடி மணிகளுக்குச் சமமாக ஒருவர் இன்னொருவருக்கு நெருங்கிய அன்பானவர்கள் ஆக வேண்டும். முதலில் 108-மணி மாலை உருவாகட்டும். அப்பொழுது தான் அடுத்தது உருவாகும். பாப்தாதா அனேக தடவை மாலையைத் தயார் செய்வதற்காக அமருகிறார் ஆனால் இப்பொழுது முழுமையாகவே இல்லை, மணி, பிற மணிகளின் அருகில் எப்பொழுது வருகிறது என்றால், அதாவது தந்தை அதை எப்பொழுது கோர்க்கிறார் என்றால் எப்பொழுது மணிகளுக்கு மூன்று சான்றிதழ் இருக்கிறதோ அப்பொழுது தான்.

தந்தைக்கு பிடித்தமானோர் பிராமண குடும்பத்திற்குப் பிடித்தமான மற்றும் தான் செய்கின்ற சரியான முயற்சி பிடித்தமான என்று மூன்று விஷயங்களையும் சோதனை செய்தார் என்றால் மணிகள் கையிலேயே இருந்து விடுகிறது. மாலையில் வருவதில்லை அப்படியானால் இந்த வருடம் எந்த சுலோகன் நினைவு வைப்பீர்கள்? மூர்த்தி தந்தை மற்றும் விசேஷமாக மூன்று சம்பந்தத்திலும் மூன்று சான்றிதழ்களை வாங்க வேண்டும். மேலும் மற்றவர்களும் பெறுவதற்கு சகயோகி ஆக வேண்டும். மாலையின் நெருங்கிய மணியாக ஆகவே வேண்டும். சுயமுன்னேற்றம் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டீர்களா? எப்படி பிரம்மாபாபாவின் அஸ்திவாரமாக மாற்றத்தில் என்ன இருந்தது? எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கியம். தந்தை என்ன கூறினாரோ அதை பிரம்மா செய்தார், வெற்றி அடைந்து முதல் எண்ணில் வந்து விட்டார். நல்லது.

பாப்தாதா முடிவினை (ரிஸல்ட்) பார்ப்பார். ஒவ்வொருவரும் தன்னைப் பார்க்கட்டும், மற்றவர்களைப் பார்க்க வேண்டாம். இந்த சீசனின் கடைசி நாள் இன்று என்று அனேகர் நினைக்கிறார்கள் ஆனால் கடைசி இல்லை, மாலை உருவாக்குவதற்கான சீஸனின் நாள். அனைவருக்கும் வாய்ப்பு இருக்கிறது. இப்பொழுது மாலையின் மணிகள் கோர்க்கப்படவில்லை, முடிவாகவில்லை, மூன்று சான்றிதழ் வாங்குங்கள். கோர்க்கப்பட்டு விடுவீர்கள். எவ்வளவு பிரத்யக்ஷமாக பலனை காண்பிக்கக் கூடியவர்கள் (நீங்கள்) பிரத்யக்ஷமாக முகம் மற்றும் நடத்தையில்

பார்ப்போமோ அவ்வளவிற்கு மீண்டும் பொலிவான தோற்றத்தைப் பார்ப்போம். ஒருவேளை நீங்களும் எந்நிலையில் இருந்தீர்களோ அதே நிலையிலேயே இருந்தீர்கள் என்றால் தோற்றம் கூட அப்படியே (பழையதாகவே) இருந்து விடும். எனவே உங்களிடம் புதுமையைக் கொண்டு வாருங்கள். குடும்பத்திலும் தீவிர முயற்சியின் புதிய அலையைக் கொண்டு வாருங்கள். பின்பு வரும் நாட்களில் எவ்வளவு அதிசயக் காட்சிகளையெல்லாம் பார்ப்பீர்கள்! இதுவரை என்ன நடந்ததோ அது நடந்து முடிந்து விட்டது, இப்பொழுது ஒவ்வொரு காரியத்திலும் புது நகம், புது உற்சாகம் இந்த இறக்கைகளால் பறந்து செல்லுங்கள். மற்றபடி சேவையில் யார் யார் சகயோகம் கொடுத்தார்களோ அதாவது தன்னுடைய பாக்கியத்தை சேமித்தார்களோ அதனை மிகவும் நன்றாகவே செய்தார்கள். வெளிநாட்டினரும், பாரதவாசிகளும் நாலா புறமுமுள்ள சேவாதாரிகளும் சேவை செய்தார்கள். எனவே சேவாதாரி என்றால் பொன்னான வாய்ப்பு என்ற பாக்கியத்தை எடுப்பவர்கள் என்று சேவாதாரிகளை எப்பொழுதும் பாப்தாதா கூறுகிறார். இப்பொழுது இந்த பாக்கியத்தை எங்கு சென்றாலும் அதிகரித்துக் கொண்டே இருங்கள். குறைய விடாதீர்கள். குறைந்த காலத்திற்கான வாய்ப்பு நிரந்தரமாக தீவிர முயற்சிக்கான அரிய வாய்ப்பைக் கொடுத்துக் கொண்டேயிருக்கும். சேவாதாரிகளிலும் திரும்பிச் சென்று விட்டவர்களுக்கும், சென்று கொண்டிருபவர்களுக்கும் அனைவருக்கும் பாராட்டுக்கள். நல்லது.

அனைத்து இரக்க மனமுடைய உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுது தன்னை முன்னேறும் கலையில் கொண்டு செல்லும் தீவிர முயற்சி செய்யும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் ஒவ்வொரு நேரமும் ஒரு தந்தையுடன் இருப்பதாக அனுபவம் செய்யும் அனுபவி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தந்தையின் இதயத்தின் ஆசைகளை நிறைவேற்றும் குலவிளக்கு ஆத்மாக்களுக்கு எப்பொழுதும் தன்னை மாலையின் நெருங்கிய மணியாக உருவாக்கும் வெற்றி ஆத்மாக்களுக்கு எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள் உணர்வு மூலமாக ஒவ்வொரு நேரமும் தந்தையைப் பின்பற்றி தந்தைக்குச் சமமாக ஆகும் மிக அன்பு நிறைந்த வலதுகர குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

வரதானம்: தன்னுடைய உண்மையான சம்ஸ்காரங்களை வெளிப்படுத்தி எப்பொழுதும் மகிழ்ச்சியோடு இருக்கக்கூடிய ஞான சொரூபமானவர்கள் ஆகுக!

எந்தக் குழந்தைகள் ஞானத்தைச் சிந்தித்து அதன் சொரூபம் ஆகிறார்களோ அவர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியோடு இருப்பது இது பிராமண வாழ்க்கையில் உண்மையான சம்ஸ்காரமாகும் தெய்வீக குணங்கள் நம்முடையது. தீய குணங்கள் மாயாவினுடையது. அது தீய சேர்க்கையினால் வந்து விட்டது. இப்பொழுது அதைத் திருப்பி அனுப்பி விடுங்கள். மேலும் தன்னுடைய சர்வ சக்திகள் நிறைந்த அதிகாரப் பதவியில் இருந்தீர்கள் என்றால் எப்பொழுதும் மகிழ்ச்சியோடு இருப்பீர்கள். எந்த ஒரு அசுர மற்றும் வீணான சம்ஸ்காரம் எதிரில் வரக் கூட துணிச்சல் கொள்ள முடியாது.

சுலோகன்: சம்பூரணம் ஆக வேண்டும் என்ற இலட்சியத்தை முன்னுக்கு வைத்தீர்கள் என்றால் எண்ணத்தில் கூட (உங்களை) எந்த ஒரு கவர்ச்சியும் கவர முடியாது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 13.12.1990 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தபஸ்யாவின் அஸ்திவாரம் எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்யம்!

இன்று பாப்தாதா அனைத்து அன்பான குழந்தைகளின் அன்பு என்ற மலர்கள் அர்ப்பணம் ஆகிக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார். பாரத தேசத்து மற்றும் வெளிநாட்டு அனைத்து குழந்தைகளின் மனப்பூர்வமான அன்பின் மலர்களின் மழையைப் பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைத்துக் குழந்தைகளின் மனதின் ஒரே ஒரு இசை மற்றும் பாடல் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஒரே ஒரு பாடல் “என்னுடைய பாபா" நாலாபுறமும் சந்திப்புக் கொண்டாட்டத்தின் நல்ல எதிர்பார்ப்புக்களின் தீபம் பிரகாசமாக ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. இந்த தெய்வீகமான காட்சியை முழுக் கல்பத்திலும் பாப்தாதா மற்றும் குழந்தைகளைத் தவிர வேறு யாரும் பார்க்க முடியாது இந்த அபூர்வமான அன்பின் மலர் இங்கு இந்த பழைய உலகத்தின் கோஹினூர் வைரத்தை விட விலை மதிப்புள்ளது. மனதிலிருந்து வரும் பாடலைக் குழந்தைகளைத் தவிர வேறு யாரும் பாட முடியாது. இந்த மாதிரி தீபாவளியை (தீப் மாலா) யாரும் கொண்டாட முடியாது. பாப்தாதாவின் எதிரில் அனைத்துக் குழந்தைகளும் வெளிப்பட்டுத் தோன்றியுள்ளார்கள். இந்த ஸ்தூலமான இடத்தில் அனைவரும் அமர முடியாது ஆனால் பாய்தாதாவின் இதய சிம்மாசனம் மிகவும் விசாலமானது. எனவே அனைவரையும் வெளிப்பட்டுத் தோன்றிய ரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அனைவரின் அன்பு நினைவுகளையும் மேலும் அன்பு நிறைந்த அதிகாரத்தின் முறையீடுகளையும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். கூடவே ஒவ்வொரு குழந்தைக்கும் பிரதி உபகாரமாக பலமடங்கு அதிக அன்பு நினைவுகள் கொடுக்கிறோம். நாங்கள் அனைவரும் சாகார சொரூபத்தில் சந்திப்பு செய்ய வேண்டும் என்று குழந்தைகள் அதிகாரத்தோடு கூறுகிறார்கள். தந்தையும் விரும்புகிறார், குழந்தைகளும் விரும்புகிறார்கள். இருந்தாலும் நேரத்திற்குத்

தகுந்தாற்போல் பிரம்மாபாபா அவ்யக்த பரிஸ்தா ரூபத்தில் சாகார சொரூபத்தை விட இவ்வுலகில் உடலில் இருந்ததை விட அனேக மடங்கு அதி வேகமாக சேவை செய்து கொண்டே குழந்தைகளைத் தனக்குச் சமமாக மாற்றிக் கொண்டு இருக்கிறார். ஒரு வருஷம் இரண்டு வருடமில்லை ஆனால் அனேக வருடங்கள் அவ்யக்த ரூபத்தில் சேவையின் அனுபவம் செய்வித்தார். மேலும் செய்வித்துக் கொண்டும் இருக்கிறார். பிரம்மாபாபா அவ்யக்தம் ஆன பிறகும் வியக்தத்தில் ஏன் தன் பங்கை செய்து கொண்டிருக்கிறார்? சமமாக ஆக்குவதற்காக பிரம்மாபாபா அவ்யக்தத்திலிருந்து வியக்தத்தில் வந்தார் என்றால் அதற்குப் பிரதிபலனாகக் குழந்தைகள் என்ன செய்ய வேண்டும்? வியக்தத்திலிருந்து அவ்யக்தம் ஆக வேண்டும். நேரத்திற்கு ஏற்றபடி அவ்யக்த சந்திப்பு அவ்யக்த ரூபத்தில் சேவை இப்பொழுது மிக அவசியம். எனவே அவ்வப்பொழுது பாப்தாதா அவ்யக்த சந்திப்பின் பிராப்திக்கான வழிமுறையை கொடுத்துக் கொண்டே இருக்கிறார். இதற்காகத் தபஸ்யா வருடமும் கொண்டாடிக் கொண்டு இருக்கிறீர்கள் இல்லையா? பெரும்பான்மையான குழந்தைகளின் ஊக்கம், உற்சாகம் நன்றாக இருக்கிறது என்று பாப்தாதா மகிழ்ச்சியடைகிறார். நிகழ்ச்சி நிரல்படி செய்து தான் ஆக வேண்டும் என்று சிறுபான்மையினர் நினைக்கிறார்கள். ஒன்று நிகழ்ச்சிப்படி செய்வது. இன்னொன்று மனதின் ஊக்கம், உற்சாகத்தோடு செய்வது. நான் எதில் இருக்கிறேன் என்று ஒவ்வொருவரும் அவரவர்களைக் கேளுங்கள்.

நேரத்தின் சூழ்நிலைகளுக்குத் தகுந்தாற் போல், தனது முன்னேற்றத்திற்காகவும், சேவையின் மிகுந்த வேகத்திற்கேற்றபடியும், பாப்தாதாவின் அன்பிற்குப் பிரதிபலன் கொடுப்பதற்காகவும் தபஸ்யா மிக அவசியம். அன்பு செய்வது மிகவும் சுலபம், மேலும் அனைவரும் செய்கிறார்கள் இதையும் தந்தை தெரிந்திருக்கிறார் ஆனால் அதற்குப் பிரதிபலன் சொரூபத்தில் பாப்தாதாவிற்குச் சமமாக ஆக வேண்டும். இந்த நேரம் பாப்தாதா இதைப் பார்க்க விரும்புகிறார். இதில் வெகு சிலர் தான் இந்த மாதிரி இருக்கிறார்கள். விருப்பம் அனைவருக்கும் இருக்கிறது ஆனால் விரும்புவர்கள் மற்றும் செய்பவர்களின் எண்ணிக்கையில் வித்தியாசம் இருக்கிறது ஏனென்றால் தபஸ்யாவிற்காக நிரந்தரமான எளிதான அஸ்திவாரம் எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கியம் ஆகும். எல்லைக்கு அப்பாற்பட்ட

வைராக்யம் என்றால் நாலா புறத்திலிருந்தும் விலகி விடுவது ஏனென்றால் அவற்றை ஆதாரமாக்கி விட்டீர்கள். நேரத்திற்குத் தகுந்தாற்போல் அன்பிற்குரியவர்கள் ஆனீர்கள் மேலும் நேரத்திற்குத் தகுந்தாற்போல் ஸ்ரீமத்படி பொறுப்பில் இருக்கும் ஆத்மாக்களின் சைகையின்படி ஒரு நொடியில் புத்தி அன்பிற்குரிய நிலையிலிருந்து விலகிய நிலையில் ஆகி விடட்டும். அது ஆவதில்லை. எவ்வளவு சீக்கிரம் அன்பானவர்கள் ஆகிறீர்களோ அவ்வளவு சீக்கிரம் விலகியவர்களாக ஆவதில்லை. அன்பானவர்களாக ஆவதில் புத்திசாலிகள் தான் ஆனால் விலகி இருப்பதற்கு யோசிக்கிறீர்கள், தைரியம் வேண்டும் விலகியவர்களாக ஆவது தான் ஆதரவை விடுவதாகும். ஆதரவை விடுவது தான் எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்ய உணர்வாகும். ஆதரவுகளைப் பிடித்து வைத்திருக்கத் தெரிகிறது ஆனால் விடுவதில் என்ன செய்கிறீர்கள்? பெரிய கேள்விக்குறி போட்டு விடுகிறீர்கள். சேவையின் பொறுப்பில் இருப்பவராக எப்படி ஆவது என்பது நன்றாகத் தெரிந்திருக்கிறது ஆனால் அதன் கூடவே தன்னுடைய மற்றும் மற்றவர்களுடைய பேட்டரியைச் சார்ஜ் பண்ணுவது கடினமாக இருக்கிறது. எனவே இந்த நேரம் தபஸ்யா மூலமாக வைராக்ய உணர்விற்கு மிக மிக அவசியம்.

தபஸ்யாவின் வெற்றிக்கு விசேஷ ஆதாரம் அல்லது சுலபமான சாதனம் ஒரு வார்த்தையின் பாடத்தை உறுதிப்படுத்துங்கள். இரண்டு, மூன்று எழுதுவது கடினமாக இருக்கிறது. ஒன்று எழுதுவது மிகவும் சுலபம். தபஸ்யா என்றால் ஒருவருடையவராக ஆவது. இதைத்தான் பாப்தாதா ஏக்நாமி என்று கூறுகிறார். தபஸ்யா என்றால் மனம், புத்தியை ஒருமுகப்படுத்துவது, தபஸ்யா என்றால் ஏகாந்தத்தை விரும்புவராக இருப்பது தபஸ்யா என்றால் மனநிலையை ஒருவரின் ரசனையில் வைத்துக் கொள்வது, தபஸ்யா என்றால் கிடைத்த அனைத்துப் பொக்கிஷங்களையும் வீணாவதிலிருந்து பாதுகாப்பது அதாவது சிக்கனமாக நடந்து கொள்வது. அப்படி ஒன்றின் பாடம் உறுதி ஆனது இல்லையா? ஒன்றின் பாடம் கடினமா? அல்லது சுலபமா? சுலபம் தான் ஆனால்... அந்த மாதிரி மொழி-வார்த்தைகளை பேசமாட்டீர்கள் இல்லையா?

மிக மிக பாக்கியவான்கள் நீங்கள். அநேக வித கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விட்டீர்கள். உலகிலுள்ளவர்களை நேரம் செய்விக்கும் மற்றும் அந்த நேரத்தில் வேறு வழியின்றி செய்வார்கள். குழந்தைகளைத் தந்தை நேரத்திற்கு முன்பு தயார் செய்கிறார் மற்றும் தந்தை மேல் உள்ள அன்பால் செய்கிறீர்கள். ஒருவேளை அன்போடு செய்யவில்லை என்றாலும் அல்லது குறைவாகச் செய்தாலும் என்னவாகும்? நிர்பந்தத்தில் செய்தே தான் ஆக வேண்டும். எல்லைக்கப்பாற்பட்ட வைராக்யம் தாரணை செய்தே தான் ஆக வேண்டும் ஆனால் நிர்பந்தத்தில் செய்வதின் பலன் கிடைப்பது இல்லை. அன்பின் உடனடிப் பலன் எதிர்காலப் பலனாகவும் ஆகிறது மேலும் நிர்ப்பந்தத்தில் செய்பவர்களுக்கு எங்காவது கடந்து செய்ய வேண்டி வரும் (சூழ்நிலைகளைச் சந்திக்க வேண்டும்) கடந்து செய்வது கூடக் கிராஸில் (சிலுவையில்) அறையப்படுவதற்குச் சமம் அப்படியானால் எது விருப்பம்? அன்போடு செய்வீர்களா? பாப்தாதா எப்போதாவது என்ன என்ன பிடிப்பில் இருக்கிறார்கள் என்ற பட்டியலைக் கூறுவார். பார்க்கப் போனால் தெரிந்து கொள்வதில் புத்திசாலிகள் தான் ஆனால் நினைவூட்டுவோம் ஏனென்றால் பாப்தாதாவோ குழந்தைகளின் ஒவ்வொரு நாளின் நடவடிக்கைகளை எப்பொழுது விரும்புகிறாரோ அப்பொழுது பார்க்க முடியும். ஒவ்வொருவரையும் நாள் முழுவதும் பார்க்கும் வேலையைச் செய்வதில்லை. சாகார பிரம்மாபாபாவைப் பார்த்திருக்கிறீர்கள். அவருடைய பார்வை இயல்பாகவே எங்கே விழும். உங்களுடைய கடிதமானாலும், உங்களுடைய சார்ட் ஆக இருந்தாலும், அல்லது ஏதாவது நடத்தையானாலும், எட்டு பக்கத்துக்கு கடிதமானாலும், ஆனால் தந்தையின் பார்வை எதில் விழுந்தது? எங்கு டைரக்ஷன் கொடுக்க வேண்டுமோ, எங்கு அவசியமோ அங்கு தான். பாப்தாதா அனைத்தையும் பார்க்கிறார், ஆனாலும் பார்ப்பது இல்லை. தெரிந்தும் இருக்கிறார். தெரியாமலும் இருக்கிறார். எது அவசியமில்லையோ அதைப் பார்ப்பதும் இல்லை, தெரிந்து கொள்வதும் இல்லை ஆனால் மிக நல்ல நல்ல காட்சிகளைப் பார்க்கிறார். அதைப் பற்றி பின்பு எப்போ தாவது கூறுவோம். நல்லது. தபஸ்யா செய்வது எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்ய உள்ளுணர்வோடு இருப்பது சுலபம் தானே. பிடித்துக் கொண்டிருப்பதை விடுவது கடினமா? ஆனால் நீங்கள் தான் ஆக வேண்டும். முழு கல்பத்தின் பிராப்தியின் அதிகாரி ஆகியிருக்கிறீர்கள். மேலும் கண்டிப்பாக ஆவீர்கள். நல்லது இந்த

வருடம் சென்ற கல்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பல கல்பங்களாக பழைய மற்றும் இந்தக் கல்பத்தின் புதுக் குழந்தைகளுக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அப்படி வாய்ப்பு கிடைத்ததின் குஷி இருக்கிறது இல்லையா? பெரும்பான்மையோர் புதியவர்கள், டீச்சர்கள் பழையவர்கள். அப்படியானால் டீச்சர்ஸ் என்ன செய்வீர்கள்? வைராக்ய உள்ளுணர்வைத் தாரணை செய்வீர்கள் இல்லையா? ஆதரவு என்று பிடித்துக் கொண்டிருப்பதை விடுவீர்கள் இல்லையா? அல்லது செய்ய விரும்புகிறோம் ஆனால் எப்படிச் செய்வது என்று அந்த நேரம் கூறுவீர்களா? செய்து காண்பிப்பவர்களா? அல்லது மற்றவர்களுக்கு சொல்பவர்கள் மட்டும் தானா? நாலாபுறத்திலிருந்து வந்திருக்கும் அனைத்துக் குழந்தைகளையும் நேரில் பார்ப்பதில் பாப்தாதா எப்பொழுதும் இருக்கவே இருக்கிறது. எனவே எப்பொழுதும் தைரியமாக இருந்து உதவியின் அதிகாரத்தை அனுபவம் செய்து சுலபமாக மேலே சென்று கொண்டே இருங்கள். தந்தை உதவி கொடுக் கிறார் ஆனால் எடுப்பவர்கள் எடுக்கட்டும். வள்ளல் கொடுக்கிறார் ஆனால் எடுப்பவர்கள் சக்திக்கு ஏற்றபடி எடுக்கிறார்கள். சக்திக்கு ஏற்றபடி என்று ஆகாதீர்கள். சர்வ சக்திவான் ஆகுங்கள். அப்படி பின்னால் வருபவர்கள் கூட முன்னுக்கு நம்பரில் வந்து விடுவார்கள்! புரிந்ததா? சர்வ சக்திகளின் அதிகாரத்தை முழுமையாகப் பிராப்தி செய்யுங்கள். நல்லது.

நாலாபுறமுமுள்ள அனைத்து அன்பிற்குரிய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தந்தையின் அன்பிற்கு பிரதிபலன் கொடுக்கக்கூடிய நெருங்கிய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தபஸ்வி மூர்த்தி நிலையில் நிலைத்து இருக்கக்கூடிய தந்தையின் அருகில் இருக்கும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தந்தைக்கு சமமாக வேண்டும் என்ற இலட்சியத்தை இலட்சண ரூபத்தில் கொண்டு வரக்கூடிய அந்த மாதிரி பாரதம் மற்றும் வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு மனதிலேயே நிறைந்திருக்கும் தந்தையின் மனம் நிறைந்த உயிருக்கு சமமான அன்பு நிறைந்த அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

தாதிகளுடன் சந்திப்பு: அஷ்ட சக்திகளுடைய நீங்கள் இஷ்டமானவர்களாகவும் அஷ்டமாகவும் (எட்டில் வருபவர்களாகவும்) இருக்கிறீர்கள் இல்லையா? அஷ்டத்தின் அடையாளம் என்ன

தெரியுமா? ஒவ்வொரு காரியத்திலும் நேரத்திற்கேற்றபடி, சூழ்நிலைக்கேற்றபடி ஒவ்வொரு சக்தியையும் காரியத்தில் கொண்டு வருபவர்கள் அஷ்ட சக்திகள் இஷ்டமாகவும் ஆக்கி விடுகிறது. அஷ்ட சக்திகள் உடையவர்கள் நீங்கள் எனவே எட்டு கைகள் காண்பிக்கிறார்கள். முக்கியமாக எட்டு சக்திகள் இருக்கின்றன. நிறைய இருக்கின்றன ஆனால் எட்டில் அதிகமானவை வந்து விடுகிறது. முக்கியமான சக்திகளைத் தேவையான நேரத்தில் காரியத்தில் கொண்டு வர வேண்டும். எப்படி நேரமோ எப்படி சூழ்நிலையோ அப்படி நிலையும் இருக்கட்டும் இதைத் தான் அஷ்டம் மற்றும் இஷ்டம் என்று கூறுவது. என்ன அந்த மாதிரியான குழு தயார் தானே? வெளிநாடுகளில் எவ்வளவு தயாராக இருக்கிறது? எட்டில் வருபவர்கள் தானே? நல்லது.

(காலையில் பிரம்ம முகூர்த்த நேரத்தில் சந்திரி தாதி உடலை விட்டார்கள் -13.12.1990). நல்லது. அனைவரும் செல்லத்தான் வேண்டும். எவரெடியாக இருக்கிறீர்களா? அல்லது என்னுடைய சென்டர், மாணவர்களுக்கு என்னவாகும் என்று நினைவு வருமா? எனது, எனது என்று நினைவு வராது இல்லையா? அனைவரும் செல்லத்தான் வேண்டும் ஆனால் ஒவ்வொருவரின் கணக்கும் அவரவர்களுடையது. கணக்கு வழக்குகளை முடிக்காமல் யாரும் செல்ல முடியாது. எனவே அனைவரும் குஷியோடு விடை கொடுத்தீர்கள். அனைவருக்கும் பிடித்திருந்தது இல்லையா? அப்படிப் போவது நல்லது தானே. எனவே நீங்களும் எவரெடி ஆகி விடுங்கள் நல்லது.

பார்ட்டிகளுடன் சந்திப்பு: முதல் குருப் தில்லி மற்றும் பஞ்சாப், இரண்டும் சேவையின் ஆரம்ப இடங்கள் ஸ்தாபனையான இடம் எப்பொழுதும் மகத்துவப் பூர்வமானதாகப் பார்க்கப்படுகிறது. மகிமை செய்யப்படுகிறது. எப்படி சேவையில் அதிஸ்தி ஆனீர்களே. அப்படி நிலையிலும் ஆதி இரத்தினமாக இருக்கிறீர்களா? ஸ்தானத்தின் கூடவே ஸ்திதியின் (நிலை) மகிமையும் இருக்கிறது இல்லையா. ஆதி ரத்தினம் என்றால் ஒவ்வொரு ஸ்ரீமத்தையும் வாழ்க்கையில் கொண்டு வருவதில் ஆரம்பம் செய்பவர்கள் கேட்பவர்கள். சொல்பவர்களாக மட்டும் இல்லை ஆனால் செய்பவர்கள் ஏனென்றால் கேட்பவர்கள், சொல்பவர்கள் நிறைய இருக்கிறார்கள். இதனால் செய்பவர்கள் கோடியில் சிலர் தான் இருக்கிறார்கள். அப்படி நான் கோடியில்

சிலரானவன் என்ற போதை இருக்கிறதா? இந்த ஆன்மீக போதை மாயாவின் போதையிலிருந்து விடுவித்து விடுகிறது. இந்த ஆன்மீக போதை பாதுகாப்பிற்கான சாதனம். எந்த விதமான அதாவது நன்றாக உடுத்த வேண்டும். சாப்பிட வேண்டும். பார்க்க வேண்டும் என்ற மாயாவின் போதை தன் பக்கம் கவர்ந்து இழுக்க முடியாது. அந்த மாதிரி போதையில் இருக்கிறீர்களா? அல்லது மாயா கொஞ்சம் கொஞ்சம் கவருகிறதா? இப்பொழுது எல்லாம் தெரிந்தவர்கள் ஆகி விட்டீர்கள் இல்லையா மாயாவையும் தெரிந்து கொண்டீர்கள். எல்லாம் தெரிந்தவர்கள் ஒருபோதும் ஏமாற மாட்டார்கள். ஒருவேளை விவரம் தெரிந்தவர் ஏமாந்து விட்டால் அனைவரும் என்ன கூறுவார்கள்? எல்லாம் தெரிந்தவராக இருந்தும் ஏமாந்து விட்டார். ஏமாந்து போவது என்றால் துக்கத்தை வரவேற்பது. எப்பொழுது ஏமாற்றம் அடைகிறீர்களோ அப்பொழுது அதனால் துக்கம் அனுபவம் ஆகிறது இல்லையா? துக்கத்தை யாராவது அடைய விரும்புகிறார்களா என்ன? எனவே எப்பொழுதும் ஆதி இரத்தினம் அதாவது ஒவ்வொரு ஸ்ரீமத்தின் ஆரம்பத்தைத் தன் வாழ்க்கையில் கொண்டு வருபவர். அந்த மாதிரி இருக்கிறீர்களா? அல்லது முதலில் மற்றவர்கள் செய்யட்டும் பின்பு நாம் செய்வோம் என்று பார்க்கிறீர்களா? இவர்கள் செய்யவில்லை என்றால் நாம் எப்படி செய்ய முடியும். செய்வதில் முதலில் நான், மற்றவர் மாறட்டும் பின்பு நான் மாறுவேன். இவரும் மாறினார் என்றால் நான் மாறுவேன். அந்த மாதிரி, இருக்க வேண்டாம். யார் செய்வாரோ அவர் அடைவார். மேலும் எவ்வளவு அடைவார்? ஒன்றிற்கு பல மடங்கு. அப்படியானால் செய்வதில் மகிழ்ச்சி தானே. ஒன்றைச் செய்யுங்கள் பல மடங்கு அடையுங்கள். இதில் பிராப்தியே பிராப்தி தான். எனவே நடைமுறையில் ஸ்ரீமத்தைக் கடைப்பிடிப்பதில் முதலில் நான் மாயாவின் வசமாவதில் முதலில் நான் அல்ல ஆனால் இந்த முயற்சியில் முதலில் நான். அப்பொழுது தான் ஒவ்வொரு அடியிலும் வெற்றியை அனுபவம் செய்வீர்கள். வெற்றி ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. கொஞ்சம் வழியை மட்டும் மாற்றி விடுகிறீர்கள். மாற்றி விடுவதினால் இலக்கு வெகு தொலைவாகி விடுகிறது. நேரம் எடுக்கிறது. ஒருவேளை யாராவது தவறான வழியில் சென்று விட்டால் அடையக்கூடிய இடம் தூரமாகி விடும் இல்லையா! எனவே அப்படிச் செய்யாதீர்கள், இலக்கு எதிரில் இருக்கிறது. வெற்றி நிச்சயிக்கப்பட்டது. எப்போதாவது கடினமாக உழைக்க

வேண்டியதிருந்தால் தராசில் அன்பு என்ற தட்டில் எடை குறைவாக இருக்கும். ஒருவேளை அன்பு இருக்கிறது என்றால் கடினமாக ஒருபோதும் உழைக்க முடியாது ஏனென்றால் தந்தை அனேகக் கைகளுடன் உங்களுக்கு உதவி செய்வார். அவர் தன்னுடைய கைகளால் ஒரு நொடியில் காரியத்தை வெற்றியடையச் செய்து விடுவார். முயற்சியில் எப்பொழுதும் மேலே சென்று கொண்டே இருப்பீர்கள். பஞ்சாப்பைச் சேர்ந்தவர்கள் மேலே பறந்து சென்று கொண்டிருக்கிறீர்களா? அல்லது பயப்படுகிறீர்களா? நல்ல அனுபவி ஆகி விட்டீர்களா? யாராவது பயப்படுபவர்களா? என்ன நடக்கும். எப்படி நடக்கும். அப்படி வேண்டாம் அவர்களுக்கும் (தீவிரவாதிகளுக்கும்) அமைதி கொடுப்பவர்கள் நீங்கள். யார் வந்தாலும் அமைதியை எடுத்துச் செல்லட்டும் வெறும் கையோடு போக வேண்டாம். ஞானம் கொடுக்கா விட்டாலும் கூட அமைதியின் எண்ண அதிர்வுகள் கூட அமைதியாக்கி விடும். நல்லது.

**2) நாலா புறத்திலிருந்தும் வந்திருக்கும் உயர்ந்த ஆத்மாக்கள் அனைவரும் பிராமணர்கள்.** அதுவின்றி ராஜஸ்தானி, மகாராஷ்டிரியன் மற்றும் மத்தியப்பிரதேசத்தினர் என்றல்ல. அனைவரும் ஒன்று தான். இந்த நேரம் அனைவரும் மதுபன்னைச் சேர்ந்தவர்கள் பிராமணர்களின் உண்மையான ஸ்தானம் மதுபன் ஆகும் சேவைக்காக விதவிதமான பகுதிகளுக்குச் சென்றிருக்கிறீர்கள். ஒருவேளை ஒரே இடத்தில் இருந்து விட்டால் எப்படி நாலா புறமும் சேவை நடக்கும்? அதனால் சேவைக்காக வேறுவேறு இடங்களுக்குச் சென்றிருக்கிறீர்கள். குடும்ப வாழ்க்கையில் பிஸினஸ் செய்பவராக இருந்தாலும் சரி அல்லது அரசாங்கத்தில் வேலை செய்பவராக இருந்தாலும் சரி, அல்லது தொழிற்சாலையில் வேலை செய்பவராக இருந்தாலும் சரி ஆனால் உண்மையான தொழில் ஈஸ்வரிய சேவை செய்பவர்கள் மாதர்கள் வீட்டிலிருந்தாலும் ஈஸ்வரிய சேவையில் இருக்கிறீர்கள். யாராவது ஞானம் கேட்டாலும் கேட்காவிட்டாலும் சுப பாவனை மற்றும் சுபவிருப்பங்களின் எண்ணங்கள் மூலமாகவும் மாறுகிறார்கள். வாணி மூலமாகச் செய்யும் சேவை மட்டும் சேவை அல்ல. சுப பாவனை வைப்பது கூட சேவைதான். அப்படி இரண்டு சேவையும் செய்யத் தெரியும் இல்லையா? யாராவது உங்களைத் தீய வார்த்தைகளால் திட்டினால் கூட நீங்கள் சுப பாவனை மற்றும் சுப காமனாவை

விடாதீர்கள். பிராமணர்களின் வேலை ஏதாவது கொடுப் பது அப்படி இந்த சுப பாவனை மற்றும் சுபகாமனா வைப்பது கூட கல்வி அளிப்பது தான். அனைவரும் வாணி மூலம் மாறுவது இல்லை. எப்படி இருந்தாலும் ஏதாவது கொஞ்சம் அஞ்சலி அவசியம் கொடுங்கள். உறுதியான இராவணனாக இருந்தால் கூட அனேக மாதர்கள் கூறுகிறார்கள் இல்லையா என்னுடைய சம்பந்தி உறுதியான இராவணன் மற்றும் மாறுபவர் இல்லை. அந்த மாதிரி ஆத்மாக்களுக்கும் உங்களுடைய பொக்கிஷங்களினால். சுப பாவனை மற்றும் சுபகாமனாவின் அஞ்சலி அவசியம் கொடுங்கள். யாராவது திட்டினால் அவருடைய வாயிலிருந்து என்ன வெளி வருகிறது? இவர்கள் பிரம்மா குமாரிகள் அப்படி பிரம்மாபாபாவை நினைவோ செய்கிறார்கள். திட்டினால் கூட பிரம்மா என்று கூறுகிறார்கள் இல்லையா? இருந்தபோதிலும் தந்தையின் பெயரைக் கூறுகிறார்கள் இல்லையா! தெரிந்தோ தெரியாவிட்டாலும் கூறுகிறார்கள் தானே, இருந்தும் நீங்கள் அவர்களுக்கு அஞ்சலி கொடுங்கள் அப்படி அஞ்சலி கொடுக்கிறீர்களா? இல்லை நீங்கள் சொல்வதைக் கேட்காதவர்களை அப்படியே விட்டு விடுகிறீர்களா? விடக் கூடாது, இல்லை என்றால் பின்பு உங்கள் காதைப் பிடிப்பார்கள். நாங்கள் தான் ஒன்றும் அறியாதவர்களாக இருந்தோம் நீங்கள் ஏன் கொடுக்கவில்லை என்று. முறையிடுவார்கள். அப்படியானால் காதைப் பிடிப்பார்கள் இல்லையா? யார் எடுத்தாலும் சரி. எடுக்காவிட்டாலும் சரி நீங்கள் கொடுத்துக் கொண்டே இருங்கள் பாப்தாதா தினந்தோறும் குழந்தைகளுக்கு இவ்வளவு பொக்கிஷங்கள். கொடுக்கிறார். சிலர் முழுமையாக எடுக்கிறார்கள், சிலர் சக்திக்கேற்றபடி எடுக்கிறார்கள் பின்பு நீங்கள் ஏன் எடுப்பதில்லை நான் கொடுக்க மாட்டேன் என்று எப்போதாவது பாப்தாதா கூறியிருக்கிறாரா? அப்படி பிராமணர்களின் கடமையே கொடுப்பது தான். வள்ளலின் குழந்தைகள் இல்லையா? அவர்கள் நல்லது என்று கூறட்டும். பின்பு நீங்கள் கொடுக்கிறீர்கள் என்றால் இது எடுப்பது ஆகி விட்டது இல்லையா எடுப்பவர்கள் வள்ளவின் குழந்தை ஆக முடியாது. தேவதையாக ஆக முடியாது. நீங்கள் தேவதை ஆகுவர்கள் தானே? தேவதை ஆடை தயாராக இருக்கிறது இல்லையா? அல்லது இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது, வெளுத்துக் கொண்டிருக்கிறார்கள் அல்லது தேய்ப்பது மட்டும் பாக்கி இருக்கிறதா? தேவதை ஆடை எதிரில் தென்பட வேண்டும். இன்று பரிஷ்தா. நாளை

தேவதை எத்தனை தடவை தேவதையாக ஆகியிருக்கிறீர்கள்?! எனவே எப்பொழுதும் தன்னை வள்ளலின் குழந்தை, தேவதையாக ஆகக் கூடியவர்கள் என்ற நினைவை எப்பொழுதும் வைத்துக் கொள்ளுங்கள். வள்ளலின் குழந்தைகள் வாங்கிக் கொடுப்பதில்லை. மதிப்பு கிடைக்கட்டும் மரியாதை கிடைக்கட்டும் பின்பு நான் கொடுக்கிறேன்... என்று அப்படியில்லை. எப்பொழுதும் வள்ளலின் குழந்தைகள் கொடுப்பவர்கள். அந்த மாதிரியான போதை எப்பொழுதும் இருக்கிறது இல்லையா அல்லது எப்போதாவது குறைகிறது, எப்போதாவது அதிகமாகிறதா? இப்பொழுது மாயாவிற்கு விடை கொடுக்கவில்லையா? மெது மெதுவாகக் கொடுக்காதீர்கள். அவ்வளவு நேரம் இல்லை. ஒன்று தாமதமாக வந்திருக்கிறீர்கள். மேலும் மெது மெதுவாக முயற்சி செய்தீர்கள் என்றால் சென்றடைய முடியாது. நிச்சயம் ஏற்பட்டது. போதை ஏறியது மேலும் பறந்து கொண்டே இருங்கள். இப்பொழுது மேலே ஏறிச் செல்வதற்கான பறக்கும் கலைக்கான நேரம். பறப்பது வேகமாக இருக்கும் இல்லையா. நீங்கள் அதிர்ஷ்டசாலிகள் பறக்கும் நேரத்தில் வந்து விட்டீர்கள். நான் மிகப் பெரிய பாக்யவான் என்று தன்னை எப்பொழுதும் அப்படியே அனுபவம் செய்யுங்கள். இந்த மாதிரியான பாக்யம் முழு கல்பத்திலும் கிடைக்க முடியாது எனவே வள்ளலின் குழந்தை ஆகுங்கள், எடுக்க வேண்டும் என்ற எண்ணத்தையே வைக்காதீர்கள். பணம் கொடுக்கட்டும். துணி கொடுக்கட்டும். உணவு கொடுக்கட்டும் வள்ளலின் குழந்தைக்கு அனைத்தும் தானாகவே பிராப்தி ஆகிறது. கேட்பவர்களுக்குக் கிடைப்பதில்லை. கொடுப்பவர்களாக ஆனீர்கள் என்றால் தானாகவே கிடைத்துக் கொண்டே இருக்கும். நல்லது.

3) மஹாராஷ்டிராவில் இருந்து கொண்டே உண்மையான சொரூபத்தில் மஹான் ஆகி விட்டீர்கள் -இந்த மாதிரி குஷி இருக்கிறதா? அவர்களோ பேருக்காக மகான்கள், மஹாத்மாக்கள் ஆனால் நீங்களோ நடைமுறை சொரூபத்தின் மூலம் மஹாத்மாக்கள் ஆவீர்கள் -இந்த மாதிரி குஷி இருக்கிறதா? மகான் ஆத்மாக்கள் சதா உயர்ந்த ஸ்திதியில் இருப்பார்கள். அவர்களோ உயரமான ஆசனத்தில் அமர்கிறார்கள், சிஷ்யர்களை கீழே அமரச் செய்கிறார்கள், தான் உயரத்தில் அமர்வார்கள் ஆனால் நீங்கள் எங்கு அமர்ந்திருக்கிறீர்கள்? உயர்ந்த ஸ்திதியின் ஆசனத்தின் மீது! உயர்ந்த ஸ்திதி தான் உயரமான ஆசனம்

ஆகும். உயர்ந்த ஸ்திதியின் ஆசனத்தின் மீது இருக்கும்போது மாயா வர முடியாது. அது உங்களை மஹான் என புரிந்து கொண்டு உங்கள் முன் தலைகுனியும், போரிடாது தோல்வியை ஏற்கும். எப்போது உயர்ந்த ஆசனத்திலிருந்து கீழே வருவீர்களோ அப்போதுதான் மாயா போரிடுகிறது. ஒருவேளை சதா உயர்ந்த ஆசனத்தின் மீது இருந்தால் மாயாவிற்கு வர பலம் இருக்காது. மாயாவால் உயரத்தில் ஏற முடியாது. எனில் எவ்வளவு எளிதான ஆசனம் கிடைத்து விட்டது. பாக்கியத்தின் முன் தியாகம் ஒன்றுமே இல்லை. எதை விட்டீர்கள்? நகைகள் இருக்கிறது, துணிமணிகள் இருக்கிறது, வீட்டில் இருக்கிறீர்கள்; ஒருவேளை விட்டிருந்தால் குப்பையை விட்டீர்கள். எனில் சதா சிரேஷ்ட ஆசனம் மீது நிலைத்து இருக்கக்கூடிய மகான் ஆத்மாக்கள் ஆவீர்கள். எந்தளவு யோசிக்கவில்லையோ அந்தளவு மிக சிரேஷ்டமான பிராப்திக்கு அதிகாரி ஆகி விட்டீர்கள். இந்த பாக்கியத்தின் குஷி இருக்கிறதல்லவா? உலகில் குஷி இல்லை. கறுப்பு பணம் உள்ளது ஆனால் குஷி இல்லை. குஷியின் பொக்கிஷத்தில் எல்லோருமே ஏழைகள், பிச்சைக்காரர்கள். நீங்களோ குஷியின் பொக்கிஷத்தால் நிரம்பியவர்கள். இந்த குஷி எவ்வளவு நேரம் இருக்கும்? முழு கல்பமும் இருக்குமா? உங்கள் ஜட சித்திரங்கள் மூலமும் குஷியைப் பெறுவீர்கள் எனில் இந்தளவு குஷி சேமிப்பாகி உள்ளதா என்று சோதனை செய்யுங்கள். ஓரிரு ஜென்மங்கள் இருக்கும் பின்னர் காலியாகி விடுவது போல் இருக்கக் கூடாது. பல ஜென்மங்களுக்கு இருப்பது போல அவ்வளவு இருப்பில் வையுங்கள். யாரிடம் எந்தளவு சேமிப்பாகிறதோ அந்தளவு அவரது முகத்தில் குஷி மற்றும் போதை இருக்கும். நீங்கள் சொன்னாலும், சொல்லாவிடினும் ஆனால் உங்கள் முகம் கூறி விடும். பிரம்மா குமாரிகள் சதா குஷியாக இருக்கிறார்கள், அவர்களுக்கு என்ன ஆயிற்று எனத் தெரியவில்லை என! கூறுகிறார்கள் தானே, துக்கத்திலும் குஷியாக இருக்கிறார்கள். நீங்கள் சொன்னாலும், சொல்லாவிடினும் உங்கள் முகம், உங்கள் செயல் சொல்கின்றது. பிரம்மா குமார் குமாரிகளின் அடையாளமே சதா குஷியாக இருப்பது! துக்கத்தின் நாட்கள் முடிவடைந்து விட்டன. இவ்வளவு பொக்கிஷங்கள் கிடைத்துள்ளது எனில் துக்கம் எங்கிருந்து வரும்? நல்லது.

<u>**வரதானம்: குழுவில் ஒருவழி மற்றும் ஒருவரின் ரசனை என்ற நிலை மூலமாக வெற்றியடையக்கூடிய உண்மையான அன்பானவர்கள் ஆகுக!**</u>

குழுவில் ஒருவர் சொன்னார். இன்னொருவர் ஏற்றுக் கொண்டார் இது தான் உண்மையான அன்பின் பிரதிபலிப்பாகும். அந்த மாதிரி அன்பான குழந்தைகளின் உதாரணத்தைப் பார்த்து இன்னும் நெருக்கத்தில் வருவதற்குத் தைரியம் வைக்கிறார்கள். குழுவும் சேவைக்கான சாதனமாகி விடுகிறது. இவர்களிடம் ஒற்றுமை நன்றாக இருக்கிறது. ஒற்றுமை இருக்கிறது என்று மாயா பார்க்கிறது பின்பு வருவதற்குத் துணிவு வைப்பது இல்லை. ஒருவழி மற்றும் ஒரே ரசனையில் இருக்கும் நிலையின் சம்ஸ்காரம் தான் சத்யுகத்தில் ஒரு இராஜ்யத்தின் ஸ்தாபனை செய்கிறது.

<u>**சுலோகன்: காரியம் மற்றும் யோகாவின் சமநிலை வைப்பவர் தான் வெற்றியடையும் யோகி!**</u>

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 31.12.1990 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தபஸ்யா தான் மிகப்பெரிய விழா, தபஸ்யா என்றால் தந்தையுடன் சந்தோஷமாக இருப்பது!

இன்று பாப்தாதா நாலாபுறமுமுள்ள புது ஞானம் மூலமாக ஒவ்வொரு நேரமும் புதுவாழ்க்கை, புதுஉணர்வு, புதுப்பார்வை மற்றும் புதிய படைப்பை அனுபவம் செய்யும் அனைத்து குழந்தைகளின் அன்பிற்கு வாழ்த்துக்களை வழங்கிக் கொண்டிருக்கிறார். இந்த நேரம் நாலாபுறமுமுள்ள அனைத்து குழந்தைகளின் மனம் என்ற தூர்தர்ஷன் மூலமாக இந்த நேரத்து தெய்வீகக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தூரத்திலிருந்தாலும் அருகில் இருக்கும் அனுபவம் செய்ய வேண்டும் என்ற ஒரே எண்ணம் தான் அனைவருக்கும் இருக்கிறது. பாப்தாதாவும் அனைத்துக் குழந்தைகளையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைவரின் புது ஊக்கம் உற்சாகமாகிய மனதின் வாழ்த்துக்கள் என்ற இசையைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். அனைவரின் அன்பு நிறைந்த வித விதமான இசை நன்றாக இருக்கிறது. எனவே அனைவருக்கும் அதற்குப் பதிலாக பிரதிபலனையும் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். புதுவருடத்தின், புது ஊக்கம் உற்சாகத்தின், ஒவ்வொரு நேரமும் தன்னுள் தெய்வீகத் தன்மையைக் கொண்டு வருவதற்கு எப்பொழுதும் வாழ்த்துக்கள். இன்று புதுவருடம் என்பதால் மட்டும் வாழ்த்துக்கள் இல்லை, ஆனால் அழியாத தந்தையின் அன்பைப் பெற்று நடக்கும் குழந்தைகளுக்காக சங்கமயுகத்தின் ஒவ்வொரு வினாடியும் வாழ்க்கையில் புதுமையைக் கொண்டு வரக்கூடியது. எனவே ஒவ்வொரு நேரமும் அழிவற்ற தந்தையின் அழிவற்ற வாழ்த்துக்கள். பாப்தாதாவின் விசேஷமான குஷி நிறைந்த பாராட்டுக்கள் மூலமாகத் தான் பிராமணர்கள் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார்கள். பிராமண வாழ்க்கையின் வளர்ப்பின் ஆதாரமே வாழ்த்துக்கள் தான்.

வாழ்த்துக்களின் குஷியால் தான் முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள். தந்தையின் சொரூபத்தில் ஒவ்வொரு நேரமும் வாழ்த்துக்கள் தான். ஆசிரியர் என்ற சொரூபத்தில் ஒவ்வொரு நேரமும் சபாஷ் சபாஷ் என்ற வார்த்தைகள் கௌரவமாகத் தேர்ச்சி பெறச் செய்து கொண்டிருக்கிறது. சத்குருவின் ரூபத்தில் ஒவ்வொரு உயர்ந்த காரியத்தின் ஆசீர்வாதம் எளிதாக மற்றும் மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையை அனுபவம் செய்விக்கிறது. எனவே பல மடங்கு பாக்கியம் நிறைந்தவர்கள். பாக்கியத்தை உருவாக்கும் பகவானின் குழந்தைகள் ஆகி விட்டீர்கள் என்றால் முழுமையான பாக்கியத்தின் அதிகாரி ஆகி விட்டீர்கள். மனிதர்களோ முக்கியமான நாட்களில் மட்டும் விசேஷமாக வாழ்த்துக்கள் தெரிவிக்கிறார்கள் மற்றும் உங்களுக்கு புது வருடத்திற்காக மட்டும் தான் வாழ்த்துக்கள் கிடைக்கிறதா? முதல் தேதியிலிருந்து இரண்டாம் தேதி ஆகி விட்டால் வாழ்த்துக்களும் முடிந்து விடுமா என்ன? உங்களுக்காக ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு நொடியும் விசேஷம் தான். சங்கமயுகமே விசேஷமான யுகம் தான் வாழ்த்துக்களின் யுகம் தான். ஒவ்வொரு நாளும் அமிர்தவேளையில் தந்தையிடமிருந்து வாழ்த்துக்கள் பெறுகிறீர்கள் இல்லையா? இது என்னவோ ஒரு நாள் மட்டும் வருட ஆரம்பம் என்பதால் கொண்டாடுகிறார்கள் ஆனால் ஒவ்வொரு விநாடியும் மகிழ்ச்சி நிறைந்தது என்று எப்பொழுதும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். மகிழ்ச்சியே மகிழ்ச்சி தான் இல்லையா? உங்கள் வாழ்க்கையில் என்ன இருக்கிறது என்று யாராவது கேட்டால், என்ன பதில் கூறுவீர்கள்? மகிழ்ச்சியே, மகிழ்ச்சி என்று தானே, முழு கல்பத்தின் மகிழ்ச்சியை இந்த வாழ்க்கையில் அனுபவம் செய்கிறீர்கள். ஏனென்றால் தந்தையுடன் சந்திக்கும் மகிழ்ச்சி முழுக்கல்பத்தின் இராஜ்ய அதிகாரி மற்றும் பூஜ்ய அதிகாரி இரண்டின் அனுபவம் செய்விக்கிறது பூஜைக்குரிய நிலையின் மகிழ்ச்சி மற்றும் இராஜ்யம் செய்வதின் மகிழ்ச்சி இரண்டின் ஞானமும் இந்த நேரமும் இருக்கிறது. எனவே தான் இப்பொழுது மகிழ்ச்சி.

இந்த வருடம் என்ன செய்வீர்கள்? புதுமை செய்வீர்கள் இல்லையா? இந்த வருடத்தை விழாக்களின் வருடமாகக் கொண்டாடுங்கள். தபஸ்யா செய்ய வேண்டுமா? அல்லது விழாக் கொண்டாட வேண்டுமா என்று யோசிக்கிறீர்களா? தபஸ்யா தான் மிகப் பெரிய விழா,

ஏனென்றால் ஹடயோகமோ செய்ய வேண்டியது இல்லை. தபஸ்யா என்றால் தந்தையுடன் மகிழ்ச்சியைக் கொண்டாடுவது. சந்திப்பதின் மகிழ்ச்சி, அனைத்து பிராப்திகளின் மகிழ்ச்சி, நெருக்கத்தின் அனுபவத்தின் மகிழ்ச்சி மற்றும் சம நிலையின் மகிழ்ச்சி அப்படியானால் இது விழாவாகி விட்டது இல்லையா? சேவையின் பெரிய பெரிய விழாக்கள் நடத்த வேண்டாம், ஆனால் தபஸ்யாவின் சூழ்நிலை சொற்பொழிவுகளின் விழாக்களை விட அதிகமாக ஆத்மாக்களை தந்தை பக்கம் கவர்ந்து இழுக்கும். தபஸ்யா ஆன்மீகக் காந்தமாகும். இதன் மூலம் ஆத்மாக்களுக்கு தூரத்திலேயே அமைதி மற்றும் சக்தியின் அனுபவம் ஆகும். அப்படியானால் தன்னுள் என்ன புதுமையைக் கொண்டு வருவீர்கள்? புதுமை தான் அனைவருக்கும் பிடித்தமானதாக இருக்கிறது இல்லையா? எனவே எப்பொழுதும் தன்னை சோதனை செய்யுங்கள். இன்றைய நாளில் மனதில் அதாவது தன்னுடைய எண்ண சக்தியில் முக்கியமாக என்ன விசேஷத்தன்மை கொண்டு வந்தேன்? மேலும் மற்ற ஆத்மாக்களுக்காக மனசேவை அதாவது சுப பாவனை, சுப ஆசைகளின் விதி மூலமாக எவ்வளவு வளர்ச்சியை அடைந்திருக்கிறார்கள்? அதாவது உயர்ந்த நிலையில் புதுமை என்ன கொண்டு வந்தேன்? கூடவே பேச்சில் இனிமை, திருப்தி. சரளத்தன்மையின் புதுமை எவ்வளவு கொண்டு வந்தேன்? பிராமண ஆத்மாக்களின் பேச்சு சாதாரணப் பேச்சாக இருப்பது இல்லை. பேச்சில் இந்த மூன்று விஷயங்களினால் தனக்கும் மற்று ஆத்மாக்களுக்கும் அனுபவம் ஆகட்டும். இந்த நேரம் உடனடிய பலனாகக் குஷி மற்றும் சக்தியின் மகிழ்ச்சி அனுபவம் ஆகட்டும் மற்றும் எதிர்காலத்து சேமிப்பின் அனுபவம் ஆகட்டும். அப்படி தன்னை எப்பொழுதும் நிரம்பிய முழுமையானவராக அனுபவம் செய்வீர்கள். காரியம் என்ற விதை பிராப்தி என்ற மரத்தால் நிரம்பி இருக்கட்டும். காலியாக இருக்க வேண்டாம். நிரம்பிய ஆத்மாவிற்கு. இயற்கையான போதை ஆன்மீகமாக இருக்கும். அப்படி புதுமையான காரியம் செய்தீர்களா? கூடவே உறவு, நெருக்கத்தில் என்ன புதுமை கொண்டு வர வேண்டும்?

இந்த வருடம் வள்ளலின் குழந்தைகள் மாஸ்டர் வள்ளல் என்ற நினைவு சொரூபத்தை அனுபவம் செய்யுங்கள். பிராமண ஆத்மாவாக இருந்தாலும் சாதாரண ஆத்மாவாக இருந்தாலும் யாருடைய உறவில் நெருக்கத்தில் வந்தாலும், அந்த ஆத்மாக்களுக்கு மாஸ்டர் வள்ளல்

மூலமாகப் பிராப்தியின் அனுபவம் ஆகட்டும். தைரியம் கிடைத்தாலும் சரி, ஊக்கம் உற்சாகம் கிடைத்தாலும் சரி, அமைதி மற்றும் சக்தி கிடைத்தாலும் சரி, கலபமான விதி கிடைத்தாலும் சரி, குஷி கிடைத்தாலும் சரி அனுபவங்களின் அதிகரிப்பை அடையட்டும். ஒவ்வொருவருக்கும் ஏதாவது கொடுக்க வேண்டும். எடுக்க வேண்டாம், கொடுக்க வேண்டும். கொடுப்பதில் எடுப்பது அடங்கியிருக்கிறது ஆனால் ஆத்மா நான் மாஸ்டர் வள்ளல் ஆக வேண்டும். இதே மாதிரி தன்னுடைய சுபாவம் சம்ஸ்காரத்தில் தந்தைக்கு சமமாகப் புதுமையைக் கொண்டு வர வேண்டும். என்னுடைய சுபாவம் என்பது அல்ல, தந்தையின் சுபாவம் என்னவோ அது தான் என்னுடைய சுபாவம் என்றிருக்கட்டும். பிரம்மாவின் சம்ஸ்காரம் எதுவோ, அது தான் பிராமணர்களின் சம்ஸ்காரம். அப்படி ஒவ்வொரு நாளும் தன்னுள் புதுமையைக் கொண்டு வந்தால் புது உலக ஸ்தாபனை தானாக நடந்து விடும். புது வருடத்தில் என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா? எது நடந்து முடிந்ததோ அந்த கடந்த ஆண்டின் நிறைவு விழாவைக் கொண்டாடுங்கள், நிகழ்காலத்தில் சமம் மற்றும் அருகாமையின் விழாக் கொண்டாடுங்கள் மற்றும் எதிர்காலத்திற்கான வெற்றி விழாவை எப்பொழுதும் கொண்டாடுங்கள். விழாக்களின் வருடத்தைக் கொண்டாடிக் கொண்டு உயர்ந்து சென்று கொண்டே இருங்கள்.

வெளிநாட்டினர் மகிழ்ச்சியோடு இருப்பதை விரும்புவர்கள் இல்லையா? எனவே மகிழ்ச்சிகளுக்காக இரண்டு வார்த்தைகளை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஒன்று டாட் (புள்ளி) மற்றும் நாட் (இல்லை) இல்லை என்று எதைச் செய்ய வேண்டும் என்று தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? மாயாவிற்கு அனுமதி இல்லை இல்லை என்று சொல்லத் தெரியுமா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் அனுமதிப்பீர்களா? டாட் (புள்ளி) போட்டு விட்டால் நாட் (இல்லை) என்று ஆகியே தீரும். இரட்டை போதை இருக்கிறது இல்லையா?

பாரதவாசிகள் என்ன செய்வீர்கள்? பாரதம் மகான் தேசம் -இது தான் இன்றைய சுலோகம். மேலும் பாரதத்தின் மகான் ஆத்மாக்கள் தான் மகாத்மாக்கள் என்று வர்ணிக்கப்படுகிறார்கள். எனவே ஒவ்வொரு நேரமும் தன்னுடைய மகான் தன்மையால் நடைமுறையில்

பாரதத்தை மகான் ஆத்மாக்களின் ஸ்தானமாகவும், தேவ ஆத்மாக்களின் ஸ்தானமாகவும் ஆக்குவீர்கள். சிலைகள் அகன்று சைதன்ய தேவ ஆத்மாக்களின் ஸ்தானமாக அனைவருக்கும் காண்பிப்பீர்கள். அதனால் வெளிநாட்டினர் மற்றும் பாரதவாசிகள் என்றில்லை ஆனால் இருவருமே இப்பொழுது மதுபன் நிவாஸிகள். நல்லது.

நாலாபுறமுமுள்ள அனைத்து மாஸ்டர் வள்ளல் குழந்தைகளுக்கு எப்பொழுதும் தந்தை மூலமாக வாழ்த்துக்களைப் பெறும் விசேஷ ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் மகிழ்ச்சியோடு இருக்கும் பாக்கியவான் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தன்னுள் புதுமைகளைக் கொண்டு வரும் மகான் ஆத்மாக்களுக்கு, பரிஷ்தாவிலிருந்து தேவ ஆத்மா ஆகக் கூடிய மிக உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள். ஒவ்வொரு நேரத்திற்கும் வாழ்த்துக்கள் மற்றும் நமஸ்காரம்.

பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு: (1) ஆடாத, அசையாத ஆத்மாக்கள் என்று அனுபவம் செய்கிறீர்களா? ஒரு பக்கம் குழப்பம் மற்றும் இன்னொரு பக்கம் நீங்கள் பிராமண ஆத்மாக்கள் எப்பொழுதும் ஆடாத நிலையில் இருப்பவர்கள். எவ்வளவு அங்கு குழப்பமோ அவ்வளவு உங்களுக்குள் ஆடாத அசையாத நிலையின் அனுபவம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. என்ன நடந்தாலும் சரி, மிகவும் எளிதான வழிமுறை எதுவும் புதிதல்ல என்பதாகும். புதிய விஷயம் ஒன்றும் இல்லை. எப்போதாவது இது என்ன நடக்கிறது என்ன நடக்கும் என்று ஆச்சரியம் ஏற்படுகிறது. புதியதாக ஏதாவது விஷயம் இருந்தால் தான் ஆச்சரியம் ஏற்படும். ஏதாவது ஒரு விஷயம் நினைத்தே இருக்காமல் இருந்தால், கேள்விப்படாமல் இருந்தால், புரியாமல் இருந்தால் மேலும் தீடீர் என்று நடந்தால் ஆச்சரியம் ஏற்படும் எனவே ஆச்சரியம் இருக்க வேண்டாம். முற்றுப்புள்ளி இருக்கட்டும். உலகம் குழப்பமடைவது மற்றும் நீங்கள் மகிழ்ச்சியில் இருப்பவர்கள். உலகத்திலிருப்பவர்கள் என்ன செய்வது?, எப்படிச் செய்வது? என்று சின்ன சின்ன விஷயத்தில் குழப்பமடைவார்கள். நீங்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியில் இருப்பவர்கள், குழப்பமடைவது முடிந்து விட்டது. பிராமணன் என்றால் மகிழ்ச்சி, சத்திரியன் என்றால் குழப்பமடைவது. எப்போதாவது மகிழ்ச்சி, எப்போதாவது குழப்பம். நீங்கள் அனைவரும்

பிரம்மா குமார், பிரம்மா குமாரிகள் என்று தான் உங்களுடைய பெயரைக் கூறுகிறீர்கள். சத்திரியக் குமார், சத்திரியக் குமாரியோ இல்லை தானே? எப்பொழுதும் தன்னுடைய பாக்கியத்தின் குஷியில் இருப்பவர்கள் மனதில் எப்பொழுதும் இயல்பாகவே ஆஹா பாபா! மற்றும் ஆஹா என்னுடைய பாக்கியம்! என்ற பாடல் தான் இசைத்துக் கொண்டிருக் கிறது. இந்தப் பாடல் பாடிக் கொண்டே இருக்கிறது; இதை இசைக்க வேண்டிய அவசியமே இல்லை. இது ஆரம்பமும் முடிவும் இல்லாமல் பாடிக் கொண்டே. இருக்கிறது. ஐயோ, ஐயோ என்பது முடிந்து விட்டது. இப்பொழுது இருப்பது ஆஹா, ஆஹா ஐயோ, ஐயோ என்று சொல்பவர்கள் மிகப் பெரும்பான்மையோர் மற்றும் ஆஹா, ஆஹா என்று கூறுபவர்கள் மிகக் குறைவானவர்கள் நீங்கள். அப்படியானால் புது வருடத்தில் என்ன நினைவு வைத்துக் கொள்வீர்கள்? ஆஹா ஆஹா எதிரில் என்ன பார்த்தது, கேட்டது, மற்றும் என்ன சொன்னது எல்லாமே ஆஹா,ஆஹா, ஐயோ ஐயோ அல்ல. ஐயோ இது என்ன இப்படி ஆயிற்று? அப்படி இல்லை. ஆஹா, இது மிக நன்றாக நடந்தது யாராவது தீமை செய்தாலும், ஆனால் உங்கள் சக்தியால் நீங்கள் தீயதை நல்லதாக மாற்றி விடுங்கள். இதுதான் மாற்றம் இல்லையா? தன்னுடைய பிராமண வாழ்க்கையில் தீயவை நடப்பதே இல்லை. யாராவது தீய வார்த்தைகளினால் திட்டினாலும், சகித்துக் கொள்ளும் சக்தி தேவை என்று கற்றுக் கொடுத்ததினால் அவரிடம் பலியாகி விட்டோம். பலியானவர்களாகி விட்டோம் தானே? எவ்வளவு சகித்துக் கொள்ளும் சக்தி இருக்கிறது என்று தெரியட்டுமே, அப்படியானால் கெட்டது நடந்ததா? அல்லது நல்லது நடந்ததா? பிராமணர்களின் பார்வையில் தீமை இருப்பதே இல்லை. பிராமணர்களின் காதில் தீயவை கேட்பதே இல்லை. அதனால் தான் பிராமண வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கை. இந்த நேரம் தீமை, அடுத்த நேரம் நல்லது என்றால் மகிழ்ச்சி இருக்க முடியாது. எப்பொழுதும் மகிழ்ச்சியே மகிழ்ச்சி தான். முழு கல்பத்திலும் பிரம்மாகுமார், குமாரிகள் உயர்ந்தவர்கள். தேவ ஆத்மாக்கள் கூட பிராமணர்களின் எதிரில் ஒன்றுமே இல்லை. எப்பொழுதும் இந்த போதையில் இருங்கள் எப்பொழுதும் குஷியாக இருங்கள், மேலும் மற்றவர்களையும் எப்பொழுதும் குஷியாக வைத்துக் கொள்ளுங்கள். இருக்கவும் செய்யுங்கள். மேலும் வைத்துக் கொள்ளவும் செய்யுங்கள். நானோ குஷியாக இருக்கிறேன் என்றல்ல. நான் அனைவரையும்

குஷியாக வைத்திருக்கிறேன் என்பதும் இருக்கட்டும். நான் குஷியாகத்தான் இருக்கிறேன் இதுவும் சுயநலம் தான். பிராமணர்களின் சேலை என்ன? ஞானம் கொடுப்பதே குஷிக்காகத் தான்.

2) உலகில் உயர்ந்த ஆத்மாக்கள் என்று மகிமை செய்யப்படுபவர்களில் நீங்கள் எவ்வளவு உயர்ந்தவர்கள். தந்தை உங்களுடையவர் ஆகி விட்டார். அப்படியானால் நீங்கள் எவ்வளவு உயர்ந்தவர்கள் ஆக விட்டீர்கள். மிக உயர்ந்தவர்கள் ஆகி விட்டீர்கள். உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தை மிக உயர்ந்த ஆத்மா ஆக்கி விட்டார் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பார்வை எவ்வளவு உயர்ந்ததாகி விட்டது. அனைத்தும் மாறி விட்டது. நீங்கள் இப்பொழுது யாரைப் பார்த்தாலும் ஆத்ம பார்வையில் தான் பார்ப்பீர்கள் மற்றும் அனைவருக்காகவும் நன்மைபயக்கும் உள்நோக்கம் இருக்கும். பிராமண வாழ்க்கை என்றால் ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் பார்வை மற்றும் உள்ளுணர்வு உயர்ந்ததாகி விட்டது.

3) ஒரு தந்தை, வேறு யாரும் இல்லை என்ற நிலையில் எப்பொழுதும் நிலைத்து இருக்கக்கூடிய சகயோகி ஆத்மாவா நீங்கள்? ஒருவரை நினைப்பது சுலபம். அநேகரை நினைவு செய்வது கடினமாக இருக்கும். அநேக விஸ்தாரங்களை விட்டு விட்டு சார ரூபத்தில் ஒரு தந்தை என்ற இந்த அனுபவத்தில் எவ்வளவு குஷி இருக்கிறது. குஷி பிறப்புரிமையாகும், தந்தையின் பொக்கிஷமாகும். அதனால் தந்தையின் பொக்கிஷம் குழந்தைகளின் பிறப்புரிமை ஆகிறது. தன்னுடைய பொக்கிஷம் என்றால் தன்னுடையது என்று தன் மேல் பெருமிதம் இருக்கிறது மேலும் கிடைத்தது கூட யாரிடமிருந்து? அழியாத தந்தையிடமிருந்து. எனவே அழியாத தந்தை என்ன கொடுப்பாரோ? அது அழியாதது தான் கொடுப்பார். அழியாத பொக்கிஷங்களின் போதை கூட அழியாதது தான். இந்த போதையை யாரும் அகற்ற முடியாது. ஏனென்றால் இது நஷ்டம் ஏற்படுத்தும் போதை அல்ல. இது பிராப்தி செய்விக்கும் போதையாகும். அவைகள் பிராப்தியை இழக்கச் செய்யும் போதை. அப்படியானால் எப்பொழுதும் என்ன நினைவு இருக்கிறது? ஒரு தந்தை வேறு யாருமில்லை. இரண்டாவது, மூன்றாவது என்று யாரும் வந்தால் பிரச்சனை இருக்கும். மேலும் ஒரு தந்தை என்றால் ஒரே ரசனையில் இருக்கும் நிலை

இருக்கும். ஒருவரின் ரசனையில் அன்பில் ஐக்கியமாக இருப்பது மிகவும் நன்றாக இருக்கும். ஏனென்றால், ஆத்மாவின் ஒரிஜனல் சொரூபமே ஒரே ரசனையில் இருப்பது தான்.

விடைபெறும் போது புது வருடத் தொடக்கத்திற்கு வாழ்த்துக்கள்!
நாலாபுறமுமுள்ள அன்பான மற்றும் அதிர்ஷ்டமான அனைத்துக் குழந்தைகளுக்கும் புது ஊக்கம், புது உற்சாகத்தின் ஒவ்வொரு நேரத்திற்கும் வாழ்த்துக்கள், சுயம் நீங்களோ வைரம் தான் மற்றும் வாழ்க்கையும் வைரம் மேலும் வைரக் காலை, மாலை மற்றும் வைர இரவு எப்பொழுதும் இருக்கட்டும். இதே விதி மூலம் மிக விரைவில் தன்னுடைய இராஜ்யத்தை ஸ்தாபனை செய்வீர்கள் மற்றும் இராஜ்யம் செய்வீர்கள். தன்னுடைய இராஜ்யம் மிகவும் பிரியமானதாக இருக்கும் இல்லையா? எனவே இப்பொழுது விரைவில் கொண்டு வாருங்கள் மற்றும் இராஜ்யம் செய்யுங்கள் உங்களுடைய இராஜ்யம் எதிரில் தென்படுகிறது இல்லையா? எனவே இப்பொழுது பரிஷ்தா ஆகுங்கள். தேவதை ஆகுங்கள். நாலாபுறமுமுள்ள குழந்தைகளுக்கு விசேஷமாக பல மடங்கு அன்பு நினைவுகள் உரித்தாகுக வெளி நாட்டினரும், பாரதவாசிகளும் தபஸ்யாவின் ஊக்கம் உற்சாகத்தில் நன்றாக இருக்கிறார்கள். மேலும் எங்கு தபஸ்யாவோ அங்கு சேவை இருக்கவே இருக்கிறது. எப்பொழுதும் வெற்றி கிடைப்பதற்கு வாழ்த்துக்கள். முழு உலகமும் உங்கள் பக்கம் பார்க்கும் மாதிரி ஒவ்வொருவரும் அந்த மாதிரி புதுமையாகக் காண்பியுங்கள். புதுமையின் லைட் ஹவுஸ் ஆகுங்கள் நல்லது ஒவ்வொருவரும் அன்பு நினைவு மற்றும் வாழ்த்துக்களைப் பெற்றுச் செல்வீர்களாக!

வரதானம்: விலகிய மற்றும் தயார் நிலையில் ஆகி புத்தி மூலமாக உடலற்ற நிலையைப் பயிற்சி செய்யக்கூடிய அனைத்துக் கலைகளிலும் நிரம்பியவர் ஆகுக!

எப்படி சர்க்கஸில் கலையைக் காட்டும் கலைஞர்களின் ஒவ்வொரு செயலும் கலை ஆகி விடுகிறது. அந்தக் கலைஞர்கள் உடலின் எந்த பாகத்தையும் எப்படி விரும்புகிறார்களோ, எங்கே விரும்புகிறார்களோ, எவ்வளவு நேரம் விரும்புகிறார்களோ அப்படி வளைக்க முடியும். இது தான் கலை. நீங்கள் குழந்தைகள் புத்தியை எப்பொழுது விரும்பினாலும்

எவ்வளவு நேரம் எங்கு நிலைத்து வைக்க விரும்புகிறீர்களோ அங்கு நிலைத்து வையுங்கள். இது தான் கலை. இந்த ஒரு கலை மூலம் 16-கலைகள் நிரம்பியவர்கள் ஆகி விடுவீர்கள். இதற்காக கட்டளைப்படி ஒரு நொடியில் உடலற்ற நிலை ஆகும் மாதிரி விலகிய மற்றும் தயார் நிலை ஆகி விடுங்கள். யுத்தத்தில் நேரம் கழிய வேண்டாம்.

**சுலோகன்: சரளத்தன்மை மற்றும் சகிப்புத்தன்மை என்ற குணத்தைத் தாரணை செய்பவர் தான் உண்மையான அன்பிற்குரியவர் மற்றும் உதவி செய்பவர் ஆவார்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂